ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 2 ஜூன்-1939 கதிர் 11

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—	1
உலகத்தில் என்ன நடக்கிறது?	(கார்ட்டூன்கள்)	15
பிரிட்டனும் இந்தியாவும்	எட்வர்ட் தாம்ப்ஸன்	17
ரகுநாத நரசிம்ஹ முதோல்கர்	"ஒரு காங்கிரஸ்வாதி"	23
ஜாவானியர்	அரு. சொ.	25
ஜூலியஸ் ஸீஸர்	வி. தேவாச்சாரியன்	33
ஞானக்களஞ்சியம்	ரா. ஸ்ரீனிவாசன்	40
பண்டைய மன்னர்கள் அவர்களின் வரலாறு	வி. எம். நாகேசுவர சாஸ்திரி	44
நல்ல புத்தி—தொடர் கதை	எஸ். கிருஷ்ணன்	47
துருக்கிய ஜனக்கட்சியின் வேலைத்திட்டங்கள்	—	53
அன்றாட உலகம்	—	65

கனவோ? நினைவோ?	"வருணன்"	69
கண்ணன் திரு விளையாடல்— அதன் உட்பொருள் என்ன?	எஸ். கே. நாராயண ஐயர் B. A. B. L	73
காப்பிக் கோட்டையின் வரலாறு	"நராயணன் சிவன்,"	77
தமயனின் கடிதம்—3.		80
பிரசாரம் செய்வோர் எத்தகையரா யிருத்தல் வேண்டும்?	தே. ஏகாம்பரம்	81
மனிதனது சிறுமையும் பெருமையும்	ச. மு.	85
காந்தி—போஸ் நிருபங்கள்		89

தாது சம்யோகம்

இந்த லேகியத்தை விடாது ஒரு மண்டலம். அல்லது அரை மண்டலம் சாப்பிட்டால் மலச்சிக்கல், வெட்டை சூடு, மேகச் சூடு, மூலச் சூடு, கை கால், மார்பு, வயிறு, குலை இவற்றின் எரிச்சல், வாய்ப்புண், அக்ஷரம், வயிற்றின் ரணம், சொப்பனங் கலிதம், துரிதஸ்கலிதம், இந்திரியம் நீற்றுப் போயிருத்தல், கண் எரிச்சல், மேக ஊறல், மேகப் புண்கள் முதலியன தீர்ந்து இரத்தம் சுத்தமாகி விருத்தியாகும். வீர்து கட்டும் சிறந்த தாது புஷ்டியும் பலமும் அழகும் தேஜஸும் ஏற்படும் சக்தி வாய்ந்த அனுபோகமருந்து இதுவே, ஒரு முறை பரீக்ஷித்தால் உண்மை விளங்கும்.

விலை ஒரு மண்டலம் சாப்பிடக்கூடியது ரு 5 அரை மண்டலம் ரு 3 வி. பி. வேறு

மூலமா?

(15 நாளில் பூர்ண குணப்படுத்தும் உத்தரவாதமுள்ள மருந்து)

இம்மருந்தை உபயோகித்து அநேக காலமாய் மூலவியாதியால் கஷ்டப்பட்டவர்களில் அநேகர் இதனால் 15 நாளில் குணமாய் விட்டதை யறிந்து ஆச்சரியப்படுகிறார்கள். இதை சாப்பிட்டுவரின் எவ்வித உள்மூலம், புறமூலம், மூல வாய்வு, ரத்தமூலம் முதலியவற்றை அடியோடு வேரறுத்து சுகத்தை கொடுக்கும் சக்தி வாய்ந்தது—உடனே ஒரு முறை பரீக்ஷித்தால் உண்மை விளங்கும், வி. பி. வேறு விலை ரூபாய் 5.

DR. M. R. T. RAO, அனுபோக ஆயுர்வேத வைத்யசாலை

அமுர்தபுரம்-திருத்தணி (சித்தூர் ஜில்லா) S. I.

From நற்சாக்ஷி பத்திரம்

K. P. Ramankutti Nair, Surveyor Dharmapuri.

நான் அநேகக் காலமாய் மூல வியாதியால் தாங்கள் அனுப்பி வைத்த மருந்துகளால் எனக்கு எட்டு நாளையில் பூர்ண குணமாய் விட்டது. பற்றி மிகவும் சந்தோஷம். ஆதலால் எனக்கனுப்பிய மருந்துகளையே என்னுடைய நண்பர் P. R. பச்சையப்ப முதலியாருக்கு அனுப்பி அவருடைய வியாதியை சௌக்கியப்படுத்த கோறுவதுடன் உங்கள் கம்பெனியின் புகழ் உலகில் பிரசித்தி பெற்று விளங்க வேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

தங்களன்புள்ள (Sd.) K. P. Ramankutti Nair, 7-9-38

ஜோதி
ஜூன்-1939

ஜோதி

சுடர் 2 | ஜூன் - 1939 | கதிர் 11



காந்தி - போஸ்

சென்ற ஒரு மாத காலத்திற்குள் 'ஜோதி'யின் சென்ற கதிர் வெளியானதற்கும், இந்தக் கதிர் வெளியாவதற்கும் இடையிலேயுள்ள ஒரு மாத காலத்திற்குள்—இந்திய தேசிய பாலத்தின் கீழ் அமோகமான பிரவாகம் ஓடியிருக்கிறது. பேரிரைச்சலோடு கூடி ஓடிய இந்த வெள்ளத்தின் கீழ் எத்தனை சுழல்கள்! இந்தச் சுழல்களில் ஒன்று, ஒரு தியாகியை மேலேற்றிவிட்டிருக்கிறது! மற்றொரு தியாகியை கீழே இழுத்துவிட்டிருக்கிறது! மேலேறியவர்களுக்கு ஆசியும், கீழ் வீழ்ந்தவர்களுக்கு அநுதாபமும் கூறுவது சம்பிரதாயம். ஆனால் நாம் இரண்டு பேருக்குமே அநுதாபங் கூற வேண்டியவர்களாயிருக்கிறோம். அதனோடு, பல சுழல்களோடு கூடிய இந்தப் பிரவாகமானது, இந்திய தேசிய பாலத்தையும் தகர்த்துவிடக் கூடாதென்று பிரார்த்தனை செய்ய வேண்டியவர்களாகவுமிருக்கிறோம்.

திரிபுரி காங்கிரஸுக்குப் பிறகு இந்திய அரசியல் வாழ்க்கையே ஒருவித ஸ்தம்பிதத்திற்குட் பட்டுவிட்டது. ஜனங்கள் இன்னது செய்வது என்று தெரியாமல் திகைக்கிறார்கள். ஏனென்றால் மேல்மாடியில்—அதாவது தலைவர்களின் ஆலோசனை மண்டபத்தில்—என்ன நடைபெறுகிறதென்று அவர்களுக்குத் தெரியாது. காங்கிரஸின் சென்ற ஐம்பத்து நான்கு வருஷ கால சரித்திரத்தில் இந்த மாதிரியான தயக்கம், இந்த மாதிரியான திகைப்பு எப்பொழுதும் ஏற்பட்டதில்லையென்றுதான் நாம் கருதுகிறோம். சூரத் காங்கிரஸுக்குப் பிறகு, தேசீய வாழ்வில் ஒருவித சங்கடமான நிலைமை ஏற்பட்டதென்பதை நாம் அங்கீகரித்துக் கொள்கிறோம். ஆனால் ஜனங்களுக்கு இத்தகைய திகைப்பு அப்பொழுது ஏற்படவேயில்லை. அவர்களுக்குப் போதிய விழிப்பு அப்போது ஏற்படாததும் அதற்கு ஒரு காரணமாயிருந்திருக்கலாம்.

திரிபுரி காங்கிரஸ் 1939ம் வருஷம் மார்ச் மாதம் 11ந் தேதி கூடியது. அதே வருஷம் ஏப்ரல் மாதம் 29ந் தேதி அ. இ. கா. கமிட்டி கூடியது. இந்த ஒன்றரை மாத காலத்தில், காரியக் கமிட்டி அமைக்கப் படவில்லை; காங்கிரஸ் வேலைகள் எதுவும் நிகழவில்லை.

அ. இ. கா. கமிட்டி கூட்டத்தில், ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் ராஜீநாமா செய்து விட்டார்; அவருடைய பதவியில் பாபு ராஜேந்திர பிரசாத் அமர்த்தப்பட் டிருக்கிறார். அவர், பழைய அங்கத்தினர்களையே கொண்ட புதிய காரியக் கமிட்டியை அமைத்திருக்கிறார். இது நடந்து ஒரு மாதத்திற்கு மேலாகி விட்டது. ஆனால் இதுவரை காங்கிரஸ் வேலை என்ன நடைபெற்றிருக்கிற தென்று நமக்குத் தெரியவில்லை. எல்லாம் கிணற்றிலே கல் போட்டதுபோல் தானிருக்கிறது. 'இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் இன்னும் காரியக் கமிட்டியை அமைக்காமல் இருக்கிறாரே இந்த போஸ்' என்று திரிபுரி காங்கிரஸ் முடிந்தவுடனேயே உரக்கச் சத்தமிட்டவர்கள் எல்லாரும், இப்பொழுது—இந்த ஒரு மாதகாலமாக—எப்படியோ வாயடங்கி யிருக்கிறார்கள். ஏன் என்பது நமக்குத் தெரியவில்லை. இப்படி நாம் கூறுவதனால், ஸ்ரீ போஸ் காரியக் கமிட்டியை அமைக்காமல் தாமதப்படுத்தி வந்தது சரியென்று சொல்வதாக அர்த்தமில்லை. அவருடைய அநேக குற்றங்களில் இஃது ஒரு முக்கிய குற்றம் என்பதுவே நமது அபிப்பிராயம். இத்தலியில் முஸோலினி, பிரதம மந்திரிப் பதவியை ஏற்றுக் கொண்ட ஐந்தாவது மணியில் மந்திரிச்சபையை அமைத்து விட்டான். ஜெர்மனியில் ஹிட்லர், பதவி ஏற்றுக் கொண்ட ஏழாவது நிமிஷத்தில் புதிய மந்திரிச் சபை அமைந்து விட்டது. துருக்கியில் கமால் அத்தா துர்க், மூன்றரை மணி நேரத்திற்குள் குடியரசுத் திட்டத்தைச் சட்டபூர்வமாக நிறைவேற்றி, தானும் அந்தக்குடியரசின் தலைவனானான். ருஷ்யாவில் ஜார் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு ஏற்பட்ட இடைக்கால அரசாங்கத்தை ஒரு சில மணி நேரத்திற்குள் அப்புறப்படுத்தி விட்டு, சோவியத் குடியரசின் தலைவனானான் லெனின். அதே நிமிஷத்திலேயே மந்திரிச் சபையும் அமைந்து விட்டது. ஆனால் நமது தாய் நாட்டில்—வீழ்ச்சியில் வாழ்வு காணவேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கும் புண்ணிய பூமியில்—தேசிய விவகாரங்கள் எவ்வளவு துரிதமாக நடைபெறுகின்றன! இந்தச் சொல்கிற போதே, நம்மை யறியாமலே ஒருவித வெட்கம் வந்து நமது தலையைக் குனியச் செய்துவிடுகிறது.

ஸ்ரீ போஸ், காரியக் கமிட்டியை உடனே அமைக்க முடியாமற்போனதற்கு அநேக காரணங்கள் இருந்திருக்கின்றன வென்பதை நாம் அறியாமலில்லை. இவருக்கும் மஹாத்மா காந்திக்கும் நடைபெற்ற கடிதப் போக்குவரத்துக்களிலிருந்து, இந்தக் காரணங்கள் வெளியாகின்றன. காரணங்கள் எதுவாயிருந்தாலும், காரியம் ஒன்றும் நடைபெறவில்லை யென்பதுதான் நமக்கு முக்கியம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு வார்த்தை. ஸ்ரீ போஸைப் பற்றி நாம் இதுகாறும்கொண்டிருந்த அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளக் கூடிய சம்பவம் எதுவும் நிகழவில்லை; அவரும் அப்படி அற்புதமான காரியம் ஒன்றையும் செய்துவிடவில்லை. அவர், அகில இந்திய தலைமைப் பதவிக்கு லாயக்கில்லாதவர் என்று நாம் சில மாதங்களுக்கு முன்னர் கூறிய அபிப்பிராயம் வலுத்து வருகிறது. இதன் காரணங்களையும் நாம், வீரிசைப்படுத்திக் கூறுகிறோம்:—

1. இவர் உலகக் கண்ணுடியைப் போட்டுக் கொண்டிருந்த போதிலும் இவர் பார்வை] யெல்லாம் மாகாண வட்டத்திலேயே வட்ட மிட்டுக் கொண்டிருக்கிறது.

2. அகில இந்திய காங்கிரஸ் தலைவராயிருக்கிற காலத்திலேயே, மாகாண காங்கிரஸ் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டார்.

3. அகில இந்தியாவின் தலைவரான இவர், கல்கத்தா நகர சபையின் அங்கத்தினரா யிருந்து கொண்டு அங்குள்ள கட்சிச் சண்டைகளிலே உழன்று கொண்டிருக்கிறார்.

4. தினசரிப் பத்திரிகைகளில் வெளியாகும் நிருபர்களின் 'சரடு' களையெல்லாம் ஆதாரமாக வைத்துக் கொண்டு அறிக்கைகள் விடுத்து அவதிப் படுகிறார்.

5. வங்காளத்திலேயே இவரால் ஒற்றுமை உண்டாக்க முடியவில்லை. இவருக்கு எதிராகவுள்ள ஒரு கட்சி, சென் குப்தா காலத்திலிருந்து வேலை செய்து வருகிறது. அந்தக்கட்சியின் செல்வாக்கு ஓங்க விடாமலிருக்க இவரால் ஒன்றுஞ் செய்ய முடியவில்லை.

6. வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும் இவரைப் பின் பற்றக் கூடிய ஒரு கோஷ்டி இவருக்கு ஏற்படவில்லை. தலைமைப் பீடத்திற்குச் சோபானமா யமைவது இந்தக் கோஷ்டி சேகரிப்புத்தான்.

7. கடைசியாக, இவருடைய உடல் நிலை, அதிகமான உழைப்பை மேற் கொள்ள இடங் கொடுக்கவில்லை.

இவ்வளவு குறைகள்] இவரிடத்தில் இருந்த போதிலும் இவர் ஒரு தியாகி. தேசத்திற்காக பதவி, பொருள், தேக நலன் முதலிய அனைத்தையும் அர்ப்பணஞ் செய்தவர். உலகத்தி லுள்ள மற்ற நாடுகளின் உன்னத வாழ்வை நேரில்கண்டறிந்து, 'ஐயோ, நமது புண்ணியபூமி எவ்வளவு கேவலமான நிலையில் இருக்கிறது' என்று உள்ளம் பதறி அதனை மேலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று துடிக்கிறவர்; எல்லாவற்றையும் விட முக்கியமாக, மனிதத் தன்மை 'யுடைய ஒரு மனிதர். இத்தகையவர் மீது வன்ம புத்தி காட்டப்படுவதைத்தான் நாம் விரும்பவில்லை. இவரை எப்படியாவது பழிவாங்கிவிட வேண்டுமென்ற எண்ணத்தோடு நடைபெறும் காரியங்களையே நாம் கண்டிக்கிறோம்.

இந்தச் சமயத்தில் இன்னொரு வார்த்தையுங்கூட. நாம் மஹாத்மா காந்தியிடம் பக்தி செலுத்துகிறோம். ஆனால் அது மூட பக்தியல்ல. காந்தீயத்தினிடம் நமக்கு நம்பிக்கையுண்டு. ஆனால் அது குருட்டு நம்பிக்கையல்ல. பக்தி செலுத்தாமலிருப்பதும், குருட்டு நம்பிக்கை கொள்ளாம லிருப்பதும் இப்பொழுது நமது துரதிருஷ்டமாயிருக்கலாம். ஆனால் இதுவே இந்தியாவின் அதிருஷ்டமாகவும் இருக்கலாம். யாரறிவார் எதிர் காலத்தின் தீர்ப்பை!

இனி, நடைபெற்ற சம்பவங்களை வரிசைக் கிரமமாகச் சிறிது ஆராய்வோம்.

கல்கத்தாவில் ஏப்ரல் மாதம் கடைசியில் நடைபெற்ற அ. இ. கா. கூட்டத்திற்குப் பலர் வந்திருந்தார்கள்; பலர் வராமலும் இருந்தார்கள். இதைப் பற்றி யாரும் கவனஞ்

செலுத்த வில்லை. ஆனால் சர்தார் படேல், மேற்படி கூட்டம் கூடுவதற்கு முன்னரே, இதற்குத் தாம் செல்லப் போவதில்லையென்று தீர்மானித்திருப்பதாக ஓர் அறிக்கை வெளியிட்டார். இதனை ஆதரித்து மஹாத்மா காந்தியும் ஓர் அறிக்கை வெளியிட்டார். எல்லாம் தேச நன்மையை முன்னிட்டுத்தான்! சர்தார் படேல் ஒரு கூட்டத்திற்குப் போக வில்லையென்றால் அதற்கேன் இவ்வளவு விளம்பரம்? இதற்கு முன்னர் எத்தனையோ தலைவர்கள், காங்கிரஸ் கூட்டங்களுக்கு வராமல் இருந்திருக்கிறார்கள். அவர்கள் யாருக்குமே காந்தியடிகளின் ஆசிபெற்ற இந்த விளம்பர பாக்கியம் கிடைக்க வில்லை.

சர்தார் படேல் கல்கத்தா கூட்டத்திற்குத் தாம் ஏன் போகவில்லையென்பதற்கு, காந்தி சேவா சங்க மகாநாட்டில் காரணங் கூறி இருக்கிறார். வங்காளப் பத்திரிகைகள் தம்மைப்பற்றிப் பிரசாரம் செய்து வருகின்றனவென்றும், தாம் செல்வது அதிகமான துவேஷத்தையே வளர்ப்பதாகுமென்றும் சொல்கிறார். இந்தச் சமாதானம் நமக்குத் திருப்தி யளிக்கவில்லை. பத்திரிகைப் பிரசாரத்துக்குப் பயந்து விடுகிறவர் அல்லர் படேல். தம்மைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டிருந்தால், அதனை விலக்கி அவர்கள் மனத்தில் நல்லெண்ணத்தை உண்டு பண்ண வேண்டுவது தலைவர்கள் கடமை. அப்படிச் செய்யாமற் போனால் அதுவே ஒரு குற்றங்கூட. இதை சர்தார் படேல் அறியாதவரல்லர். 'உங்களை பிரசிடெண்டாகத் தெரிந்தெடுத்தது உங்கள் மீதுள்ள நம்பிக்கையினாலல்ல வென்றும், பழைய நபர்களின் மீது — சிறப்பாக சர்தார் மீது — கொண்ட அதிருப்தியே என்றும் சிவ கிராமத்தில் எனக்குக் கூறப்பட்டது' என்று மஹாத்மா காந்தி ஸ்ரீ போஸுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அப்படியானால், வங்காளத்தில் மட்டுமல்ல, பொதுவாக இந்தியாவின் எல்லாப் பாகங்களிலுமே சர்தார் மீது ஒருவித அதிருப்தி இருக்கிறதென்று தெரிகிறது. இதற்குக் காரணம் என்ன? அப்படி இருக்குமானால், மீண்டும் அவரைக் காரியக் கமிட்டிக்கு நியமிப்பானேன்? தவிர, ஸ்ரீ போஸ் தமது கடித மொன்றில், 'சர்தார் படேல் ஏழுபேரை நியமிக்கட்டும்; நான் ஏழுபேரை நியமிக்கிறேன்' என்கிறார். எனவே பழைய காரியக்கமிட்டியைச் சூத்திர தாரியாக இருந்து ஆட்டி வைத்தவர் சர்தார் படேல் என்று புலனாகிற தல்லவா? இப்பொழுதும் அப்படித் தானே! படேலின் சர்வாதிகாரத்தை, காந்தியடிகளின் சர்வாதிகாரம்—ஆமாம்; அஹிம்சா தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட சர்வாதிகாரம்—கவிந்து கொண்டிருக்கிற தென்று சொன்னால் அதில் பிழையொன்று மில்லை. ஆனால் இதை பகிரங்கமாகச் சொல்வதுதான் சிலருக்குப் பிடிக்கவில்லை. என்ன செய்யலாம்?

கல்கத்தா அ. இ. கா. கூட்டத்தில் ஸ்ரீ போஸ் தமது தலைமைப் பதவியை ராஜீநாமா செய்து விட்டார். ராஜீநாமா செய்து விட்டார் என்று சொல்வதைவிட, ராஜீநாமா செய்யும்படியான நிர்ப்பந்தத்தில் வைக்கப் பட்டார் என்று சொல்வது பொருந்தும். தாம் ராஜீநாமா செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டதைப் பற்றி விளக்கி அ. இ. கா. கூட்டத்தின்

முன்னர் இவர் சமர்ப்பித்த அறிக்கை உருக்கமாகவும் பொருத்தமாகவும் இருந்தது. ஆனால் பழி தீர்த்துக் கொள்ள வேண்டுமென்ற திரிபுரியின் சாயல், கல்கத்தா கூட்டத்திலும் பரவி யிருந்த போழ்து, உருக்கத்திற்கும் பொருத்தத்திற்கும் எங்கே இடமிருக் கப் போகிறது?

அ. இ. கா. கமிட்டி நடவடிக்கையிலேயே மிகவும் விசேஷமானதும் வேடிக்கை யானதுமான அம்சம் என்னவென்றால், ஸ்ரீ போசின் ராஜீநாமா, அ.இ.கா. கமிட்டியினால் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப் படாமலேயே, அவருடைய ஸ்தானத்திற்கு வேறொருவரைத் தெரிந்தெடுத்திருப்பதுதான். அ. இ. கா. கமிட்டிக்கு, காங்கிரஸ் தலைவரைத் தெரிந்தெடுக்கிற அதிகாரம் உண்டா இல்லையா என்ற பிரச்னை ஒரு புறமிருக் கட்டும். சாதாரணமாக எந்த பார்லிமெண்டரி ஸ்தாபனத்திலும் அநுஷ்டிக்கப்படுகிற சம்பிரதாயம், தலைவரின் ராஜீநாமா விஷயத்தில் அநுசரிக்கப்படவில்லை யென்பதுதான் நமது குறை. விலகிப் போகிறவரின் ராஜீநாமாவை முதலில் சபையில் ஆஜர் படுத்தி, அதற்குச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்ற பிறகே, புதிய தலைவரின் தேர்தல் நடைபெற வேண்டும். கல்கத்தா கூட்டத்தில் இஃது அநுஷ்டிக்கப்படவில்லை. 'காங்கிரஸின் கௌரவத்திற்கேற்ற ஒரு முடிவுக்கு வரும் பொருட்டு காங்கிரஸின் விதிகளை நான் கவனிக்கப் போவதில்லை' என்று ஸ்ரீமதி சரோஜினி தேவி கூறியதைத்தான் நாம் சமாதானமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் போலும்!

காங்கிரஸ் காரியக் கமிட்டியில் ஒரு கட்சியினர் மட்டும் இருப்பதா, அல்லது பல கட்சியினரும் இருப்பதா வென்பது முக்கிய பிரச்னையாக வாதிக்கப்பட்டு வந்திருக்கிறது. பாபு ராஜேந்திர பிரசாத், பழைய அங்கத்தினர்களையே புதிய காரியக் கமிட்டியில் நியமித்துவிட்டபடியால், இந்தப் பிரச்னை தற்போழ்து ஒருவாறு தீர்ந்து விட்டது. ஆனால், ஸ்ரீ போஸின் ராஜீநாமாவுக்கு, இதுதான் காரணமாயிருந்திருக்கிறது. நம்மைப் பொறுத்த மட்டில் இஃதொரு முக்கியப் பிரச்னையாகத் தோன்றவில்லை. சுதந்திரம் பெறுகிற வரையில் காங்கிரஸுக்குள் பல கட்சிகள் இருக்க வேண்டிய நியாயமேயில்லை. அப்படி இருப்பதாகவும் நமக்குத் தென்படவில்லை. சிறிது துரிதமாகச் செல்ல வேண்டுமென்கிற விஷயத்தில் சில அபிப்பிராய பேதங்களிருக்கலாம். வேகமாகச் செல்கிறார்களே என்று பின் வருவோரும், மெது மெதுவாக வருகிறார்களே யென்று முன் போவோரும் பரஸ்பரம் முணகிக் கொண்டிருக்கலாம். இந்த முணகலிலே, லட்சியத்தை மறந்துவிடக் கூடாதல்லவா?

காந்தி—போஸ் நிருபங்களில், இந்தக் காரியக் கமிட்டி அமைப்புத்தான், முக்கிய பிரச்னையாகக் கிளத்தப்பட்டிருக்கிறது. நாமறிந்த வரையில் சென்ற ஐந்து அல்லது ஆறு வருஷ காலமாக நியமிக்கப்பட்டு வந்திருக்கும் காரியக் கமிட்டிகளில், ஒரே மனப்பான்மையுடைய அங்கத்தினர்கள் இருக்கவில்லை. ஸ்ரீ புலாபாய் தேசாயும், பண்டித ஜவஹர்லால் நேருவும் ஒரே கமிட்டியில் இருந்து வேலை செய்ய வில்லையா? பண்டித ஜவஹர்லால், இரண்டு வருஷம் தலை

வராயிருந்த காலத்தில், அவருடன் ஒத்த மனப்பான்மையினரே, அவருடைய காரியக் கமிட்டிகளில் இருந்தார்களா? ஆக, நாம் என்ன முடிவுக்கு வர வேண்டியிருக்கிறதென்றால், பழைய கோஷ்டியை அப்படியே புதிய காரியக் கமிட்டியாக முதலிலேயே ஸ்ரீ போஸ் நியமித்திருந்தால், இந்த ஒரு கட்சி, பல கட்சிப் பிரச்னையே வந்திராது. காந்தியடிகள், இதனை முக்கிய விஷயமாகத் தமது கடிதங்களில் வற்புறுத்தியிருக்கவும் மாட்டார். காந்தியடிகளே, தமது கடிதமொன்றில் இதனை வேறு வாசகத்தில் குறிப்பிடுகிறார். தமது 2-4-39 கடிதத்தில் 'இப்பொழுது ஏற்பட்டிருக்கிற தவறு, நமக்கிடையேயுள்ள அபிப்பிராய வேற்றுமைகளல்ல'; பரஸ்பர மதிப்பும் நம்பிக்கையும் இல்லாமற் போனதுதான்' என்கிறார். எனவே, காரியக் கமிட்டி அமைப்புக்குக் குறுக்காக நின்றது, தனிப்பட்ட மனிதர்களிடையே ஏற்பட்ட பிணக்குத்தான் என்பது தெளிவாகிறது. இதைக் கண்டு, நாம் பெருமூச்சுத்தான் விட முடியும்!

உலகத்திலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் அரசியல் கட்சிகள் பல இருக்கின்றன. ஒவ்வொரு கட்சியின் தலைவரும், அந்தந்தக்கட்சியில் அங்கத்தினராகச் சேர்ந்துதான், பின்னர் படிப்படியாகத் தலைமைப் பதவிக்கு வந்திருக்கிறார்கள். இந்தியாவின் அதிநாயகராக, தலைவர்களின் தலைவராக மஹாத்மா காந்தியை ஏற்றுப் போற்றி வருகிறோம். ஆனால் அவர், எந்தக் காங்கிரஸுக்குப் புதிய ஜீவனையும் புதிய களையையும் கொடுத்தாரோ அந்தக் காங்கிரஸில் அங்கத்தினராயில்லை, யென்பது ஆச்சரியப்படத்தக்க விஷயமில்லையா? இந்தியாவிலுள்ள எத்தனையோ ஆச்சரியங்களைப் போல் இதுவும் ஓர் ஆச்சரியம். ஒரு குடும்பத்தின் உற்பத்திக்கும் அதன் வளர்ச்சிக்கும் காரணமாயிருந்த தகப்பன், அந்தக் குடும்பத்தினின்று வேறுபட்டவனாய் இருக்க முடியாது. அதிலே ஒருவனாய் இருந்துதான் அதனை வளர்த்தும், வழி காட்டிக் கொண்டும் போக முடியும். மஹாத்மா காந்தி, (புதிய தோற்றத்துடன் சோபிக்கும்) காங்கிரஸின் சிருஷ்டிகர்த்தர்; இந்திய மஹா ஜனங்களுடைய அபிலாஷைகளைப் பிரதிபலித்துக்கொண்டிருக்கிற கண்ணாடி; இந்திய தேசீய இயக்கத்தின் ஜீவநாடி அவர் கையில்தான் இருக்கிறது. கோடிக் கணக்கான ஏழை மக்களின் 'அப்பனாய், அம்மையாய், ஐயனுமாய்' அவர் விளங்குகிறார். ஆயினும், காங்கிரஸில் அவர் நாலணா அங்கத்தினர்கூட இல்லை. இதன் காரணத்தை யாரும் அறியக்கூடவில்லை. இது ஒரு புதிர்தான். காந்தி சேவா சங்க மகா நாட்டில், அவர் செய்துள்ள ஒரு பிரசங்கத்தில் பின் வருமாறு கூறுகிறார்:—

'நான், காங்கிரஸின் நாலணா அங்கத்தினன் கூட இல்லை. ஆனால், நான் காங்கிரஸுக்கு வெளியேயிருந்து கொண்டு அதற்கு அதிகமான தொண்டுகள் செய்து வருகிறேன்.'

இந்தச் சமாதானத்தை நாம் அப்படியே ஏற்றுக் கொள்வோமானால், யாருமே காங்கிரஸுக்கு வெளியே இருந்து கொண்டு தொண்டு செய்யலாமே. காங்கிரஸில் அங்கத்தினராகச் சேருங்கள் என்ற பிரசாரமே தேவை

யிராதே. சங்கம் என்றும், விதியென்றும், கட்டுப்பாடென்றும் எதற்காக? ஆனால் காந்தியடிகள் ஒருவருக்குத்தான், காங்கிரஸுக்கு வெளியேயிருந்து தொண்டு செய்யும் ஆற்றலும் அதிகாரமும் உண்டென்றும் மற்றவர்களுக்குக் கிடையாதென்றும் கூறப்படுமானால், அதனை நாம் ஏற்றுக் கொள்ளத் தயாரா யில்லை. நம்முடைய தலைவரா யிருக்கப்பட்டவர் நம்மிலே ஒருவராய் இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். எனவே, ஸ்ரீ போஸுடன் நாமும் சேர்ந்து கொண்டு, மஹாத்மா காந்தியை நான்கணா சந்தா செலுத்தி காங்கிரஸ் அங்கத்தினராகும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

திரிபுரி காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட பண்டித பந்த் தீர்மானத்தைப் பற்றித் தம்முடைய அபிப்பிராயம் என்னவென்பதைக் காந்தி யடிகள் தெளிவாகக் கூறவே யில்லை. தீர்மானம் கொண்டுவரப்பட்ட செய்தி இவருக்குத் தெரிந்திருக்கிறது. அது நல்லதென்றும் அபிப்பிராயப் பட்டிருக்கிறார். (2-4-39 கடிதம்.) பின்னர், ஸ்ரீ போஸுக்கு எழுதிய ஒரு கடிதத்தில், தீர்மானம் மிகத் தெளிவா யிருக்கிற தென்றும், இதை அநுசரித்து ஸ்ரீ போஸ் நடந்து கொள்ள வேண்டுமென்றும் கூறுகிறார். (24-3-39 கடிதம்) பிறிதொரு கடிதத்தில் (10-4-39 கடிதம்) 'பண்டித பந்த் தீர்மானத்தைப் பற்றி நான் வியாக்கியானம் செய்ய முடியாது. அதைப் படிக்கப் படிக்க வெறுப்பே அதிக மாகிறது. தீர்மானத்தைத் தயாரித்தவர்கள் நல்ல நோக்கத்துடனேயே தயாரித்திருக்கிறார்கள். ஆனால் தற்போதைய சங்கடமான நிலைமைக்கு அது பரிகாரமளிப்பதா யில்லை' என்று கூறுகிறார். இந்த அபிப்பிராயங்கள் ஒன்றுக்கொன்று முரணா யிருக்கின்றன.

முதலாவது, பண்டித பந்த் தீர்மானத்தை பகிரங்க காங்கிரஸில் கொண்டுவர ஸ்ரீ போஸ் அநுமதித்ததே தவறு.

இரண்டாவது, தீர்மானம் அநுமதிக்கப்பட்டு நிறைவேறிய பிறகு, அதைப்பற்றிப் பன்னிப்பன்னி காந்தியடிகளின் அபிப்பிராயத்தை ஸ்ரீ போஸ் கேட்டதும் தவறு.

மூன்றாவது, இந்தத் தீர்மானம் சட்ட விரோதமானதென்றும், காங்கிரஸிலே நான்கணா அங்கத்தினராகக் கூட இல்லாத தம்மை இந்தத் தீர்மானம் கட்டுப்படுத்தா தென்றும், காந்தியடிகள் ஒரே வாக்கியத்தில் பதில் கூறி ஸ்ரீ போஸின் நீண்ட கடிதப்போக்குவரத்துக்களைக் குறைத்திருக்கலாம்.

நான்காவது, காரியக் கமிட்டி அமைப்புச் சம்பந்தமாகக் காந்தியடிகளிடமிருந்து, தாம் திருப்தியடையக் கூடிய முறையில் பதில் கிடைக்கவில்லை யென்று உணர்ந்தும், ஸ்ரீ போஸ், காரியக் கமிட்டியை தமது இஷ்டம் போல் தைரியமாக அமைத்திருக்க வேண்டும். காந்தியடிகள் தமது 30-3-39 கடிதத்தில் 'காந்தீயர்களைப்பொறுத்த மட்டில் அவர்கள் உங்களைத் தடை செய்யமாட்டார்கள். அவர்களால் முடிகிறபோது உங்களுக்கு உதவி செய்வார்கள். முடியாதபோது ஒதுங்கி யிருப்பார்கள்' என்று உறுதி கூறியிருக்கிறார். இந்த உறுதியையே ஆதாரமாக வைத்துக்.

கொண்டு, ஸ்ரீ போஸ், காரியக் கமிட்டியை அமைத்து, பின்னர், அ. இ. கா. கூட்டத்தில் அதன் கதி என்னவாகிற தென்று பார்த்திருக்க வேண்டும்.

பொதுவாக, காந்தி—போஸ் நிரு பங்களைத் துருவிப் பார்த்தோமானால் கீழ்க்கண்ட முடிவுகளுக்கே நாம் வரவேண்டியிருக்கிறது:—

1. 'சிறிது காலத்தில் காங்கிரஸி லிருந்து காந்திய அரசியல் என்றும் தேசிய அரசியல் என்றும் இரண்டு கிளை நதிகள் உற்பத்தியாகிப் பிரிந்து ஓடத்தொடங்குமோ வென்று' ஏப்ரல் மாதத்து "ஜோதி" யில் நாம் கொண்ட அச்சம் வலுப்பட்டுவரு கிறது.

2. காந்தி யடிகள், மஹாத்மா பீடத்தில் அமர்ந்து காட்சி யளிக்கிற போது, நம்மையறியாத ஒரு பக்தி பரவசமும், பாரத ஜாதியின் கௌரவம் இன்னும்—170 வருஷ கால அந்நிய ஆட்சிக்குப் பிறகும்—அழிந்து போகவில்லை யென்ற கர்வமும், இனியும் அழிந்து போகாது என்ற நம்பிக்கையும் உண்டாகின்றன. ஆனால் அதே காந்தியடிகள், ராஜ தந்திர பீடத்தில் வந்து தோன்றுகிற போது நமதுகால்களை நாம் நம்பமுடியவில்லை. எந்தச் சமயத்திலும் நாம் சறுக்கி விழுந்து விடலாம் என்ற அச்சம் நமக்கு உண்டாகிறது.

3. ஸ்ரீபோஸ், தனிப்பட்டியங்கும் ஆற்றல் வாய்ந்தவரில்லை. அதனால் அகில இந்தியத்தலைமைப்பதவிக்குத் தம்மை லாயக்கில்லாதவராகச்செய்து கொண்டு விட்டார்.

4. ஸ்ரீ போஸ், காந்தியடிகளிடம் பக்தி செலுத்தினர். அதனால் தம் கடமையை மறந்தார். எனவே, அந்த பக்திக்கே பலியானர்.

5. காங்கிரஸில் ஊழல், தேசத்தில் பலாத்காரம் என்கிற இரண்டும் காந்தியடிகளுக்கு உண்மை உருவங்களாகத் தோற்றுகின்றன; 'அவை உருவங்களில்லை; வெறும்நிழல்கள். அப்படிஉருவங்களா யிருந்தாலும், அவற்றிற்கு சக்தி யில்லை' என்கிறார் ஸ்ரீ போஸ். சுயராஜ்யப் போராட்டத்தைத்தொடங்கி விட்டோமானல், இந்த உருவமோ, நிழலோ எதுவாயிருந்தாலும் உடனே ஓடிப்போய்விடும் என்று வற்புறுத்துகிறார் போஸ். இவையிருக்கிற வரை சுயராஜ்யப் போராட்டத்தை தொடங்கமுடியாதென்று சாதிக்கிறார் காந்தி. நமக்கு, இவை நிழலாகவே தோன்றுகின்றன. நமது வினையின் விளைவே இவை. நாம் பதவி ஏற்புக்கு இணங்கியிராவிட்டால், இவை தோன்றியே இரா. தவிர, ஜனநாயக தேவதையை நாம்வரவேற்கிறபோது, அதனோடு ஒட்டிவரும் பரிவாரங்களை மட்டும் நிராகரித்து விடமுடியுமா? ஊழலைப்பற்றியும், பலாத்காரத்தைப் பற்றியும், மகாத்மா காந்தி இவ்வளவு தூரம் வற்புறுத்தியிருக்க வேண்டாமென்பதுதான் நமது அபிப்பிராயம். இவை ஒய்ந்த பிறகு சுயராஜ்யப் போராட்டத்தைத் தொடங்குவோமென்று சொல்லுவது, அலை ஓய்ந்த பிறகு ஸ்நானம் செய்வது போலத்தான். ஆனால் இதற்காக, ஊழலைப் போக்குவதிலோ, பலாத்காரத்தை ஒடுக்குவதிலோ நமது முயற்சியைச் சிறிது கூடத்தளர விடக்கூடாது. எவ்வளவு விரைவில் இவைகளை இல்லாமற் செய்து விடமுடியுமோ அவ்வளவு விரைவில் செய்து விடவேண்டும். இதற்கான நடவடிக்கைகளை காந்தி

ரஸ் உடனே எடுத்துக்கொள்ளும் என்று நம்புகிறோம். ஆனால், இதற்காக சுயராஜ்யப் போராட்டத்தை நிறுத்திவைக்கக் கூடாதென்பதுதான் நமது கட்சி. இதுதான் நமது முக்கியப் பிரச்னையாக இருக்க வேண்டும். ஊழலைப் போக்குவதையும், பலாத்காரத்தை ஒடுக்குவதையும், இந்தப்போராட்டத்தின் ஓர் அம்சமாகவே கொள்ள வேண்டும்.

கல்கத்தா அ. இ. கா. கூட்டத்தின் நடவடிக்கைகளையும், அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் பார்க்கிற போது, நமக்குச் சில எண்ணங்கள் தோன்றுகின்றன :—

1. பரிபூர்ண சுயராஜ்யமாகிற நமது லட்சியம், நம்மைப்பார்த்துப் பரிகசித்துக்கொண்டே எட்டி எட்டிப் போய்க் கொண்டிருக்கிறதோ என்ற சந்தேகம் நமக்கு உண்டாகிறது.

2. சொல்லடுக்குகள், வக்கீல் மனப்பான்மை, நாம் யாரோடு போராடுகிறோம் என்பதை அறியாத தன்மை ஆகிய இந்த அம்சங்கள் நிறைந்த தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டிருப்பதில், நமது தலைவர்களுக்கு எப்பொழுதுதான் சலிப்பு ஏற்படுமோ தெரியவில்லை.

3. கல்கத்தா கூட்டத்தின் முடிவைக் கொண்டு, தேசத்தில், தங்களுக்கு மெஜாரிட்டி யிருப்பதாகவும், போஸ் கட்சிக்கு புறக்கணிக்கப்படக் கூடிய ஒரு மைனாரிட்டி யின் பலமே இருக்கிறதென்றும் காந்தீயர்கள் கருதிக் கொண்டிருக்கலாம். தற்போதைக்கு இஃது உண்மைதான். ஆனால் தேசத்தின் எண்ணம், ஜன சக்தியின் வேகம் இதே நிலைமையில் நிற்குமா வென்பது சந்தேகம். சூரத் காங்கிரஸுக்குப் பிறகு, மிதவாதக் கட்சிக்கு அமோகமான செல்வாக்கு இருந்தது. அமிதவாதக் கட்சி யென்று சொல்லப்பட்ட திலகர் கட்சி எங்கேயோ அடங்கி ஒடுங்கிப்போயிருந்தது. ஆனால் இப்பொழுது அந்த மிதவாதக் கட்சி எங்கே? அதன் சின்னங்கள் கூட இப்பொழுது அகப்படக் காணோம். எனவே தற்போது மெஜாரிட்டி பலம் இருக்கிறதென்று கருதிக் கொண்டு கால சக்கரத்தோடு இணைந்து போகாமல் இருந்த இடத்திலேயே தேக்கமாகத் தங்கி விடுமானால் அந்த மெஜாரிட்டி கட்சியே வெகு சீக்கிரத்தில் மைனாரிட்டி கட்சியாகிவிடும்.

4. கல்கத்தா கூட்டத்தில், சிலர் ஆர்ப்பாட்டஞ் செய்து குழப்பம் உண்டு பண்ணியதைப் பற்றியும் தலைவர் சிலருக்கு ஹிம்சை செய்யப்பட்டதைப் பற்றியும் நாம் பெரிதும் வருந்துகிறோம். பலாத்காரம் எவ்வளவு சிறிய உருவெடுத்து, யாரை, எப்படித் தாக்கிய போதிலும் அது கண்டிக்கப்பட வேண்டும். ஆனால் இவைகளுக்கெல்லாம் போஸ் சகோதரர்களைக் காரணர்களாக்கி, அவர்கள் மீது பழி சுமத்துவதை நாம் அங்கீகரிக்க முடியாது. குழப்பஞ் செய்தவர்களை ஸ்ரீ போஸ் சென்று அடக்கினார். அவர்களும் உடனே அடங்கி விட்டார்கள். இதனால் ஸ்ரீ போஸ் தான், இந்தக் கலகத்தைத் தூண்டி விட்டார் என்று சிலர் தர்க்கஞ் செய்கின்றனர். இஃது அவர்களுடைய கேவல மனப்பான்மையையே காட்டுகிறது. தெருவிலே சண்டை போடுகிறவர்களை நாம் சென்று விலக்கி விடுவோமானால், நாம்தான் அந்தச் சண்டையைத் தூண்டி விட்டவர்க

ளென்று யாராவது சொன்னால் நாம் பொறுத்துக் கொண்டிருப்போமா?

5. ஸ்ரீ போஸ், முன்னணிக் கட்சி என்ற பெயருடன் ஒரு கட்சியைத் தொடங்கி, அதற்காகத் தீவிர பிரசாரமுஞ் செய்து வருகிறார். காங்கிரஸுக்குள் பல கட்சிகள் ஏற்படுத்துவதை நாம் எப்பொழுதுமே விரும்பியதில்லை. காங்கிரஸில் மெஜாரிட்டி பலம் தேடிக் கொள்ளும் பொருட்டு ஸ்ரீ போஸ் இங்ஙனம் செய்திருப்பாரானால், அதை நாம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். 'இவ்விதம் நீங்கள் தனிக் கட்சி ஒன்று அமைத்துக் கொள்ள வேண்டா' மென்று போஸீயர்களைப் பார்த்துச் சொல்வோர், 'காந்தீயர்கள் மட்டும் காந்தி சேவா சங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாமா?' என்ற பதில் கேள்விக்கும் தயாரா யிருக்க வேண்டும்.

சென்ற ஒருமாத காலமாக நடைபெற்ற சம்பவங்களைக் கொண்டு காந்தியடிகளின் நிலைமையையும் ஸ்ரீ போஸின் நிலைமையையும் நாம் ஒருவாறு தெரிந்து கொண்டிருக்கிறோம். சரியாகவோ தவறாகவோ இருவருக்கும் சில அபிப்பிராய வேற்றுமைகள் இருக்கின்றன. இதை அவரவரும் பகிரங்கமாகத் தெரிவித்து விட்டனர். இந்திய தேசிய விஷயங்களை, இருவரும் எந்தெந்த கோணத்தில் நின்று கொண்டு கவனிக்கின்றனர் என்பதும் தெரிந்து விட்டது. ஆனால் பண்டித ஜவஹர்லால் எங்கே? அவருடைய நிலைமை என்ன? எங்கே, என்ன என்கிற இந்த இரண்டு கேள்விகளுக்கும் என்ன, எங்கே என்கிற எதிரொலிகளே நமக்குப் பதிலாகக் கிடைக்கின்றன. திரிபுரி காங்கிரஸுக்குப் பிறகு ஜனங்கள் திகைத்துப்போ யிருந்தார்கள். அத்தருணத்தில் பண்டித ஜவஹர்லால் ஒரு வழி காட்டுவார் என்று தேச மக்கள் எதிர் பார்த்தார்கள். ஏமாற்றத்தையும் அடைந்தார்கள். எதிலுமே வேகமாகச் செல்ல வேண்டுமென்ற ஆவலுடைய பண்டிதருக்கு ஸ்ரீ போஸின் போக்கை எதிர்க்க மனமில்லை. ஆனால் காந்தியடிகளை விடவும் மனமில்லை. இவருடைய அறிவு, அபேத வாதத்தை வணங்குகிறது. இதயமோ காந்தி யடிகளைச் சுற்றிச் சுற்றி வலம் வருகிறது. இதனால்தான் இந்த மனக் குழப்பம். கல்கத்தா அ. இ. கா. கூட்டத்தில் சமரஸ தீர்மானம் கொண்டு வந்ததற்குக் காரணங்கூட இதுதான். பண்டித ஜவஹருக்குச் சிறிது காலமாகவே, சீர் திருத்த மனப்பான்மையும் ஏற்பட்டிருக்கிறதென்பதை, பத்திரிகைகளுக்கு அவ்வப்பொழுது அவர் எழுதிவரும்கட்டுரைகளிலிருந்து வாசகர்கள் தெரிந்து கொண்டிருக்கலாம். அவருடைய விசாலமான சர்வதேச இதயத்தில், இந்திய தேசியம் ஒரு சிறிய பாகத்தைத்தான் ஆக்ரமித்துக் கொண்டிருக்குமானால் அது நமது துரதிஷ்டமே. அப்படியிருக்கக் கூடாதென்பதுதான் நமது பிரார்த்தனை. சர்வதேசீயத்திற்கு, தேசீயம் ஒரு சோபனம் மாதிரி. படிகளைத் தாண்டாமல், உச்சியை யடையமுடியாதல்லவா?

பண்டிதஜவஹர், நடுநிலைமை மனப்பான்மை வகிக்காமல், ஏதேனும் ஒரு பக்கம் சேர்ந்திருப்பாரானால், இந்த கட்சிப் பிணக்குகளே ஏற்பட்டிரா தென்று நாம் கருதுகிறோம். திரிபுரி காங்கிரஸில், அபேதவாதக் கட்சி

யினர் நடுநிலைமை வகித்ததற்கும், பண்டிதபக்த் தீர்மானத்திற்கு அதிகமான ஓட்டுகள் கிடைத்ததற்கும் இதுவே காரணம். சென்றது செல்க பண்டிதர், தற்பொழுது ஒரு கை காட்டி நிலையில் இருக்கிறார். ஏனென்றால் இதுகாறும் ஒரு பாதையிலேயே சென்றுகொண்டிருந்த இந்திய தேசியமானது இப்பொழுது இரண்டு பாதைகளாகப் பிரிகிறது. இந்தத்தருணத்தில் பண்டிதர் கைகாட்ட வேண்டுவது அவசியம். அந்தப் பாதையில் மெஜாரிட்டி செல்லும். வெகுவிரைவில் இதனை நாம் எதிர்பார்க்கிறோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் ஸ்ரீ சீனிவாஸய்யங்கார் எங்கே? மீண்டும் அரசியல் வாழ்க்கையி னின்று ஒதுங்கிக் கொண்டுவிட்டாரா? இவ்வளவு சீக்கிரத்தில் ஒதுங்கிக் கொள்வதாயிருந்தால், இவர் வெளியில் வந்திருக்கவே வேண்டாம். ஆயினும் பொறுத்துப் பார்ப்போம்.

நாம் முதலில் கூறியதுபோல், இந்திய தேசிய பாலத்தின் கீழ் சென்ற ஒருமாதகாலமாக அமோகமான பிரவாகம் ஓடியபோதிலும், இந்தியாவின் வறுமை நிலத்திற்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூட உபயோகப் படவில்லை; லட்சக்கணக்கான ஏழைமக்கள், இம்மியளவு நன்மையையும் பெறவில்லை. அதற்கு மாறாக, அவர்களுடைய ஏக்கமும் அதிருப்தியும் அதிகமாகிக் கொண்டுவருகின்றன. நமது தலைவர்கள் இதனை விரைவில் உணர்ந்தால் நல்லது.

* * *

ராஜகோட்டையில் தர்பார் வீரவாலாவின் ராஜதந்திரக் கோட்டைக்கு முன்னர், காந்தியடிகளின் அஹிம்சைக் கோட்டை கொஞ்சம் ஆடிப்போய் விட்டது. ஆனால் வீழ்ந்து போய் விடவில்லை. எது ஹிம்சை, எது அஹிம்சை என்று பகுத்தறிந்து கொள்ள முடியாத ஒரு திகைப்பு ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அஹிம்சைத் தத்துவத்தின் சிருஷ்டிகர்த்தருக்கே இந்தத்திகைப்பு சில சமயங்களில் ஏற்பட்டு விடுகிற போது மற்றவர்களைப்பற்றிக் கேட்பானேன்.

ராஜ கோட்டை

சமஷ்டி கோர்ட்பிரதம நீதிபதியின் தீர்ப்பினால் ஏற்படுகிற சாதகங்களைத் தாம் துறந்து விடுவதாகவும், ராஜகோட்டை விஷயத்தில் ராஜப்பிரதிநிதியைத் தலையிடச் செய்யும் பொருட்டு தாம் இருந்த உண்ணாவிரதம் ஹிம்சையின் பாற்பட்டதாகுமென்றும் இன்னும் என்னென்னவோ கூறி காந்தியடிகள் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அந்த அறிக்கையை நாம் எவ்வளவு பயபக்தியுடனும், மரியாதையுடனும் படித்துப் பார்த்த போதிலும், அஹிம்சையின் வெற்றி நமக்குப் புலனாகவே மாட்டே னென்கிறது. அதற்கு மாறாக ராஜகோட்டை சமஸ்தானப் பிரஜைகளின் வெறித்த பார்வை, நமது அநுதாபத்தை யெல்லாம், இழுத்துக் கொள்கிறது. தர்பார் வீரவாலாவின் வெற்றி முழக்கம் நமது செவியில் வந்து முட்டுகிறது. சென்ற இருபது வருஷ காலமாக, அரசியலோடு அஹிம்சையைக் கூட்டிக் குழைத்துக் கொடுத்து வந்ததன் பயனாக, பாரத சமுதாயமானது, எத்தனையோ அங்குல உயரம் தலை தூக்கிக்கொண்டு பார்க்கத் தொடங்கி

யிருக்கிறதென்று நாம் நினைத்து வந்ததெல்லாம் வெறும் பகற்கனவுதானோ என்ற சந்தேகம் உண்டாகிறது. காந்தியடிகளின் இந்தச் செய்வினை இரங்கலைக் கண்டு, ராஜகோட்டை தாகூர் சாஹிப் மன மிரங்கியோ, அல்லது ஒருபடி இறங்கியோ வந்து 1-8-38 விருந்து பிறப்பித்த உத்திரவுகளையெல்லாம் ரத்து செய்திருப்பதையும், அபராதங்கள், பறிமுதலான சொத்துக்கள் முதலியவற்றைத் திருப்பி விட்டதையும் எடுத்துக் காட்டித் திருப்தியடைகின்றனர் சிலர். ஆனால் நாமோ, தாகூர் சாஹிப்பின் ராஜ தந்திரச் செயல்களில் இஃது ஒன்று என்றுதான் அபிப்பிராயப் படுகிறோம். அடிகளின் செய்வினை இரங்கலுக்கு அவர் உண்மையிலேயே இரங்கி இருப்பாரானால், உண்ணாவிரத காலத்திலேயே அவர் மனம் இளகி இருக்க வேண்டும்.

* * *

தற்கொலை!

சேனாபதி பாபட் என்பவர், ஹிந்துஸ்தானி சேவாதளத்தின் மூல புருஷர். காங்கிரஸின் இணைப்பாக ஒரு தொண்டர் படை எப்பொழுதும் நிரந்தரமாக இருக்க வேண்டுமென்று கருதி, அதற்காகவே மேற்படி தளத்தை ஆரம்பித்து நடத்தி வந்தார். நல்லதீரர். உற்சாக புருஷர். உடல் வலிமையைவிட ஆத்மபலம் நிறையப் பெற்றவர். சிறை வாசத்தைப் பல முறை அநுபவித்திருக்கிறார். இவர், இப்பொழுது ஒரு துக்ககரமான முடிவுக்கு வந்திருக்கிறார். அதாவது தேசீய ஒற்றுமையை முன்னிட்டும், தேசீய சுதந்திரத்தை முன்னிட்டும், இவர் நாளது ஜூலை மாதம் 23ந் தேதி நடுப்பகலில், புனாவுக்கு அருகாமையில் ஓடும் சங்கம் என்னும் நதியில் மூழ்கி இறந்து விடப் போகிறாராம். அப்படித் தம்மை மூழ்கவிடாமல் தடுத்தால், சிறையிலே கிடந்து இறந்துவிடப் போகிறாராம். இவரது இந்த பயங்கரமான முடிவை நாம் சிறிது கூட ஆதரிக்க முடியவில்லை. இவர் இறந்து விடுவதனால், தேசத்தில் ஒற்றுமையோ, சுதந்திரமோ எப்படி உண்டாகிவிடும் என்பது நமக்குத் தெரியவில்லை. இத்தனை பேர் உயிரை மாய்த்துக் கொண்டால் இவ்வளவு சுதந்திரம் கிடைக்கும்; அல்லது இந்த அளவுக்கு ஒற்றுமை உண்டாகும் என்றும் ஏதேனும் ஒரு நிறை அல்லது வரையறை இருக்குமானால், எத்தனையோ பேர் எப்பொழுதிருந்தோ உயிரை விடத் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறார்களே! லட்சியத்திற்காகப் பிராணனைத் தியாகம் செய்து கொள்ள ஜனங்கள் தயாராக வேண்டுமென்று ஸ்ரீ பாபட் கூறுகிறார். லட்சியத்திற்காகப் பிராணனை எப்படியாவது பிடித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று நாம் கூறுகிறோம். உயிரோடுதான் லட்சியத்தை அடைய முடியுமே தவிர வெறும் உடலோடு லட்சியத்தை அடைய முடியாதல்லவா? தேசத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டும், அஹிம்சை என்ற பெயரை வைத்துக் கொண்டும் முறையே உயிர் விடுவதாகப் பயமுறுத்துவதையும் பட்டினி கிடப்பதாகப் பிடிவாதம் செய்வதையும் நாம் பாராட்டவே முடியாது. பாரத நாட்டின் புராதன காலத்துச் சங்கற்ப புருஷர்கள்—கர்ம வீரர்கள்— உயிரை வைத்துக் கொண்டுதான் வாழ்க்கைப் போராட்டத்தை நடத்தினார்கள்.

அவர்கள் ஆத்ம ஹத்தி செய்து கொள்ளவில்லை; பட்டினி கிடந்து சாகவுமில்லை. காட்டிலே தவங்கிடக்கிறவர்கள் தங்களுடைய ஆத்ம பரிசுத்தத்திற்காகவோ, அல்லது மோட்ச லோகத்தின் கதவைத் தட்டித் திறப்பதற்காகவோ, எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். அதனை நாம் ஆட்சேபமே செய்யப்போவதில்லை. ஆனால் ஒரு ஜனசமுதாயத்தின் தலைவர்களாயிருக்கப் பட்டவர்கள் அந்தச் சமுதாய உஜ்ஜீவனத்திற்காகவாழவேண்டுமே தவிர இறந்துவிடக்கூடாது; பட்டினிகிடந்து உடலையும் துன்புறுத்திக் கொள்ளக்கூடாது. அப்படிச் செய்ய அவர்களுக்கு உரிமையும் கிடையாது. தவிர, இந்தியாவில் லட்சக் கணக்கான மக்கள் சதா பட்டினியோடு மன்றாடிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நிமிஷமும் இவர்கள் யம தர்மனோடு நடத்திக் கொண்டு வரும் போராட்டம் மகா கோரமானது. இந்த மன்றாட்டத்தினின்றும் போராட்டத்தினின்றும் இவர்களைவிடுதலை செய்யும் ஆற்றல்ஒரு சிலருக்கே இருக்கிறது. அவர்களையே நாம் கர்ம வீரர்களென்றும், தியாகிகளென்றும் போற்றுகிறோம். ஆனால் அந்த ஒரு சிலரும் மேற்படி மன்றாட்டத்திற்கும் போராட்டத்திற்கும் பலியாகி விடுகிறோமென்று சொல்வது என்ன நியாயம்? என்ன தருமம்?

தமது ஆத்ம பலிக்கு மகாத்மா காந்தியின் அநுமதியைப் பெற்றிருப்பதாக ஸ்ரீ பாபட் கூறுகிறார். இதை நாம் எப்படி நம்புவது? காந்தியடிகள், இதற்குச் சம்மதம் அளித்திருக்க மாட்டார் என்றுதான் கருதுகிறோம். எப்படியும் ஸ்ரீ பாபட்டின் தீர்மானம் நடைபெற ஒட்டாது தடுக்கப்பட வேண்டும் என்பதுவே நமது பிரார்த்தனை.

* * *

இந்தியாவின் சுயராஜ்யப் பிரச்னையைப் பரிசீலனை செய்வதற்காக மூன்று முறை வட்டமேஜை மகாநாடு கூட்டினார்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தார். கடைசியில் அவர்களிஷ்டம் போல, ஓர் அரசியல் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார்கள். அதுதான் மாகாண சுயாட்சி என்ற கம்பீரமான பெயரைத் தாங்கிக் கொண்டு, கானல் நீரைப்போல் நம்மை மயக்க வைத்துக்கொண்டிருக்கிறது. மகாநாடுகள் கூட்டுவதிலும், கமிஷன்கள் நியமிப்பதிலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார மகா நிபுணர்கள். ஆனால் இதுதான் ஜன நாயகமாம்!

பாலஸ்தீனம்

பாலஸ்தீன விஷயத்திலும் கமிஷன்களுக்கும் மகாநாடுகளுக்கும் குறைவேயில்லை. பீல் கமிஷன் என்ன, வுட்ஹெட் கமிஷன் என்ன, அராபிய யூத சர்வ கட்சி மகாநாடென்ன முதலிய யாவும் சாங்கோபாங்கமாக நடைபெற்றன. கடைசியில். பிரிட்டிஷ் அரசாங்கத்தார், தங்கள் விருப்பப்படி ஓர் அரசியல் திட்டத்தை வகுத்து அதனை வெளியிட்டிருக்கிறார்கள். பாலஸ்தீனத்திற்கு உரிமை கொண்டாடும் யூதர்களோ, அராபியர்களோ, யார் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் இந்திய அரசியல் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படும், இந்தப் புதிய அரசியல் திட்டம் பத்து வருஷகாலம் அமுலில் இருக்குமென்றும், பின்னர் இது சம்பந்தமாக ஒரு பரிசீலனை நடைபெறுமென்றும் சொல்லப்படுகிறது. இந்தத் திட்டத்தின் சாரா-

மென்னவென்றால், இன்னும் குறைந்த பட்சம் பத்து வருஷம் வரையில் பாலஸ்தீனம், பிரிட்டனுடைய ஆதிக்கத்தில் இருக்கு மென்பதுதான். இதில் ஆச்சரியப்படத்தக்க தொன்று மில்லை. இப்படியே, இந்தப்புதிய அரசியல் திட்டத்தைக் கண்டு அராபியர்களும் யூதர்களும் பரம அதிருப்தி யடைந்திருக்கிறார்க ளென்பதிலும் ஆச்சரியமில்லை. எல்லாரையும் திருப்தி செய்விக்கிற முயற்சியிலே இறங்கிக் கடைசியில் எல்லாரையும் அதிருப்திக் குள்ளாக்குகிற நிலைமையில் இப்பொழுது பிரிட்டன் இருக்கிறது, ஆனால், பாலஸ்தீனத்தில் மிதவாத கட்சியினராகிய நாஷாஷீபு குடும்பத்தின் செல்வாக்குக் குட்பட்டவர்கள், இந்தப் புதிய அரசியல் திட்டத்தை ஆதரிப்பதாகச் செய்திகள் வெளியாகின்றன. இந்த ஆதரவு, இயற்கை ஆதரவாவென்பது சந்தேகிக்கக் கூடியதாகும். இந்தக் கட்சியினருடைய ஆதரவே பாலஸ்தீனத்தின் பொது ஜன அபிப்பிராய மென்று யாருமே நம்பிவிட மாட்டார்கள். எப்படியும் பாலஸ்தீனத்தில் அதிருப்தி புகைந்து கொண்டு தானிருக்கும். ஏற்கனவே, இந்தப் புதிய திட்டத்தைக் கண்டித்து வேலை நிறுத்தம், வரி கொடா இயக்கம் முதலியன ஆரம்பித்து விட்டன. சென்ற இரண்டரை வருஷ காலமாக அடக்கு முறையைக் கொண்டு ஆண்டதைப் போல் இனியும் ஆள முடியாது. எப்படியாவது யூதர்களுடனும் அராபிரர்களுடனும் சமரஸத்திற்கு வர வேண்டியதுதான். ஆனால் எந்தச் சமரஸமும் அராபியர்களுடைய பரிபூர்ண சுதந்திர உரிமையை அங்கீகரியாத வரையில் பலிதமடையாமலே போகும். இந்த நிஷ்பலனுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இடங் கொடாமலிருப்பது நல்லது.

* *

ஜினிவா, மே 16—

அல்பேனியாவை இத்தலி நடத்தும் விதத்தைக் கண்டித்து ஜோக் அரசர் சர்வ தேச சங்கத்தின் காரிய தரிசிக்கு நீண்டதொரு கடிதம் எழுதி யிருக்கிறார். இதைப் பற்றி என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வதென்பதைப் பற்றி காரிய தரிசி யோசனை செய்து கொண்டிருக்கிறார்.

இது ராய்ட்டர் செய்தி

நகைச் சுவை

'ஜோதி'யில் நகைச்சுவையே இல்லையென்று யாரேனும் குறை பட்டுக் கொள்வார்களானால், இந்தச் செய்தியொன்றே, அந்தக் குறையை நிவர்த்தித்து விடுமல்லவா! ஹெயிலி செலாஸி! கொஞ்சம் ஜோக் அரசருக்குச் சமாதானம் சொல்லக் கூடாதா!

காந்தி-போஸ் நிருபங்கள்

புத்தக வடிவில் வெளியிடப் பட்டிருக்கிறது.

"ஜோதி" பத்திரிகையின் அளவு,

44 பக்கங்கள் விலை: 0-1-6

தபாற் செலவு வேறு.

உலகத்தில் நடப்பதென்ன?

சேம்பர் லேன்:

சமாதான மீன் அகப்படவே மாட்டேனென் கிறதே. சரி, டைபிஸ்ட்! கண்டனக் கடிதத் தைத் தயாராக வைத்துக் கொண்டிரு! இனி ஜெர்மனியோ, இத்தாலியோ, வேறு நாட்டை ஆக்ரமித்துக் கொள்ளுமானல்—!



ஜப்பானிய முத்துக் குளிக்கிறவன், கடலிலே மூழ்கி மூழ்கி எழுந் திருக்கும் காட்சி!

உலக மஹாஜனங்களே! என் புனித மான சொத்துக்களைக் காப் பாற்றுங்கள்!



தன்னை, இந்த மாதிரி வளைத்துக் கொள்ள, மேற்கு ஐரோப்பிய வல்லரசுகள் சூழ்ச்சி செய்வதாக, ஜெர்மனி மருள்கிறது!

இந்தமாதிரி எல்லாரும் ஒன்று சேர்ந்து பாதுகாப்புத்தான் உலக சமா தானத்திற்கு வழி!

—ஒரு ஜெர்மன் பத்திரிக்கையி லிருந்து

பிரிட்டனும் இந்தியாவும்

—எட்வர்ட் தாம்ப்ஸன்

சாதாரணமாகப் பிரிட்டிஷ் பத்திரிகைகளின் வழக்க மென்ன வென்றால், முக்கியமான செய்திகளை பல தலைப்புகள் கொடுத்து, பத்திரிகையின் முதற் பக்கத்தில் வெளியிடும். சென்ற மார்ச்சு மாதத்தில், இந்தியாவைப்பற்றிய செய்திகள், பிரிட்டிஷ் பத்திரிகைகளின் முதற் பக்கத்தில் இடம் பெற்றன. அதாவது மார்ச்சு மாதம் இந்தியாவில் நிகழ்ந்த சம்பவங்கள் முக்கியமானவை என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் கருதின வென்பதே இதற்கு அர்த்தம். சாதாரண ஒரு சமஸ்தான மன்னராகிய ராஜகோட்டை தாகூர் சாஹிப் கொடுத்த உறுதி மொழிகளை அவர் சரியாகக் காப்பாற்றவில்லை யென்பதற்காக ஸ்ரீ காந்தி உண்ணாவிரதம் மேற் கொண்டோர். ஸ்ரீ காந்தியின் இந்த உண்ணாவிரதங்கள், பிரிட்டிஷ் பொதுஜனங்களுக்கு ஒரு தமாஷாகவே இருக்கின்றன. அல்லது சில சமயங்களில், இந்த உண்ணாவிரதம், பிரிட்டிஷ் பொதுஜன அபிப்பிராயத்தைத் திகைக்கவும் செய்கிறது. முற்காலத்தில் இந்தியாவில் அநுஷ்டிக்கப்பட்டு வந்த தாரணை என்ற பழக்கமே, இப்பொழுது உண்ணாவிரதம் என்று சொல்லப்படுகிறது. அதாவது பிறருடைய கவனத்தைக் கட்டாயப்படுத்தி இழுப்பதற்காக இந்த முறை அநுஷ்டிக்கப்பட்டது. சுமார் நூறு வருஷங்களுக்கு முன், இந்தியாவில், கிழக்கிந்தியா கம்பெனியார் ஆட்சி புரிந்து வந்த காலத்தில் இந்த தாரணை வழக்கம் பெரிய தொந்திரவா யிருந்தது. கடன் கொடுத்தவன், கடன் வாங்கினவன் வீட்டிலோ, அல்லது தன் சத்துருவின் வீட்டில் அவன் மனம் இரங்குவதற்காகவோ இந்தத் தாரணை கிடப்பது வழக்கம். தாரணை கிடப்பவன் இறந்து போய் விட்டால், அவனுடைய ஆத்மா, பிசாசு உருவமெடுத்து, அந்த வீட்டையே சுற்றிக் கொண்டிருக்கு மென்று பயந்து, தாரணை கிடப்பவனுக்கு உடனே ஏதேனும் ஒரு பரிகாரம் தேடிக் கொடுக்கப் யட்டது. ஸ்ரீ காந்தி, உண்ணாவிரத மிருந்து இறந்து போயிருப்பாரானால், தாகூர் சாஹிப் ஒரு பிராமணனைக் கொல்வித்த குற்றத்தைச் செய்து விட்டார் என்றே இந்தியப் பொதுஜனங்கள் கருதிவிட்டிருப்பார்கள். ஸ்ரீ காந்தி, கீழ் ஜாதியினராயினும், அவர் ஒரு ரிஷியாகவே போற்றப்படுகிறார். தவிர, இறந்து போகிறவர்கள், கடைசியில் கொடுக்கிற சாபத்திற்கு ஒரு சக்தி உண்டென்று இந்தியர்கள் நம்புகிறார்கள். புருஷனோடு உடன்கட்டை யேறுகிற வழக்கம் இந்தியாவில் இருந்த காலத்

தில், அந்தப் பத்தினி கடைசியில் கூறுகிற வார்த்தைகள் தேவ வாக்காகவே கருதப்பட்டன. 1857ம் வருஷம் ஆஜ்மீரில் பினுய் ராஜா என்ற ஒருவன் இறந்துபோனுன். இவன் மனைவி உடன்கட்டை யேறுவதற்கு முன்னர், கல்வி அபிவிருத்திக்காகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அப்பொழுது விதித்த ஒரு வரியின் மீது சாபங் கொடுத்தாள். இதனுலேயே என்னவோ இந்த வரி பின்னுல் எடு பட்டு விட்டது.

இந்தியா அரசாங்கத்தாரும், மன்னர் கூட்டத்தினரும் ஏன் காந்தியை உண்ணுவிரதமிருந்துஇறக்கவிடவில்லையென்பதற்கு இப்பொழுது காரணந் தெரிகிறதா? ராஜகோட்டை சம்பந்தமான போராட்ட விஷயமோ மிகச் சிறியதுதான். கத்தியவார் மாகாணத்தில் அநேக சிறிய சமஸ்தானங்கள் சிதறிக்கிடக்கின்றன. இவை முக்கியமில்லாதவை. இவைகளின் நிருவாகத்தைப்பற்றியோ சொல்லத் தேவையில்லை. ராஜகோட்டை தாகூர்சாஹிப், ஸர் பாட்ரிக் காடெல் என்ற ஒரு மாஜி ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தரை தமது உதவிக்காக வரவழைத்தார். ஆனுல் இவர், தாகூர் சாஹிப்புடன் வேலை செய்ய முடியாது என்று வெறுத்துப்போய் தமது பதவியை ராஜீநாமா செய்து விட்டார்.

பிரிட்டிஷ் இந்தியாவில் தங்களைப் பற்றிக் குறை கூறி எழுதப்படக்கூடாதென்று, சுதேச மன்னர்கள், ஒரு சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டிருக்கிருர்கள். ஆயினும் 9-3-1939ல் 'ஸ்டேட்ஸ்மான்' என்ற பத்திரிகை, 'உபயோகமற்ற அரசர்' என்ற தலையங்கமிட்டு, தாகூர் சாஹிப்பைப் பற்றி ஒரு கட்டுரையை வெளியிட்டது. இது, தாகூர் சாஹிப்பையும் அவருடைய பிரதம மந்திரியையும் பயத்திற் காளாக்கி விட்டது. இராஜப் பிரதிநிதி உடனே தலையிட்டார். தாகூர் சாஹிப்பும் சமரஸத்திற்கு இசைந்தார். ஸ்ரீ காந்தியின் உண்ணுவிரதமும் நின்றது.

இந்தச் சம்பவம் சிறியதேயாயினும் மிக முக்கியமானது. இந்திய அரசியல் பிரச்னைகளில் தீர்க்கப்பட வேண்டிய முக்கியமான விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. ஜனப் பிரதிநிதிகள் அடங்கிய அரசாங்கம் இப்பொழுது மாகாணங்களில் நடைபெறுகிறது. சமஷ்டி திட்டம் இன்னும் அமுலுக்குக் கொண்டுவரப்படாமலே தள்ளி வைக்கப்பட்டு வருகிறது. சுதேச மன்னர்கள், சமஷ்டியில் சேர்ந்து கொள்ள இன்னும் தயங்கிக் கொண்டிருக்கிருர்கள். பிரிட்டிஷ் இந்திய விவகாரங்களில் அவர்கள் தலையிடுவார்களானுல் அவர்களுடைய சமஸ்தான விவகாரங்களில் தலையிட பிரிட்டிஷ் இந்தியாவுக்கு அதிகாரமில்லையென்று தாங்கள் சொல்ல முடியாதேயென்றுதான் சுதேச மன்னர்கள் தயங்குகிருர்கள்.

பிரிட்டிஷ் இந்தியா—அதாவது இந்திய தேசிய காங்கிரஸ்—வேறு காரணங்களுக்காகச் சமஷ்டியை எதிர்க்கிறது. சுதேச சமஸ்தானங்கள், சுயேச்சாதிகாரம் பெற்றவை. சமஷ்டி அரசாங்க அமைப்போ, ஜனநாயக முறைகளுக்கு விரோதமாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. மாகாணச் சட்ட சபைகளின் அதிகாரங்கள் அதிகமாகிக் கொண்டு வர வர சமஷ்டியைப் பற்றிய பொது ஜனங்களின் எதிர்ப்பும் வலுத்து வருகிறது. சமஷ்டி சட்ட சபைக்கு, சுதேச சமஸ்தானங்

களின் பிரஜைகள், தங்கள் சமஸ்தானப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க னுப்பும் உரிமை கொடுக்கப்படாலன்றி, சுதேச மன்னர்களும், தங்களுடைய சமஸ்தான நிருவாகத்தை ஜனநாயக முறையில் நடத்த இசைந்தாலன்றி, சமஷ்டியை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளாது.

சுதேச சமஸ்தானங்கள் ஜனநாயக முறையைத் தழுவி தங்கள் நிருவாகத்தை நடத்த வேண்டுமென்று சொல்வதனாலே, சுதேச மன்னர்கள் இருக்கக்கூடாதென்பது அர்த்தமல்ல. அப்படி யாரும் கூறவில்லை. இவர்களை அடியோடு அகற்றிவிட வேண்டுமென்று சொல்வது, காங்கிரஸ்காரர்களுக்குள் ஒரு நாகரிகமாயிருந்த போதிலும், சுதேச மன்னர்கள் பலர், உறுதியான ஸ்தாபனத்திலேயே நிலைத்திருக்கிறார்கள். இவர்கள், கேட்பார் ஆலோசனையைக் கேட்டு சரியானபடி செல்வார்களானால், தங்கள் பலத்தை அதிகரித்துக் கொள்வதோடு, இந்தியாவின் அபிவிருத்தியையும் நாடலாம். ஆனால் மன்னர் குழாத்தில் திறமை சாலிகள் மிகக் குறைவு. அப்படி திறமை மிகுந்த சுதேச மன்னர் ஒருவர் இருவர் இருப்பாரானால், இவர்களுக்கு விஸ்தீரணமான சமஸ்தானமும், அது காரணமாக ஏற்படுகிற செல்வாக்கும் இல்லை. அல்லது இந்தத் திறமைசாலிகள், ஸ்தோத்திரப் பிரியர்களாகவும் வீண் பொழுது போக்குபவர்களாகவும் இருக்கிறார்கள். பொதுவாகக் கூறுமிடத்து, சுதேச மன்னர்கள், சிக்கலாகவுள்ள எதிர் காலத்திற்குத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளவில்லை.

இந்தியாவில் இப்பொழுது அமைதியின்மை நிறையக் குடிகொண்டிருக்கிறது. இதற்கு மூன்று முக்கிய காரணங்களைச் சொல்லலாம்:—(1) உலக நிலை (2) காங்கிரஸுக்குள் கட்சிப் பிளவுகள் (3) பொருளாதாரப் பிரச்னைகள்.

இங்கிலாந்துக்குப் புறம்பாயுள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளில், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கௌரவம் எவ்வளவு தூரம் இறங்கியிருக்கிறதென்பதைஇங்கிலாந்திலுள்ள பெரும்பாலோர் உணரவில்லை. நாம் பல நாடுகளைப் பாதுகாவாமல் கைவிட்டு விட்டதைக் கண்டு ஆத்திரம் அதிகம் இருக்கிறது. மஞ்சூரியா, அபிசீனியா, சைனு, ஸ்பெயின், ஜெக்கோஸ்லோவேகியா முதலிய நாடுகளை நாம் கைவிட்டு விட்டோம். இங்கிலாந்தில் மிகச் சாதாரணமானவையென்று கருதப்படுகிற விஷயங்கள், இந்தியாவில் சாசுவதமான உணர்ச்சியை உண்டு பண்ணி விடுகின்றன. மூன்று வருஷங்களுக்குமுன் போர்மோஸா தீவில் பிரிட்டிஷ் மாலுமிகளில் சிலரை ஜப்பானியர்கள் அடித்து, ஒருவனுடைய பல்லையும் உடைத்து விட்டார்கள். இந்தச் சம்பவம், இந்தியர்களை மௌனமான சிந்தனையில் ஆழ்த்தி விட்டது. சென்ற செப்டம்பர் மாதம் நியுகினியாவுக்கு அருகாமையிலுள்ள பிரிட்டிஷ் பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு ஜப்பானியக் கடற்படை சென்றது. இதை லண்டன் பத்திரிகைகள் பிரஸ்தாபிக்கவேயில்லை. ஆனால் இந்தச் சம்பவம் இந்தியாவில் ஒருவித உணர்ச்சியை உண்டு பண்ணியது. சமீபத்தில் இந்தோ-சைனுவுக்கும் போர்னியோவுக்கும் மத்தியில் உள்ள சில தீவுகளை ஜப்பான் கைப்பற்றிக் கொண்டதானது இதே மாதி

ரியான உணர்ச்சியையே உண்டு பண்ணியது. ஜெக்கோ ஸ்லோவேகியா காரணமாக உலக யுத்தம் ஏற்பட்டிருக்குமானால் இந்தியா பேசாமலேயே இருக்கும் என்று நான் நிச்சயமாகச் சொல்ல முடியும். லார்ட் ரன்ஸிமானை நாம் தூதனுப்பியதற்காகவும், ம்யூனிக் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டதற்காகவும், யுத்தம் நேரிடாமல் தப்பித்துக் கொண்டதற்காகவும் நாம் ஒரு போதும் மன்னிக்கப்பட மாட்டோம். சர்வ தேசப் பிரசித்தியுள்ள ஓர் இந்தியர் என்னிடம் பின் வருமாறு கூறினார்:—'ஆம்; நீங்கள் இறந்து போய்க் கொண்டிருக்கிறீர்கள்; அது பெரிய விஷயமல்ல. தேசங்களும், தனிப்பட்டவர்களும் இறந்து போக வேண்டியவர்கள் தான். ஆனால் கௌரவத்துடன் நீங்கள் இறக்கக் கூடாதா? ஏனென்றால் நீங்கள் பிரசித்தி பெற்ற தேசத்தினரல்லவா?'

இப்பொழுது யுத்தம் ஏற்பட்டதேயானால், சூயஸ் கால்வாய் மூடப்பட்டு விடும். ஏனென்றால் எதியோப்பியா, இத்தாலிய ஆக்ரமிப்புக்குட்பட்ட பிறகு, இந்த அடைப்பு நிச்சயமென்றே யாரும் கருதுகிறார்கள். நன்னம்பிக்கை முனை வழியைப் பாதுகாத்து, அதன் மூலமாகப் போக்குவரத்தை ஏற்படுத்திக் கொள்வதென்பது முடியாத காரியம். இந்தியாவிலுள்ள சுமார் ஐம்பதினாயிரம் பிரிட்டிஷ் துருப்புகளுக்குத் துணையாக இன்னும் அதிக படைகளை அனுப்புவதென்பதும் முடியாத காரியம். அதற்கு மாறாக ஈராக் பெட்ரோல் குழாயையும், சூயஸ் கால்வாயையும் காப்பாற்ற வேண்டி இந்தியாவிலிருந்து சில துருப்புகளை அனுப்பவேண்டியிருந்தாலும் இருக்கும். இந்த நிலையிலிருந்து பார்க்கப்போனால் பிரிட்டனுக்குத்தான் இந்தியாவின் உதவி அவசியமாயிருக்கிறது. இந்தியாவுக்குப் பிரிட்டன் எவ்வளவு தூரம் துணையாயிருக்குமென்பது சந்தேகமாயிருக்கிறது. சர்வாதிகார நாடுகளிலிருந்து தனக்கு எந்தவிதமான பயம் ஏற்படும் என்று இந்தியா சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை. அந்த மாதிரியான பயம் ஏற்படாதென்றே அது கருதுகிறதென்று சொல்லலாம். இத்தலிக்கும், ஜெர்மனிக்கும் ஐரோப்பாவில் ஏராளமான வேலை இருக்கிறது. ஜப்பானோ, சீனா-யுத்தம் என்கிற பசைப் புட்டியில் கையைவிட்டுக்கொண்டு திணறுகிறது. இந்திய ராணுவமும் முன்போல் ஒரேவிதமான மனப்பான்மை கொண்டிருக்கிறதென்று சொல்லவும் முடியாது. பாலஸ்தீன விஷயமாக ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒரே விதமான அபிப்பிராயங் கொண்டிருக்கின்றனர். பாலஸ்தீனத்தில் அராபியர்கள் தங்களுடைய மூலாதாரமான உரிமைகளுக்கே போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்று இந்தியர்கள் கருதுகிறார்கள். யூதர்களிடமிருந்து நமக்கு எந்தவிதமான அரசியல் ஆதரவு கிடைத்த போதிலும் அந்த ஆதரவு காரணமாக அராபியர்களுடையவும் மத்திய ஆசிய நாடுகளினுடையவும் ஆதரவை இழந்துவிட்டோம். இந்தமாதிரி நெருக்கடியான சந்தர்ப்பங்களில் மனம் விட்டுப் பேச முடியவில்லைதான். புத்திசாலியான யாரும் உலக யுத்தம் ஏற்படுமானால் இந்தியா எவ்வாறு நடந்துகொள்ளும் என்பதை ஊகித்துக் கொள்ளாமலிருக்க முடியாது. பொதுவாக நமக்கு உற்

சாகம் தருவதாயிராது என்று மட்டும் சொல்லலாம்.

பிரிட்டனோடு ஒத்துழைக்கிற விஷயத்திலோ அல்லது உலக யுத்தம் ஏற்பட்டால் இந்தியா எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்கிற விஷயத்திலோ இந்தியாவில் அபிப்பிராய வேற்றுமைகளிருக்கின்றன. இந்த அபிப்பிராய வேற்றுமைகள் மூன்று பேருடைய தலைமையில் தோன்றியுள்ள கட்சிகளாக, அல்லது அபிப்பிராயத்திரளாக உருக்கொண்டிருக்கின்றது என்று கூறலாம்.

ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் இந்தியாவுக்குப் பூரண சுதந்தரம் கிடைக்க வேண்டுமென்ற கொள்கையுடையவர். சமஷ்டியை அடியோடு நிராகரிப்பவர். அவர் எப்பொழுதுமே அஹிம்சா தர்மத்தில் தமக்குப் பூரண நம்பிக்கையிருக்கிறதென்று பாசாங்கு செய்யவில்லை.

ஸ்ரீ காந்தி அஹிம்சா தர்மத்தை ஒரே பிடியாகக் கொண்டவர். உலக யுத்தம் ஏற்பட்டால் இந்தியா நடுநிலைமை வகிக்க வேண்டும் என்ற அவ்வளவு தூரத்திற்குக் கூட இவருடைய அஹிம்சா தர்மம் சென்று விடுகிறது. அபிசீனியர்கள் அஹிம்சாதர்மத்தை அனுஷ்டித்திருந்தார்களானால் அவர்கள் இத்தலியால் வெற்றி கொள்ளப்பட்டிருக்க மாட்டார்களென்றும், சர்வாதிகாரிகளின் ஆபத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ள நாம் நிராயுதபாணிகளாகவே வாழவேண்டுமென்றும் இவர் கூறுகிறார். அரசியல் விஷயத்தில் இவர் எப்பொழுதுமே ஒரு குறுகிய மனப்போக்கு உடையவர். அதனால் சமஷ்டியை ஏற்றுக் கொள்ளலாமென்பது அவர் விருப்பம். சுதேச மன்னர்கள் சிறிதளவு ஜனநாயக ஜாடை காட்டினார்களானால் இவருக்கு நிரம்பத்திருப்தி ஏற்பட்டுவிடும். இவர் உயிரோடு வாழுகிற வரையில் சுதேச மன்னர்களின் அந்தஸ்திற்கு எவ்வித பாதகமும் ஏற்படாது.

மூன்றாவதுநபராகிய பண்டித ஜவஹர்லால் நேரு பக்தி மிகுதியினாலும் அன்பு மேலீட்டினாலும் ஸ்ரீ காந்தியின் பக்கம் இருப்பவர். ஆனால் அவரை ஒரு தேசிய வாதியென்று சொல்வதைவிட சர்வ தேசவாதியென்று சொல்வது பொருந்தும். உலகத்திலுள்ள எல்லா நாடுகளும், எல்லாமனிதர்களும், சுதந்திரம்பெற வேண்டுமென்பதே அவர் கோரிக்கை. பிரிட்டனில் தற்பொழுது உண்மையான ஜனநாயக அரசாங்கம் நடைபெற்றுக்கொண்டிருக்குமானால் இந்தியா பூரண சுதந்திரம் பெறுவதா? அல்லது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் டொமினியன் அந்தஸ்தை அடைவதா? என்ற பிரச்னைக்கு அவர் முக்கியத்துவம் கொடுக்க மாட்டார் என்றே நான் நம்புகிறேன். பிரிட்டனில் தற்போதைய அரசாங்க முறை நடைபெறுகிற வரையில் பலாத்காரம் நமது நுழைவாயிலில் காத்துக் கொண்டிருக்கிறது என்பதே அவரது உறுதியான எண்ணம். நடைமுறைகளில் ஸ்ரீ காந்தியினின்றும் ஸ்ரீ நேரு மாறுபடுகிறார். ஸ்ரீ நேருவுக்கு சமாதான வாதத்தில் நம்பிக்கை யில்லை. சர்வாதிகார நாடுகளை எதிர்த்து நிற்க நாம் நிராயுதபாணிகளாவது என்ற கொள்கை அவருக்குப் பிடிக்கவில்லை. நிராயுதபாணிகளாகிவிட்ட ஜனங்களைக் கண்டு சர்வாதிகார நாடுகள் சந்தோஷமுற்று அவர்களைச்சிரழித்து,

விடும் என்பது அவருடைய நம்பிக்கை.

பிரிட்டனில் நாம் எந்தவிதமான அரசாங்க முறையை அனுஷ்டிக்கிறோமோ, அதைப் பொறுத்தே இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் ஏற்பட வேண்டிய எதிர்காலத் தொடர்பு இருக்கும். இந்தியாவில் புதுமாதிரியான ஒரு சுதந்திர உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்தியா, தனக்குச் சம்பந்தமில்லாத கொள்கைகளைப் பிரிட்டன் அனுசரித்து அது காரணமாக, யுத்தத்தை வருவித்துக் கொள்ளுமானால், அந்த மாதிரியான யுத்தங்களில் தன்னைச் சம்பந்தப்படுத்திக் கொள்ள விரும்பவே இல்லை. பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டுள்ள பல தொடர்புகளில் ஒன்று கூட அறுபட்டுப் போகவில்லை. இந்தியாவிலுள்ள மிகச்சிறந்த தேசிய ஸ்தாபனமாகிய காங்கிரஸ் மகா சபையானது இப்பொழுது அபேதவாதத்தையும் சீர்திருத்தப் போக்கையும் தழுவிக் கொண்டு செல்கிறது. இப்பொழுது காங்கிரஸானது ஏழு மாகாணங்களில் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதற்கு இருதரப்பிலிருந்தும் தொந்தரவுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு பக்கத்தில் விவசாயிகள் தாங்கள் எதிர்பார்த்ததை யெல்லாம் இந்தக் காங்கிரஸ் அரசாங்கம் செய்யவில்லையே என்றும், அப்படி ஏதேனும் ஒன்றிரண்டு சீர்திருத்தங்களைச் செய்வதா யிருந்தாலும் அவற்றைத் துரிதமாகச் செய்யவில்லையே என்றும் குறைகூறிக் கொண்டிருக்கிறார்கள். மற்றொரு புறத்தில் தேசத்தில் செல்வாக்கு மிகுந்த கட்சி என்றதின் காரணமாக மட்டும் காங்கிரஸிலே சேர்ந்தவர்கள், முதலாளிகளுடையவும் நிலச்சுவான்தார்களுடையவும் உரிமைகளைப் பாதிக்கக்கூடிய சீர் திருத்தங்களை செய்யக்கூடாதென்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே காங்கிரஸானது இந்த உட்புகைச்சல்கள் ஓய்ந்து போகிற வரையில் அமைதியாகவேதான் தன் வேலையைச் செய்து கொண்டு போக வேண்டியிருக்கும். எந்த இந்தியாவிலே, ஆறு குழந்தைகள் பிறந்தால் அதில் ஒரு குழந்தைதான் 55 வயதை அடைகிறதோ, நோய்கள் காரணமாகவும், அறியாமை காரணமாகவும் பல துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறதோ, அந்த இந்தியாவில் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு அதிகமான வேலையிருக்கிறது. ராஜகோட்டை சம்பவம் மிகச் சிறிய விஷயமென்று நாம் ஒதுக்கிவிட முடியாது. பிரிட்டன், உலக யுத்தத்தில் தன்னைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளுமானால் அதன் விளைவுகளையும் நாம் மறந்துவிட முடியாது. யுத்தம் வராமலிருந்து பாலஸ்தீனம் சம்பந்தமாக ஒரு சமரஸ முடிவு ஏற்படுமானால் இந்தியாவில் சிறிது காலம் வரை பெரிய அரசியல் குழப்பம் ஒன்றையும் நாம் எதிர்பாராமல் இருக்கலாம். ஹிந்துக்களினுடையவும் முஸ்லீம்களினுடையவும் கவனத்தை இழுக்க இன்னும் எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. இந்தியா சுதந்திரம் பெறுவதற்கான வழியில் அதிக நெருக்கடிகள் இல்லாமல் சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்று இந்திய தேசிய அபிப்பிராயமானது திருப்தி யடையுமானால் அது தன்னுடைய வேகத்தையும் மெதுவு படுத்திக்கொள்ளச் சித்தமாயிருக்கிறது.

ரகுநாத நரசிம்ஹ முதோல்கர்

ஜனனம் 1857

மரணம் 1921

"ஒரு காங்கிரஸ்வாதி"

இருபத்தேழாவது காங்கிரஸ் மகா சபையானது மத்திய மாகாணத்திலுள்ள பங்கிபூர் என்ற நகரத்தில் கூடியது. ராவ் பகதூர் ரகுநாத நரசிம்ஹ முதோல்கர் என்பவர் இதற்குத் தலைமை வகித்தார். காங்கிரஸுக்குத் தலைமை வகித்த பிரமுகர்களிலே பலர், வெறும் அரசியல் விவகாரங்களில் மட்டுமே தங்கள் கவனமனைத்தையும் செலவிட்டு விட்டுப்போனார்கள். ஒரு சிலர் மட்டுமே சமூக சீர்திருத்த விஷயங்களிலும் அக்கரை கொண்டார்கள். அவர்களில் முக்கியமானவர் ஸ்ரீ முதோல்கார். அரசியலில் இவர் கவனஞ் சென்றதெல்லாம் விவசாயிகளின் கடன் பொறுப்பைப் பற்றியும், அவர்களுடைய அறியாமையைப் போக்கிப் பொருளாதார வாழ்க்கையை உயர்த்த வேண்டுமென்பதைப்பற்றியுமே.

இவர், மஹாராஷ்டிர வமிசத்தைச் சேர்ந்தவர். காண்டேஷ் ஜில்லாவில் தூலியா என்ற நகரத்தில் 1857ம் வருஷம் மே மாதம் 16ந் தேதி ஜனனமானார். இவருடைய தகப்பனார் பெயர் நரசிம்மராவ் முதோல்கார். அவர் காண்டேஷ் ஜில்லா நீதிபதி காரியாலயத்தில் ஒரு முக்கிய உத்தியோகஸ்தராயிருந்தார். முதோல்காருடைய பாட்டனார் தாசில்தாராயிருந்தார்.

முதோல்கார் பாலியத்தில் தூலியா நகரத்திலே படித்தார். பிறகு, இவருடைய தகப்பனார் உத்தியோக நிமித்தமாகச் சென்ற எரண்டோல் கிராமத்திற்குச் சென்று படித்தார். இவருக்கு ஆரம்பத்திலிருந்தே மஹா,

ராஷ்டிர சரித்திரத்தில் அளவு கடந்த ருசியிருந்தது. தவிர, சிறு கதைகள் படிப்பதில் அதிக அக்கரை காட்டி வந்தார். பத்தாவது வயதில் இவருடைய மூத்த தமையனார் இவரை பீராருக்கு அழைத்துச் சென்று அங்கு இவருக்கு ஆங்கிலப் படிப்பைச் சொல்லிக் கொடுத்தார். பள்ளிக்கூடங்களில் இவர் எப்பொழுதும் சூடிகையாகவே இருந்து முதல் வகுப்பிலேயே தேறி வந்தார். 1873ம் வருஷம் இவர் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினார். 1874ம் வருஷம் பம்பாய் எல்பின்ஸ்டன் காலேஜில் போய்ச் சேர்ந்து எப். ஏ., பி. ஏ. பரீட்சைகளில் தேறினார். பின்னர், சரித்திரம், தர்க்கம், அரசியல், பொருளாதாரம் முதலிய பாடங்களின் ஆசிரியராயமர்ந்தார். 1880ம் வருஷம் எல். எல். பி. பரீட்சையில் தேறினார். இதற்குப் பிறகு வக்கீல் தொழிலை அமரோட்டி என்ற நகரத்தில் திறமையாக நடத்தி ஏராளமான பணத்தைச் சம்பாதித்தார்.

வக்கீல் தொழிலுடன் மாகாண அரசியல் விஷயங்களிலும், நகரசபை விஷயங்களிலும் அதிக அக்கரை பாராட்டினார். தேசத்தின் பொருளாதார அபிவிருத்தியில் இவர் அதிக கவனஞ் செலுத்தினார். சில நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு 'பீரார் ட்ரெயினிங் கம்பெனி' லிமிடெட் என்ற ஒரு கம்பெனியை ஆரம்பித்து நடத்தத் தொடங்கினார். ஆனால் இதில் இவருக்கு அதிக உற்சாகம் ஏற்படவில்லை. ஜனங்களுக்கு அரசியல் அறிவைப் புகட்டும் பொருட்டு 'விதர்ப்பம்' என்ற பத்திரிகையை நடத்தத் தொடங்கினார். சுமார் பதினாறு வருஷ காலம் மிகத் திறமையுடன் இந்தப் பத்திரிகை நடைபெற்றது. இதில் இவர் அநேக கட்டுரைகள் எழுதி தமது அரசியல் ஞானத்தைத் தெளிவு படுத்திக் காட்டினார். இந்தக் காலத்தில் இவர் அநேக சங்கங்களை ஸ்தாபித்து அரிய சேவைகள் பல செய்திருக்கிறார். அமரோட்டி நகர சபையில் சுமார் 18 வருஷ காலம் இவர் அங்கத்தினராயிருந்து அநேக நல்ல காரியங்களைச் செய்து ஜனங்களின் நன்றியைப் பெற்றுக்கொண்டார்.

1888ம் வருஷம் அலகாபாத்தில் நடைபெற்ற காங்கிரஸில்தான் இவர் முதன் முதலாகக் கலந்து கொண்டார். அப்பொழுது ஜார்ஜ் யூல் காங்கிரஸ் தலைவராயிருந்தார். இவர் விஜயஞ் செய்த முதல் காங்கிரசிலேயே இவர் போலீஸ் இலாகா நிருவாக சம்பந்தமான ஒரு தீர்மானத்தைப் பற்றிப் பேசினார். மிகச் சொற்ப காலத்திற்குள், இவர் காங்கிரஸுக்குள் ஒரு முக்கியஸ்தரானார். ஒரே ஒரு காங்கிரஸ் தவிர, மற்றெல்லாக் காங்கிரஸ் கூட்டங்களுக்கும் இவர் விடாமல் விஜயஞ் செய்து வந்திருக்கிறார். 1890ம் வருஷம், காங்கிரஸானது, ஒரு பிரதிநிதிக்கூட்டத்தை இங்கிலாந்துக்கு அனுப்பிய போது, இவர் அதில் ஒருவராகத் தெரிந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டார்.

1896ம் வருஷம் மத்திய இந்தியாவில் பெரிய பஞ்சம் உண்டாயிற்று. அப்பொழுது இவர் அநேக நண்பர்களின் துணை சேர்த்துக் கொண்டு ஜனங்களின் கஷ்டங்களுக்குப் பரிகாரந்தேடிக் கொடுத்தார். இதை அரசாங்கத்தார் பாராட்டி, இவருக்கு 1898ம் வருஷம் 'ராய் பகதூர்' பட்டம் அளித்தார்கள். இவர் 1921ம் வருஷம் காலமானார்.

ஜாவானியர்

—அரு. சொ.

பசிபிக் இந்து சமுத்திரங்களுக்கு நடுவிலுள்ள இயற்கை வனப்பு மிக்க தூர கீழ்ப் பிரதேசங்களாகிய மலாயா தீவு கூட்டங்களில், ஒருவன் பிரயாணம் செய்வானானால், தனது வாசஸ்தலத்தை அங்கேயே மாற்றிக் கொள்ளப் பிரியப்படாதிருக்கமாட்டான்.

இந்தத் தீவுக் கூட்டங்களில் அழகு பொருந்தியதும், முக்கியமானதும், விஸ்தீரணத்திலும், ஜனத் தொகையிலும் ஏறக்குறைய இங்கிலாந்தை ஒத்த, டச்சுக்காரர்கள் ஆட்சிக்குட்பட்ட ஜாவா தீவில் இயற்கை யன்னை தாண்டவமாடுகிறாளென்று சொல்லலாம்.

இவ்வழகிய தீவைசிங்கப்பூரிலிருந்து இரண்டு நாட்களில் அடையலாம். தமிழரசர் காலங்களில் இத்தீவு சாவகம் என அழைக்கப்பட்டிருப்பதோடு, தமிழ் நாகரீகம் ஜாவா வரை பரவி யிருந்ததாகவும், ஜாவாவுக்கும் இந்தியாவுக்கும் ஆதிகாலந்தொட்டே தொடர்பிருந்து வந்ததாகவும் பண்டைய நூற்களிலிருந்து தெரியக் கிடக்கிறது. தமிழரசர் காலத்தை சிந்திக்காதவர்களிருந்த போதிலும், நாட்டுச் சர்க்கரை உற்பத்தி குறைந்து அஷ்டகிராம் சீனி ஆதிக்கம் பெற்ற சொற்ப காலத்திலிருந்து ஜாவாவை ஒரு சிறு குழந்தையும் அறிந்தே இருக்கிறது. பெயர் பெற்ற ஜாவா சீனியை சுவைக்காத குழந்தை ஏது? இதுவும் பழங்காலத் தொடர்பாக இருக்கலாம். அதற்கொப்ப ஜாவாவில் இன்றும் கொஞ்சம் தமிழ் நாகரீகம் நிலவுகின்றது.

டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான ஈஸ்ட் இண்டீஸ் (EAST INDIES) என அழைக்கப்படும் குடியேற்ற நாடுகள் மொத்தம் 8 லட்சம் சதுர மைல்கள் உள்ளவை. இதன் மேற்பரப்பு 7,37,000 சதுர மைல்கள் கொண்டதாகும். ஜனத்தொகை 5 கோடிக் கதிக மிருக்கிறது.

இத் தீவுகளை ஜாவா, மதுரா, சுமத்திரா, ரயோலிங்கா ஆர்ச்சிபெலகோ, பாங்கா, பில்லிட்டன், போர்னியோ, செலிபஸ், மொலுக்கா ஆர்ச்சிபெலகோ, சுண்டா, நியூ கெனியா என 1 பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

ஜாவா, மதுரா தீவுகளிரண்டும் 50,554 சதுர மைலகள் கொண்டதாயினும் அதில் 380 லட்சம் ஜனங்கள் இருக்கிறார்கள். அதாவது டச்சு ஈஸ்ட் இண்டீஸில் மொத்தம் வசிக்கப்பட்ட ஜனங்களில் ஐந்தில் நான்கு பங்கினராகும்.

ஒரு டச்சு மனிதன் ஜாவாவுக்குப் பொருளீட்டப்போவானானால் அதையே சாஸ்வதமான ஊராக வைத்துக் கொள்ளப் பிரியப்படுகிறானென்பது ஆச்சரியமில்லை. அவனுக்கும் அந்த தேசத்தார் ஸ்திதிக்கும் தகுந்தவாறு வேலை நேரங்களையும் ஓய்வு நேரங்களையும் அமைத்திருக்கின்றனர்.

ஜாவாவில் வசிக்கும் சுதேசிகள் முழுதும் ஜாவானியர்களே.

மத்திய பாகங்களிலும் கீழ்ப் பிரதேசங்களிலும் ஜாவானிய பாஷை அதிகமாகப் பேசப்படுகிறது. 'சுண்டனீஸ் என்ற பாஷை மேல் பாகங்களி

லும், மஜு—ரிஸ் என்ற பாஷை அதிக கீழ்ப்பாகமாகிய மதுராத்தீவை நோக்கும் பாகங்களிலும் பேசப்படுகிறது.

ஆனால் மதம், ஜாதி, அதில் கலப்பு—கலப்பல்லாதது இவைகள் டச்சு ஈஸ்ட் இந்திய தீவுகளில் இன்னும் பின்னலாகவும் குழப்பமாகவும் தெளிவறக்கண்டு கொள்ள முடியாதவண்ணமிருக்கிறது.

இவைகளில் முக்கியமாக இந்துனிசியன்ஸ், மலாயினிசியன்ஸ், நீக்ரட்டோயென மூன்று பிரிவினர்களாக பிரிக்கலாம். இந்துனிஸியன்ஸ் என்று சொல்லப்படுவது முதல் முதலாக குடிபேறியவர்களான மலாயா கரைப் பிரதேசங்களிலுள்ள உருண்டைத் தலையினர்களையும் மற்றொரு அகலமற்ற ஒடுங்கிய தலையினரையும் குறிக்கும். ஆனால் ஒடுங்கின தலையினரைத்தான் முக்கியமாக இந்துனிஸியன்ஸ் வர்க்கமெனக் குறிக்கலாம்.

மலாயினிஸியன்ஸ் எனச் சொல்லப்படுபவர்கள் நியூ கினியா (New Guinea) புளோரஸ் (Flores) கைத் தீவுகள் (Kai Islands) இவைகளில் வசித்து வரும் பாப்புவான்ஸ் (Papuans) என்ற ஜாதியினர்களாவார்கள்.

நீக்ரடோஸ் என்றவர்கள் ரயலிங்கா தீவுக்கூட்டப் பிரதேசங்களிலும் நியூகினியாவில் சில பாகங்களிலுள்ளவர்களும் மத்திய ஜாவாவிலுள்ள ஜனங்களின் ரத்தக்கலப்புள்ளவர்களுமாவார்கள்.

ஜாவானியர்கள் சீனர்களுடன் அதிகமாகக் கலந்து கொண்டு விட்டனர்.

டச்சு ஈஸ்ட் இந்திய தீவுக்கூட்டங்களில் பிரயாணம் அடிக்கடி செய்பவர்களைத் தவிர மத ஆராய்ச்சியில் ஈடுபடாதவர்களுங்கூட இத்தீவுகளிலுள்ள புதிது புதிதான ஜாதிப் பிரிவினர்களையும் அவர்கள் அமைப்பைப்பற்றியும் அறிய ஆசைப்படாதிருக்க மாட்டார்கள்.

ஜாவானிய மக்கள் மிக்க அழகு பொருந்திய வர்களும் கூடியவரை தேகக் கட்டுடையவர்களுமாவார்கள். மிகவும் பணம் படைத்தவர்கள் சுகவாசிகளாக இருந்த போதிலும் ஏழை மக்கள் உழவுத் தொழிலில் அதிகமாக ஈடுபட்டிருக்கின்றனர். அதனால் அப்பிரதேசத்து ஜனங்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமில்லாதிருக்கிறது.

சாதாரண ஜாவானிய மனிதன் ஒவ்வொருவனும் உத்தியோகம் செய்வதிலும் உத்தியோகக் குறிப்பைக் காட்டும் உடையை அணிந்து கொள்வதிலும் ஆர்வமிக்குடையவனாகக் காணப்படுகிறான்.

ஜாவானிய மக்களுக்கு சிக்கனமென்பது இன்னதெனவே தெரியாது. திருவிழாக்களிலும் கல்யாண காலங்களிலும் அறுவடை காலங்களிலும் உடம்பை சொஸ்தம் செய்யும் பொருட்டும் அதிகமான பணத்தை விரயம் செய்வதோடு கவர்ன்மெண்டு உத்தியோகம் பெறும் பொருட்டும் செலவிடுகின்றனர்.

பெரும்பாலான ஜாவானிய மக்கள் கிராமங்களில்தான் வசிப்பதுண்டு. பட்டணங்களில் 30ல் ஒரு பங்கினரைத்தான் காணலாம். அவர்களின் குடும்ப வாழ்க்கை மிக்க வரம்புடையது. உயர்ந்த ஜாதியினர்கள் அநேக மனைவிகளைக் கொண்ட போதிலும் தாழ்ந்த மக்கள் ஒரே மனைவியையே தேர்ந்தெடுத்துக் கொள்ளுகின்றனர். இந்த அதிக மனைவிகளைக் கொள்வது பணத்தைப் பொருத்ததாகும்.

வயாங் கேளன்ற பொம்மைக்கூத்து களில் அதிகமாக ஈடுபடுகின்றனர். அப்பொம்மைகள் நூற்றுக் கணக்கான வித்தியாசத்துடனும் பல வித வர்ணம் தீட்டப்பெற்றும் இருக்கின்றன. இக்கூத்துக்கு அநேகவித மான வாத்தியங்களை உபயோகப் படுத்துகின்றனர். இதைத் தவிர மிகவும் நூதனமான டோப்பெங் டலாங் (Topeng Dalang) என்ற முகமூடி



பாவித் தீவிலுள்ள பாலினிய மங்கையின் இயற்கைத் தோற்றம்

நாட்டியக்கூத்தில் அதிக பிரியமுள்ளவர்கள். இந் நாட்டியத்தில் நடிப்பவனுக்குப்பின்னுல் அனேகர் கூட்டமாக இருந்து பாடுவார்கள். அதற்குத் தகுந்தாற்போல் முகமூடி யணிந்தவன் நடிக்க வேண்டும்.

பெண்கள் ஜரிகை வேலைப்பாடுகள் அமைந்த, அங்கமுழுதும்மூடிக்கொள்ளக்கூடிய உடைகளணிந்து நாட்டியமாடுவதில் ஆர்வமுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

பிரபலஸ்தர்கள் பட்டாடைகளையும்

பாலித் தீவிலுள்ள பாலினிய சகோதரிகள் கடைத் தெருவுக்குச் செல்லும் காட்சி

நகைகளையும் அணிந்து கொண்டு சௌக்கியமாக வசிக்கிறார்கள். அவர்கள் வசிக்கும் வீடுகள் ரொம்ப அழகாகவும் சித்திர வேலைப்பாடுகள் அமைந்ததாகவுமிருக்கும். பிரபலஸ்தர்கள் இருக்குமிடத்தில் ஒரு பணியாளன் எப்பொழுதும் குடை பிடித்துக் கொண்டிருப்பான்.

ஜாவானிய மக்கள் ஆறடி நீளமும் 3 அல்லது 4 அடி அகலமுள்ளது



ஜாவானிய மாது தண்ணீரெடுத்துச் செல்லும் காட்சி

மான லுங்கிகளைத்தான் கீழாடையாக அணிகிறார்கள். அது அநேகமாய் சாம்பல் நிறமுள்ளதும் கோட்டைத்ததாகவும் இருக்கும். சில பாகங்களில் லுங்கியைத் தைத்தும் சில பாகங்களில் தைக்காமலும் உடுத்திக் கொள்ளுகின்றனர்.

பெண்கள் மார்பு வரை தெரியக் கூடிய காலர் வைத்த மேலங்கி அணிகின்றனர். சில பாகங்களில் மார்பும் சேர்த்து மறைக்கும்படி லுங்கியையே இறுகக் கட்டி பின்னால் முடி போட்டு உடுத்திக்கொள்வதும் உண்டு.

பாலித் தீவுக் கிராமவாசிகளில் ஆண்களும் பெண்களும் மேலுடை யணியாமலே திரிகின்றனர். சில சமயம் பெண்கள் பிரயாண காலங்களில் ஒரு அங்கவஸ்திரத்தை தோளின் மேல் போட்டுக் கொள்வதுண்டு. அதில் மார்பை மூட வேண்டுமென்ற கருத்து அடங்கியிருக்கவில்லை. வழக்கத்தைப் பொறுத்தே போட்டுக் கொள்ளுகின்றனர். வீடுகளிலிருக்கும் பொழுதும் வேலைச் சமயங்களிலும் அங்கவஸ்திரம் அணிவதே கிடையாது. மலை அருவிகளிலும் கால்வாய்களிலும், ஆடவர்களும் சரி, மகளிரும் சரி நிர்வாணமாகவே நீராடுகின்றனர்.

பெண்கள் தலைமுடியை விநோதமாக முடிந்துகொள்வதோடு அதில் புஷ்பங்களையும் செருகிக் கொள்ளுகின்றனர். பிரயாணங்களிலும் பயிர்த் தொழில் காலங்களிலும் மூங்கிலால் செய்யப்பட்ட தொப்பியைத் தலையில் அணிந்து கொள்ளுகின்றனர். ஆணும் பெண்ணும் இடையில் ஒரு பையைச் செருகிக் கொள்வார்கள். அதில் புகையிலை எப்பொழுதும் நிறைந்திருக்கும். பட்டின வாசிகள் ஐரோப்பியர்களைப் போல் உடையணிந்து கொள்வதில் மிக்க பிரியம் கொள்ளுகின்றனர்.

பெண்கள் அரை இஞ்சு அகலம் மூன்று இஞ்சு நீளமுள்ள காதோலையை அணிந்து கொள்ளுகின்றனர். பெண்களும் ஆண்களும் கைவிரல்களில் மோதிரங்களை அடுக்கிக் கொள்வதில் அதிக அழகிருப்பதாகக் கருதுவதோடு, பெண்கள் கால்களில் தண்டைகளையும் அணிந்து கொள்கின்றனர். தங்கள் உடைகளில் வாசனை ஊட்டிக் கொள்வதில் விருப்புடையவர்கள். பாக்குடன் எலுமிச்சம் பழத்தைச் சேர்த்து வாயில் போட்டு மெல்லுவதை ஒரு பழக்கமாக வைத்திருக்கின்றனர்.

தாயானவள் தன் குழந்தையை வலது புறத்துத்தோளிலிருந்து இடுப்பு வரை தொங்கவிட்டு முடிந்த தொட்டிலில் சுமந்து செல்லுகின்றாள்.

தங்கள் நகங்களில் சில தழைகளைக் கொண்டு வர்ணம் தீட்டிக் கொள்வதுமுண்டு. இது பிசாசு முதலிய துஷ்ட தேவதைகளுக்குப் பாதுகாப்பு எனவும் நம்புகின்றனர்.

பாதரக்ஷையை பெரும்பாலானவர்கள் அணிந்து கொள்வதில்லை யானுலும் சில சமயம் எளிய முறையில் ஆக்கப்பட்ட ரக்ஷகளையே உபயோகிக்கின்றனர்.

ஜாவாவின் ஜனத் தொகையில் பெரும்பாலும் முகம்மதியர்களாக இருந்த போதிலும் ஆதியில் இவர்கள் இந்து-புத்தர்களிலிருந்து தான் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் முக்கிய உணவாக நெற் சோற்றைத்தான் உட்கொள்ளுகின்றனர். காரமான பதார்த்தத்தில் அதிக பிரியமுள்ளவர்கள். ஆகாரத்தை கட்டைவிரலைக் கொண்டும் முதலிரண்டு விரலைக் கொண்டும் அள்ளி உண்ணுவார்கள். தண்ணீரைக் காய்ச்சியும் பாத்

திரம் உதட்டில் படாமலும் குடிப்பார்கள்.

மொத்தமாய்ப் பார்த்தால் ஜாவானிய மக்கள் எல்லாவிதத்திலும் திருப்தியடைந்தவர்களென்றே சொல்ல வேண்டும்.

டச்சு கவர்ன்மெண்டார் அங்கு எவ்விதம் தங்கள் ஆட்சியைச் செலுத்துவதென்பதை நன்கு அறிந்திருக்கின்றனர். ஜாவாவை பெரும்பாலும் பல பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஜாவானிய பிரபலஸ்தன் ஒருவனுக்கு தலைமைப் பதவியை கொடுத்திருக்கின்றனர்.

ஜாவானிய மத்திய பாகத்தில் சோராக்கார்ட்டா (Soerakarta) ஜோக்சோர்க்கார்ட்டா (Jokjokarta) என்று சொல்லப்பட்ட இரண்டு சுதேசி ஸ்டேட்டுகள் இருக்கின்றன. அவைகள் முறையே 113 சதுர மைல்களும் 56 சதுர மைல்களுமுள்ளவை. இந்த ஸ்டேட்டுகளை சோலோ எனவும் ஜோக்கா எனவும் அழைப்பதுண்டு. சோலோவில் 16,00,000 ஜனங்களும் ஜோக்காவில் 10,00,000 ஜனங்களும் வசிக்கின்றனர்.

சோலோவில் அரச வம்சத்தைச் சேர்ந்த ஒரு அரசனும் ஜோக்கோவில் சுல்தான் என்றழைக்கப்படும் ஒரு அரசனும் ஆட்சி புரிகின்றனர். இச்சுதேசி மன்னர்கள் மற்றவர்கள் மனதைக் கவரும்படியான ஒருவித உடைகளை அணிந்து கொள்ளுகின்றனர். இவ்வுடைகள் கீழைத் தேசங்களிலில்லாத நூதனமானதும் புதுமையானதுமாகையால் பார்த்தவர்கள் எவரும் மறக்க முடியாத வண்ணமிருக்கிறது.

அவர்கள் டச்சுக்காரர்கள் உதவியைக்கொண்டு தங்கள் ஆட்சியை நன்கு நடத்தி வருகின்றனர். அரண்மனைகளில் அடிக்கடி நடனக்காட்சிகள் நடைபெறும். அரண்மனைகளுக்காக தனி நடன மாதர்கள் இருப்பார்கள். அவர்கள் அரச வம்சத்தைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள்

ஆதியில் மாத்திரமென வழங்கப்பட்ட பிரதேசந்தான் 18 வது நூற்றாண்டில் சோலா, ஜோக்சா எனப் பிரிக்கப் பட்டது.

ஜாவாவின் கிழக்குப் பாகத்தில் அனேகந் தீவுக் தொடர்களிருக்கின்றன. அவைகளில் பாலி, லாம்போக் என்ற இரண்டு தீவுகள் பெரியதும் முக்கியமானதுமாகும். அங்குக் கரையோரங்களில் முகம்மதியர்கள் வசித்து வந்த போதிலும் மத்திய பாக ஜனங்கள் இந்துக்களாகவே இருக்கின்றனர். இந்த இந்துக்கள் ஜோசியம், கோடங்கியழைத்துக் குறி பார்ப்பது இவைகளில் அதிக நம்பிக்கையுடையவர்கள். மந்திரத்திலும் மிக்க மயக்க முடையவர்கள். இச்சோசியர்கள் தங்கள் சோதிடசாஸ்திரங்களை தென்னிந்திய மக்களைப்போல் பனையோலையிலே எழுதிவைத்துப் படிக்கின்றனர்.

பாலித் தீவு 2,095 சதுர மைல்கள் கொண்டது. ஜனத்தொகை 600,000 இருக்கும். இவர்கள் முழுதும் விவசாயிகளேயாவர். இத்தீவு அதிக எரிமலைகளை உடைத்தாயிருக்கின்றது. அம்மலைகளில் மிகவும் உயர்ந்த பாகம் 10,497 அடி வரை யிருக்கிறது.

லாம்போக் தீவு பாலித் தீவுக்கு மிகவும் கீழ்ப் பாகத்தி லிருக்கிறது. அது அவ்வளவு அழகு பொருந்தியதல்ல. ஆனால் அங்கிருக்கும் எரிமலைகள் ஒன்றாவது 11,810 அடிக்கு குறைந்த உயரமில்லை. இத்தீவு ஆஸ்திரேலியாவுக்குப் பக்கத்திலிருப்பதால்

அங்கு ஆஸ்திரேலியப் பறவைகள் அதிகமிருக்கின்றன.

இங்கு சாஸக்ஸ் (Sasaks) வர்க்கத்தினர்கள் வசிக்கின்றனர். இது 3,20,000 ஜனத்தொகை கொண்ட தீவாகும். இங்கு பாலினிய ஜனங்கள் 50,000 பேர்கள் வரை குடியேறியிருக்கின்றனர். இந்த சாஸக்ஸ் என்ற வர்க்கத்தாருக்கும் பாலினியர்களுக்கும் அடிக்கடி சண்டை ஏற்படுவதுண்டு.

ஜாவானிய நடனப் பெண்களும் வாத்தியக் காரர்களும்

ஜூலியஸ் ஸீஸர்

(ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகம்)

—வி. தேவாச்சாரியன்

(உரிமை காப்பிரைட்)

[சுடர் 2—கதிர் 7 தொடர்ச்சி]

அங்கம் II—களம் I

[சதியாளர் கூட்டத்தைச் சேர்ந்த காஷியஸ், காஸ்கா, டெஷியஸ், ஸின்னு, மெடலஸ் ஸிம்பர், டிரிபோனியஸ் முதலானவர்கள் பிரவேசித்தல்]

காஷியஸ் :—உன் முன்னனுமதியில்லாமல், இந்த நேரத்தில், உன்னிடம் வர வேண்டியதாகி விட்டது. புரூடஸ்! உன் நித்திரைக்குப் பங்கம் ஏற்பட்டு விட்டதா என்ன?

புரூடஸ் :—இல்லை. நான் ஒரு மணி நேரமாகவே விழித்துக் கொண்டுதானிருக்கிறேன். இரவு முழுவதும் நல்லுறக்கமே இல்லை. உன்னுடன் வந்திருப்பவர்கள் இன்னாரென்று நான் அறிந்து கொள்ளலாமா?

கா :—ஒவ்வொருவரையும் நன்றாக அறிந்து கொள்ளலாம். இவர்கள் (கூட வந்திருப்பவர்களைச் சுட்டி) எல்லாரும் உன்னிடத்தில் நல்ல மதிப்புள்ளவர்கள். இந் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் உன்னை எப்படி மதிக்கிறார்களோ அப்படியே, நீயும் உன்னை மதித்து நடக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள்.

பு :—அப்படியா! அவர்களுடைய வரவு நல்வரவாகுக!

கா :—(டெஷியஸைச் சுட்டி) இவர் டெஷியஸ் புரூடஸ்.

பு :—சந்தோஷம். அவர் வரவு நல்வரவாகட்டும்.

கா :—(மற்றவர்களை ஒவ்வொருவராகச் சுட்டி) இவர் காஸ்கா, இவர் ஸின்னு, இவர் மெடலஸ்ஸிம்பர்.

பு :—அவர்களுடைய வரவும் அப்படியே ஆகட்டும். இராத்தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு, சிந்தனையிலாழ வேண்டிய அவ்வளவு மகத்தான கவலைகள் உங்களுக்கு நேர்ந்ததென்ன?

கா :—உன்னை ஒரு வார்த்தை தனியாகக் கேட்டுக் கொள்ளலாமா?

(புரூடஸும் காஷியஸும் தனித்துப் பேசுகிறார்கள்)

(கிழக்குத்திக்கைக் குறிப்பிட்டு)

டெஷியஸ் :—இதுதான் கிழக்கு. பொழுது இந்தப் பக்கந்தானே விடிவது?

காஸ்கா :—இல்லை.

ஸின்னு :—பூ! கொஞ்சம் நிதானியுங்கள், ஐயா. இந்தப் பக்கந்தான். அதோ (வானத்தைச் சுட்டி) அங்கே வெள்ளையாகக் கோடுகள் தெரிகிறதே! அவைகள்தான் பொழுதுவிடிவதைக் குறிப்பிடுபவைகள்.

காஸ் :—நீங்களிருவரும் ஏமாந்து போய் விட்டதாக நான் ரூபிக்கிறேன். இப்படிப் பாருங்கள், என் வாளுக்கு நேரே. அயனங்களின்

கதியை உத்தேசிக்க, சூரியன் தென் கிழக்காகவே உதிக்கும். இன்னும் இரண்டு மாதங்கள் போனால், அந்த மண்டபத்திற்கு நேரே வட கிழக்குச் சாய்வாக உதிக்கும்.

(புருடஸும் காஷியஸும் நண்பர்களிடம் திரும்புகிறார்கள்)

பு:—நீங்கள் ஒவ்வொருவராகக் கைலாகு கொடுங்கள்.

கா:—நாம் அனைவரும் பிரமாணம் செய்து கொள்வோம்.

பு:—சே! பிரமாணமா!! வெகு நன்றாக இருக்கிறது நீ சொல்வது!!! நமது முகத்தில் காணப்படும் குறி, நமது ஜீவன் துடிக்கும் துடிப்பு, காலத்தின் கோலம் ஆகிய இவைகளே நாம் ஒன்று சேருவதற்குத் தகுதியான காரணங்களென்று நீங்கள் கருதாமல், பிரமாணஞ் செய்து கொள்ளுவது அவசிய மென்று கருதுவீர்களானால், இந்த இடத்தைவிட்டுக் கலைந்து போவது நலம்; அதோடு மேற்கொண்ட காரியத்தைக் கை நழுவ விடுதல் மிகவும் நலம். இப்பொழுதே வெகு நேரமாகி விட்டது. ஏன் வீணாகத்தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு அவஸ்தைப்படுகிறீர்கள்? போய் சுகமாகப்படுத்துத் தூங்குங்கள். நல்ல காலமிருந்து, விடுதலைக்கு உழைக்க வேண்டு மென்கிற எண்ணம் தனக்காகக் கிட்டும் வரையில், நாட்டில் ஏகேச்சாதிகாரம் தலை விரித்தாடட்டும். நமது ஹ்ருதயத்தில் குடி கொண்டிருக்கும் நோக்கமொன்றே நம்மில் ஒற்றுமையை யுண்டாக்கப் போதுமான பலமுள்ளதாக இல்லாவிட்டால், வேறு எந்த ஒப்பந்தந்தான் என்ன செய்துவிடப் போகிறது! கேவலம் நயவஞ்சகர்களையும் பயங்காளிகளையுங்கூட வசப்படுத்துவதற்கு இவைகளே போதுமான காரணங்களாகவிருக்க வேறு எந்தவிதமான கட்டுப்பாட்டைத்தான் நீங்கள் விதித்துக் கொள்ளப்பார்க்கிறீர்கள். கண்யமானவர்கள் ஒருவருக்கொருவர் உண்மையாக நடந்து கொள்ளுவதைவிட வேறு வகையான பிரமாணத்திற்கு அவசியந்தான் என்ன இருக்கிறது? பூசாரிகளும், வஞ்சகப் பயல்களும், சிறந்த லட்சிய மில்லாதவர்களுமல்லவா பிரமாணஞ் செய்து கொள்ள வேண்டும். நமக்கு இது தகாது. (காஷியஸ்ஸை நோக்கி) அன்பனே! தூய்மையான இப் பணியில் ஈடுபட்டிருக்கும் நம்மீது எந்தவிதமான மாசையும் பழியையும் சுமத்திக் கொள்ளாதிருப்போமாக! இந்தக் கூட்டுறவிலிருந்து தவறிப் போவதானது, உயர் குடியிற் பிறந்த ரோமர்களுக்குப் பொருத்தமானதல்ல வென்று நான் கருதுகிறேன்.

கா:—ஸிஸரோனைப் பற்றிய தகவலென்ன? அவனுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? அவன் நம்மைத் திட்டமாக ஆதரிப்பான் என்றே நினைக்கிறேன்.

காஸ்:—நாம் அவனைப் புறக்கணிக்கக் கூடாது.

ஸின்னா:—கூடவே கூடாது. எந்த விதத்திலுங் கூடாது.

மெடலிஸ்ஸிம்பர்:-நாம் அவனையும் அவசியம் கலந்து கொள்ளுவோம். அவன் அறிவாளி. நிரம்பிய அனுபவமுடையவன். அவனையுங் கலந்து செய்வதால் உலகத்தின் அனுதாப

மும் நம் பக்கமே இருக்கும். தவிர, அவனைக் கலந்து செய்தோமென்பதில் எல்லாத் தோஷமும் மறைந்து விடும்.

பு:—அவன் பெயரையே என் காதில் போடாதே. இது விஷயமாக அவனிடம் நாம் எந்தவிதமான ஆலோசனையையும் கேட்க வேண்டியதே இல்லை. பிறர் ஆரம்பித்து நடத்தும் காரியத்தில் அவனுக்குச் சிரத்தையே இருப்பதில்லை.

கா:—அப்படியானால் விட்டுவிடு.

காஸ்:—உண்மையிலேயே அவன் அதற்கெல்லாம் லாயக்கில்லை.

டீஷியஸ் புருடஸ்:—ஸீஸரைத்தவிர வேறு எவர் மீதும் நமக்கு நோக்கமில்லையே?

கா:—டீஷியஸ்! சமயத்தில் நினைவூட்டினாய். ஏன்! ஆண்டனியின் மீது கூடத்தான். அவன் ஸீஸரின் பிராண ஸ்நேகிதனல்லவா! ஸீஸர் இறந்த பின் அவன் உயிர் வாழ்வது நம்மனைவருக்குமே இடைஞ்சலை உண்டாக்குவது. அவன் வாக்கு வன்மையுடையவன். நம்மைக் கொலைகாரர்களென்று தூற்றி, ஜனங்களிடையில் நம்மீது ஆத்திரத்தை மூட்டி கலகத்தை யுண்டாக்குவான். அதற்கு நாம் இடந்தரலாகாது. ஸீஸரும் ஆண்டனியும் ஒரே சமயத்தில் உயிரிழக்க வேண்டியதுதான்.

பு:—நாம் செய்யுங் காரியம் மிகக் கொடுமையானதாகக் காணப்படும். காஷியஸ்! ஆத்திரத்தில் ஒரு காரியம் செய்து விட்டு, பிறகு அதற்காக வருந்துவது நல்லதல்ல. நாம் துஷ்ட நிக்ரஹம் செய்பவர்களாக விளங்குவோம்; கொலைக்காரர்களாக விளங்க வேண்டியதில்லை. இந்த நிமிஷத்தில் கூட நமக்கு ஸீஸரின் நோக்கத்தின் மீது பகையே யொழிய ஸீஸரின் மீது தனிப்பட்ட பகை யொன்று மில்லையே! ஆனால், நோக்கத்திற்கு உயிர் இருக்கிறது. அதனால்தான் ஸீஸர் இப்பொழுது தொலைய வேண்டியது அவசியமாகிறது. அறிவுள்ள நண்பர்களே! தனிப்பட்ட பகையை மேற்கொண்டு, கோபத்தில் அவனைக் கொல்லவேண்டியதில்லை. நியாயத்தின் பேரால் தைரியமாகக் கொல்லுவோம்; அவனை தேவர்களுக்குத் தகுந்த விருந்தாக்குவோம்; ஹீனர்கள் கைப் பொருளாக ஆக்க வேண்டாம். அவனைச் சார்ந்தவர்களிடத்தில் ஒரு கலக்கம் நேரிட வேண்டியதுதான். பிறகு, காலக்கிரமத்தில் அது மாறி விடும். இது எப்படியும் நாம் கிரமத்தை அநுசரித்து செய்தே தீர வேண்டிய காரியமாகி விட்டது. ஜனங்களும் இதை துஷ்ட நிக்ரஹஞ் செய்வதற்கான காரியம் என்று கருதுவார்களே தவிர வேறு விதமாக நினைக்க மாட்டார்கள். ஆண்டனியைக் குறித்து நீ பயப்பட வேண்டியதில்லை. தலை போன பிறகு வால் என்ன செய்யும்!

கா:—இருந்தாலும், ஸீஸரிடம் அவனுக்கிருக்கும் அபாரமான அன்பை நோக்க எனக்கு பயமாகவே இருக்கிறது.

பு:—நீ அவனைக் குறித்துக் கவலைப்பட வேண்டியதே இல்லை. அவன் என்ன செய்துவிட முடியும்! ஸீஸருடன் அந்யோந்யமாகப் பழகியதன் நிமித்தம், அவனுடைய மரணத்திற்

கும் பிரிவிற்கும் வாடி வதங்கி மனம் புழுங்கி இறக்க வேண்டியவன் தான்.

டிரிபோனியஸ் :—அவனைக் கண்டு நாம் பயப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. அவன் ஏன் உயிர் துறக்க வேண்டும்? அவன் உயிரோடிருக்கட்டும்; இதில், தகாதது ஒன்றுமில்லை என்று அவனே கண்டு கொள்ளட்டும்.

(கடிகாரம் மணி அடிக்கிறது)

பு:—சத்தம் போடாதே! மணி என்ன?

கா—மணி மூன்று அடித்தது.

டிரிபோனியஸ் :—இனி நாம் கலைவோம்.

கா :—ஸீஸர் இன்று பார்லிமெண்டுக்கு வருவானா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. வர வர அவன் மூட நம்பிக்கையுடையவனாக ஆகி விட்டான். இன்று இருக்கும் நிலைமையைப் பார்க்கும் பொழுதும், அவனைச் சுற்றியிருப்பவர்களைப்பற்றி நினைக்கும் பொழுதும் எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது.

டீஷியஸ் புருடஸ் :— அதைக் குறித்து நீ சந்தேகப்படாதே. ஒரு வேளை அவன் இன்று பார்லிமெண்டுக்கு வருவதில்லை யென்ற முடிவுக்கு வந்திருந்தாலும், நான் எப்படியாவது அவனைக் கிளப்பிக் கொண்டு வந்து விடுகிறேன். அவனைச் சரிப்படுத்திகுல்லா போட்டுக் கொண்டு வந்து சேர்ப்பது என்னுடைய வேலை.

கா :—அப்படி இல்லை, அப்பா. நாம் எல்லோரும் அவன் வீட்டுக்குப் போய், அவனை அழைத்து வருவோம்.

பு :—எட்டு மணிக்குப் போனால் போதுமா?

ஸின்னா :—போதும், சரியான நேரந்தான்.

மே :—பாம்பியைப் புகழ்ந்து பேசினதற்காக கேயஸ் லிகேரியஸ் மீது ஸீஸர் கோபங் கொண்டிருப்பதாக அறிகிறேன். அவனை நீங்கள் மறந்து விட்டது எனக்கு ஆச்சர்யமாகவிருக்கிறது.

பு :—நீ இப்பொழுது நேராக அவன் வீட்டிற்குப்போய் அவனைப் பார்த்து என்னிடம் அனுப்பு. அவனுக்கு என்மீது அதிகப்பிரியம். ஏற்கனவே நான் அவனிடம் எல்லாவற்றையும் சொல்லி யிருக்கிறேன். இன்னும் சரிப்படுத்துகிறேன்.

கா :— சரி பொழுது விடிகிறது. புருடஸ்! நாங்கள் போய் வருகிறோம். சிநேகிதர்களே! நீங்களும் கலைந்து வீட்டிற்குச் செல்லுங்கள். நீங்கள் சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கட்டும். உண்மையான ரோமர்களென்பதைக் காட்டிக் கொள்ளுங்கள்.

பு :— நல்லது போய்வாருங்கள். சந்தோஷமாகவும் சுறுசுறுப்பாகவும் இருங்கள். நீங்கள் எதையும் வெளிக் காட்டிக் கொள்ளவேண்டாம். மட்டற்ற வுணர்ச்சியுள்ளவர்களாகவும், தளராத ஊக்கமுடையவர்களாகவும், திடசித்தமுடையவர்களாகவும் இருங்கள். சந்தோஷமாகப் போய் வாருங்கள்.

(எல்லோரும் போகிறார்கள்)

பையா! டேய்! லூஷியஸ்! தூக்கமா என்ன? பரவாயில்லை தூங்கு. ஆனந்தமாகத் தூங்கு. உனக்கென்ன

கவலையா காரணமா மற்றவர்களைப் போல?

(போர்ஷியா பிரவேசித்தல்)

போர்ஷியா :—பிராண நாதா!

பு :—போர்ஷியா! என்ன இது! இந்த நள்ளிரவில் ஏன் விழித்துக் கொண்டாய்! பனியில் வெளியே வருவது உன் சரீரத்திற்கு ஒத்ததல்லவே!

போ :—தங்கள் சரீரத்திற்கும் அப்படியே! எனக்குத் தெரியாமல் படுக்கையிலிருந்து நழுவிவிட்டீர்களே! நேற்றிரவு சாப்பிடும்பொழுதுகூட திடீரென்று ஏதோ யோசனை செய்த வண்ணம் எழுந்திருந்து போய்விட்டீர்கள். "ஏன் அப்படி?" என்று கேட்டதற்கு என் மீது கோபித்துக்கொண்டீர்கள்! வற்புறுத்தியதற்கு என்மீது வெறுப்புக்கொண்டீர்கள்! மீண்டும் கேட்டேன்; "தொந்தரவு செய்யாதே, போ" என்று பொருள் படும்படி ஜாடை காட்டிவிட்டீர்கள்! ஏதோ தாங்கள் மன நிம்மதியில்லாதிருப்பதாகவும், எதைக்குறித்தோ தீவிரமாக யோசித்துக்கொண்டிருப்பதாகவும், நானாக அனுமானித்துக்கொண்டு தங்கள் கோபத்திற்கஞ்சி போய்விட்டேன். தங்களைச் சாப்பிடவிடாமலும் தூங்கவிடாமலும், பிறருடன் பேசவிடாமலும் தங்கள் மனதைப் பாதித்துவரும் விஷயந்தானென்ன என்பது என்னால் தெரிந்து கொள்ளக் கூடவில்லை. அன்புள்ள புரூடஸ்! உங்களுடைய கவலைக்கான காரணத்தை எனக்கு விளக்கிச் சொல்லுங்களேன்!

பு :—எனக்கு உடம்பு சரியாக இல்லை. அதைத்தவிர வேறொன்றுமில்லை.

போ :—உடம்பு அசௌக்கியமா? நீங்கள் ஒன்றுந்தெரியாதவரா! அப்படி அசௌக்கியமாக விருந்தால் உடனே வைத்தியர்களைக்கொண்டு சொஸ்தஞ்செய்து கொண்டிருக்க மாட்டீர்களா!

பு :—உண்மையில் உடம்புதான் அசௌக்யம். என் அன்பே, போய் படுத்துக்கொள்.

போ :—தங்களுக்கு உடம்பா சரியில்லை! அதனால்தானா இப்படி பனியில் போர்வைகூட இல்லாமல் உலாவிக் கொண்டிருக்கிறீர்கள்! ஜலதோஷமும் ஜ்வரமும் வந்துவிடுமே! அசௌகரியம் இன்னும் அதிகரிக்குமே! புரூடஸ்! ஒருகாலும் தங்களுக்குடம்பு அசௌகரியமென்பதே இல்லையென்று சொல்லுவேன்! தாங்கள் மனதில்தான் ஏதோ வேதனையான எண்ணம் வேலைசெய்துகொண்டிருக்கிறது. அதைத் தெரிந்துகொள்ளக்கூடிய உரிமையும் யோக்யதையும் எனக்கு இருந்தும் என்னிடமிருந்து ஒளிக்கிறீர்கள். தங்களை நமஸ்கரித்துக்கேட்டுக் கொள்ளுகிறேன். (மண்டியிட்டு நமஸ்கரித்தல்) தங்களுடைய சரீரத்தில் சமபாகத்தையுடைய என்னிடத்தில்—தாங்கள் அன்பையும் உரிமையையும் பெற்றிருக்கும் என்னிடத்தில் சுகம் நேர்ந்தாலும், துக்கம் நேர்ந்தாலும் பகிர்ந்து கொள்ள உரிமை யுடைய என்னிடத்தில் உண்மையைக்கூறாது ஒளிக்கிறீர்கள்! ஏன் இப்படிக் கவலை கொண்டவர்களாகக் காணப்படுகிறீர்கள்? இந்த இரவில்கூட முகமூடியணிந்த 7, 8, மனிதர்கள் தங்களுடன் பேசிவிட்டுப் போனார்களே அவர்கள் யார்? அவர்கள் அவ்விதம் வந்ததில் என்ன விசேஷம்?

பு:—(மண்டியிட்டு வணங்கிய நிலையிலிருந்தவளைத் தூக்கி) என் அன்பே, எழுந்திரு; பணியவேண்டாம்.

போ:—தாங்கள் அன்புள்ள புருடஸாகவிருந்தால் நான் பணிய வேண்டியதில்லையே! கேவலம் தாங்கள் விரும்பும்பொழுது உங்களுடன் பேசவும், தாங்கள் விரும்பும் பொழுது கூட உட்கார்ந்து சாப்பிடவும் உடன் படுக்கவுமாக உபயோகிக்ககூடிய ஒரு அளவுக்குட்பட்டவளாக வல்லவா என்னைக் கருதுகிறீர்கள்!

பு:—நீ என்னுடை நன்மதிப்புக்குப் பாத்திரமானவளும், உயிரினுமினிய வாழ்க்கைத்துணைவியுமென்பதை நான் வாய்விட்டுச் சொல்லவேண்டுமா!

போ:— இது உண்மையானால் நான் தங்கள் மனதை வருத்திக் கொண்டிருக்கும் இரகசியத்தை உணர வேண்டியவளே. இவளிடம் எப்படி வெளியிடுவது என்று யோசிக்கிறீர்களோ! உண்மைதான்; கேவலம் ஒரு பெண்ணிடம் பெரிய விஷயங்களைக் குறித்து ஏன் சொல்ல வேண்டுமென்று தாங்கள் நினைக்கலாம். நான் கேவலப் பெண்ணாக விருந்தாலும், பலரும் போற்றும் புகழும் கல்வியுமுடைய புருடஸால் தேர்ந்தெடுக்கப்பட்டவளென்பதை யோசிக்க வேண்டாமா! தவிர, வீரனான கேடோ (Cato) வயிற்றில் பிறந்தவள் என்பதையும் கருத வேண்டாமா! வீரன் வயிற்றில் பிறந்து வீரனுக்கே வாழ்க்கைப்பட்டிருக்கும் என்னை, பெண்களுக்குரிய பேதைக் குணத்திலிருந்து நீங்கியவளாக இருப்பாளா மாட்டாளா என்பதை யோசித்துப் பார்த்தீர்களா? உங்கள் மனதில் இருப்பதை வெளியிடுங்கள். நான் அதை ஒரு காலும் வெளியிட மாட்டேன். முன்னம் ஒரு முறை நானாகவே என் தொடையில் கத்தியால் குத்திக் கொண்டதை இது வரையில் வெளியிடாததன் மூலம் இரகசியத்தைக் காப்பாற்றும் என்னுடைய உறுதியை ருசுப்படுத்தியிருக்கிறேன். அந்த ரகசியத்தை நான் பொறுமையுடன் இன்னும் காப்பாற்றலாம். என் புருஷருடைய இரகசியத்தைக் காப்பாற்ற முடியாதா?

பு:— கடவுளே! இந்த வீர பத்தினிக்குத் தகுந்த புருஷனாக விளங்கும் பாக்கியத்தை எனக்கு அருளுவாயாக! (யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்கிறது) இரு, யாரோ கதவைத் தட்டுகிறார்கள். போர்ஷியா, கொஞ்சம் உள்ளே போ. விரைவில் உனக்கு நான் எல்லாவற்றையும் வெளியிடுகிறேன்.

(போர்ஷியா நிஷ்கிரமித்தல்)

லூஷியஸ்! யார் கதவைத் தட்டுவது?

(லூஷியஸ் கேயஸ் லிகேரியஸுடன் பிரவேசித்தல்)

லூஷியஸ்:— இதோ (லிகேரியஸைக்காட்டி) இந்த வியாதியஸ்தர் தங்களுடன் பேச விரும்புகிறார்.

பு:—மெடலஸ் சொன்னானே! அந்த லிகேரியஸ்ஸா! சரி, பையா (லூஷியஸை விளித்து) கொஞ்சநேரம் வெளியே இரு (லிகேரியஸைப்பார்த்து) கேயஸ்! உடம்புக்கு என்ன உனக்கு?

லி:— வந்தனம் அய்யா! பேச முடியவில்லை.

பு:— உனக்கு இதில் ஏதாவது அக்கறை இருந்தால், சமயத்தில்

இப்படி வியாதியுற்றிருக்க மாட்டாய். நீ சீக்கிரம் சொஸ்தமடைய வேண்டுமென்று விரும்புகிறேன்.

லை:— பேரும் புகழும் நிலை நாட்டக்கூடிய வேலைத்திட்டம் ஏதாவது உன் கைவசமிருந்தால் சொல்லு. ஜ்வரம் இப்பொழுதே பறந்து போகிறது.

பு:— இருக்கிறது நீ மாத்திரம் அதற்கு செவிசாய்ப்பதா யிருந்தால்!

லை:— கடவுளறியச் சொல்லுகிறேன்; என்னுடைய ஜ்வரமெல்லாம் பறந்து போய்விட்டது. ரோமின் உத்தம புருஷனே! வீரர்கள் குலத்தில் பிறந்த சிகாமணியே! உன் வார்த்தை எனக்கு ஜீவாமிருதம்போலிருக்கிறது. இப்பொழுது ஓடச்சொல்லு; இதோ தயாராக இருக்கிறேன். சிரம சாத்தியமான காரியங்களைச் செய்யச் சொல்லு. அதையும் செய்து முடிக்கிறேன். ஆனால் நல்ல காரணத்திற்காக மட்டும் இருக்கட்டும்.

பு:— வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தும் காரியம் கொஞ்சம் செய்ய வேண்டி யிருக்கிறது.

லை:— ஆனால் குணமாக இருப்பவர்களையும் கொஞ்சம் இளைப்பிவிட வேண்டுமல்லவா?

பு:— அந்த வேலையு மிருக்கிறது. அது என்னென்ன என்பதை அந்தக் காரியத்தைச் செய்வதற்காகப் போய்க்கொண்டிருக்கும்போதே சொல்லுகிறேன்.

லை:— அப்படியானால் புறப்படு. அது இன்ன காரியத்திற்காக என்று எனக்குத்தெரியாவிட்டாலும் புருடஸ் மேற்கொண்டிருப்பதால் மிகுந்த உற்சாகத்துடன் வருகிறேன்.

பு:— சரி, அப்படியானால் வா என் கூட.

(இருவரும் போதல்)

(தொடரும்)

ஷேக்ஸ்பியர் ஒரு ஞான சமுத்திரம். இந்தச் சமுத்திரத்தின் அலைகள், எண்ணத்தின் எல்லாப் பாகங்களையும் வருடிக்கொண்டு செல்கின்றன. மனிதனுடைய கோப தாபங்கள், இன்ப துன்பங்கள், மனிதத் தன்மை தெய்வத்தன்மை முதலிய பலவும் இந்தச் சமுத்திரத்தில் பிரதி பலிக்கின்றன.

இங்கர்ஸால்

வேதாந்த ரகசியங்கள்

—ரா. ஸ்ரீனிவாசன்

(அன்னார் மகன் ஸ்ரீ ராமச்சந்திரன் உதவியது)

பக்தி வெள்ளம்:—

இடிதாங்கியும் பெருமாளிகையும்

காந்தம் (இடிதாங்கி) வைத்துள்ள பெரிய மாளிகைகளிலோ அல்லது கட்டிடங்களிலோ வசிக்கின்ற ஜனங்கள் இடி மின்னல் முதலியவைகளின் பயங்கரங்களாகிய செய்கைகளைக் கண்டு சிறிதும் பயமடையாது—நிச்சிந்தையாய்—இரவில் நித்திரை செய்வார்கள்.

அதுபோல் வாழ்நாளாகிய வீட்டினைச் சுற்றிலுஞ் சூழ்ந்து இரவு பகலாகிய எந்நேரமும் சண்டைக் கிழுத்துக் கலகஞ் செய்தும் வருகின்ற பிரதிபந்தங்களாகின்ற சத்துருக்களிடத்தினின்றும் விலகி நிர்ப்பயமாயிருக்கவேண்டுமென எவர்கள் உண்மையாக விரும்புகின்றார்களோ அவர்கள், மனோவாக்குக் காயங்களெனும் மூன்றாலும் சத்திய ஸ்வரூபனாகிய பகவானது சரணாரவிந்தங்களில் மேலான அன்பு பூண்டு உள்ளங்கசிந்துருகித் தடையற்ற வெள்ளம் போலும் கரை புரண்டு யராநின்ற பக்தி (யெனும் மனோ விருத்தி)யைச் செலுத்துவார்களேயானால் அந்தப் பக்தியாகிய ஊசிக் காந்தத்தினால் எவ்வகைத்தான ஆபத்தினின்றுங் காப்பாற்றப்படுவார்கள்.

பரமாத்துமப் பிரகாசம்:—

சூரியனும் கோட்டானும்

பூலோகத்தில் சூரியன் எல்லாப் பொருள்களையும், ஒரேவிதமாகப் பிரகாசப் படுத்திக்கொண்டிருக்கின்றான். அதனால் ஜீவப் பிராணிகளெல்லாஞ் சந்தோஷக்கடலில் மூழ்கியனவாகித் தத்தம் இயற்கையான தொழில்களைப்புரிந்து கொண்டிருக்கின்றன. ஆனால் ஊமைக்கோட்டானோவென்றால், இதற்கு முற்றிலும் விரோதமாய் பகற்பொழுது முழுதும் பேரிருள் சூழ்ந்து பார்க்கப் பயங்கரமாயிருக்கின்ற சந்து பொந்துகளில் நுழைந்துகொண்டு தனக்கிரை தேடுவதற்குக்கூடச் செல்லாது நடுங்கி

யொளிந்து வாழும். இரவிலோவெனில், அது மிக்க உற்சாகத்துடன் பலபல திக்குகளிலுஞ் சஞ்சரித்துத் தனக்குவேண்டிய இரைகளை யெடுத்துத்தின்னும்; உல்லாசமாய் பறந்தும் மகிழ்ந்துகொண்டிருக்கும்.

இது போலவே பரமாத்துமா மனிதசமுதாயம் முழுதும் தன்னை யறிந்து பேரானந்தம் பெற்றுய்ய வேண்டுமென விரும்பினவராய் சகலமான ஜீவராசிகளுடைய ஹிருதயத்திலும் வெளியிலும் யாதோர் வேற்றுமையுமின்றிச் சூரியனைப்போலொரே விதமாய் ஜ்வலித்துக்கொண்டிருக்க, அதைத்தரிசித்து மகிழ்வதற்குக் கண்ணில்லாத கோட்டானைப்போன்ற சில அறியாமை வாய்ந்த மனிதர்கள் உலக விஷயங்களை மாத்திரம் மிகப் பிரமாதமாய்க் கருதி தம்மை மகா சந்தோஷமடைந்தவர்களைப் போல நினைத்துக்கொள்வதுடன் கடவுளினது அன்பர்களையும் ஆத்துமார்த்தங்களாகிய மோக்ஷ மார்க்கங்களையும் காண்பதற்கு இயலாதவர்களாய் கடவுளே யில்லையென்றும், உபாசனை புரிவோரெல்லாம் பித்தரென்றுங் கூடப் பிதற்றித் திரிகின்றார்கள். கோட்டானுக்கு இருட்டு அதிகமாகுந்தோறும் அதன் கண்களுக்குப் பிரகாசம் விருத்தியாகிவருவதுபோல் துஷ்ட ஜனங்கள், கள், மாமிசம் முதலிய பான உணவுகளை யுட்கொண்டு அதன் பயனாய் ஸஜ்ஜனநிந்தை, ஸன்மார்க்க கண்டனம் எனும் இது போன்ற நீச கிருத்தியங்களைச் செய்து மிகவும் மனங்களித்தவராகி மலர்ந்த முகத்துடன் தமது கிருதார்த்தத் தன்மையினை வெளியிடுகின்றார்கள். ஆகா! இவர்களுக்குநேர்ந்த கதியை நினைக்குந்தோறும் நமது ஹிருதயம் பகீரென்கின்றது!

போய்—மெய்:—

அவித்துவான் ஜோசியரும்

ரோஹிணீ நக்ஷத்திரத்தின் இனையமாமனும்

இரண்டு ஜோஸ்யர்கள் ஒரு பிரபுவைப் பார்ப்பதற்காகத் தனித்தனியே ஒரு சமயம் அவரவர் கிராமத்தினின்றும் புறப்பட்டுப்போனார்கள். அவர்களிருவரும் தெய்வாதீனமாக நடுவழியில் சந்திக்கவும் பரஸ்பரம் விசாரித்துச் சில ஒப்பந்தங்கள் செய்துகொள்ளவும் நேர்ந்தது. அவர்களில் ஒருவன் உண்மையாகவே ஜோதிஷ சாஸ்திரத்தை நன்கறிந்த வித்துவான். மற்றொருவனோ, நிரக்ஷரகுக்ஷி; சிறிதுங் கல்வியறிவில்லாதவன். வித்வான் ஜோஸ்யன், அவித்துவான் ஜோஸ்யனுடைய உண்மையான யோக்கிதையைப் பரிசோதித்துத் தெரிந்துகொள்ளாது இவ்வண்ணஞ் சொல்லலானான்:—

“நாமிருவரும் ஜோதிஷ விஷயமா யறிந்துகொண்டிருக்கின்ற தத்துவங்களைப் பிரகடனஞ்செய்து வெகுமானம் பெறுவதற்காக வல்லவோ போகின்றோம்? ஆதலால் நமக்குள் அவ்வப்பொழுதுண்டாகாநின்ற ஏதோ சில பிழைபாடுகளை நாமே ஒருவர்க்கொருவர் வாதாடிக்கொள்ளாது பிரபுவினுடைய அபிப்பிராயத்தை யுணர்ந்து அதற்கு அனுகூலமாய் எந்த விதத்திலுங் காரியத்தைமுடித்துக் கொடுக்கவும், பிறகு நம்முடைய குற்றங்களைப்பேசி ஆலோசித்துத் திருத்திக்கொள்ளவும் வேண்டும். கிடைக்கின்ற சன்மானத்தை இருவருமாகப் பக்ஷபாதமின்றிப் பங்கு பிரித்து எடுத்துக்கொள்வோம். தங்களுக்கும் இது சம்மதந்தானே?

இவ்வாறு மிக்க வணக்கத்துடன் மொழிந்த வித்வான் ஜோஸ்யனுடைய வாக்கியத்தைச் செவியுற்ற அவித்துவான் ஜோஸ்யன் ஏதோ ஒருவாறு சம்மதித்தான். அப்பாலிருவரும் பிரபுவினைப்பார்க்கச்செல்லவே, பிரபு அப்பொழுது அத்தியாவசியமானதோர் காரியத்தைக் குறித்து அச்சந்திரிகை யிலேயே தனது பரிவாரங்களுடன் புறப்பட விரும்பினவராய் பங்களாவின் வாயிலண்டையில் வந்து நின்றார். பின்னர் முறையே தன்னைப் பார்க்க வந்த இரண்டு ஜோஸ்யர்களையும் நோக்கி க்ஷேமலாபங்களை விசாரித்து அப்பால் வித்வான் ஜோஸ்யனைப்பார்த்து அடியிற்கண்டவண்ணம் இரண்டொரு கேள்விகள் கேட்கலானார்:—

பிரபு: —"அதோ—அது என்ன நக்ஷத்திரம்?" (என்று கையினாற் சுட்டிக்காட்டி வினவுதல்)

வித்துவான் ஜோஸ்யன்:—"கார்த்திகை"

பிரபு:—"இது?"

வித்துவான் ஜோ:—"புனர்பூசம்"

பிரபு:—'அந்தக்கடைசியிலுள்ளது?'

வித்துவான் ஜோ:—"சதயம்"

பிரபு:—"அதற்குமடுத்தாற் போலிருப்பது?"

வித்துவான் ஜோ:—"எனக்குத் தெரியலாது."

பிரபு:—"இதோ தெரிகின்றதே இது என்ன?"

வித்துவான் ஜோ:—"நான் அதைப்பற்றிப் படித்து தெரிந்து கொள்ளவில்லை."

பிரபு:—"அதற்குமப்பாலுள்ளது?"

வித்துவான் ஜோ:—"அதுவுமப்படியே." (அதன்பெயரெனக்குத் தெரியவராதென்பதாம்)

பிரபு:—நீவிர் இப்பொழுது தான் ஜோதிட நூற்படிக்க ஆரம்பித்திருக்கின்றீர்போலும்!

"ஸரி" இருக்கட்டும்; அடுத்த ஜோஸ்யரை விசாரிப்போம்".

பிரபு:—(கையினாற் சுட்டிக் காட்டிக் கொண்டு) இதற்கு மப்பாலுள்ள நக்ஷத்திரமென்ன?"

அவித்துவான் ஜோஸ்யன்:—"மகா நக்ஷத்திரத்தினது முப்பாட்டனுடைய கொள் பேரன்."

பிரபு:—"இதோ தெரிகின்றது?"

அவித்துவான் ஜோ:—"ரோஹிணீ நக்ஷத்திரத்தினுடைய சொந்த இளைய மாமனார்."

பிரபு—"அதற்கு நேர் வடக்கு மூலையிற் பள பளவென்று காணுகின்றதே அது?"

அவித்துவான் ஜோ:—"திருவோணத்தின் இரண்டாவது தம்பியினுடைய முப்பாட்டனுடைய மூத்த மாப்பிள்ளை."

பிரபு:—"அந்தக் கோடியிலிருப்பது?"

அவித்துவான் ஜோ:—"சித்திரா நக்ஷத்திரத்தின் மூன்றாவது மாப்பிள்ளையினுடைய முப்பாட்டனது கொள்பேரனுடைய மூத்த பெண்ணை விவாகஞ் செய்வதற்காக நிச்சயதார்த்தஞ் செய்திருக்கின்ற நக்ஷத்திரம்."

இதைக் கேட்டவுடனே பிரபு அளவற்ற சந்தோஷ மடைந்தவராய் "ஆகாசத்திலுள்ள எல்லா நக்ஷத்திர

ங்களையும் அவைகளுக்குள் ஒன்றுக்கொன்று இடைவிடாது நடைபெற்று வரும் விவாஹாதி (நெருங்கிய) சம்பந்தத்தையுங்கூடத் தாங்கள் நன்கு தெரிந்துகொண்டிருப்பீர்களென நம்புகின்றேன்."

அவித்துவான் ஜோ:—'ஆம், அஃதுண்மையே. இதுபோலவே விண்ணிலுள்ள எண்ணிலா நக்ஷத்திரங்களையும் அவற்றின் ஆதிபத்தங்களையும் முற்றுமுணர்ந்திருக்கின்றேன். பிரபுக்கள் விரும்பிய வண்ணமெல்லாம் பரீக்ஷித்துப் பார்க்கலாம்."

பிரபு :—"ஸபாஷ்! (அவித்துவான் ஜோஸ்யனைப் பார்த்துச் சிரக்கம்பஞ் செய்து) நாமிப்பொழுது சவாரி போகவேண்டியிருப்பதால் மஹா வித்துவானும் அபாரமான ஞாபக சக்தியுடையவருமாகிய தங்களுடன் இன்னும் பலவாறு ஸம்பாஷித்து ஆனந்திப்பதற்கு சாவகாசமில்லையேயென வருந்துகின்றேன். ஆயினும் பரவாயில்லை. தாங்கள் வேறோர் சமயம் இங்கு வந்து என்னை அவசியம் பார்க்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(உண்மையான வித்துவான் ஜோஸ்யரைப்பார்த்து) "தாங்கள் இனியுமோர்முறை இங்குவந்து நம்மைப் பார்க்கவேண்டுமென்ற சிரமத்தையெடுத்துக்கொள்ளவேண்டாம்."

இவ்விதம் சம்பாஷணைகள் முடிந்தவுடனே பிரபு, தனது காரியஸ்தனை விளித்து "ஸர்வக்ஞராகிய இந்த ஜோஸ்யருக்கு நன்றாக விருந்து செய்வித்து இரண்டு கைகளுக்கும் வைரத்தோடாக்களிட்டு உயர்ந்த மோதிரங்கள்—சாதராக்கள் முதலியன சன்மானஞ் செய்து உபசாரத்துடன் அனுப்பிவைக்க வேண்டும். அவருடன் கூடவந்திருக்கின்ற ஜோஸ்யருக்குப் போதுமான வண்ணம் போஜனமளித்தனுப்பிவிடுக" என்றுத்தரவிட்டுப் பிரபு சவாரி சென்றார்.

கிரமப்படி சன்மானம் பெற்றவுடன் அவித்துவானாகிய ஜோஸ்யனிடத்தில் உண்மை வித்துவானாகிய ஜோஸ்யன் தாங்கள் முன் செய்துகொண்ட ஏற்பாட்டுப்படி சன்மானிக்கப்பட்ட பொருள்களில் தமக்குப் பாதி கிடைக்கவேண்டுமெனக் கேட்கலானார். அதற்கு அவித்துவான் ஜோஸ்யனளித்த விடையாவது:—

"ஓய்! நீர் என்னோடுகூட வந்ததனால் அல்லவா உமக்கு வயிறு நிறையப் பஞ்சபக்ஷ்ய பரமான்னம் கிடைத்தது? அதைக்கொண்டாவது திருப்தியடைக்கூடாதா?"

இதுபோலவே வித்துவான்கள் ஸத்திய ஸ்வரூபனாகிய கடவுளுக்குப் பயந்து மரியாதையாகவும் வணக்கமாகவும் நியாயத்திற்குக்கீழ்ப்படிந்தும் இவ்வுலக வாழ்க்கையை நடத்தி வருகின்றார்கள். அவித்துவான் (மூடர்) களோவென்றால் உலகத்தினர் முன்னிலையில் சிறிதும் வெட்கமின்றிப் பொருத்த மற்ற விஷயங்களைப் பிதற்றி வித்துவான்களாவதற்கும் பூஜிதை பெறுவதற்கும் துணிகின்றார்கள். 'ஆகா, என்ன கஷ்டம்!

இஃது அறியாமையின் எல்லைக்கல்லென்றல்லவோ கூறல் வேண்டும்!

பண்டைய மன்னர்கள்
அவர்களின் வரலாறு

—வி. எம். நாகேசுவர சாஸ்திரி

இந்திய நூல்கள், முற்காலத்திலிருந்த அரசர்களின் தன்மையையும் அவர்களின் நிலைமையையும் அவர்கள் தத்தம் தேசத்தை எந்தவிதமாய் ஆண்டுவந்தார்கள் என்பதையும் இன்னும் அநேகவித உண்மைகளையும் நமக்கு நன்றாய் விளக்கிக் காட்டுகின்றன. இப்பொழுது இச்சிறு வியாசத்தில், முற்காலத்தில் எத்தனை விதமான அரசர்கள் இருந்தார்கள் என்பதையும் 'அவர்களின் தன்மையையும் அவர்கள் எந்தவிதமான மணிமுடிகளையும் சிங்காதனங்களையும் வகித்திருந்தார்கள் என்பதையும் சுருக்கிக் கூறுகிறேன். இந்த மாதிரியான விஷயங்களைப் பற்றி அநேக பாஷைகளில் எழுதியிருக்கின்றனர். அதையே நான் திருப்பிக் கூறுகிறேனே யன்றி வேறில்லை.

மானஸாரம் என்னும் வடமொழி நூலின்படி, முற்காலத்தில் அரசர்கள் அவரவர்கள் வைத்துக் கொண்டிருந்த சதுரங்கத்தின் படியும் பட்ட மஹிஷிகள், வைப்பாட்டிகள் படியும் ஒன்பது விதமாகப் பகுக்கப்பட்டிருந்தார்கள். எப்படி யென்றால்:—

பெயர்.	யானைகள்.	குதிரைகள்.	பதாதிகள்	பட்ட மஹிஷிகள்.	வைப்பாட்டிகள்.
சுரோத்ரக்ராஹி	5	500	50,000	1	700
ப்ராஹாரகன்	6	600	1,00,000	2	700
பட்டபாகன்	7	800	1½லக்ஷம்	3	1300
மண்டலேசன்	10	1,500	2லக்ஷம்	4	1500
பட்டத்ரீகன்	12	1,000	2அல்லது 3லக்ஷம்	5	2000
பார்ஷ்ணீகன்	15	2,000	4லக்ஷம்	6	3000
நரேந்திரன்	100	10,000	1கோடி	10	½ லக்ஷம்
அதிராஜன்	10,000	1 கோடி	10கோடி	100	10 ,,
சார்வபௌமன் (சக்ரவர்த்தி)	10 கோடி	100 ,,	,,	,,	,,

எவன் தன் புஜபல பராக்ரமத்தினால் நான்கு சமுத்திரங்களினால் சூழப்பட்டுள்ள இராஜ்ஜியத்தை ஜயித்து ஆளுகின்றானோ அவனுக்குச் '*சார்வ பௌம சக்ரவர்த்தி' என்று பெயர். அதாவது அவனுடைய இராஜ்பம் நான்கு பக்கங்களிலும் சமுத்திரங்களினால் சூழப்பட்டிருக்க வேண்டும்.

ப்ரபுசக்தி, உத்ஸாஹசக்தி, * மந்திர சக்தி ஆகிய மூன்று சக்திகளுடன் கூடினவனையும் தன்னுடைய தோள்வலியால் ஆறு நாடுகளைக் கைப்பற்றினவனையும், சந்தி, விக்ரஹம், யானம், ஆசனம், சம்ச்ரயம், த்வைதீபாவம் என்ற ஆறு குணங்களோடு கூடியவனையும், இராஜபக்தி மிகுந்த குடிகள், பணம் நிறைந்த பொக்கிஷம், விவேகிகளான உத்தம மந்திரிகள், பலமுள்ள சேனை, உண்மையான நண்பர்கள், ஒருவராலும் கடக்க முடியாத அரண்கள் என்ற §இந்த ஆறுபலங்களோடு கூடினவனையும், நீதி சாஸ்திரங்களை நன்றாகப் படித்தவனையும், சூரிய அல்லது சந்திர வம்சத்திலிருந்து உற்பத்தியானவனையும் எவன் இருக்கிறானோ அவனுக்கே 'அதிராஜன்'† என்று பெயர்.

மூன்று நாடுகளைத் தன் பலத்தால் ஜயித்தவனும் அப்படிப்பட்ட *ஜயித்த நாடுகளின் குடிகளை நீதியுடன் பரிபாலனம் செய்பவனுமே நரேந்திரன் என்னப் படுவான். பார்ஷ்ணிகன், பட்டத்ரீகன் என்பவர்கள் இவனுடைய அதிகாரத்திற்குட்பட்டே

---

*எவனுடைய இராஜ்யத்தின் சக்கரங்கள் பூமி முழுதும் ஒருவித தடையுமில்லாமல் வர்த்திக்கின்றனவோ அதாவது செல்கின்றனவோ அவனுக்குச் சக்கரவர்த்தி என்று பெயர் என - மானியர் வில்லியம்ஸ் என்பவர் தமது சமஸ்கிருத இங்கிலீஷ் அகராதியில் கூறுகின்றார். இன்னும் "இலங்குமணி மிடைந்து பொலங் கலந் திகிரிக்கடலக வரைப் பினிப்பொழின் முழுதாண்டநின் முன்றிணை முதல்வர்போல்" என்றார் குமட்டூர்க் கண்ணனார். திகிரி என்பது ஆக்ஞா சக்ரமாம். மகா விஷ்ணுவினுடைய பஞ்சாயுதங்களில் ஒன்று சக்ரம். அப்படிப்பட்ட ஆக்ஞா சக்ரம் எப்பொழுது செல்லாது தடைப்படும் எனின் "சினனே காமங் கழிகண்ணோட்டம். அச்சம் பொய்ச்சொலன்பு மிகவுடைமை தெறல் கடுமையொடு பிறவுமிவ்வு லகத் தறந்தெரி திகிரிக்கு வழியடையாகும்" என்று பாலைக் கௌதமனார் கூறியதையும் கவனிக்க. இதனால், அரசன் எப்படி இருக்கவேண்டுமென்பது நன்றாய் விளங்குகிறது.

மந்திர சக்தி யென்றால் உத்தம மந்திரிகளின் ஆலோசனையினால் ஏற்பட்ட ஒரு சக்தி. மந்திரிகளின் லக்ஷணங்களுக்குக் கம்பராமாயணம், அயோத்தியா காண்டம் மந்திரப்படலம் 6-13 கவிகளையும், திருக்குறள் பொருட்பால் அங்கவியல் 14ம் அதிகாரத்தையும் பார்க்க.

§ 'படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்—உடையான் அரசருள் ஏறு' என்ற திருக்குறள் இங்கு நோக்கத் தக்கது.

† அருச்சுனனுக்கு 'அதிரதன்' என்று பெயர்.

* ஜயித்த நாடுகளை நீதியுடன் பரிபாலனம் செய்வதாவது ஜயித்த நாடுகள் தானே என்று அலக்ஷியமாயும், அசிரத்தையாயும் இராமல் தன்னுடைய சொந்த இராஜ்யத்தைப் போலவே பாதுகாக்க வேண்டுமென்பது கருத்து. தன்னால் வெல்லப்பட்ட நாடுகளைச் சூறையாடாமலும் கொளுத்தாமலும், குடிகளைத் துன்புறுத்தாமலும் இருப்பது அரச தர்மமாகும். இது முற்காலத்திய அரசர் பாராட்டி வந்த தர்மங்களில் மிகவும் சிறந்ததாகும். "படுபிணம் பிறங்க நூறிப்பகைவர் கெடுகுடி பயிற்றிய கொற்றவேந்தே" என்ற பதிற்றுப் பத்து 7-ம் பத்து 69-ம் செய்யுளாலும் இது நன்றாய் விளங்குகின்றது.

நாராயணி ஏதோ சொல்ல நினைத்தாள். ஆனால் அவளுடைய உதடுகள் துடித்தன. தொண்டை அடைத்தது. தன்னைச் சமாளித்துக் கொண்டே சொன்னாள்—பதின்மூன்று வயதாயிருக்கும் போதே பெண்கள் பொம்மை வைத்து விளையாடும் வயதில் அம்மா இந்தக் குடும்ப பாரத்தை என்மேல் சுமத்தி விட்டுக் கண் மூடினாள். அவள் கொடுத்த சுமையை என்னால் சுமக்க முடிகிறதா இல்லையா என்று பார்த்துக் கொண்டிருப்பாள். சமைத்துப் போட்டுக் குழந்தையை வளர்த்து குடும்பத்தைத் தனியாகவே பார்த்து வந்து இன்று—இருபத்தி ஆறு வயது—அரைக்கிழவியாகிவிட்டேன். இனி என் குடும்ப வேலையில் தலையிட்டீராகில் நான் ஆற்றில் முழுகி விடுவேன். பிறகு மறு முறை மணம் செய்து கொண்டு ராமனைத் தனியாக வைக்கவோ, என்ன வேண்டுமோ செய்யுங்கள். நான் பார்க்கமாட்டேன், கேட்கவுமாட்டேன். ஆனால் நான் உயிருடன் இருக்கையில் முடியாது.

சாமலானுக்கு உள்ளூற மனைவியிடம் பயம்தான். இரவு பேச்சு இந்த மட்டுக்கு முடிந்துவிட்டது. மறுநாள் நாராயணி ராமனை மடியில் உட்கார வைத்து அன்புடன் முதுகைத் தடவிக் கொண்டே சொன்னாள்—ராம்! இனிமேல் நீ இங்கே இருக்கவேண்டாம். தனியாய் எங்கேயாவது போய் விடுகிறாயா?

ராமன் அதை ஏற்றுக்கொண்டான். குதூகலமாய்ச் சொன்னான்—ஆகட்டும் இருக்கிறேன். மதனீ, நீ, நான், கோவிந்தன், போலா நாலு பேரும்தானே?

நாராயணி மறுபடி சொல்லவில்லை. இதற்கு அவளால் என்ன சொல்ல முடியும்? ஆனால் ராமன் விட்டானா? அவன் சந்தோஷமாய்க் கேட்டான்—எப்போது போகலாம் மதனீ?

நாராயணி அவனை மார்போடு அணைத்துக் கொண்டே சொன்னாள்—மதனி இல்லாமல் உன்னால் வேறு எங்கும் இருக்க முடியாதா?

ராமன் தலையை ஆட்டிக்கொண்டே சொன்னான்—முடியாது.

‘மதனி செத்துப்போய்விட்டால்’

“சீ!”

“சீயாவது இப்போதே மதனி சொல்வதை கேட்கிறதில்லை. அப்புறம் பாரேன்!”

ராமன் அவள் சொன்னதை மறுப்பதற்காகக் கேட்டான்—“எப்போது உன்வார்த்தையைக் கேட்கவில்லை?” நாராயணி சொன்னாள்—“எப்பொழுது கேட்டிருக்கிறாய்? எங்கம்மாவை அவமானப் படுத்தாதே என்று எத்தனை நாளாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன். ஆனாலும் வாயில் வந்ததைச் சொல்லிவிடுகிறாய். நேற்றுக்கூட அவளை அவமானப் படுத்தினாய். இந்தத்தடவை எனக்கு எங்கே போகணும் என்று தோன்றுகிறதோ அங்கு போயே விடுவேன்.”

“நானும் கூட வருவேன்.”

“நான் எங்கே போவேன் என்றே உனக்குத் தெரியாது. நான் மறைவாகப் போய்விடுவேன்.

“கோவிந்தன்.”

"அவன் உன்கிட்டே யிருப்பான். நீ அவனை வளர்க்கவேண்டும்."

"முடியாது. என்னால் முடியாது. மதனீ."

நாராயணிக்குச் சிரிப்பு வந்து விட்டது. சொன்னாள்—"ஏன் முடியாது? நீவளர்த்துத்தான் ஆகணும்."

இதனால் ராமனுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டது. கடகடவென்று சிரித்துக்கொண்டே சொன்னான்— "எல்லாம் பொய். நீ எங்கும் போக மாட்டாய்."

"பொய்யில்லை. நிஜமாகச் சொல்லுகிறேன். நான்போறேனோ இல்லையோ பாரேன்."

ராமன் பச்சாத்தாபத்துடன் கேட்டான். "நான் நீ சொல்வதைக் கேட்டால்?"

நாராயணி புன்முறுவலுடன் சொன்னாள்—போக மாட்டேன். உனக்குக் கோவிந்தனை வளர்த்தவும் நேராது.

ராமன் குதூகலத்துடன் சொன்னான். 'சரி நீயே, இன்றையிருந்து பார்த்துக்கொள்.

3

எட்டு பத்து நாட்கள் மிக அமைதியுடன் சென்றன. ஒருவிதத் தொந்தரவும் இல்லை. திகம்பரி ஒன்றும் பேசவில்லை என்று சொல்ல முடியாது. ஆனால் ராமனுக்குக் கோபம் வருவதேயில்லை. அன்றைக்கு மதனி சொன்னதை பூராவும் நம்பாவிடினும் அவன் பயந்துபோயிருந்தான். ஆனால் கடவுள் திருவுளம் வேறு யிருந்தது. இன்னும் ஒரு பொல்லா நிகழ்ச்சி ஏற்பட்டது.

இன்று திகம்பரி தன் காலம் சென்ற தந்தையின் சிராத்தத்திற்கு பன்னிரண்டு பிராமணர்களுக்கு அன்னமளிப்பதாக நினைத்திருந்தாள். தந்தையின் பிரேதாத்மா இதுவரை மகன் வீட்டில் உட்கார்ந்திருந்தது. இப்போது மாப்பிள்ளை வீட்டில் வந்து போக ஆரம்பித்தது. நினைவில் அல்ல,—கனவில். ஆனாலும் அதை திருப்திப் படுத்தித்தானே ஆக வேண்டும்.

காலையில் ராமன் சிலேட்டில் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான். போலா வந்து மெதுவாகத் தெரிவித்தான்—'அண்ணா உன் கார்த்திகையும் கணேசனையும் பிடிக்க பகா வலை வீசி இருக்கிறான் போய்ப் பாரேன்.'

இங்கே கொஞ்சம் விளக்கமாய்ச் சொல்லவேண்டும். பழைய நாட்களிலுள்ள இரு மீன்கள் படித்துறைக்கு அருகில் எப்போதும் சுற்றிக்கொண்டே இருக்கும். அவைகளுக்கு மனிதர்களைக் கண்டால் பயமே யில்லாலாமல் போய்விட்டது. தான் 'வளர்த்த' மீன்கள் என்று ராமன் இவைகளைச்சொல்லி வந்தான். அவன் அவைகளுக்கு கார்த்திகை கணேசன் என்று பெயரும் வைத்திருந்தான். ராமன் வாயால் அந்த மீன்களுடைய உருவகுணங்களைக் கேட்டு அவன் விருப்பப்படி அவைகளை ஒரு தடவையாகிலும் பார்க்காத மனிதர் அக்கம் பக்கத்திலேயே கிடையாது. அவைகளில் என்ன விசேஷம் என்று அவனுக்குத்தான் தெரியும். எந்த மீன் கணேசன், எது கார்த்திகை என்பதும் அவனைத்தவிர வேறு யாரும் அறியார். வேறு மனிதர்களைச் சொல்வானேன்! போலா கூடச் சில சமயம்

மாட்டிக்கொண்டு தவறுக்காக காது திருகப்படுவான்.

நாராயணி சில சமயம் சிரித்துக் கொண்டே சொல்வாள்—'ராமனுடைய கார்த்திகையும், கணேசனும் என்னுடைய பத்துக்கு உபயோகப் படும்.'

பேர்லா சொன்னது ராமனைக் கொஞ்சமும் அசைக்கவில்லை. அவன் சிலேட்டில் குனிந்து கொண்டே சொன்னான்—'வலை வீசித்தான் வேடிக்கை பார்க்கட்டுமே. வலையை அறுத்துக்கொண்டு வெளியே போய் விடாதா?'

போலா சொன்னான்.— இல்லை அண்ணா, நம்ப பக்கத்து வலையல்ல. பகா செம்படவர் களிட மிருந்து பெரிய வலை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான்!—வலையை அறுத்துக் கொண்டு வெளியே போக முடியாது.

ராமன் சிலேட்டை கீழே வைத்து விட்டுச் சொன்னான்—'போய்ப் பார்ப்போம் வா'.

கார்த்திகையையும் கணேசனையும் பிடிக்க சூழ்ச்சி நடந்து கொண்டிருந்த குளத்தின் கரையில் போய் பார்த்தான். பகா கொஞ்சம் இரை போட்டு விட்டு கையில் வலையைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

ராமன் வந்து தடாரென்று அவனை ஒரு தள்ளுத்தள்ளினான். சொன்னான்—எங்கே கிடந்த போக்கிரியடா? இரை போட்டு வலை வீசுகிறீர்களாக்கும்.

பகா அழுது கொண்டே சொன்னான்.—'பெரிய ஐயா கட்டளையிட்டிருக்கிறார். வேறெங்கும் மீன் கிடைக்கவில்லை பாபு!'

ராமன் சட்டென்று அவன் கையிலிருந்து வலையைப் பிடுங்கி வீசி எறிந்து விட்டுச் சொன்னான்—'ஓடிப் போ இங்கிருந்து.'

ராமன் திரும்பிப்போய் சிலேட்டும் பென்ஸிலும் எடுத்து உட்கார்ந்தான். 'யாரையும் கோபித்துக் கொள்ள மாட்டேன்' என்று அவன் ஆணையிட்டிருந்தான்.

திகம்பரி இன்று முன்னதாகவே அந்திக்கடனை முடித்து விட்டு நிச்சிந்தையா யிருக்க விரும்பினாள். வேலைக்காரி வந்து சொன்னாள்–மீன் கிடைக்க வில்லை பாட்டியம்மா. சின்னையா பகாவை விரட்டி ஓட்டி விட்டார்.

மீன் மீது திகம்பரிக்கு அசாத்திய அக்கரை உண்டாகியிருந்தது. பெரிய மீனைப்பற்றி விதவையின் மனதில் என்ன தோன்றிற்று என்று ஊகிக்க வேண்டாம். அவைகள் மேல் அவளுக்கு ஆசை யிருந்தது என்று சொல்வது சரியாகாது. தன் கையால் சமைத்து நல்ல பிராமணர்களுக்குப் பரிமாறி புகழும் புண்யமும் அடைய வெகு நாளாக விரும்பி இருந்தாள். நேற்று மாப்பிள்ளை யனுமதி பெற்று, அதாவது கார்த்திகை கணேசனைப் பற்றிப் பேச்செடுக்காமல் செம்படவர்களிட மிருந்து பலமுள்ள வலை கொண்டுவரச் சொல்லி பாகாபக்திக்கு நாலணா கொடுப்பதாக வாக்களித்து எல்லாவித ஏற்பாடும் செய்து வைத்திருந்தாள். இன்று காலையில் அந்த இரண்டு பிராணிகளும் படித்துறையில் விளையாடியதைப் பார்த்து நிம்மதியாய் சந்தோஷத்துடன் வந்து ஜெபமாலையை உருட்டிக்கொண்

டிருந்தாள். இதற்குள் கெட்ட விஷயம் காதில் விழுந்தது: கேட்டதும் நல்லது கெட்டது என்ற நினைவேயில்லாமல் கொதித்தாள். பல் நெரிப்பது அவளுடைய வழக்கம். சட்டென்று பல்லை நெரித்துக் கொண்டு மாலையை உயர்த்திக் கொண்டு சொன்னாள்—'யார் என்னுடைய விரோதி? அந்தப்பாழாய்போகிறவன் செத்தால்தான் என்மனம் குளிரும்.' வரண்ட தொண்டையில் ஜலம் விடவில்லை இன்னும். கடவுளே—நான் உண்மையானவளா யிருந்தால் இன்றைக்கு மூன்றும் நாள்.'—

அருகே நாராயணி கறிக்கு நறுக்கிக் கொண்டிருந்தாள். இடியைப்போல் கர்ஜித்துக்கொண்டே சொன்னாள்—' அம்மா '—

குழந்தை அம்மாவை அழைப்பதற்கு நிகரே யில்லை என்று கேட்டிருக்கிறோம். இன்றும் நாராயணி அம்மாவை அழைத்ததற்கு ஒப்பே கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும். அந்தச் சத்தத்தால் திகம்பரி உள்ளத்து ரத்தம் பனிக்கட்டி போல் உறைந்து விட்டது. ஆனால் நாராயணிக்கு அமைதி ஏற்படவில்லை. அவளுடைய கண்களிலிருந்து கன்னங்களில் மட மட வென்று கண்ணீர் சொட்ட ஆரம்பித்தது. கொஞ்ச நேரத்தில் அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு 'ராமன் படித்துக்கொண்டிருந்த இடத்திற்குப் போனாள். கடிந்த குரலில் ராமனைக் கேட்டாள்—' பகா பாக்கியை அடித்து விரட்டினையா ?'

ராமன் நடுங்கிப்போனான். தலையைத் தூக்கி ஒரு கணம் அவள் முகத்தை உற்றுப்பார்த்தான். பதில் சொல்ல முடியாமல் வேறு வாசல் 'வழியாக ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்தான் வெளியே.

நாராயணிக்கு உள் விஷயம் ஒன்றும் புலப்படவில்லை. மீன் பிடித்துக் கொண்டுவரக் கட்டளை யிட்டாள்.

அம்மாவின் கட்டளைப்படி பகா போய் கொஞ்ச நேரத்தில் ஒரு பெரிய மீனைப் பிடித்து வந்து தடும் என்று முற்றத்தில் வைத்தான்.

நாராயணி சமையலறை வாசலில் நின்று கொண்டிருந்தவள் இதைப் பார்த்து நடுங்கிப் போய்விட்டாள். சந்தேகத்துடன் கேட்டாள்—'அடே, இது ராமனுடைய கார்த்திகை, கணேசனில் ஒன்று போலத் தோன்றுகிறதே ?

பகா இவ்வளவு பெரிய மீனை இவ்வளவு சீக்கிரம் பிடித்து வந்து கர்வத்துடன் சொன்னான்—' ஆம்; இது இந்தத் துறை மீன்தான். ரொம்ப முரட்டு மீன்.'

பிறகு திகம்பரியைச் சுட்டிக் காட்டிக்கொண்டே சொன்னான்—அன்று அம்மா இதைத்தான் பிடிக்கச் சொன்னாள்.

நாராயணி உயிரே அற்றுப் போனவள் போலாகி விட்டாள். அவள் பிரமித்துப் போய் நின்றாள். வேலைக்காரிக்கு ராமன்மேல் அதிக சந்தோஷம். இல்லையானாலும் மீனைப்பார்த்து அவளுக்குக் கோபம் வந்து விட்டது. திகம்பரியிடம் சொன்னாள்—'பாட்டியம்மா! சின்ன ஐயாவுடைய கார்த்திகை கணேசனை அக்கம் பக்கத்திலுள்ளவரும் அறிவார். என்ன நினைத்து அதைப் பிடிக்கச் சொன்னீர்கள்? இன்னும் வேறு குளங்கள்,

இரண்டு மூன்று இருக்கின்றனவே; அவைகளிலிருந்து பிடிக்கிறதுதானே. பத்துப்பேர் சாப்பிட அரைமணங்கு கனமுள்ள மீன் எதற்கு? இப்பவே ஒளித்து வைத்துவிடுங்கள். சின்ன ஐயாபார்த்தால் இங்கே அமர்க்களம் ஆக்கி விடுவார்.'

திகம்பரி முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டே சொன்னாள்—'இவ்வளவு தொந்திரவு இருக்கிறதென்று எனக்கு எப்படித் தெரியும்? ஒரு மீனைப் பிடித்துவிட்டால் என்ன தோஷம்? இதை ஒளித்து வைக்கணும்! வந்து விட்டாயே ஒளித்து வைக்க. பிராமணர்கள் 'உன் தலையை யாதின்பார்கள்.?

வேலைக்காரி சொன்னாள்—உங்கள் பிராமணர்கள் இரண்டரை மணிக்குச் சாப்பிடுவதற்குள் பத்து மீன் வந்து விடும். முதலில் சின்ன ஐயா பள்ளிக்குப் போகட்டும். இல்லா விட்டால் இங்கே இருக்கவே முடியாமல் போய் விடும். போலா இதுவரை இங்கே நின்றுகொண்டிருந்தவன் இப்பொழுது எங்கே போய் விட்டான்? சொல்லப் போய் விட்டான் போலிருக்கிறது. இனி நல்லதுக்கில்லை. அம்மா, செய்ய வேண்டியதை சட்டென்று செய்து விடுங்கள். நில்லாதேயுங்கள்.

பகா நாலணாவுக்கு ஆசைப் பட்டு வலை வாங்கிக் கொண்டு வந்தான். அங்கிருந்த நிலைமையைப் பார்த்து காசு கிடைக்க வழி இல்லை என்று தெரிந்து கொண்டு பேசாமல் போய் விட்டான்.

ராமனைப் பார்க்க வேண்டுமென்றால் எங்கே போக வேண்டும் என்று போலாவுக்குத் தெரியும். ஓட்டமாய் ஓடித் தோட்டத்திற்குப் பின் புறம் வட புறத்தில் கொய்யா மரத்தடியில் போய்ச் சேர்ந்தான். ராமன் மரத்தின் கிளையில் காலைத் தொங்க விட்டுக் கொண்டு மூச்சுத் திணற ஓடி வந்து இறைத்துக் கொண்டே சொன்னான்—சட்டென்று பார்க்க வா அண்ணா, பகா உன் கார்த்திகையைக் கொன்று விட்டான்.

ராமன் கொய்யாக்காய் மேல் வதை முடித்துச்சொன்னான்—பொய்.

'நிஜமாகத்தான் அண்ணா. அம்மா பிடித்து வரச் சொன்னாள். இன்னும் முற்றத்தில் கிடக்கிறது. போய்ப்பார்.'

ராமன் திடீரென்று மரத்திலிருந்து குதித்தான். புயலைப்போல் பாய்ந்து முற்றத்தை அடைந்தான். போய் தடைபட்டு நின்று விட்டான். மீனைப் பார்த்து திடீரென்று சொன்னான்—'இது என்னுடைய கணேசன். மதனீ, நீ என் கட்டளையிட்டு என் மீனைப் பிடிக்கச் சொன்னாய்' என்று சொல்லிக் கொண்டே நிமிர்ந்து படுத்துக் கொண்டு பலி பீடத்தில் ஏற்றப்பட்ட ஆட்டைப் போல் காலை தரையில் அடிக்க ஆரம்பித்தான். அவனுடைய வருத்தம் எவ்வளவு உண்மையானது என்பதைப்பற்றி திகம்பரிக்குக் கூட சந்தேகம் இல்லை.

சாதம் ஊட்ட நாராயணி அவனை கொஞ்ச நஞ்சம் கெஞ்சவில்லை. ஆனால் ராமன் கொஞ்சமும் மசியவில்லை. கையைப் பிடித்து எழுப்பினாள். கையை உதறி எறிந்தான். பகல் முழுதும் பட்டினி கிடந்துவிட்டு இரவு இரண்டு கவளம் சாதத்தை உருட்டிப் போட்டுக்கொண்டு எழுந்து போய்விட்டான். (தொடரும்)

துருக்கிய ஜனக்கட்சியின் வேலைத் திட்டங்கள்

துருக்கியின் முக்கிய அரசியல் கட்சிக்கு ஜனக்கட்சி என்று பெயர். காலஞ் சென்ற கமால் அத்தா துர்க், இந்த ஜனக் கட்சியை ஸ்தாபித்து இதற் கான ஒரு வேலைத் திட்டத்தையும் வகுத்துக் கொடுத்தது யாருக்கும் தெரிந்தவிஷயமே. இப்பொழுது இந்த ஜனக் கட்சிதான் அரசாங்க நிருவாகத்தை நடத்துகிறது. இந்தக் கட்சியின் வேலைத் திட்டம் அப்படியே இங்குத் தரப்பட்டிருக்கிறது.

கொள்கைகள்

1. நமது தந்தையர் நாடு
1. சமூகம்
3. அரசாங்க அமைப்பு
4. பொதுஜன உரிமைகள்

1. நமது தந்தையர் நாடு:— நமது தற்போதைய அரசியல் எல்லைக்குள்ளிருக்கிற புனிதமான நாடுதான் நமது தந்தையர் நாடு. இங்கு துருக்கிய சமுதாயமானது தனது புராதனப் பெருமை, கீர்த்தி இவைகள் நிரம்பிய சரித்திரத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இதன் பழைய பெருமைகள் இதன் மண்ணில் வேரூன்றிக் கிடக்கின்றன.

நமது தந்தையர் நாடென்பது ஒரு தொகுப்பு. எந்தச் சந்தர்ப்பத்திலும் இது பிரிக்க முடியாதது.

2. சமூகம்:— சமூகம் என்பது பாஷை, நாகரிகம், லட்சியம் இவைகளால் கட்டுப்பட்ட பிரஜைகளைக் கொண்ட ஓர் அரசியல் தொகுப்பு.

3. அரசாங்க அமைப்பு:— துருக்கியானது தேசீயத் தன்மையோடு கூடியது. பொது ஜன அபிப்பிராயத்தைத் தழுவியது; லௌகிகமானது; புரட்சிகரமான குடியரசுக் கொள்கையை உடையது.

துருக்கிய ஜன சமுதாயத்தின் அரசாங்க அமைப்பானது, அதிகார ஒற்றுமையைக் குறிக்கோளாகக்கொண்டது. ஒரே ஒருவித அரசாங்க அதிகாரந்தான் உண்டு. அந்த அதிகாரம் எவ்வித கட்டுப்பாடும், நிபந்தனையும் இல்லாமல் தேசத்திற்கே உரியது.

கிராண்ட் நேஷனல் அஸெம்ப்ளி யென்கிற துருக்கிய பார்லிமெண்டானது, தேசத்தின் பெயரால் இந்த அதிகாரத்தை நடத்துகிறது. சட்டஞ் செய்யும் அதிகாரமும் நிருவாக அதிகாரமும் இந்த கிராண்ட் நேஷனல் அஸெம்ப்ளிக்கே உண்டு. அஸெம்ப்ளியே, சட்ட நிருபண அதிகாரத்தை நடத்துகிறது. தன்னுடைய நிருவாக அதிகாரத்தை பார்லிமெண்ட் அங்கத்தினர்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட குடியரசின் பிரசிடெண்டுக்கும் அவரால் நியமிக்கப்பட்ட மந்திரிச் சபைக்கும் விட்டிருக்கிறது. துருக்கியிலுள்ள நீதிஸ்தலங்கள் சுயேச்சையுள்ளவை.

இதுதான் எல்லா அரசாங்க அமைப்புகளை விட மிகச் சிறந்ததென்று ஜனக் கட்சி கருதுகிறது.

4. பொது ஜன உரிமைகள்:—

(அ) தனிப்பட்ட நபர்களுடையவும் சமுதாயத்தினுடையவும், சுதந்திரம், சமத்துவம், சொத்து முதலியவைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பது ஜனக்கட்சியின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. இந்த உரிமைகள், அரசாங்க அதிகாரத்திற்குட்பட்டவை. தனிப்பட்ட நபர்களுடைய செயல்கள், பொதுஜன நன்மைக்கு விரோதமாயிருத்தல் கூடாது. இந்தக் கொள்கையோடுதான் சட்டங்கள் யாவும் செய்யப்படுகின்றன.

(ஆ) பிரஜையின் உரிமை, பிரஜையின் கடமை என்கிற விஷயங்களில் ஆண் பெண் வித்தியாசங்களை ஜனக் கட்சி பாராட்டாது.

(இ) பார்லிமெண்டுக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் சட்டமானது மாற்றப்பட வேண்டும். ஒரு பிரஜையானவன் தனக்குத் தெரிந்த, தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான நபரைப் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்க விடுவதுதான் ஜன நாயகத்தின் தேவையையும், நமது தேசத்தின் நிலைமையையும் பூர்த்தி செய்வதாகும். ஜனப்பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்படுவது இதே முறையில்தான் நடைபெற வேண்டும்.

ஜனக்கட்சியின் முக்கிய அமிசங்கள்

5. ஜனக்கட்சியானது, குடியரசுக்கொள்கையைத்தழுவியது; தேசியத்தன்மை நிறைந்தது; பொதுஜன ஆதரவைப் பெற்றது ; லௌகிகமானது.

(அ) தேசிய அதிகாரத்தைப் பெறுவதாகிற லட்சியத்தை யடைவதற்கும் பிரதி நிதித்துவம் வாய்ந்த அரசாங்கமாயமைவதற்கும் குடியரசு முறைதான் சிறந்ததென்று ஜனக் கட்சி கருதுகிறது. இந்த உறுதியோடு, கட்சியானது, குடியரசை எல்லா ஆபத்துகளினின்றும் பாதுகாக்கும்.

(ஆ) துருக்கிய சமுதாயத்தின் தனிப்பட்ட தன்மையைப் பாதுகாக்க வேண்டுமென்பதே ஜனக் கட்சியின் கொள்கை. முன்னேற்றமும் அபிவிருத்தியும் அடைந்துள்ள எல்லா தேசங்களுக்குச் சமதையாகவும் சர்வதேச விஷயங்களில் எல்லாருக்கும் அனுகூலமான தன்மையிலும் ஜனக்கட்சி நடந்துகொள்ளும்.

(இ) அரசாங்க அதிகாரத்தின் மூலஸ்தானம் ஜன சமூகந்தான். அரசாங்கத்திற்கு ஒரு பிரஜை செய்யவேண்டிய கடமைகளையும், பிரஜைக்கு அரசாங்கம் செய்ய வேண்டிய கடமைகளையும் ஜன சமுதாயத்தினின்று பிறக்கும் இந்த அதிகாரம் ஒழுங்கு படுத்தும்.

சட்டத்தின் முன்னர் எல்லாப் பிரஜைகளும் சம உரிமை பெற்றவரே. எந்தத் தனி நபருக்கும், அல்லது குடும்பத்திற்கும் அல்லது வகுப்புக்கும், அல்லது ஜாதிக்கும் விசேஷ சலுகைகள் அளிக்கப்படமாட்டாது.

துருக்கியக் குடியரசில் வசிக்கும் துருக்கிய ஜன சமுதாயமானது, பல வகுப்பினரைக் கொண்டதென்ற கொள்கை ஜனக்கட்சிக்குக் கிடையாது. தனிப்பட்ட நபர்களுக்கும் சமுதாய வாழ்க்கைக்கும் தேவையானபடி தொழில் வாரியாக ஜனங்கள் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதே ஜனக்கட்சியின் கொள்கை.

துருக்கிய ஜனசமுதாயத்தைத்தொழில் வாரியாகப்பிரிக்க வேண்டுமென்றால் விவசாயிகள், கைத்தொழில் செய்வோர், கூலி வேலை செய்வோர், கொத்துவேலை முதலியன செய்வோர், வக்கீல்கள், டாக்டர்கள் போன்ற சுயேச்சைத் தொழில்களை நடத்துவோர், வியாபாரிகள், அரசாங்க ஊழியர் ஆகிய வகுப்பினராகப்பிரிக்கலாம். இந்தத் தொழில் பிரிவினர் தத்தம் வேலையைச் செய்துகொண்டு போவது ஜன சமுதாயத்தின் க்ஷேமத்திற்கு ஏற்றதாகும்.

ஜன சமுதாயத்தில் பிரிவினைகள் ஏற்படாமல் ஒழுங்கும் கட்டுப்பாடும் இருக்கவேண்டுமென்பதும், எல்லாச்சமூக உரிமைகளின் ஒற்றுமையை ஏற்படுத்துவதுமே கட்சியின் கொள்கைகளாகும்.

(ஈ) தனிப்பட்டவர்களின் தொழில் முயற்சிகள் இருக்கவேண்டுமென்பது அடிப்படையான எண்ணமாயிருந்தாலும் தேசத்தின் ஜீவாதாரமான நன்மைகள் சம்பந்தப்பட்ட மட்டில், சிறப்பாகப் பொருளாதாரத் துறையில், அரசாங்கமே நேர் முகமான தொடர்பு கொள்ள வேண்டும். (அதாவது கைத்தொழில் முதலியனவெல்லாம் அரசாங்கத்தாராலேயே நடத்தப்பட வேண்டும்.) இதன் மூலமாகவே குறுகிய காலத்தில் தேசம் க்ஷேமத்தையடைய முடியும்.

பொருளாதார சம்பந்தப்பட்ட விஷயங்களில் அரசாங்கம் எந்தெந்த மாதிரியாக சம்பந்தப்பட்டிருக்க வேண்டுமென்றால், கைத்தொழில்களை ஸ்தாபித்து நடத்த வேண்டும்; தனிப்பட்டவர்களுடைய தொழில் முயற்சிகளை ஆதரிக்கவேண்டும். தொழில்கள் சம்பந்தமாக நடைபெறும் வேலைகளை ஒழுங்கு படுத்தவும் நிருவாகம் செய்யவும் வேண்டும்.

பொது ஜனங்களின் அதிகமான தேவை எதுவோ அந்தமாதிரியான தொழில்களில்தான் அரசாங்கம் தலையிட்டு நடத்தவேண்டும். தேவையின் அவசியத்தை உணர்ந்து எந்த ஒரு தொழிலை அரசாங்கமே நேரில் எடுத்துக் கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறதோ, அந்தத் தொழிலானது ஒரு தனிப்பட்ட நபருடைய ஆதீனத்தில் இருக்குமேயானால் அதனை அரசாங்கம் ஏற்று நடத்துவதற்கு முன்னர் அந்தத் தனிப்பட்ட நபருக்கு எந்தெந்த விதமாக நஷ்ட ஈடு கொடுக்கலாமென்பதைப் பற்றிய விவரங்களைக் குறிப்பிட்டு ஒரு சட்டம்

நிறைவேற்றவேண்டும். அந்த நஷ்டஈடு கொடுக்கிறபோது, பிற்காலத்தில் அந்த நபருக்கு அதிகமான லாபம் கிடைக்குமே யென்பன போன்ற விஷயங்களைக் கவனிக்கக்கூடாது.

(உ) தற்கால உலகத் தேவைகளை முன்னிட்டும் விஞ்ஞானம், தொழில் நுட்பம் முதலியவைகள் நிறைந்த தற்கால நாகரிகப் போக்கை அநுசரித்தும் அரசாங்கத்தின் சட்டங்கள், விதிகள், முறைகள் முதலியன அமைத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று ஜனக்கட்சி கருதுகிறது.

மதம் என்பது அவரவர்களுடைய மனச்சாட்சியைப் பொறுத்த விஷயமாதலாலும் தற்போதைய உலக முன்னேற்றத்தோடு நமது தேசமும் முன்னேற்றமடையவேண்டிய அவசியத்தை முன்னிட்டும், மதத்தை அரசியலிலிருந்தும், சர்வதேச விவகாரங்களிலிருந்தும் பிரிக்கவேண்டிய அவசியமென்று ஜனக்கட்சியானது கருதுகிறது.

(ஊ) அரசாங்க நிருவாகத்திற்காக என்னென்ன சட்ட திட்டங்கள் செய்யப்படவேண்டுமென்பதன் சம்பந்தமாக படிப்படியாகச் செல்ல வேண்டுமென்னும் நியதிக்கு ஜனக்கட்சியானது உட்படாது. நமது ஜன சமூகமானது, எந்தவொரு புரட்சிக்காக அதிகமான தியாகங்களைச் செய்திருக்கிறதோ அந்தப் புரட்சியின் அடிப்படையான கொள்கைகளைக் காப்பாற்றவும், அவைகளுக்கு உண்மையாக நடந்து கொள்ளவும் கட்சி உறுதி பூண்டிருக்கிறது.

பொருளாதார விஷயங்கள், விவசாயம், தொழில், சுரங்கம், காடு, வியாபாரம் பொதுநல சம்பந்தமான இலாகாக்கள்

6. பொருளாதாரத்திற்குப் பணப்புழக்கம் அவசியமானது. தேசத்திற்குத் தேவையான மூலதனத்தைத் தேடிக்கொள்வதென்றால் அதற்குத் தேச மக்கள் உழைத்த உழைப்பினால் ஏற்படும் ஊதியத்தைச் சேமிக்க வேண்டும். ஆகையால், நமது கட்சியின் முக்கிய கொள்கையானது, ஜனங்களுக்கு அதிகமான வேலை கொடுக்க வேண்டும். தவிர, தனிப்பட்ட முறையிலும், குடும்ப முறையிலும் அரசாங்க நிருவாக முறையிலும், மிச்சம் பிடிக்க வேண்டுமென்ற கொள்கையையும் வலியுறுத்த வேண்டும்.

7. கடன் வாங்குவதானது, தேவைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்தே யிருக்கவேண்டும். சுலபமாகவும் குறைந்த வட்டியிலும் பணம் கிடைக்குமாறு செய்யவேண்டுமென்பதே கட்சியின் நோக்கம்.

(அ) தேசத்தில் கடன் வாங்குஞ் சக்திக்குப் போதிய அளவு செக்யூரிட்டி இருக்கவேண்டுமென்பது கட்சியின் கொள்கையாகும். முக்கியமான ஜாமீன்களுக்குச் சலுகை காட்டுவதன் மூலமாகவே இதனையடைய முடியுமென்று நாங்கள் கருதுகிறோம். வியாபாரிகள், தங்கள் வியாபாரத்திற்காக அதிகமான கடன் வாங்காமல் தடுக்க இதுவே தகுந்தவழி என்று நாங்கள் கருதுகிறோம்.

(ஆ) விவசாயிகளின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஐக்கிய நாணயச் சங்கங்களையும், நிலச் சொந்தக்காரர்களின் கடன் தேவைகளைப் பூர்த்திசெய்ய நில அடமான பாங்கிகளையும் ஏற்படுத்த வேண்டுவது அவசியமென்று நாங்கள் கருதுகிறோம்.

(இ) விளை பொருள்கள், கால் நடைகள், விவசாயக் கருவிகள், இயந்திரங்கள் ஆகிய இவைகளின் மீது கடன் கொடுப்பதென்பது ஒழுங்கு படுத்தப்பட வேண்டும்.

(ஈ) விளை பொருள்களின் மீது வாங்கப்படுகிற கடன்களானது, குறித்த தவணைப்படி கண்டிப்பாக வாங்கப் படாமல், விளைபொருள்கள் விற்பனையாகிப் பூராத்தொகையும் விவசாயியின் கைக்குக் கிடைத்த பிறகே வசூல் செய்யப்பட வேண்டும்.

(உ) சுரங்க முதலாளிகள், தொழில் முதலாளிகள், கைத்தொழில் நடத்துவோர், சில்லரை வியாபாரிகள், மீன் பிடிப்போர் முதலியோருக்குக் கடன் வாங்கும் வசதிகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்பெறும்.

(ஊ) கடலில் உற்பத்தியாகும் பொருள்கள் சம்பந்தமான ஆயுத வகைகள் இயந்திரங்கள் முதலியவை மீது கடன் கொடுக்க வசதிகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்பெறும்.

(எ) தருக்கியப் பிரஜைகள், சொந்தமாக வீடு கட்டிக்கொண்டு வாழ சௌகரியம் செய்து கொடுக்கப்பெற வேண்டுமென்பது கட்சியின் நோக்கம். இப்பொழுதுள்ள 'ரியல் எஸ்டேட் பாங்கின்' மூலதனத்தை இந்த வீடுகள் கட்டும் முயற்சிக்கு உபயோகிக்க வேண்

டுமென்பது கட்சியின் நோக்கம். வருமானத்தை உத்தேசித்துக் கட்டப் படும் புதிய கட்டிடங்களுக்கு மேற்படி 'ரியல் எஸ்டேட் பாங்கி'யானது கடன் கொடுக்கக்கூடாது. இப்பொழுதுள்ள கட்டிடங்கள் மீது கடன் கொடுக்கலாம். ஆனால், இதன் மீது கிடைக்கும் லாபத்தைக்கொண்டு புதிய வீடுகள் கட்டி வாடகைக்கு விடக்கூடாதென்ற நிபந்தனையின் பேரில் கொடுக்கலாம். இந்தமாதிரியான விஷயங்களுக்காக வென்று தனியான ஒரு பாங்கி ஏற்படுத்துவது நல்லது.

8. அதிகமாக வட்டி வாங்கும் வழக்கத்தை ஒழிக்கவேண்டுமென்பது கட்சியின் கொள்கை.

9. இன்ஷ்யூரன்ஸ் சம்பந்தமான விஷயங்கள், அவற்றின் முக்கியத்துவத்திற்குத் தகுந்தபடி கவனிக்கப்படும்.

10. ஐக்கிய முறையில் நடைபெறுகிற ஸ்தாபனங்களை ஆதரிக்க வேண்டுமென்பது கட்சியின் கொள்கைகளில் ஒன்று. விவசாயிகளுக்குச் சாதகமாயிருக்கும்படியான ஐக்கிய நாணயச் சங்கங்களை அதிகமாக ஏற்படுத்த வேண்டும். துருக்கிய விவசாய பாங்கிதான் எல்லா விவசாய ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கும் தாய்ச் சங்கம் போன்றதாகும்.

11. விவசாயஞ் செய்கிறவனுக்கும் பண்ணைச் சொந்தக்காரனுக்கும் உபயோகமாயிருக்குமாறு விவசாய பாங்கியின் முக்கியத்துவத்தை அதிகரிக்க வேண்டுமென்பது கட்சியின் நோக்கம்.

12. அரசாங்கத்தினால் கொடுக்கப்பட வேண்டிய கடன்களை ஒழுங்கு படுத்துவதும், அந்நிய நாட்டு வியாபாரத்தை ஒழுங்கு படுத்துவதுமே நமது நோக்கம்.

நம் தேசத்தில் உற்பத்தியாகும் பொருள்களை வாங்குகிறவர்களிடத்தில்தான் நாம் வியாபாரம் செய்யவேண்டும்; வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்பதே நமது கொள்கை.

13. மூலப் பொருள்களை உற்பத்தி செய்கிறவர்களின் நன்மைக்குப்பாதகம் ஏற்படாமல் இருக்கிற பெரிய தொழில் முயற்சிகளும் சிறிய தொழில் முயற்சிகளும் அரசாங்கத்தால் ஆதரிக்கப்படவேண்டும்.

14. தேசத்தின் பொது முயற்சி, பொது நன்மை இவைகளை முன்னிட்டே ஒவ்வொரு பொருளாதார முயற்சியும் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதேவிதமான ஒற்றுமைதான் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இருக்க வேண்டும்.

தொழிலாளர் சட்டம் ஒன்றின் மூலம் முதலாளி—தொழிலாளி சம்பந்தம் ஒழுங்கு படுத்தப்பெறவேண்டும். தொழிலாளர் சச்சரவுகள், சமரஸத்தின் மூலம் தீர்க்கப்பட வேண்டும். அது சாத்தியமில்லாமற் போய்விட்டால் அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பெற்ற மத்தியஸ்த போர்டுகள் மூலம் இக்தச் சச்சரவு தீர்க்கப்படும். தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களும், முதலாளிகளின் கதவடைப்பும் தடுக்கப்படும்.

தேசிய துருக்கியத் தொழிலாளர்களின் நன்மையும், வாழ்வும், மேற்குறிப்பிட்ட சட்டதிட்டங்களுக்குட்பட்டே அமைந்திருக்கும். இந்தக்கொள்கைப்படியே தொழிலாளர் சட்டங்களும் அமையும்.

15. தேசத்தில் தொழிற்சாலைப் பெருக்கம் ஏற்படவேண்டுமென்பதற்காக அரசாங்கமோ தனிப்பட்ட நபர்களோ தொழிற்சாலைகளை ஆரம்பிப்பார்களானால், அது, ஒரு தொழில் திட்டத்தை அநுசரித்ததாகவே இருக்கவேண்டும். அரசாங்கத்தின் தொழில் முயற்சிகளானவை தேசத்தின் தேவைகளை அநுசரித்து ஒன்றன்பின்னொன்றாக இருத்தல் வேண்டும்.

இந்தவிதமான கைத்தொழில் ஸ்தாபனங்களை தேசத்தின் ஒரு பாகத்திலேயே அமைத்து விடாமல் நாலாபக்கங்களிலும் இருக்கச் செய்ய வேண்டும்.

பொருளுற்பத்தி செய்கிறவர்களின் நன்மையையும், பொருள் வாங்குகிறவர்களின் நன்மையையும் பாதிக்காமலிருக்கும் பொருட்டு அரசாங்கமே, பொருள்களின் விலையை நிர்ணயப் படுத்திவிடும். தவிர, அரசாங்கத்தொழில் ஸ்தாபனங்களின் பண நிருவாகமும், தொழில் நுட்ப நிருவாகமும் அரசாங்கத்தின் வசமே இருக்க வேண்டும்.

எந்த ஒரு தொழில் ஸ்தாபனத்தின் மூலதனத்தின் பெரும்பாகம் அரசாங்கத்தினுடையதாக இருக்கிறதோ, அந்த ஸ்தாபனத்தின் சிப்பந்திகள் சம்பந்தமான நிருவாகம், அந்த

ஸ்தாபனத்தின் வியாபாரப் போக்கை அநுசரித்ததாகவே இருக்கும். தொழில் முயற்சிகளானது, ஏதோ ஒரு காரணத்தை, அதாவது தேவையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டு மென்பதை நாங்கள் வலியுறுத்துவோம்.

பொருள்களை வாங்கி உபயோகிக்கிற பொது ஜனங்களின் நன்மைக்கு விரோதமாக, பொருள் உற்பத்தி செய்வோர் விலை நிர்ணயஞ் செய்து கொண்டு கட்டுப்பாடாக இருப்பதை நாங்கள் எதிர்க்கிறோம். ஆனால் ஏதோ ஒரு காரணார்த்தமாக இந்த விலை நிர்ணயம் செய்யப்படுமானால், அஃது எதிர்க்கப்படமாட்டாது.

16. தேசத்தின் அபிவிருத்திக்கு எல்லா வியாபார முயற்சிகளும் அவசியமானது. தொழில் நுட்பம் தெரிந்து சாதாரணமாகத் தொழில் நடத்தும் முதலாளிகள் எல்லா விதத்திலும் ஆதரிக்கப்படுவார்கள்.

17. பொருள்களை ஏற்றுமதி செய்வது நமது தேசீய வேலைகளில் ஒன்றெனவும், அந்நிய நாட்டு வியாபாரம் பொருளாதார வேலைத் திட்டங்களில் ஒன்றெனவும் ஜனக்கட்சி கருதுகிறது. வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுடைய முயற்சிகள் பலனளிக்க வேண்டுமென்று நாங்கள் முயற்சி செய்வோம். நமது தேசத்து மூலப் பொருள்களையும், பண்பட்ட பொருள்களையும் விற்பனை செய்யும் முயற்சியைச் சுலபப்படுத்தவும், அவற்றின் நற்பெயரைக் காப்பாற்றவும், அவைகள் ஏற்றுமதியாகுமாறு செய்யவும், உற்பத்தியாகும் பொருள்கள் ஒழுங்கான முறையில் ஒரே மாதிரியாக இருக்கின்றனவா என்று பார்க்கவும் ஜனக்கட்சி முயற்சிகள் எடுத்துக் கொள்ளும். அந்தந்த நாட்டு மார்க்கெட்டுகளின் தேவைகளை அநுசரித்தாற் போல் நமது ஏற்றுமதி வியாபாரம் இருக்கும். அந்நிய நாட்டு வியாபார வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் உதவியும் இருக்க வேண்டு மென்று நாங்கள் கோருகிறோம். ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தேவையான தகவல்களைச் சேகரித்துக் கொடுக்கும் பொருட்டு, ஸ்தாபனங்களை ஏற்படுத்துவோம்.

18. அந்நிய நாட்டுச் சரக்குகள் ஓரிடத்தில் கொண்டு குவிக்கப்படுவதற்கான தனி இடங்கள் ஒதுக்கப்படுவது நல்லதென்று நாங்கள் கருதுகிறோம்.

19. அறைமுகத் தீர்வை, ஏற்றுமதி இறக்குமதித் தீர்வை முதலியவைகளைப் பற்றி நாங்கள் ஜாக்கிரதையாக ஆலோசனை செய்வோம். தேசியப் பொருளாதாரத்தை ஒட்டியே இந்தத் தீர்வைகள் இருக்கும்.

20 மீன் பிடிக்கும் தொழிலுக்கு நாங்கள முக்கியத்துவம் கொடுப்போம். இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்வது முக்கியமானது. இப்பொழுது இந்தத் தொழில் நடத்தப்படும் முறையானது, தொழில் நடத்துகிறவர்களுக்கும் வாங்கி உபயோகிக்கிறவர்களுக்கும் அநுகூலமாயில்லை.

21. பழங்களை டின்களில் அடைத்து வியாபாரஞ் செய்யும் தொழிலை நாங்கள் ஆதரிப்போம்.

22 துருக்கியைப்பற்றி வெளி நாட்டார் தெரிந்து கொள்ளவும், அதன் மீது விருப்பங் கொள்ளவும், அந்நிய நாட்டுப் பிரயாணிகளின் போக்கு வரவை அதிகப்படுத்த வேண்டுமென்று நாங்கள் கோருகிறோம்.

23 அரசாங்கத்தின் எந்த மந்திரிச் சபையும் அல்லது அதிகாரியும், தாங்கள் போடும் ஒவ்வொரு பொருளாதாரத் திட்டமும் தேசத்தின் லாபத்திற்கும் உபயோகத்திற்கும் இருக்க வேண்டு மென்பதைக் கவனிப்போம். இது சம்பந்தமாக பழைய சட்டங்களையும் முறைகளையும் மாற்ற வேண்டுமென்று நாங்கள் கூறுகிறோம்.

பொருளாதார விஷயங்களுக்கு நமது கட்சி முக்கியத்துவம் கொடுக்கிறதோடு, அரசாங்க விவகாரங்களில் பொருளாதார இலாகா ஒரு முக்கிய இலாகாவாக இருக்க வேண்டு மென்றும் கருதுகிறது.

24. தரை மூலமாகவும், கடல் வழியாகவும், ஆகாய மார்க்கமாகவும் போக்கு வரத்து வசதிகளை அதிகப்படுத்திக் கொடுக்க நாம் ஏற்பாடு செய்வோம். இந்த மூன்று வகை வழிகளையும் விருத்தி செய்து, அதன் மூலமாக தேசத்தின் பொருளாதார வருவாயை அதிகப்படுத்த வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.

அரசாங்கக் கடல் போக்கு வரத்து இலாகாவை விருத்தி செய்ய வேண்டு மென்று நாங்கள் கோருகிறோம். கட்டணம் பெற்று கப்பலோட்டுந் தொழிலை அதிகரிக்கச் செய்ய வேண்டு மென்று நாங்கள் கோருகிறோம்.

25. நமது பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய மாதிரி தண்ணீர்ப் போக்கு வரத்து வசதிகளை அதிகப்படுத்த வேண்டுமென்பது நமது கொள்கை. சிறிய கால்வாய்ப் போக்கு வரத்துகளையும் நாங்கள் அதிகப்படுத்த உத்தேசிக்கிறோம்.

26. பொதுநல இலாகாக்களாகிய பாலங் கட்டுதல், ரெயில்வே போடுதல் முதலிய பொருள் வருவாயைக் கொடுக்கக் கூடிய திட்டங்கள் பலவற்றைப் போட நாங்கள் ஏற்பாடு செய்வோம். தேசத்திற்கு க்ஷேமத்தையும் பலத்தையும் கொடுக்கக் கூடிய ரெயில்வே போக்கு வரவு வசதிகளை அதிகப்படுத்த முயல்வோம். தக்க சந்தர்ப்பங்களில் துறை முகங்களைக் கட்ட ஏற்பாடு செய்வோம்.

தேசத்தின் பல பாகங்களையும் இணைத்துக் கொடுக்கக் கூடிய மாதிரி, நவீன நாகரிக முறையில் பல பாதைகள், பாலங்கள் முதலியன சமைக்க ஏற்பாடு செய்வோம். பாதைகள் போடும் விஷயத்தில், பொருளாதார நோக்கங்களுக்கே முக்கியத்துவம் கொடுப்போம். ரெயில்வே பாதைகளுக்கு நேர் குறுக்காகவே பாதைகள் போடுவோம். ஏனென்றால் அப்பொழுதுதான் அவைகளில் போக்கு வரவு அதிகமாயிருக்கும். தவிர, தேசியப் பாதுகாப்புக்கு ஏற்றதாகவும் இந்த ரோட்டுகள் அமைக்கப்படும்.

27. தேசத்தின் தேவைகளை அநுசரித்தும், ஒழுங்காக நடைபெறக் கூடிய மாதிரியாகவும் தபால், தந்தி டெலிபோன் முதலிய வசதிகளை அமைப்போம். நகரங்களை டெலிபோன் மூலம் இணைப்போம்.

28. கீழ்க்கண்ட விஷயங்களைப்பற்றிக் கவனித்துக் கொண்டு வருகிறோம்:— நமது முக்கிய விவசாயப் பொருளாயிருக்கிற கோதுமையின் விலையை, அதன் மதிப்பினின்று குறையாதிருக்கச் செய்தல்;

பொருளுற்பத்தி செய்வோருக்கும் பொருள் வாங்குவோருக்கும் பாதகம் உண்டாகாதபடியான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுதல்;

இதற்காக ஆங்காங்கு தானியக் களஞ்சியங்களை நாங்கள் கட்டிக் கொடுப்போம்; தேசியப் பாதுகாப்புக்காகவும், எதிர்பாராத பஞ்சத்தினின்று பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும் போதுமான தானியங்களைச் சேகரித்து வைத்துக் கொள்வது அவசியமென்று நாங்கள் கருதுகிறோம்.

29. ஏற்றுமதி செய்வதற்கு லாயக்கான விவசாயப் பொருள்கள், பழங்கள் முதலியவற்றை உற்பத்தி செய்வதைக் குறைத்துக் கொண்டு, நமது கைத் தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை உற்பத்தி செய்வது அவசியமென்று நாங்கள் வற்புறுத்துவோம். இந்த நோக்கத்துடன் விதை விதைத்தல், செடி நடுதல், மரம் வளர்த்தல் முதலியவற்றை நாங்கள் ஆதரிப்போம்.

30. விவசாயத்தை அபிவிருத்தி செய்வது, நமது முக்கிய வேலைகளில் ஒன்றென நாங்கள் கருதுகிறோம்.

31. விளை பொருள்களை உற்பத்தி செய்வோருக்கு அநுகூலமாக செடி, கொடிகளுக்கும், விளைபொருள்களுக்கும் ஏற்படுகிற பலவித நோய்களுக்குப் பரிகாரந்தேட முயல்வோம்.

32 உலோகப் பொருள்கள், நீரினின்று உண்டாகிற சக்திகள், காடுகள் இவற்றை அதிகமாக உபயோகிக்க நாங்கள் ஏற்பாடு செய்வோம். தேசம் முழுவதையும் மின்சார மயமாக்குவது நமது தந்தையர் நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் அவசியமானதென்று நாங்கள் கருதுகிறோம். மேற்கூறிய அம்சங்களில் நமது நாட்டில் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன, இவற்றை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாமென்பதைப் பற்றி நாங்கள் ஆராய்ச்சி செய்வோம். இந்தமாதிரியான முயற்சிகளுக்குப் போதிய ஆதரவு கொடுக்கும் பொருட்டு ஒரு நிதி ஸ்தாபனம் ஏற்படுத்த முயற்சி செய்வோம்.

33. கால் நடைகளை அபிவிருத்தி செய்யுந் தொழிலை நாங்கள் அதிகமாக ஆதரித்து ஊக்கப் படுத்துவோம்.

34. ஒவ்வொரு தருக்கிய விவசாயிக்கும் போதுமான அளவு நிலம் இருக்கவேண்டுமென்று பார்ப்பது நமது கட்சியின் நோக்கங்களுள் ஒன்று. நிலமில்லாதவர்களுக்குத் தேவையான நிலங்களைப் பகிர்ந்து கொடுப்பதற்கு விசேஷ சட்டங்களை நிறைவேற்றி வைப்போம்.

35. நமது தேசம் இருக்கிற பூகோள அமைப்பு, நமது நாகரிகத்தின் அளவு, நமது ஜன சமுதாயத்தின் கடமை இவைகளை முன்னிட்டும் விளையாட்டு, தேகாரோக்கியம், தேசப் பாதுகாப்பு, பொருளாதார சௌகரியம் இவைகளை உத்தேசித்தும், ஜனங்களுக்குக் கடல் வாழ்வில் ஒரு ருசியைப் புகுத்துவோம். நமது தேசிய, அரசாங்க விஷயங்களில், இந்த அமிசத்தை அதிகமாக அமுலுக்குக் கொண்டு வருவோம்.

வரவு செலவு

36. உண்மையாகவும், தொடர்ந்தும் மிச்சம் இருக்கக் கூடிய மாதிரியாகவே அரசாங்க வரவு செலவுத்திட்டம் அமைக்கப்பட வேண்டு மென்பது நமது கட்சிக் கொள்கைகளில் ஒன்று. பொக்கிஷத்தி லிருந்து கொடுபட வேண்டியவைகளை ஒழுங்காகக் கொடுக்க வேண்டுவதும், ஜனங்களிடத்திலிருந்து வசூலிக்க வேண்டிய வரிகளை ஒழுங்காக வசூலிப்பதும் முக்கியமானதென்று நாங்கள் கருதுகிறோம்.

37. மறைமுகமானதும், வருமானத்தை உத்தேசித்ததுமான முறையில் வரிகளை விதிக்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். நமது சுங்க வரிகளைச் சீர்திருத்தி, தேசத்தின் கொடுக்கும் சக்தியை உத்தேசித்து இவைகளை விதிக்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.

38. தேசத்தின் பொருளாதார நன்மையை உத்தேசித்து நமது சுங்க வரிகளைச் சீர்திருத்தி அமைக்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.

39. கள்ள வியாபாரம் செய்வதைத்தடுப்பது, துருக்கிய அரசாங்கப் பொக்கிஷத்திற்கு மிகவும் அவசியமானதென்று நாங்கள் கருதுகிறோம்.

40. அரசாங்கமே, சில பொருள்களை உரிமைப்படுத்திக் கொண்டு விற்பனை செய்வதும், விநியோகிப்பதும் நல்லதென்று நமது கட்சி கருதுகிறது.

தேசீயக் கல்வி முறை

41. தேசீயக் கல்வி முறையைப்பற்றி நமது கருத்துக்கள் வருமாறு:—

(அ) நமது கல்வித் திட்டத்தின் அடிப்படையான கொள்கை, அறியாமையை ஒழிப்பதாகும். ஒவ்வொரு நாளும், கல்வி ஞானம் பெறும் சிறுவர்களை அதிகப்படுத்த வேண்டு மென்பதே நமது கொள்கை.

(ஆ) கல்வி முறையின் ஒவ்வொருபடியிலும் பிள்ளைகளுக்குக் குடியரசுத தத்துவத்தையும், தேசீய உணர்ச்சி முதலியவைகளையும் புகுத்த வேண்டும்.

துருக்கிய ஜன சமுதாயத்தையும், துருக்கிய பார்லிமெண்டையும், துருக்கிய ராஜ்யத்தையும் நேசிக்கவும், பிறரை நேசிக்கச் செய்யவும் வேண்டுவது ஒவ்வோர் இளைருனுடைய கடமையாகப் புகட்ட வேண்டும்.

(இ) இளைஞர்களின் அறிவு வளர்ச்சியைப் போல் தேக வளர்ச்சிக்கும் நாம் முக்கியத்துவம் கொடுப்போம். நமது புராதன தேசீய சரித்திரமானது, நமக்கு ஊக்கந்தரும்படியாக என்னென்ன காரியங்களைப் போதித்திருக்கிறதோ அதன்படி இளைஞர்களின் ஒழுக்க நிலையை உயர்த்த முற்படுவோம்.

(ஈ) உலக வாழ்வில் வெற்றி பெறக்கூடிய மாதிரியாகவே கல்வி முறை இருக்கவேண்டும்.

(உ) கல்வியானது, உயர்ந்ததாகவும், மூட நம்பிக்கைகள், அந்நியர்களின் எண்ணங்கள் இவைகள் கலவாமலும் இருக்க வேண்டும்.

(ஊ) இளைஞர்கள், புதிய முயற்சிகளில் ஈடுபடும் விஷயத்தில் தடைகள் உண்டாகாதபடி கல்வி முறை இருக்க வேண்டும். ஆனால் அவர்களுக்குக் கண்டிப்பும், ஒழுங்கும் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். பிற்கால வாழ்க்கையில் அவர்கள் கெட்டுப்போகாதபடி அவர்களுக்கு ஒழுக்கத்தின் உயர்வைப்பற்றிக் கற்பிக்க வேண்டும்.

(எ) நமது பிரஜைகள் ஒவ்வொருவரும் நமது தேசீய சரித்திரத்தை அறிந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும். துருக்கியனுடைய தேசீய வாழ்வுக்கும் அவனுடைய தனித்த சக்தியை வெளிப்படுத்திக் கொள்வதற்கும், அவனுடைய தன்னம்பிக்கைஉணர்ச்சி வளர்ச்சி பெறுவதற்கும் இந்தச் சரித்திர ஞானம் அவனுக்குப் புகட்டப்பட வேண்டியது அவசியமாகிறது.

(ஏ) துருக்கிய பாஷையை தேசீய பாஷையாகவும், ஒழுங்கான பாஷையாகவும் ஆக்க

எல்லாப் பிரயத்தனங்களையும் செய்யவேண்டுமென்பது எங்கள் நோக்கம்.

42. பள்ளிக்கூடங்கள் சம்பந்தமாக எங்கள் எண்ணங்கள் வருமாறு:—

(அ) ஆரம்பக்கல்வியானது ஐந்து வருஷ காலம் போதிக்கப்படவேண்டும். ஒரு திட்டம் போட்டுக்கொண்டு, அதன்படி ஒவ்வோர் கிராமத்திலும், அல்லது பல கிராமங்கள் சேர்ந்த ஒரு தொகுதியிலும், அல்லது நகரங்களிலும் இத்தனை பள்ளிக்கூடங்கள் இருக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்ய வேண்டும். கிராமப் பள்ளிக்கூடங்களில் சுகாதாரம், வாழ்க்கை நிலை, விவசாயம், கைத்தொழில் முதலியவைகளும், அந்தந்த ஸ்தல சம்பந்தமான விஷயங்களும் போதிக்கப் பட வேண்டும்.

(ஆ) அநுபவ வாழ்க்கையில் என்னென்ன தேவையோ அவைகளைப் போதிக்கக் கூடிய மாதிரியாக பாட திட்டங்களை வகுத்து கிராமப் பள்ளிக்கூடங்களில் போதிக்க வேண்டும். இந்த மாதிரியான பள்ளிக்கூடங்களை அதிகப்படுத்த வேண்டும். இந்தப் பள்ளிக் கூடங்கள், உயர்தரப் பள்ளிக்கூடங்களினின்று வேறுபட்டனவா யிருக்க வேண்டும். கிராமப்பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகளின் வயதை உயர்த்தி, இவற்றில் படிக்கும் பிள்ளைகள் தொடர்ந்தாற்போல் உயர்தரக் கல்வியைப் பாராட்டிப் படிக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், ராணுவப் பயிற்சி மாதிரி இந்த கல்விப் பயிற்சியையும் அரசாங்கமே கட்டுப்படுத்தி நடத்த வேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம்.

(இ) தொழில் முறை, வியாபார முறை முதலிய வற்றைக் கற்றுக் கொடுக்கும் பள்ளிக்கூடங்களை தேவைக்குத்தகுந்தபடி அபிவிருத்தி செய்ய வேண்டும். இந்தப் பள்ளிக்கூடங்களில் புதிய பாடங்களையும் கற்பிக்க வேண்டும்.

(ஈ) தேசம் முழுவதும் மத்தியதரக் கல்வி பரவ வேண்டுமென்ற நோக்கத்துடன் எல்லா ஜில்லா தலைமை ஸ்தானங்களிலும் மத்தியதரப் பாடசாலைகளை ஏற்படுத்த வேண்டும். பிள்ளைகளுக்குச் சாப்பாட்டு வசதிகளும் இந்தப் பள்ளிக்கூடங்களில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

(உ) ஏற்கனவே இருக்கப்பட்ட பள்ளிக்கூடங்களையும் சீர் படுத்தி அவை உயர்தரப் பள்ளிக்கூடங்களுக்கு ஏற்ற சாதனங்களை யமையச் செய்ய வேண்டும்.

(ஊ) சர்வ கலாசாலைகளையும் உயர்தரப் பள்ளிக்கூடங்களையும் சீர் படுத்தி அவற்றினின்று என்ன பலனை எதிர் பார்க்கிறோமோ அவற்றை அவை கொடுக்குமாறு செய்ய வேண்டும். சர்வ கலாசாலைகளின் எண்ணிக்கையையும் நாங்கள் அதிகப் படுத்த உத்தேசித்திருக்கிறோம்.

43. குறைந்த ஜனத்தொகையுடைய கிராமங்களில் ஏற்படுத்தப் பெறும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குச் சாப்பாட்டு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கவும், அவைகளைத் தகுந்த முறையில் பரிபாலனம் செய்யவும் நாங்கள் விரும்புகிறோம்.

44. நமது புரட்சியின் உன்னத நோக்கத்திற் கிசைய பொதுவாகக் கலைகளும் சிறப்பாகச் சங்கீதமும் கற்பிக்கக் கூடிய பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த வேண்டும்.

45. நமது பொருட் காட்சிசாலைகளின் முக்யத்துவத்தை அதிகப்படுத்தும் பொருட்டு சரித்திர சம்பந்தமான பொருள்களைச் சேகரிக்க வேண்டுமென்பதை வற்புறுத்துவோம். இதற்காக எங்கு புராதனச் சின்னங்கள் அகப்படுகின்றன வென்பதைப் பார்த்துத் தோண்டி யெடுக்கவும், அகப்பட்ட சின்னங்களைப் பாதுகாக்கவும் ஏற்பாடு செய்வோம்.

46. புத்தகங்கள், பிரசுரங்கள், புத்தக சாலைகள் முதலியன நமது கட்சிக்கு முக்கிய மானவைகள். நகரங்களிலும், கிராமங்களிலும், புத்தக சாலைகளை அதிகப் படுத்துவது முக்கியமென்று நாங்கள் கருதுகிறோம்.

47. நமது தற்போதையவும், எதிர்காலத்தினுடையவும் தேவைகளை உத்தேசித்துக் கல்வித் திட்டத்தை வகுத்துக்கொள்வோம். உத்தியோகங்கள், தொழில்கள் ஆகிய இவைகளின் தேவைகளுக்குத்தகுந்தாற்போல் கல்வித் திட்டமானது அமைக்கப்படும்.

48. பள்ளிக்கூடங்களில் இலக்கியக்கல்வி போதிக்கப் படுவதோடு, பாமர ஜனங்களுக்கு அளிக்கப்படும் கல்வியானது பலதினுசுகளாக மாறி மாறி இராமல் மேற்படிப்பைத் தொடர்ந்துபடிப்பதற்கேற்றாற் போல் இருக்குமாறு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்.

இந்த நோக்கத்திற்காக ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கும் 'ஜன பவனங்'களை அரசாங்கம் ஆதரிக்குமாறு செய்வோம்.

49. புரட்சியின் பொருட் காட்சிசாலையொன்றை ஜனக்கட்சியானது, திறந்து வைக்கும். ஜனங்களுக்குப் புரட்சிகரமான எண்ணங்களைப் புகுத்துவது அவசிய மென்று நாங்கள் கருதுகிறோம்.

50. துருக்கிய இளைஞர்களுக் கென்று ஒரு ஸ்தாபனம் காணப்பட வேண்டும். இவர்களுடைய வாழ்க்கை ஒழுங்குபடுவதற்கும், நமது தந்தையர் நாட்டையும், புரட்சியையும் அவர்கள் நேசிப்பதற்கும் இந்த ஸ்தாபனம் அத்தியாவசியமான தென்று நாங்கள் கருதுகிறோம். அவர்களுக்குத் தன்னம்பிக்கை ஏற்படவும், அவர்கள் சந்தோஷகரமான வாழ்க்கையை நடத்தவும் அநுகூலமாயிருக்கும்படி அவர்களுக்குத் தேகப் பயிற்சி கொடுக்கப்பெற வேண்டும். நமது தந்தையர் நாட்டையும் அதன் சுதந்திரத்தையும் காப்பாற்றுவதுதான் ஓர் இளைஞனுடைய கடமை என்ற எண்ணமானது அவர்களிடையே வளருமாறு செய்ய வேண்டும். இந்தக் கடமையைச் செய்வதற்காக எந்தவிதமான தியாகங்களையும் செய்ய அவர்கள் சித்தமாயிருக்குமாறு வற்புறுத்தப்பட வேண்டும்.

கல்வியின் சிறந்த லட்சியமானது கை கூடும் பொருட்டும், கல்வி பயின்றோர், வாழ்க்கையில் வெற்றி பெறும் பொருட்டும், இளைஞர்கள், தாங்களாகவே சிந்தனை செய்யவும், ஒரு காரியத்தை ஆரம்பித்துச் செய்யவும், ஒரு முடிவுக்கு வரவும் தேவையான சக்திகளை அவர்களிடத்தில் உண்டு பண்ண வேண்டும். எந்தவிதமான கஷ்ட காரியங்களையும் செய்யக்கூடிய மாதிரி அவர்களை கட்டுப்பாடான ஓர் ஒழுங்குக்குள் கொண்டு வர வேண்டும்.

இந்த நோக்கங்களுக் கிணங்க, துருக்கியெங்கணும் விளையாட்டுக் கழகங்களை ஆங்காங்கு ஏற்படுத்த வேண்டும். மேலே கூறப்பட்ட இளைஞர் ஸ்தாபனமானது, தேசத்திலுள்ள எல்லாத் தொழிற் ஸ்தாபனங்களுடனும், கல்வி ஸ்தாபனங்களுடனும் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். மேற் கூறப்பட்ட இலக்கியக் கல்வி, தேகப்பயிற்சி முதலிய அனைத்துமே ஒரு மாதிரிப்பட்டனவாயிருக்க வேண்டு மென்று நாங்கள் விரும்புகிறோம்,

பள்ளிக்கூடங்கள், அரசாங்க ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள் முதலியவற்றில் வேலை செய்வோர் அவர்கள் வயதுக்குத் தகுந்தவாறு தேகப்பயிற்சி பெற்றுக் கொள்ள வேண்டு மென்று நாங்கள் கருதுகிறோம். இதற்கான விளையாட்டு மைதானங்கள் முதலியனவும் ஏற்பாடு செய்ய வேண்டும். நகர சபைகளும், ஸ்தல ஸ்தாபனங்களும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

51. தேசத்தின் அரசியல் கல்வி அபிவிருத்திக்கும், இலக்கியக் கல்வி அபிவிருத்திக்கும், ரேடியோ முக்கியமான சாதன மென்று ஜனக் கட்சி கருதுகிறது. ஆங்காங்கு ஒலி பரப்பும் ஸ்தாபனங்களை அமைக்கச் செய்வோம். அப்படியே மலிவான ரேடியோக்களை ஜனங்கள் வாங்குவதற்கும் ஏற்பாடு செய்வோம். இப்படியே சினிமாவின் உபயோகத்தையும் அதிகப் படுத்துவோம்.

52. தேசீய நாடகக் கொட்டகை ஒன்றை ஏற்படுத்துவது எங்கள் முக்கிய நோக்கம்.

53. துருக்கிய சமுதாய வாழ்வுக்குக் குடும்பத்தைப் புனிதப்படுத்தி வைப்பது அவசியமென்று நாங்கள் கருதுகிறோம்.

54. துருக்கியின் ஜனத்தொகையை அதிகரிக்கச் செய்வதும், பலமும் தேகாரோக்கியமும் நிறைந்த எதிர் கால சந்ததியை உண்டாக்குவதும் நமது கட்சியின் முக்கிய வேலைகளாகும்.

55. நமது கிராமங்கள், நகரங்கள் முதலியவற்றில் சுகாதார அபிவிருத்தி ஏற்படுத்தவும் ஜனங்களுக்குக் குடி தண்ணீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவும் நாங்கள் முயற்சி செய்வோம். கிராமங்களில் வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்போம். கிராம வாசிகளின் சுகாதார அறிவு வளர்ச்சி யடைவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வோம்.

56. சிசுப் பாதுகாப்பிலும் தாய்மையின் உயர்வைக் காப்பாற்றுவதிலும் நாங்கள் முக்கிய கவனஞ் செலுத்துவோம். இதற்காக நாங்கள் கீழ்க்கண்டபடி வேலைசெய்வோம் :—

(அ) ஆங்காங்கு பிரசவ ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்துதல். சுகப் பிரசவத்திற்கு வேண்டிய இலவச உதவிகளைச் செய்தல். குழந்தைப்

பாதுகாப்பின் அவசியத்தைப் பற்றி பிரசாரஞ் செய்தல்.

(ஆ) குழந்தை வைத்தியசாலைகள், அநாதை விடுதிகள் முதலியவற்றை அதிகமாக ஏற்படுத்துதல்.

(இ) தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் வேண்டிய பாதுகாப்புகளை அளித்தல்.

57. அநாதைகள், நிர்க்கதியான வயோதிகர்கள், அங்கஹீனர்கள் முதலியோர் அரசாங்கத்தின் பாதுகாப்பைப் பெற உரியவராகிறார்கள்.

58. தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் தேவையான சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல். தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த ஸ்திரீகள், உழைத்துச் சம்பாதிக்க வேண்டிய அவசியத்திற்குட்படுவார்களானால் அவர்களுக்கென்று சிறு சிறு தொழிற்சாலைகளை ஏற்படுத்திக்கொடுப்போம்.

59. பொதுஜன சுகாதார விஷயத்தில் ஜனக்கட்சி முக்கிய கவனஞ் செலுத்தும். இது சம்பந்தமான வேலைகளை விரிவுபடுத்திச் செய்ய ஏற்பாடுகள் அவ்வப்பொழுது செய்யப்படும்.

60. மலேரியா முதலிய தொத்து நோய்களை அடியோடு தொலைக்க எல்லா முயற்சிகளையும் செய்வோம்.

உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்கள்

61. அரசாங்க அதிகாரம் நிலைத்து வேலை செய்யக் கூடிய மார்க்கங்கள் எல்லா முயற்சிகளையும் கையாளுவோம். இந்த அதிகாரமானது எந்தவிதமான செல்வாக்குக்கும் உட்படாமலும், புரட்சியினால் ஏற்பட்ட பயன்களைச் சிதற விடாமல் பாதுகாப்பதாயும், பிரஜைக்கு எல்லா விதமான பாதுகாப்பையும் கொடுக்கக்கூடியதாயும், தேசிய வாழ்வில் ஒருவித ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் புகுத்துவதாயும் இருக்குமாறு செய்வோம்.

62. திருக்கியின் ஜனத்தொகையை அதிகப்படுத்தும் பொருட்டு, திருக்கிக்கு வெளியே வசிக்கும் எல்லா திருக்கியர்களுக்கும் தேவையான வசதிகளையும், உதவிகளையும் செய்து கொடுப்போம்.

63. பொது ஜனங்களின் தேவைகளையும், தேசத்தின் நன்மையையும் உத்தேசித்து, நீதி பரிபாலன சம்பந்தமான சட்டத்தை எல்லா வகையிலும் சீர்திருத்தி அமைப்போம்.

நீதிவழங்கும் முறையை துரிதப்படுத்துவோம்; சுலபமாக்குவோம்.

கோர்ட்டாரின் தீர்ப்புகள் உடனுக்குடன் அமுலுக்குக் கொண்டுவரக்கூடியதான எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்வோம்.

விசாரணையிலிருக்கப்பட்டவர்களையும், விசாரித்துத் தண்டிக்கப்பட்டவர்களையும் பிரித்தே வைப்போம். சிறைச்சாலைகளைச் சீர்திருத்த சாலைகளாக மாற்றியமைப்போம்.

64. நமது தேசத்திலும் உலகமெங்கணும் சமாதானம் நிலவ வேண்டுமென்பது நமது கொள்கை.

65. ஜாக்கிரதையுடனும், பொறுப்புடனும், தேசத்தின் நன்மையை உத்தேசித்தும் வேலை செய்கிற அரசாங்க ஊழியர்கள், சௌகரியமாகவும் அமைதியாகவும் வாழ உரிமையுடையவர்கள்.

66. வகுப்புப் பிரிவினையையோ வகுப்புத் துவேஷத்தையோ உண்டாக்கக் கூடிய நோக்கத்துடன் எந்தவிதமான ஸ்தாபனத்தையும் திருக்கியில் யாரும் ஆரம்பிக்கக்கூடாது. அரசாங்க உத்தியோகஸ்தர்களோ, அல்லது நகர சபை உத்தியோகஸ்தர்களோ, தங்கள் உத்தியோகத்தின் செல்வாக்கை உபயோகித்து எந்தவிதமான சங்கங்களையும் ஸ்தாபிக்கக் கூடாது.

67. மாணாக்கர் சங்கங்கள் அரசியலில் கலந்து கொள்ளக்கூடாது. அல்லது தங்கள் பள்ளிக்கூட நிருவாகத்திற்கு விரோதமாகச் செய்யப்படும் கிளர்ச்சிகளிலும் கலந்து கொள்ளக்கூடாது.

68. திருக்கியத் தொழிலாளர் நலனுக்கென்று சங்கங்களை ஸ்தாபிப்போம். பலபட்ட தொழில்களில் ஈடுபட்டிருப்போரையும் ஒன்று சேர்க்கக் கூடிய சங்கங்களையும் ஸ்தாபிப்போம்.

69. சர்வதேசக் கொள்கையோடு சங்கங்கள் ஸ்தாபிக்கப்படக்கூடாது. திருக்கிக்கு

வெளியே தலைமைக் காரியாலயத்தைக் கொண்ட எந்த ஸ்தாபனத்தையும் அருக்கியில் ஆரம்பிக்கக்கூடாது. புதிய சங்கங்கள் ஆரம்பிப்பதாயிருந்தாலும், ஏற்கனவேயுள்ள சங்கங்களுக்குக் கிளைகள் ஏற்படுத்துவதாயிருந்தாலும், மந்திரிச் சபையின் முன்னநுமதி தேவை.

70. தேசியத் துருக்கியின் நல்வாழ்வுக்கு சுயேச்சையாகத் தொழில் நடத்தக் கூடியவர்களின் சேவையை ஜனக்கட்சி பாராட்டுகிறது. இந்தத் தொழில்களைப் பாதுகாப்பதும், இவர்களுடைய திறமையை உபயோகித்துக் கொள்வதும் கட்சியின் நோக்கங்களாகும்.

71. நவீன துருக்கியின் நல்வாழ்வில் கிராமம் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. குடியானவர்களின் வாழ்க்கை சுகாதாரமாகவும், சந்தோஷமாகவும் அவர்கள் புரட்சிக் கருத்துக்களை அறிந்து கொள்வதிலும், பொருளாதார வாழ்வில் அவர்கள் முக்கியத்துவம் பெறுவதிலும் கட்சியின் முக்கியத்துவம் இருக்கிறதென்று நாங்கள் கருதுகிறோம்.

நாட்டுப் பாதுகாப்பு

72. நமது தந்தையர் நாட்டின் பாதுகாப்பு, தேசியக் கடமைகளுள் மிகவும் முக்கியமானதென்று நாங்கள் கருதுகிறோம். உயிரோடு கூடியனவும் உயிரில்லாதனவுமான எல்லாச் சக்திகளையும் தேவையானால் இந்தக் கடமைக்காக உபயோகிப்போம். எல்லாப் பிரஜைகளும் ராணுவ சேவை செய்ய வேண்டுமென்ற விதியை ஜனக்கட்சி ஏற்றுக் கொள்கிறது. துருக்கிய ராணுவமானது, அரசியலுக்குப் புறம்பானது. ராணுவத்திற்கு எல்லா நவீன சாதனங்களையும் கொடுத்து, அது தன் கடமையைச் செய்யுமாறு செய்ய வேண்டுவது ஜனக்கட்சியின் நோக்கமாகும்.

73 நமது அரசாங்க அமைப்பின் அசைக்க முடியாத அஸ்திவாரமாயும், நமது தேசீய லட்சியத்தைப் பாதுகாப்பதாயும் அமைந்துள்ள ராணுவத்திற்கு எப்பொழுதுமே நாம் மரியாதை செலுத்த வேண்டும்.

நான்கு வகை மனிதர்

1. தனக்கொன்றும் தெரியாதென்று எவனொருவன் தெரிந்து கொள்ளாமலிருக்கிறானோ அவன் ஒரு முட்டாள்—அவனோடு சகவாசமே செய்யாதே.

2. தனக்கொன்றும் தெரியா தென்று எவனொருவன் தெரிந்து கொண்டிருக்கிறானோ அவன ஒரு குழந்தை—அவனை நம்பு.

3. எவனொருவன் எல்லாம் அறிந்திருந்தும் தனக்கொன்றும் தெரியாதென்று நினைத்துக்கொண்டிருக்கிறானோ அவன தூங்கிக் கொண்டிருக்கிறன்—அவனை எழுப்பு.

4. எவனொருவன் எல்லாம் அறிந்து, தனக்கு எல்லாம் தெரியும் என்ற தன்னம்பிக்கையோடு இருக்கிறானோ அவன் அறிஞன்—அவனைப் பின் பற்று.

—அராபிய வாசகம்



ஜாவானிய நடன மாது



1939

எப்ரல்

27 இன்று மகாத்மா காந்தி, கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார்.

28 இன்று சோட்பூர் காதி பிரதிஷ்டானத்தில் காந்தி—போஸ் சம்பாஷணை நடை பெற்றது.

இன்று ஹிட்லர் ஜெர்மன் பார்லிமெண்டில், பிரசிடெண்ட் ரூஸ் வெல்டின் சமாதானச் செய்திக்குப் பதில் கூறு முகத்தான் நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

30 இன்று கூடிய அ. இ. கா. கமிட்டி கூட்டத்தில், சுபாஷ் சந்திரபோஸ், தமது ராஜீநாமாவை வாபீஸ் வாங்கிக் கொள்ள வேண்டு மென்று பண்டித நேரு கொணர்ந்த தீர்மானம் வற்புறுத்தப் படவில்லை. போஸுக்குப் பதில்பாபு ராஜேந்திரபிரசாத் காங்கிரஸ் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டார்.

மே.

1 அ, இ. கா, கூட்டம் இன்றோடு முடிவு பெற்றது. புதிய காங்கிரஸ் தலைவரான பாபு ராஜேந்திர பிரசாத் கீழ்க்கண்டவர்களடங்கிய காரியக் கமிட்டியை நியமித்தார்;

1. மௌலானா அபுலகலாம் அஸாத்
2. ஸ்ரீமதி சரோஜனி தேவி
3. சர்தார் படேல்
4. சேத் யமுனாலால் பஜாஜ்
5. ஜயராம் தாஸ் தௌலத்ராம்
6. கான் அப்துல் கப்பார் கான்
7. ஆச்சாரியா கிருபாலினி
8. டாக்டர் பட்டாபி சீதாராமய்யா
9. புலாபாய் தேசாய்
10. சங்கர ராவ் தேவ்
11. ஹரிகிருஷ்ண மேத்தாப்
12. டாக்டர் பிதன் சந்திரராய்
13. டாக்டர் பிரபுல்ல சந்திரகோஷ்.

சுபாஷ் சந்திர போஸ் முன்னணிக் கட்சி. என்ற பெயருடன் ஒரு புதிய கட்சியை ஆரம்பிப்பார் என்று சொல்லப் பட்டது,

2 ஜிப்ரால்டர் துறை முகத்தைத் தாண்டிக் கொண்டு இரண்டு ஜெர்மானிய யுத்தக் கப்பல்கள் மேற்குப் புறமாகச் சென்றன.

பாலஸ்தீனத்திலுள்ள ஹைபா நகரத்தில் பெரியகுழப்பம் ஏற்பட்டது. போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

3 சுபாஷ் சந்திரபோஸ் ராஜீ நாமா செய்ததைப் பாராட்டி அவருக்கு ரவீந்திரநாத் டாகூர் ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார்.

பரஸ் பரம் ஒருவர் மீது ஒருவர் யுத்தம் தொடுப்ப தில்லை யென்று சோவியத் ருஷ்யா வுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வதைப் பற்றி பிரிட்டிஷ் அரசாங்கத்தார் யோசித்துக் கொண்டிருக்கின்றனர்.

அல்பேனியா மன்னர் தம்பதிகள், பரிவாரங்களுடன் துருக்கியின் தலை நகரான இஸ்தாம்பூலில் தஞ்சம் புகுந்தார்கள்.

போலந்தும் ஜெர்மனியும் சந்திக்கிற எல்லைப்புறத்தில் இருநாட்டுத் துருப்புகளும் சேகரிக்கப் பட்டு வருகின்றன

ஜெர்மனியின் அந்நிய நாட்டு மந்திரியும் இத்தலியின் அந்நிய நாட்டு மந்திரியும், டான்ஸிக் பிரச்னையைப் பற்றிப் பேச ஒன்று சந்திக்க ஏற்பாடாயிருக்கிறது.

அகில இந்திய சேவா சங்க மகாநாடு இன்று பிருந்தாவனத்தில் மஹாத்மா காந்தி தலைமையில் கூடியது.

4 ஜெர்மனியும் லாட்வியா என்ற நாடும் பரஸ்பரம் ஒத்தாசை செய்து கொள்வதாக ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றன.

5 இன்று போலந்து பார்லிமெண்டில், அந்த நாட்டு அந்நிய நாட்டு மந்திரியான தளபதி பெக், ஹிட்லரின் 28-4-39 பேச்சுக்குப் பதில் கூறினார்.

ராஜகோட்டை பிரச்னை சம்பந்தமாக ஒரு சமரஸம் ஏற்படாவிட்டால், தாம் ராஜகோட்டைக்கு வரப் போவதாக மஹாத்மா காந்தி தர்பார் வீரவல்லாவுக்கு ஒரு தந்தி கொடுத்திருக்கிறார்.

ஸ்லோவேகியா அரசாங்கத்தை பிரிட்டன் அங்கீகரித்துக் கொண்டு விட்டது.

6 இன்று பிரிட்டிஷ் மன்னர் தம்பதிகள், கானடாவுக்குப் பிரயாணமானார்கள்.

ருஷ்யாவின் அந்நிய நாட்டு மந்திரியான லிட்வினேப் ராஜீநாமா செய்து விட்டார். அவருடைய ஸ்தானத்தில் மோலோடோவ் என்பார் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இத்தலி, அல்பேனியாவை சுவாதீனப் படுத்திக் கொண்டதற்காக, இத்தலிக்கு 2800 லட்சம் லிராக்கள் செலவாயிற்று.

7 இன்று பம்பாயில் சினிமா மகா நாடு கூடியது.

ஐக்கிய மாகாண மந்திரிகள் ஒருவரின் காரியதரிசிகளான அஜீத் பிரசாத் ஜெயின் என்பவரும் கோவிந்த சாஹே என்பவரும் ருஷ்யாவுக்குப் போக வேண்டுமென்று விரும்பினர். ஆனால் இவர்களுக்கு இந்தியா அரசாங்கத்தார் அநுமதி கொடுக்க மறுத்து விட்டனர்.

சாம்பரான் வாசிகள், மஹாத்மா காந்திக்கு இருபதினாயிரம் ரூபாய் கொண்ட ஒரு பண முடிப்பு அளித்தனர்.

8 இன்று விண்ட்ஸர் கோமகன், ரேடியோ மூலம் ஒரு பிரசங்கம் செய்தார். உலகத்தில் சமாதானம் நிலவ வேண்டியதன் அவசியத்தை இதில் வற்புறுத்தினார்.

தாதா பாய் நௌரோஜியின் உருவப்படமொன்று இன்று காமன்ஸ் சபையில் தொங்கவிடப்பட ஏற்பாடாயிருக்கிறது.

9 இன்று காந்தியடிகளும் பண்டித மாளவியாவும் காசியில் சந்தித்துப் பேசினார்கள்.

லட்சுமணபுரியில் ஷியாக்களுக்கும் சுன்னிகளுக்கும் ஒரு பெரிய சச்சரவு ஏற்பட்டது.

10 புதிய காங்கிரஸ் பார்லிமெண்டரி சப் கமிட்டி நியமிக்கப்படும் வரையில் பழைய பார்லிமெண்டரி சப் கமிட்டியே வேலை செய்யும் என்று பாபு ராஜேந்திர பிரசாத் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

சீனப் படைகளின் தலைமை ஸ்தானமாயிருந்த சுங்கிபாங் என்ற ஊரைக் காலி செய்து விடுவதென்று சியாங்-கை-ஷேக் உத்திரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

11 அல்பேனியாவில் பலத்த ராணுவ முஸ்தீப்புகளை இத்தாலியர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

பிரிட்டனுக்கும் துருக்கிக்கும் சிநேக ஒப்பந்தம் ஏற்பட்டது.

12 புதிய இரண்டணா நாணயம் ஒன்று இனி செலாவணியில் கொண்டு வரப்படுமென்று இந்தியா கெஜட் கூறுகிறது.

13 மஹாத்மா காந்திக்கும் ஸ்ரீ போஸுக்கும் நடைபெற்ற கடிதப் போக்குவரத்துகள் இன்று வெளியிடப்பட்டிருக்கின்றன.

டான்ஸிக் பிரதேசத்தில் நாஜிகள் கலகஞ் செய்து சில சேதத்தை உண்டு பண்ணினார்கள்.

ருமேனியாவுக்கும் பல்கேரியாவுக்கும் எல்லைப் புறத்தகராறு சம்பந்தமாக மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கிறது.

சீனாவின் தென்மேற்குப் பிரதேசங்களில் அபினி விளைவிக்கக் கூடாதென்று சியாங்கை-ஷேக் உத்திரவிட்டிருக்கிறார்.

14 இன்று டூரின் நகரத்தில் முஸோலினி, மற்ற வல்லரசுகளைப் பயமுறுத்துகிற மாதிரி பேசியிருக்கிறார்.

இத்தலியும் ஜெர்மனியும் இன்று புதிய சிநேக ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டிருக்கின்றன.

இத்தலியும், ஜெர்மனியும் சேர்ந்து கொண்டு, தங்களுக்குக் குடியேற்ற நாடுகள் தேவை யென்று கேட்க மேற்கு ஐரோப்பிய வல்லரசுகளைக் கேட்கத் தீர்மானித்திருக்கின்றன.

16 காங்கிரஸில் காணப்படும் ஊழல்களைத் தீர்க்கும் பொருட்டு, மாகாணக் கமிட்டிகள் இன்ஸ்பெக்டர்களை நியமிக்க வேண்டுமென்று அ. இ. கா. பொதுக் காரியதரிசி ஒரு சுற்றறிக்கை விடுத்திருக்கிறார்.

அல்பேனியாவை இத்தலி கேவலமாக நடத்தியதைக் குறித்து, அல்பேனியாவில் மாஜி மன்னர், சர்வதேச சங்கத்திற்கு விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்.

17 பாலஸ்தீனத்தில், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மேற் பார்வையில் ஒரு நிருவாக முறை ஏற்படுத்தப்பெறு மென்றும், இது பத்து வருஷ காலம் அமுலில் இருக்கு மென்றும், பின்னர் யூதர்களும் அராபியர்களும் சேர்ந்த ஓர் அரசாங்கம் அமைக்க முயற்சி செய்யபபடும் என்றும் பிரிட்டிஷ் அரசாங்க அறிக்கை யொன்று கூறுகிறது.

ராஜகோட்டை சமரஸமாக முடியு மென்றும், இது சம்பந்தமாக சர்தார் பட்டேல் வந்திருக்கிறார் என்றும் ராஜகோட்டை செய்தி ஒன்று கூறுகிறது.

ஸர் மாரிஸ் க்வையர் தீர்ப்பின் விளைவாகத் தமக்கு ஏற்பட்ட சாதகங்களைத் தாம் துறந்து விடுவதாக இன்று மஹாத்மா காந்தி ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

இன்று பிரிட்டிஷ் மன்னர் தம்பதிகள் அமெரிக்காவுள்ள க்யுபெக் நகரம் போய்ச் சேர்ந்தார்கள்.

18 லண்டனுக்கருகாமையிலுள்ள உல்விச் என்ற இடத்தில் சில வெடிகள் எந்தக் காரணத்திலோ வெடித்து அதிக சேதத்தை உண்டு பண்ணியிருக்கிறது.

பாலஸ்தீனச் சீர்திருத்த அறிக்கையை அங்கீகரித்துக் கொள்ள வேண்டுமென்று அராபியர்களுக்குத்தான் சிபார்சு செய்ய முடியாதென்று எகிப்து அரசாங்கத்தார் கூறிவிட்டனர்.

19 தளபதி பிராங்கோ, சுமார் ஒரு லட்சம் துருப்புகளுடன் இன்று மாட்ரிட் நகரத்தில் வெற்றிக் கோலத்துடன் பிரவேசித்தார்.

பர்மாவில் இந்தியர்கள் குடியேறுவதைத் தடுக்க வேண்டுமென்று பர்மா அரசாங்கத்தார் செய்து கொண்டிருக்கும் யோசனையை நிறுத்த வேண்டுமென்று வங்காள, மாகாணச் சட்ட சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிரிட்டிஷ் மன்னர் தம்பதிகள் இன்று ஒட்டாவா நகரம் வந்து சேர்ந்தார்கள்.

பாலஸ்தீன அறிக்கையை எதிர்ப்பதற்கறிகுறியாக பாலஸ்தீனத்திலுள்ள யூத நிலச்சுவான்தார்கள், வரி கொடா இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார்கள்.

20 ஜெர்மனியுடன் ராணுவ ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்வதற்காக இன்று இததலியின் அந்நிய நாட்டு மந்திரியான கவுண்ட் சியானோ பெர்லினுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

மெமல் பிரதேசத்திற்கு அருகாமையில் வேறொரு துறை முகத்தைக் கட்டுவதென்று ஜெர்மனி தீர்மானித்திருக்கிறது.

ராஜகோட்டை தர்பார், சீர்திருதத விசாரணைக் கமிட்டி யொன்றை நியமித்திருப்பதாக அறிவிக்கிறது.

21 கிழக்கு ப்ரஷ்யாவிலுள்ள கால்தாப் என்ற நகரத்திலிருக்கும் சுங்கச் சாவடியை, ஒரு ஜெர்மானியக் கூட்டம் தாக்கி சேதத்தை உண்டு பண்ணி விட்டது.

22 இத்தாலிய-ஜெர்மானிய ராணுவ ஒப்பந்தம் ஒன்றில் இன்று ஹிட்லர் கையெழுத்திட்டார்

தனக்கு உதவி செய்ததற்காக தளபதி பிராங்கோ, ஜெர்மனிக்கு வந்தனஞ் செலுத்தி ஒரு தந்தி கொடுத்திருக்கிறார்.

பாலஸ்தீன அறிக்கையைப் பற்றி இன்று காமன்ஸ் சபையில் வாதம் நடைபெற்றது.

மஞ்சூகோ எல்லைப்புறத்தில், ருஷ்யத் துருப்புகளுககும் மஞ்சூகோ துருப்புகளுக்கும் சிறிது சச்சரவு ஏற்பட்டது.

23 மேரி மகாராணிக்கு மோட்டார் விபத்து ஒன்று ஏற்பட்டு சிறிது காயம் ஏற்பட்டது.

இன்று சர்வதேச சங்க கவுன்சில் கூட்டம் ஜினீவாவில் கூடியது.

24 ஆங்கிலோ—சோவியத் ஒப்ந்தம் விரைவில் நிறைவேறி விடு மென்று காமன்ஸ் சபையில் சேம்பர்லேன் கூறினார்.

இன்று ஏகாதி பத்திய தினம் எங்கும் கொண்டாடப் பட்டது,

'ரணபுரா' என்ற பி. அண்ட் ஓ. கப்பல்' ஹாங் காங் தீவுக் கருகாமையில் சென்று கொண்டிருந்தபோது ஜப்பானியர்களால் நிறுத்தப் பட்டு பரிசோதனை செய்யப் பட்டது.

25 கட்டாய ராணுவச் சேவக மசோதா, மூன்றாவது முறையாக லார்ட்ஸ் சபையில் நிறைவேறியது.

சோவியத் ருஷிய அரசாங்கத்தின் ராணுவச் செலவு மிகவும் அதிகரிக்கப் பட்டிருக்கிற தென்று ஒரு செய்தி கூறுகிறது,

ஐரோப்பிய சமாதானத்திற் காகத்தான் மேற்கு ஐரோப்பிய வல்லரசுகளை அழைத்ததாகவும் ஆனால் அவை மறுத்து விட்டன வென்றும் இன்று ஜெர்மானிய அறிக்கையொன்று கூறுகிறது.

சூஸ்கியாங் நகரத்தை 25 ஜப்பானிய ஆகாய விமானங்கள் சேர்ந்து வெடிகுண்டுகளால் தாக்கின. பலத்த சேதம்.

ஜெர்மனியின் லாப மென்ன ?

ஜெக்கோஸ்லோவேகியா, ஜெர்மனியின் ஆக்கிரமிப்புக் குட்பட்ட பிறகு ஜெர்மனிக்குச் சொந்தமான யுத்தசாதனங்கள் வருமாறு;—

ஆகாய விமானங்கள்	1,582
ஆகாய விமானங்களை எதிர்க்கும் பீரங்கிகள்	501
ராணுவ பீரங்கிகள்	2,175
வெடி குண்டெறியும் விமானங்கள்	785
டாங்கிகள்	469
இயந்திர பீரங்கிகள்	43,876
தானே வெடிக்கும் துப்பாக்கிகள்	114,000
சாதாரண துப்பாக்கிகள்	1,090,000
பீரங்கி ரவைகள்	10 கோடி.
வெடி குண்டுகள்.	30 லட்சம்

இவை தவிர சர்ச் லைட்டுகள், மோட்டார் வாகனங்கள் முதலிய பல சாமான்களும் அகப்பட்டிருக் கின்றன.

கனவோ? நினைவோ?

—"வருணன்"

இன்று இரவு' போட்மெயிலு'க்குப் புறப்படுவதாயிருந்தால் நாளைபிற்பகலே போய்ச் சேர்ந்து விடலாம். இராமேசுவரம் எக்ஸ்பிரஸு'க்குப் புறப்பட்டாலோ ஜான்வாசத்திற்குச் சரியாகச் செல்லமுடியாது. ஆதலின் நானும் அப்பா' அம்மா, குழந்தை கோதண்டராமன் ஆகிய இவர்களும் எப்படியாவது 'போட்மெயிலு'க்குப் புறப்பட வேண்டியதுதான். மற்றவர்கள் மெதுவாக 'இராமேசுவரம் எஸ்க்பிரஸி'ல் வரலாம். உடனே வீட்டுக்குச் சென்று அப்பாவிடத்தில் சொல்லி அனைவரையும் துரிதப்படுத்த வேண்டும்'' என்று தனக்குள்ளேயே எண்ணிக் கொண்டு நரசிம்மன் கடற் கரையில் வேகமாகச் சென்று கொண்டிருந்தான். அப்பொழுது சுமார் ஆறுமணியிருக்கும். கடற்கரையினூடே சென்று கொண்டிருக்கும் நரசிம்மன் ஆண்டவன் படைப்பின் பெருமையை வியந்து பாராட்டிக்கொண்டே சென்றான். தந்தையின் வாக்கை கண்டு' குழந்தைகள் துள்ளிக்குதித்தன போல் சந்திரன், ஆகாயத்தில் தோன்றுவதைக் கண்டு அலைகள் மிக்க ஆரவாரத்துடன் கரையேறி ஆங்கு அமர்ந்திருப்போருடைய அடியை வருடிச் செல்லுகின்றன. பார்டி வீட்டினின்றும் வெளி வந்து யுத்தகளத்தைக் காவல் செய்யும் ஒரு வீரனைப் போல், சந்திரன் அப்பொழுதே தோன்றி இரவு காலத்தில் உலகத்தைக் காவல் செய்ய வேண்டிய வேலையில் இறங்கிவிட்டான். நிர்மலமான ஆகாயம். களங்கமற்ற சமுத்திரம். அந்தோ! இத்தகைய இடத்திற்கு இந்தச்சமயத்தில் மனிதர்கள் சாந்தி பெற வருகிறார்களோ? இல்லை; இல்லை. உத்தியோக சாலையில் கை சோர, மெய்சோர வேலை செய்து விட்டு வந்து கடற்கரையில் அமரும் ஒருவன் நிம்மதியுடன் இருக்கிறானோ? நாளை உத்தியோகசாலையில் செய்ய வேண்டிய வேலைகள் யாவை? இன்று செய்த வேலையில் எஜமானன் ஏன் நம்மிடத்தில் அதிருப்தி யடைந்தான்? என்பன போன்ற கவலைகளை அவன் மேற் போட்டுக் கொள்ளுகிறானேயன்றி, பேயான உள்ளத்தை அடக்கி ஒருகணமேனும் ஆண்டவன் அடியில் சமர்பிக்க மாட்டேன் என்கிறான். கடற்கரையில் வீற்றிருக்கும் பள்ளிக் கூடத்துப் பிள்ளைகளின் கவலைகளைப் பற்றிக் கூற வேண்டுவதேயில்லை போதாக் குறைக்குச் சிலர் கடற்கரையில் வந்து பரீட்சைக்குப் பாடம் படிக்க ஆரம்பித்துவிடுகின்றனர். சிலர் குடும்பசகிதமாய் அங்கு வந்து புற இன்பத்தை அநுபவிக்கிறார். கடற்கரைக்கு வந்து அக இன்பத்தில் துய்த்திருப்போரும் சிலர். இங்ஙனம் பல்திறப்பட்ட தோற்றங்களிடையே ' நரசிம்

மன் தான் திருநெல்வேலிக்குச் செல்லவேண்டியதைப் பற்றி யோசித்துக் கொண்டே சென்றான்.

நரசிம்மன் பெரிய குடும்பத்தில் பிறந்தவன்; அவனுடைய தகப்பனார் ஸ்ரீமான் அச்சுத ஐயர் என்பவர் ரெவினியு போர்டில் மாதம் முன்னூற்றைம்பது ரூபாய் வேலையில் இருக்கிறார். நரசிம்மன் இப்பொழுது ஆனர்ஸ் வகுப்பில் நான்காவது வருஷம் பரீட்சைக்குச் சென்றிருக்கிறான். அவனுக்கு வயது இருபது பூர்த்தியாகிவிட்டது இருபத்தோராவது வயது பிறந்து ஐந்து நாட்களே ஆகின்றன. நரசிம்மன் பார்வைக்கு அழகாக இருப்பான்; ஆனால் மிகவும் பலஹீனன். மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தான். கையில் ஒரு பிரம்பு பிடித்திருந்தான். அன்று காலையிலேயே கிராப் வெட்டிக்கொண்டானாதலாலும் சமுத்திரக்கரைக்கு வருவதற்குச் சிறிது நாழிகைக்கு முன்னர் 'வாசிலையன் போமெட்' போட்டுதடவிக்கொண்டிருந்தானாதலினாலும் அவனுடைய சுருட்டைமயிர்கள் கடற்கரைக்காற்றினால் ஆடி அவன் கைக்கு வேலையை வைக்கவில்லை. அவனுடைய முகத்தில் அறிவு அரசிதாண்டவம் புரிந்துக்கொண்டிருந்தாள். ஆனால் அவனை வீரலக்ஷிமி அடியோடு மறந்து விட்டாள் என்றே கூறவேண்டும். இதற்குத் தற்கால படிப்பே காரணமன்றி அவன்மேல் குறைகூறுவதற்கு நியாயமில்லை.

ஸீலகவருஷம் வைகாசிமாதம் இருபதாந்தேதி புதவாரம் உதயாதி ஆறரை நாழிகைக்கு மேல் பத்து நாழிகைக்குள்ளாகக் கன்யா லக்கினத்தில் திருநெல்வேலியில்பப்ளிக் பிராசிக்யூடராயிருக்கும் ஸ்ரீமான் ஆபத் சகாய ஐயருடைய ஏகபுத்திரியான சௌபாக்கியவதி வத்சலையை சென்னை ரெவினியு போர்டில் இருக்கும் ஸ்ரீமான் அச்சுத ஐயருடைய புத்திரன் சிரஞ்சீவி நரசிம்மனுக்கு பாணிக்கிரகணம் செய்துகொடுப்பதாகப் பெரியோர்களால் நிச்சயிக்கப் பட்டு மேற்படி சுபமுகூர்த்தம் திருநெல்வேலியில் நடக்கிறது. அதற்கு எந்த வண்டியில் போகலாமென்பதைப் பற்றியே நரசிம்மன் சமுத்திரக்கரையில் யோசனை செய்து கொண்டு வந்தான்.

'போட் மெயிலு'க்கே தானும் தகப்பனார் முதலியோரும் செல்வதெனத் தீர்மானித்த நரசிம்மன் சமுத்திரக் கரையினின்று நேரே வீட்டிற்குச் சென்றான். மணி ஏழாகியும் தகப்பனார் இன்னும் கச்சேரியிலிருந்து வராதிருந்ததைப் பற்றி வருத்தப் பட்டான். 'என்ன ஆபீஸ்! வயதானால் என்ன? ஊருக்குப் போகவேண்டுமே, மணியாகி விட்டதே யென்று ஏதேனும் கவலை இருந்தாலன்றோ! எரிச்சல் வருகிறது. டாமிட்' என்று கூறிக் கையிலிருந்த பிரம்பைப் பெஞ்சியின் மீது வேகமாகப் போட்டுவிட்டு பெண்கள் இருக்கும் இடத்திற்குச் சென்றான். அங்கே அவன் முணுமுணுத்துக் கொண்டே சென்றதும் அவனுடைய தாயார் மதுராம்பாள் 'என்ன கோபம்? நரசு!' என்று கேட்டாள். அதற்கு நரசிம்மன் 'டைம் ஆய்விட்டதே யென்று அப்பாவுக்குச் சிறிது கூட புத்தி யில்லை. செவன் டென் ஆச்சுது. எயிட்ட்வெல்வுக்கு போட் மெயில் ஸ்டாட்டிங். இன்னும் அப்பா வரவில்லை. எனக்குச் சாதம் போடு. நானாவது ரெடியாயிருக்கிறேன்' என்று ஆங்கிலமும் தமிழும் கலந்து பேசினான்.

தற்காலத்து பள்ளிக் கூடங்களில் பிள்ளைகள் பெற்றுள்ள அரிய பயிற்சிகளுள் இங்ஙனம் பேசுதலும் ஒன்றாகும். ஆதலின் நரசிம்மன் பேரில் குற்றமில்லை. இங்ஙனம் நரசிம்மன் 'ஊருக்குப்போவதற்குச் சித்தமாயிருக்கிறேன். எனக்குச் சாதம் போடு' என்று சொன்னதைக் கேட்டு அவன் தம்பியான கோதண்ட ராமன் என்னும் சிறு பையன் 'அண்ணா கல்லியாணத்துக்குப் போக வேண்டுமென்று எவ்வளவு ஆசைப் படுகிறான்' என்று பரிகாசம் செய்தான். உடனே விவாகத்திற்கென்று அதற்கு முந்திய நாளே வந்திருந்த ஸ்திரீகள் அனைவரும் கொல்லென்று சிரித்தனர். நரசிம்மனுக்கு கோபம் பிறந்தது. கோதண்ட ராமனைக் கன்னத்தில் அறைந்தான். அதற்காக மதுராம்பாள் நரசிம்மனைக் கோபித்துக் கொண்டாள்.

•

பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பில் படிக்கும் பையனை ஒரு தாயார் கோபிக்கலாமா? அதுவும் இந்த இருபதாம் நூற்றாண்டில். நரசிம்மன் உடனே முன் கட்டிற்கு வந்து, அதற்கு முந்திய நாளே ரெடிமேட் ஷாப்பிலிருந்து வாங்கி வந்த நிஜார் சொக்காய் முதலியவைகளை அணிந்தான்; கழுத்தில் காலர் நெக்டை முதலிய வைகளை போட்டுக் கொண்டான். தலையில் வெள்ளைக் காரத் தொப்பியை வைத்துக் கொண்டான். வீட்டிலிருந்த வேலைக் காரனை அழைத்து முன்னரே சித்தப்படுத்தி வைத்திருந்த 'ட்ரெஸ் பாக்ஸை' தூக்கிக் கொண்டு தன்னுடன் எழும்பூர் ஸ்டேஷனுக்கு வரும்படி கட்டளையிட்டு, தான் மாத்திரம் ரிக்ஷாவில் ஏறிச் சென்று விட்டான்.

சுமார் ஏழேமுக்கால் மணிக்கு ஸ்ரீமான் அச்சுத ஐயர் உத்தியோக சாலையிலிருந்து ஒரு சேவகனை வீட்டிற்குச் சென்று அனைவரையும் நேரே ஸ்டேஷனுக்கு வந்துவிடும்படியும், தாம் நேரே ஸ்டேஷனுக்கு வந்து விடுவதாகவும் தெரிவித்து வரும்படி அனுப்பினார். நரசிம்மன், நரசிம்மாவதாரம் எடுத்துக் கொண்டு ஸ்டேஷனுக்கு சென்று விட்டான் என்பது அவருக்குத் தெரியாது. மணமகன் கோபித்துக் கொண்டு போய் விட்டதைப் பொருட் படுத்தாமலும் கணவனுடைய கட்டளையை மதித்தும் மதுராம்பாள் அனைவருக்கும் விரைவில் போஜனம் செய்வித்து சரியாக எட்டு மணிக்குக் குடும்ப சகிதமாய் எழும்பூர் ஸ்டேஷன் வந்து சேர்ந்தாள்.

நரசிம்மன் பிளாட்பாரத்தில் ஒரு நாற்காலியின் மீது கால்மீது கால் போட்டு அமர்ந்து சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான். பக்கத்தில் ஒரு பட்லர் இரண்டு பிஸ்கட்டுகளும் ஒரு கண்ணாடிக் கோப்பையில் லெம்ஜூஸும், இரண்டு மலை வாழைப் பழங்களும் ஒரு தட்டில் வைத்துக் கொண்டு நின்றிருந்தான். இந்த அரிய காட்சியை சற்றுத் தொலைவாயிருந்த மதுராம்பாள் பார்த்து வெட்கத்தால் தலை குனிந்தாள். அவளுடன் வந்த மற்றவர் நரசிம்மனுடைய விவாகத்துக்கு ஏன் வந்தோமென்று எண்ணினர். இதற்குள் அச்சுத ஐயர் வேகமாக ஓடி வந்தார். மதுராம்பாள் அருகில் வந்து, தம் பையிலிருந்த கடிகாரத்தை எடுத்துப் பார்த்து இன்னும் பத்து நிமிஷம் இருக்கிறதென்று கூறி 'டிக்கட்டு வாங்கியாச்சுதா' என்று கேட்டார். இல்லை

யென்று மதுராம்பாள் கூற உடனே தம்முடன் வந்த சேவகனிடம் நூறு ரூபாய் நோட்டொன்றை கொடுத்து திருநெல்வேலிக்கு பன்னிரண்டு மூன்றாவது வகுப்பு டிக்கட்டுகள் வாங்கி வரும்படிச் சொன்னார். அவனை அப்படி அனுப்பி விட்டு மதுராம்பாள் பக்கம் திரும்பி பையன் எங்கே என்று கேட்டார். 'எந்தப் பையன்' என்று மதுராம்பாள் வெறுப்பாகக் கேட்டாள். 'என்னகோபம்? நரசிம்மன் எங்கே?' என்றுஜயர் மறுபடியும் கேட்டார். 'அந்தப்பட்டுக் கிடப்பான் அதோ கவிழ்ந்துபோகிறான் பாருங்கள்' மதுராம்பாள் நரசிம்மன் வீற்றிருக்கும் இடத்தை நோக்கிக் கையைநீட்டினாள். அச்சுத ஜயர் திரும்பிப் பார்த்தார். சிறிது நேரம் கழித்து 'காலம்' என்று சொல்லிக் கொண்டு பெரு மூச்சுவிட்டார் நீங்கள் எல்லாரும் ஒன்றாகத்தானே வந்தீர்கள்?' என்று ஐயர் மறுபடியும் தம் மனைவியைக் கேட்டார். இல்லையென்று சொல்லி வீட்டில் நடந்தன யாவற்றையும் எடுத்துக் கூறினாள் மதுராம்பாள். டிக்கட்டு வாங்கித் தொலைத்தானா இல்லையா பார்த்து விட்டு வருகிறேன் என்று சொல்லி தந்தை தம் அருமை மகனிடம் சென்றார். தகப்பனார் வருவதை அறிந்த நரசிம்மன் சிகரெட்டை எறிந்து விட்டு எழுந்து வந்தான். இருவரும் சந்தித்தார்கள். உடனே பின்வரும் சம்பாஷணை இருவருக்கும் நடைபெற்றது.

நர.—டிக்கட்டு வாங்கியாகி விட்டதா?

அச்.—டிக்கட்டு வாங்காமல் இங்கு ஏன் வந்தாய்?

நர.—நீங்கள் வாங்கி வரவில்லையா?

அச்.—இல்லை; எங்களுக்கு மாத்திரமே வாங்கினோம்.

நர.—ஆனால் நான் என்ன செய்வது?

அச்.—கோபித்துக் கொண்டு வந்தபடி செய்யலாம்.

நர.—அப்பா! உங்களுக்குப் பங்ச்சுவாலடி கீப் அப் பண்ணத் தெரியவில்லை. அதற்காகவே எனக்குக் கோபம் பிறந்தது.

அச்.—உண்மை. எனக்குத் தெரியவில்லை, உனக்குத் தெரிகிறதே. நீ அடைந்த இலாபம் என்ன?

நர.—உங்களுடன் பேச எனக்குத் தெரியாதா. ஐ வாண்ட் த டிகெட்.

அச்.—முட்டாள்! இஃதென்ன கோலம்? விவாக மயக்கத்தில் சோறு கூட வேண்டிய தில்லையோ உனக்கு. குழந்தையை ஏன் அடித்தாய்? இவைகள் புத்தியில்லாக் காரியங்கள்.

(தொடரும்)

கண்ணன் திருவிளையாடல்—

அதன் உட்பொருள் என்ன ?

—எஸ். கே. நாராயண ஐயர்
B A., B. L.

ஈசன் திருவிளையாடல்கள் அறுபத்திநான்கு எனவரையறுத்தனர். கண்ணன் திருவிளையாடல்கள் எண்ணிறந்தன. இயற்கைத் தத்துவங்களையும் வேதத்தில் மறைந்து கிடக்கும் உயரிய விஷயங்களையும் ஏழை மக்களுக்கு விளக்க நினைத்தால் கண்ணன் திருக்கூத்தொன்று நிச்சயம் உதவியாயிருக்கும். கேவல புத்தியுள்ள பாமரர்கள் தெரிந்து கொள்ளக்கூடாத வேதாந்த ரகசியங்களை எல்லாம் எம்பெருமான் தம் கீதையில் பற்குனனுக்குப் போதிப்பது போல் பலருக்கும் தெரிவித்தனர். பரம ஞானிகளும் பிரதி தினம் புதிது புதிதாய்ப்பொதிந்துள்ள கருத்துக்களைத் தோண்டி எடுக்கும் இக்கீதையை உபதேசித்த ஸ்ரீ கிருஷ்ணன், ஆயர்பாடியில் கோபிகளோடு லீலா விநோதனாயிருக்கும் போது வேறு பட்டுத் தோன்றுவன். இத்தகைய நிலை மேம் போக்காய் நோக்குவோர்க்கே புலப்படும். ஆனால் சிறிதே நின்று நிலையாய்க் கவனிப்போமானால் அத்தகைய லீலையிலும் மிகச் சிறந்த கருத்துக்கள் பொதிந்திருப்பது புலப்படும்.

விஷ்ணுவின் அவதாரங்களே உலக ஜீவராசிகளின் முன்னேற்றத்தையும் சிருஷ்டியின் சாமர்த்திய விசேஷத்தையும் குறிப்பதாகும். மேல் நாட்டினர் ஜீவகோடிகள் பூமியில் இப்போ திருப்பது போல் முதலிலிருந்ததில்லை யென்றும், ஸ்தாவர வர்க்கங்களிலிருந்து படிப் படியாய் நீர்வாழ்வன, ஊர்வன, நகர்வன, பறப்பன, மாக்கள், மக்கள் என்ற முறையில் தேர்ச்சியடைந்து வந்துள்ளதாகவும் ஸ்தாபிக்க முயல்வர். இதனையே மனிதன், ஊராங்-ஊட்டாங் என்னும் குறங்கினத்தினின்றும் சிறப்புற்ற பிறப்பையுடையவனென்றும், இவ்விரு ஜீவராசிகளுக்கும் பலவித ஒற்றுமைகள் உள்ளன வென்றும் காட்ட முயல்வர். அதே போல் மீன், ஆமை, பன்றி, நரசிம்ஹம், வாமனன், பரசுராமன், ஸ்ரீராமன், பலராமன், கிருஷ்ணனாகிய அவதாரங்களை உற்று நோக்கும் போது சிருஷ்டியின் வியாபகமும் பெருமையும் வெளியாகும். நரசிம்ஹ அவதாரத்தில் மாக்களும் மக்களும் சேர்ந்துள்ளது. பிந்திய வாமனவதாரம் மக்கட் பகுதியின் குறுகிய ரூபத்தையும் ஸ்ரீராமன் அத்தகைய மக்களில் அறிவு சாலப்படைத்த சிலாக்கியமான பிறப்பையும், கிருஷ்ணன் எனும் அவதாரத்தில் புத்தியின் அபரிமிதமான சாமர்த்தியத்தையும் வியாபகத்தையும் காட்டும். இவ்விஷயங்களை

மேனுட்டினர் வாயிலாய்க் கேட்க இப்போது மனம் இன்புறுகின்றது. விளக்கடியில் எப்போதும் இருட்டுத் தானே.

விஷ்ணுவின் அவதாரங்களில் இராமாவதாரம் புண்ணிய சீலனுகிய கண்ணிய புத்திரன் பெருமையை விளக்கும். கிருஷ்ணன் சரித்திரம் பல வேறு பகுப்புடையது. அவதாரங்களில் கிருஷ்ணுவதாரம் போன்று எந்த அவதாரமும மக்களால் எளிதில் குறை கூறப்பெறுவது வேறென்றிருப்பதாகப் புலப்படவில்லை. கிருஷ்ணன் லீலைகளில் அநேகம் உற்று நோக்காத மக்கள் மனத்தில் கேவலமாகக் கருதப் பெதுகின்றன. இப்போதைய வெள்ளித்திரைகளில் கேலிக்கும், தூஷணைக்கும் ஆஸ்பதமான அநேக லீலைகள் காட்டப்பெறுகின்றன. அதன் காரணமாகக் கிருஷ்ணன் பெருமை மக்கள் மனத்தே மாறுபாடடைகின்றது. மலையைக் குறித்து எவர் எது சொன்னுலும் தன் பெருமையிலும் உயரத்திலும் அது குறைவதில்லை. ஆனல் கேவல எண்ணத்தைக் கொண்டாடியதால் ஏனையர் மனதே குறைவடைகின்றது. பல சமயங்களிலும் இடங்களிலும் இப்போது உலகத்திற்கு எடுத்துக் காட்டாகக் காண்பிக்கப் பெறும் கிருஷ்ண லீலைகளைக் கவனிக்கும் போது இத்தகைய கிருஷ்ணு உயர்வாகிய பகவத்கீதையைத் திருவாய் மலர்த்தனனென்று சந்தேகிக்கவும் சாத்தியமான நிலைமை ஏற்படுள்ளது.

உதாரணமாக கிருஷ்ணன், கோபிகள் நீர் நிலையில் ஸ்நாநம் செய்யும் போது அவர்கள் ஆடைகளைக் கவர்ந்து சென்று புன்னை மரத்தில் வைத்ததாகவும், பின்னர் கோபிகள் தங்கள் ஆடைகளைத் தேடி கடைசியில் கண்ணனிட மிருக்கக்கண்டு, தமக்குத் திருப்பித் தரும்படி கேட்டபோது ஒருகரத்தால் வேண்டுவோரை இரு கரமும் கொண்டு வேண்டும்படி பகவான் கூறியதாகவுமுள்ள சரித்திரத்தைச் சிறிதே ஆராய்வோம். இந்த நிலையைப் பல விடங்களில் பட ரூபமாய்க் குறிக்கப் பெற்றுள்ளது. அத்தகைய படங்களும் அநேகம் வீடுகளில் காணப் பெறுகின்றன. இதனிற் பொதிந்துள்ள கருத்தைக் கண்டறியாத எவனும் கிருஷ்ணனை மிகவும் கேவலமான புத்தியும் கொடூரமான சித்தமுமுள்ளவனென்றே நினைப்பன். உண்மை, இதினின்றும் மிகுதியும் வேறுபட்டது.

கோபிகள் வஸ்திரங்களைக் கவருவதாகிய லீலையானது சில தத்துவங்களை விளக்கவேண்டி ஏற்பட்ட ஓர் கதையாகும். உண்மைக் கதையாயின் அதற்கு மிகுதியும் சிறப்பேயுண்டு. உருவகப்படுத்தி விஷயங்களை மக்களுக்கு எளிதில் விளங்கும்படி செய்வது எல்லா மதங்களிலுமுண்டு. கிறிஸ்தவ மதப் புத்தகமான விவிலிய நூலில் இயேசு நாதர் தர்ம சாஸ்திரங்களையும் உண்மை விவேகத்தையும் கதை (Parable) மூலமாகவே தெரிவித்துள்ளார். அதேபோல் இந்த கோபிகாவஸ்த்ராஹரணமும் ஓர் தத்வார்த்தக்கதையாகும். அப்படியாயின் இக்கதையில் என்ன தத்துவம் பொதிந்திருக்கிறதென்று சற்று கவனிப்போம்.

ஜீவன்களை எப்போதும் நூல்வலார் ஸ்திரீகளாகவே உருவகப் படுத்து கின்றனர். இப்போதைய ஸ்திரீகள் புருஷர்களுக்குத் தாம் சமதையான

வர்களே என்றும், புருஷர் போன்று எல்லா விஷயங்களிலும் தமக்கும் சரி உரிமையும், நேர்மையும் வேண்டுமென்று மன்றாடி வழக்கிழுப்பரெனினும் பண்டைக்காலத்தில் பெண்கள் அபலைகளென்றும் ஆதரவும், அன்பும் அவர்கள் ஆண்மக்களிடமிருந்தே அடைய வேண்டுமென்றும் ஓர் அபிப்பிராயம் உலவிவந்தது. ஜீவனும் பல மற்று ஆதரவுகோரி ஈசனை நாடுகின்றது. ஆனால் விஷய ஞானமும் ஆசா பாசமும் ஜீவனை விடுதலை அடையக் கூடாதபடி கட்டி யிழுக்கின்றன. மாயையென்னும் பெரும் போர்வை போர்த்துள்ளது உலகம். ஜீவாத்மாக்களாகிய கோபிகள் தாம் போர்த்திருந்த மாயையாகிய போர்வையை நீத்து ஈசன் திருவருளாகிய கருணைக் கடலில் திளைத்து விளையாடிக் கொண்டிருந்தனர். ஆனால் ஸ்திர புத்தி யில்லாத இந்தஜீவன்கள் மறுமுறையும் மாயைப் போர்வையை தேடுகின்றன. எண்ணிறந்த காலம் உலக மாயையில் மூழ்கிக்கிடந்த ஜீவனுக்கு அதனின்றும் விடுதலை கிடைத்தாலும் மறுமுறையும் மாயையிலேயே சேரவடைவது அதற்கு சகஜம். துறவடைந்து ஈசன் நிலையில் இரண்டறக் கலப்பதே எல்லாவற்றிலும் சிறந்த இன்பம். அதற்கிடையே மனது ஊசலாடுவது அதற்கியற்கை யென்னலாம்.

சந்தைக்குப்போய் மீனை விற்று வந்த செம்படவக் கிழவி வீட்டுக்குத் திரும்பி வரும்போது இடைவழியில் ஆதவன் மறைய அன்றிரவை ஓர் சத்திரத்தில் கழித்தனள். ஆனால் இரவில் தூக்கமில்லாது மிகுதியும் வருந்தினள். அதையறிந்த ஏனைய வழிப்போக்கர் கிழவிக்கு உணவில்லாமையால் வந்த கஷ்டமோவென எண்ணி நல்லுணவளித்து சௌகர்யமான படுக்கையும் உதவினர். எனினும் கிழவிக்குத் தூக்கம் வரவில்லை. பின்னர் வயது முதிர்ந்த பெரியார் ஒருவர் கிழவி கொண்டு வந்த கூடையில் சிறிது நீரைத் தெளித்து அவளருகில் வைக்கக்கிழவியும் சிறிது நேரத்திலேயே உடலமர்ந்து நித்திரையிலாழ்ந்தனள். தன் வீட்டில் எப்போதும் வீசும் வலை வீச்சத்தில் தூங்கும் கிழவிக்கு அதில்லாமையால் சத்திரத்தில் நித்திரைவரவில்லை. பின்னர் கூடையில் நீர் தெளித்து அவளருகில் வைத்ததும் இல்லாத வீச்சமுண்டாகவும் வழக்கம் போல் கிழவியும் துயின்றனள். ஆகையால் வழக்கத்திற்கு மிக மிகப்பலமுண்டாதலால் ஜீவன் முன்னைய வழக்கம் போல் மாயையில் சேர ஆவலடைகின்றது. காருண்யக் கடவுள் அம்மாயை நீக்கி ஜீவன் முக்தியடைய உபாயம் கோருகிறார். அஃதறியாத ஜீவன் மாயையிலேயே என்று நீரினின்று நீங்கிய மீன் போல் தவிக்கிறது. உருக்கமாகத் தன்னை மறுமுறையும் மாயையில் வீழ்த்தும்படி கேட்கிறது. அந்நிலையில் ஜீவன் பூர்ண பக்குவ நிலையை அடையாமையால் தனக்கும் ஈசனுக்கும் வித்தியாசமில்லை யென்பதையும் அவனறியாத தொன்றில்லை யென்பதையும் தெரிந்து கொள்ளாமல் தனக்கியற்கையாயுள்ள பாமர புத்தியால் மானமென்றும், லஜ்ஜை யென்றும் எண்ணி ஒரு கரத்தால் வேண்டுகிறது. தான் என்னும் அகந்தை இன்னமும் ஜீவனிடத்தில் அழியாமை கண்ட ஈசன் அதன் கேவல புத்திக்கு வருந்தி அதன் அறியாமை அழிய வேண்டுமென்னும் சங்கல்பத்தால் இரு, கை

களையும் நீட்டிக் கேட்கவே பணிப் பதுபோல் தோன்றும். துரியோதனன் ஏவியபடி அந்தப்புரம் சென்ற துச்சாசனன் திரௌபதையை அரச அவைக்கு அழைத்து வருகின்றான். பின்னர் தன் தமயன் உத்திரவின்படி பாஞ்சாலியின் துகிலை உறிகிறான். முதலில் பாஞ்சாலியும் தன் கேவலபுத்தியால் மானத்தைக்காக்கத் தனது துகிலுரியவியலாதபடி பிடித்து நிற்கிறாள். ஆனால் துச்சாசனன் அடாது மேலும் துணியைப் பிடித்தீர்த்து விலக்குகிறான். பாஞ்சாலி கடைசியில் தன்னை ஈசனிடம் அர்ப்பணம் செய்து தனக்கென யாதொரு மானமுமில்லை யென்றும் எல்லாம் அவன் செயலாவ தென்றும் தன் செயல் விட்டு இரு கரம்கூப்பி எம்பெருமானைத் தொழுது நின்றாள். அவளுக்குத்துகிலும் அளவின்றி வளர்ந்தது. அவள் துகில் உரிந்தவனும் கை சோர்ந்து மெய் சோர்ந்து தன் மனம் திடுக்கிட்டான். தான் எனும் அகந்தை நீங்கி எல்லாம் அவன் செயலென்னும் உண்மை அறிவு தோன்றும் போதுதான் ஈசன் கருணை கிடைக்கும். கோபிகளாகிய ஜீவன்கள் தாமென்னும் எண்ணத்தினராய் பகவானைத் தம்மை திரும்பவும் மாயையில் திளைக்கும்படிச் செய்ய வேண்ட அவர்கள் தம் அஞ்ஞானத்தை ஒழித்து அறிவு விளங்கப் பெறினல்லால் ஈசன் கருணை யுண்டாகா தென்பது தோன்றவே கிருஷ்ணன் இருகரம் கொண்டு வேண்டுமென்றனன். அவனறியாத தொன்றில்லையாதலின் இஜ்ஜீவன்கள் தாம் மறைத்து வைப்பதாக நினைப்பதும் பாமரம். எங்குமுளன் கண்ணனென்ற உண்மை அவரறிந்திலர்; தடுத்தாட் கொள்ளும் தேவன் அவர்களுக்கு அவ்வுண்மை அறிவிக்கின்றனன்.

உட்பொதிந்துள்ள பொருளை யுணராது கேவலமாகப் பேசி தெய்வதூஷணைக்கும் மனக்குறைக்கும் உட்படுவது பாமர எண்ணமே யாகும். இதே போன்று கண்ணன் ஏனைய லீலைகளும் உண்மைப் பொருள்களை விளக்கவென வந்தவையாகும். பிறவற்றையும் பின்னர் உசாவுவோம்.

ஸ்பெயின் யுத்த காலத்தில், அங்கிருந்து தப்பியோடி வந்தவர்கள், பிரான்ஸில் தற்போழ்து சுமார் இரண்டரை லட்சம் பேர் வசிக்கிறார்கள். இவர்கள், சுமார் 500 இடங்களில் தனித் தனியாகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

காப்பிக் கொட்டையின் வரலாறு

—"நாராயண சிவன்"

காப்பி என்னும் ஆங்கிலப்பதம் 'க்வாவா' என்னும் அராபிய வார்த்தையிலிருந்து உண்டானதாகும். 'க்வாவா' என்பதற்கு ஒரு பானீயம் என்றர்த்தம். இந்தியாவும் மேனுடும் காப்பியைப்பற்றி தெரிந்து கொள்ளுவதற்குப் பல நூற்ருண்டுகளுக்கு முன்னமேயே அராபியர்கள் இதனைப் பானீயமாயும், ஆகாரமாயும், மருந்தாகவும் உபயோகித்துப் பார்த்த பின் இது ஒரு சிறந்த பானீயமென்று தீர்மானித்தார்கள்.

அபிஸீனியாவில் விளைந்து வந்த காப்பியே உயர்ந்த ரகமாகக் கருதப்பட்டு வந்தது. இதன் குணங்களையும் உபயோகத்தையும் கண்டு ஆரும் நூற்ருண்டில் இதனை விவசாய முறையில் பயிரிட ஆரம்பித்தனர் அபிஸீனியர். பிறதேசத்தார் இதனைக் கொண்டு போய் பயிரிடாதபடி அதி ஜாக்கிரதையாய்க் கவனித்து வந்தார்கள். இருந்தாலும் பதினேரும் நூற்ருண்டு முடிவில் காப்பி இந்தியாவுக்கு வழி கண்டு விட்டது.

கிருஸ்தாப்தம் 1600ல் பாபாபுதீன் சாகிப் அவர்கள் மெக்காவுக்கு க்ஷேத்திர தரிசனத்திற்குப் போய் திரும்பும்பொழுது அரேபியாவிலிருந்து ஏழு காப்பீ விதைகள் கொண்டு வந்து மைசூரில் அவரது பெயரைக் கொண்ட ஒரு மலையில் விதைத்தார். தலைவரைப் பிரிந்து அவரது வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த சிஷ்ய கோடிகளுக் களித்த அன்னமும் பானீயமும் இதுவே யாகும். இவ்விதமாக பாபாபுதீன் சாகிப் இந்தியாவில் அபிவிருத்தியடைந்து வரும் காப்பித்தொழிலுக்கு சாஸ்வதமான அஸ்திவாரக் கல் நாட்டினர். மைசூரிலும், இந்தியாவின் மேற்குக் கரையிலும் காப்பிப் பயிர் அதிகரித்துக் கொண்டே வந்து ஐரோப்பியர் கவனத்தைக் கவர்ந்தது. பத்தொன்பதாம் நூற்ருண்டில் ஏராளமான மூலதனத்தை முடக்கி ஜன சஞ்சாரமேயில்லாத மலை உச்சிகளிலெல்லாம் போய்அழகான காப்பிஎஸ்டேட்டுகள் ஸ்தாபித்து காப்பியை ஏராளமாகப் பயிரிட ஆரம்பித்தனர்.

பாபாபுதீன் அவர்களால் கொண்டு வரப்பெற்ற அராபியக் காப்பி புத்துயிர் பெற்று பல ஏக்கர் கொண்ட நிலங்களில் பயிர் செய்யப்பட்டு வந்தது. ஐரோப்பிய விவசாயிகள் இதனை வியாபாரத்திற்குரிய முறையில் தயார் செய்ய ஆரம்பித்தது இந்தியக் காப்பித் தொழிலில் ஒரு குறிப்பிடக்கூடிய சம்பவமாகும். முன் காலங்களில் காப்பிப் பழங்களை

வெயிலில் விட்டு உலர்த்தி பின் அதனைக் குத்தி தோல் களைந்து விதையெடுத்து வந்தார்கள். இம்முறை கைவிடப் பட்டு புதியதோர் முறை கைக்கொள் ளப்பட்டது.

ஒரு பிரத்தியேக இயந்திரத்தின் உதவியைக் கொண்டு பழத்தின் மேலுள்ள தோலை அப்படியே உரித் தெடுத்து அதற்கும் தானியத்தைப் பொதிந்திருக்கும் மற்றுமோர் மெல் லிய தோலுக்கும் மத்தியிலுள்ள பசை போன்றதை நீராவியினால் இளக்கி அலம்பி யெடுத்தபின் வெயி லிலிட்டு உலர்த்துவதால் தானியத்திற் கடுத்தாற்போலுள்ள மெல்லிய தோல் தானாகவே வெடிக்கும் தன்மையை அடைகிறது. இம்முறை பாபாபுதின் சாகிப் கொண்டு வந்த காப்பியின் தரத்தை உயர்த்தி அன்னிய நாடுக ளில் இந்தியக் காப்பிக்கு பெருத்த கிராக்கியையும் நல்ல விலையையும் உண்டு பண்ணிற்று. முந்திய முறைப் படி எடுத்து வந்த காப்பிக் கொட் டையை நாட்டுக் கொட்டை யென் றும், பிந்தியது கம்பெனிக் கொட்டை யென்றும் சொல்லப்படுகிறது. பெரிய எஸ்டேட் கம்பெனிகள் பெருந்திட் டங்கள் வகுத்துச் செய்வதினால் அதற்கு இவ்விதம் பெயர் வந்தது.

இதர விவசாயப் பொருள்களுக் கிருப்பதுபோல் காப்பிப்பயிருக்கும் நோய், பூச்சி முதலிய இயற்கை சத் துருக்களுண்டு. மற்றப் பயிர்களைப் பாதிப்பதுபோல் கால நிலையும் இத னைப்பாதிக்கத்தான் செய்கிறது. இருந் தாலும் எஸ்டேட் கம்பெனிக்காரர் கள் 19-ம் நூற்றாண்டில் பெருத்த லாபமடைந்தனர். இதனால் காப்பிப் பயிருக்கு அதிகமான நிலங்கள் சேர்க் கப்பெற்று இந்தியர்களும், ஐரோப்பி யர்களும் புதிது புதிதாக காப்பி எஸ் டேட்டுகள் ஏற்படுத்தலாயினர்.

கடந்த நூற்றாண்டு முடிவில்காப்பிப் பயிர்த்தொழிலில் ஒரு மாறுதலேற்பட் டது. நோயினாலும், பூச்சியாலும் பாதிக்கப்பட்டு ஏற்கனவே செலவு அதிகமாயிருந்த காப்பிப்பயிர்தொழில் லாபத்தைக்கொடுத்ததுபோக நஷ்டத் தைக்கொடுக்க ஆரம்பித்தது. பாபாபு தின் கொண்டுவந்த அராபியக் காப் பிக்கு தனிசீதோஷ்ணநிலையும் பிரத்தி யேகவிதமான பூமியும் அவசியமென் றுகண்டுஅதற்குகந்தஎஸ்டேட்டுகளில் மட்டும் பயிர் செய்யப்பட்டு இதர எஸ்டேட்டுகள் கைவிடப்பட்டன.

இச்சந்தர்ப்பத்தில் பிரேஜிலில் காப் பிப் பயிர் அபிவிருத்தி யடைந்து கொண்டு வந்தது. விளைவின் மேனி யும் மிக அதிகம். இது காப்பி விலை யைப் பெரிதும் பாதிக்க ஆரம்பித் தது. இருந்தாலும் இந்தியக்காப்பியை விட மட்டமாயிருந்ததால் இந்தியக் காப்பி அதனுடன் போட்டியிட முடிந் தது. விலையில் குறைவு ஏற்பட்ட தென்றாலும் இந்தியக் காப்பிக்கு கிராக்கி இருந்துதான் வந்தது. நிர்ப் பாக்கிய வசத்தால் இந்நிலையும் பாதிக் கப்பட்டது. மகா யுத்தம் முடிந்ததும் பிரிட்டிஷ் கிழ் ஆபிரிக்காவில் ஏராள மாகப் பயிரிட ஆரம்பிக்கபட்டது. இங்கு விளைந்த காப்பி ஏறக்குறைய இந்தியக் காப்பியையே ஒத்திருந்தது. ஆகையால் இந்தியாவுக்கிருந்து வந்த மார்க்கெட்டுகளில் இது தாராளமாக நுழைய ஆரம்பித்து விட்டது. இந்தி யக் காப்பித் தொழிலுக்கு மற்று மோர் தடை ஏற்பட்ட தென்ன வென்றால் இந்தியக் காப்பியை உப யோகித்து வந்த ஐரோப்பிய நாடுகளும் அவர்களது குடியேற்ற நாட்டு உற்

பத்திக்கு உதவியளிக்க விரும்பியதும், அதற்கான முறையில் வியாபார நிபந்தனைகள் ஏற்படுத்திக் கொண்டதுமே யாகும்.

20,000 டன் விளையக் கூடிய 2,00,000 ஏக்கர்களில் இந்தியாவில் காப்பி பயிரிடப்படுகிறது. இவை பெரும்பாலும் தென்னிந்தியாவிலுள்ள மைசூர், குடகு, நாயுடு பட்டம், நீலகிரி, சேர்வராயன்மலை, பில்லிகிரி, நெல்லயம்பதி, ஆனைமலை, கண்ணன் தேவன், பழனி இப்பிரதேசங்களிலிருந்துவருகிறது. அராபியரகமே பெரும்பாலாகப் பயிரிடப்பட்டு வருகிற தென்றாலும் சில எஸ்டேட் கம்பெனியாரால் 'ரோபஸ்டா' என்னு மோர்ரகமும் பயிரிடப்பட்டு வருகிறது. இது முந்தியதைவிட சற்று கடினமான வஸ்துவாகும். ஒரு ஏக்கர் மலைப் பிரதேசத்தை காப்பி பயிரிடத் தயார் செய்வதற்கு 500 ரூபாய் வரை தேவைப்படுவதால் இத்தொழிலில் ஏராளமான மூலதனம் முடக்கப்பட்டிருக்கிறது. சில காலமாக இந்தக் கைத் தொழிலில் அன்னிய தேசத்தார் புதிதாக மூலதனம் போடுகிறார்களில்லை யென்பதோடல்லாமல் இத்தொழிலிலிருந்து விடுவித்துக் கொள்ளவும் விரும்புகிறார்கள். இதன் பயனாய் இந்தியக் கைத்தொழிலில் மூன்றில் இரண்டு பாகம் இந்தியர் வசமே இருந்து வருகிறது. இத்தொழில் ஒரு லட்சத்திற்கதிகமான இந்தியத்தொழிலாளிகளுக்கு வேலையளிக்கிறது.

இந்தியாவிலிருந்து காப்பி கொட்டையின் ஏற்றுமதி

எந்த மாகாணத்திலிருந்து	1913–14ல் எவ்வளவு அந்தர் வெயிட்	1935–36ல் எவ்வளவு அந்தர் வெயிட்
சென்னை	257,375	213,654
பம்பாய்	2,439	2,168
பர்மா	22	129
வங்காளம்	64	—

சென்னை மாகாணத்திலிருந்துதான் அதிகமான காப்பிக் கொட்டை ஏற்றுமதி செய்யப்படுகிறதென்று இதனால் தெரியவரும்.

தமயனின் கடிதம்—3

தேவி தாசன்.

(தெய்வத்தினிடம் பூரண நம்பிக்கை கொள். துயர் கண்டு அயராதே; தூயன அணிந்து செய், 'ஜோதி'யில் திரு. வ. பார்த்த சாரதியின் கட்டுரை களை ஊன்றிப் படி.)

வல்லபி! தேவியென்றால்—நெஞ்சி லொரு
    வல்லபம் தோன்றுதடா!
சொல்லுது சித்தக் கிளி—தினமும் ஓம்
    சுத்த சக்தி யென்றே. 1
வறுமைப் புயலெழுந்து—நம்மை யென்ன
    வாதனை செய்யுமடா?
சிறுமைப் பூச்சி களால்—வாழ்வுப்பயிர்
    சேதமுங் காணு மோடா? 2
பொய்யரின் மெய்யுமடா—நம்மை யென்ன
    பொல்லாங்கு செய்யுமடா?
வெய்ய வினை களுமே—நம்மை யண்டி
    வேதனை விளைத்திடுமோ? 3
சத்திய நெறி பிடிப்போம்; நெஞ்சகத்தில்
    சாந்தம் மிக வளர்ப்போம்.
சித்தத் துடிப் பலையில்—தேவி யொளி
    சிலிர்த்திடச் செய்திடு வோம். 4
மலையின் குமரி யென்று—தம்பி நீ
    மலைத்து நிற்கா தேடா
கலைகள் நிறைந்தா ளடா—தம்பியவள்
    கருணை மிக்கா ளடா. 5
குழந்தைக் குரற் கிரங்கி—அன்றமுது
    கொண்டு வந்தா ளடா
இளந் தளிர் போல் வளடா—நெஞ்சில் மிக
    இரக்கம் நிறைந்தா ளடா. 6
உள்ளக் கோயிலிலே—தேவி கொலு
    உற்றிடச் செய்திடுவாய்
கள்ளம்நீ செய்யா தேடா—அவள் பொல்லாக்
    காளியு மாவா ளடா. 7
நல்ல வரந் தருவாள்—அவளடி
    நம்பிய பேர்களுக்கே
பல்லாண்டு கூறியடா—நாமு மவள்
    பாதமல ரணிவோம்! 8

பிரசாரம் செய்வோர் எத்தகையரா யிருத்தல் வேண்டும்?

—தே. ஏகாம்பரம்

இந்தியர்கள் விரைவில் சுயராஜ்யம் பெற வேண்டி நாடெங்கணும் சுயராஜ்ய தாகத்தை எழுப்ப இது காலை பிரசாரம் செய்யச் செல்வோரிற் பலர் சுய நலமற்றவராய், பாரத தேவியின் திருவடியில் தங்களுக்குள்ள அனைத்தையும் அர்ப்பணம் செய்தவராய் இருக்கின்றனர் என்பது வெளிப்படை. இக்கூட்டத்தார் செய்து வரும் தியாகத்திற்காக இவரை, இந்தியாவின் நலத்தை நாடுவோர் அனைவரும் வணங்கக் கடமைப் பட்டிருக்கிறார். இச்சமயத்தில் பிரசாரம் செய்யும் வரலாற்றைப் பற்றியும் பிரசாரம் செய்வோர் எத்தகையரா யிருத்தல் வேண்டும் என்பதைப் பற்றியும் ஈண்டுச் சுருக்கமாகக் கூறுதல் பொருத்தமாகவே இருக்குமென நினைக்கிறோம்.

* * *

இந்தியாவில் தோன்றியிருக்கும் ஒவ்வொரு வஸ்துவுக்கும் மூலாதாரம் மேனாடே என்று கூறும் அறிஞரிற் சிலர், நம் நாட்டவர் பிரசாரம் செய்ய மேனாட்டாரிடமிருந்தே கற்றுக் கொண்டனர் என்று கூறுகின்றனர். சரித்திரவுண்மை அறிந்தார் இதை அங்கீகரிக்க மாட்டார். அசோக மௌரியன் காலத்தில் அவனுடைய ஆதரவில் பௌத்த மதப் பிரசாரம் ஒழுங்காக நடந்ததைப்போல் எப்பொழுதும் நடைபெற வில்லையென்று துணிந்து கூறலாம். பௌத்த தர்மத்தைப் பரவச் செய்வதற்காக அசோகன் செய்திருந்த பிரசார ஏற்பாடுகளைப் போல் நாம் இப்பொழுது செய்திருந்தோமானால் பல ஆண்டுகளுக்கு முன்னரேயே நாம் சுயராஜ்யத்தைப் பெற்றிருக்கலாம். அந்த ஏற்பாடு அல்லது ஒழுங்கு நம்முடைய தற்போதைய பிரசாரத்தில் இல்லாதது பெருங்குறையே யாகும். அசோகன் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு பிரசாரக் கூட்டத்தாரை அனுப்பி அங்குப் பௌத்த தருமத்தை விருத்தி செய்வது அவருடைய கடமை யெனச் செய்து விட்டான். தன் கீழிருக்கும் உத்தியோகஸ்தர்கள் அவர்களுக்கென்றுள்ள இயற்கையான உத்தியோகத்தைச் சரிவரப் பார்ப்பதுடன் பௌத்த தர்மத்தை விருத்தி செய்வதையும் உத்தியோகத்தின் ஓர் அம்சமாகக் கொள்ள வேண்டுமென்று உத்தரவு செய்தான். இவர் தவிர தன் நாட்டில் பௌத்த தருமத்தைப் பற்றிப் பிரசாரம் செய்வதற்கென்றே சில

உத்தியோகஸ்தர்களையும் நியமித்திருந்தான். இவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு வீட்டிலும் சென்று பௌத்த தருமத்தின் மேன்மையைச் சொல்லி அதன்படி நடக்க வேண்டுமென்று வற்புறுத்தும்படி கட்டளையிடப்பட்டிருந்தார்கள். இன்னின்ன ஜாதியாரிடத்தில் இன்னின்ன விதமாக நடக்க வேண்டுமென்றும் இவர்கள் கூறப்பட்டிருந்தார்கள். இவ்வளவு ஒழுங்கான ஏற்பாடுகளினாலேயே பௌத்த மதம் மிக உயரிய நிலைக்கு வந்தது. இங்ஙனமே கனிஷ்கனும் பௌத்த மதத்தைப் பிரசாரம் மூலமாக விருத்தி செய்து வந்தான் என்று சொல்லப்படுகிறது. முகம்மதியர் ஆட்சியிலும் இத்தகைய பிரசார வேலைகள் நடைபெற்றன வென்று தெரிகிறது.

* * *

தென்னாட்டில் தமிழ் மன்னர் ஆட்சியிலும் சிவனடியார்களும் வைணவ பாகவதர்களும் ஆங்காங்கு தத்தம் சமயத்தின் பெருமையைப் பற்றிப் பிரசாரம் செய்து வந்தார்கள் என்பதில் ஐயமில்லை. சமய குரவர்கள் தம் அடியார் குழாத்துடன் ஊர் ஊராகச் சென்று ஈசனைத் தொழுது வந்தனர் என்பதனால் அறியக் கிடப்பதென்னை? வங்காளத்தில் கிருஷ்ண சைதன்யர் தம்முடைய சிஷ்ய கோஷ்டியுடன் இடம் இடமாகச் சென்று பக்தி மதத்தைப் பரவச் செய்வதைப் பிரசார வேலை என்று கூறுது வேறென்னென்று கூறுவது? எனவே, இந்தியாவுக்குப் பிரசார வேலை புதிதல்லவென்பதும் குறைந்தது இரண்டாயிரம் ஆண்டுகள் முதல் இப்பிரசாரம் ஏதேனும் ஓர் துறையில் நடந்து வருகிறதென்பதும், இப்பொழுது நாம் செய்யும் பிரசார வேலை மேனாட்டாரிடமிருந்து கற்றுக் கொண்டதல்லவென்பதும் நன்கு விளங்கும்.

பிரசாரம் செய்வது என்பதற்கு, குறித்த ஓரிடத்தில் குறித்த ஒரு விஷயத்தைப் பற்றி உபந்நியாசம் செய்வது என்று மாத்திரம் பொருளல்ல. எந்த நோக்கத்தோடு ஒருவன் பிரசாரம் செய்கிறானோ அந்நோக்கத்தை அனைவருக்கும் விளக்க வேண்டுவது, பிரசாரகனின் கடமையாகும். சுயராஜ்யப் பிரசாரகன் ஒருவன், ஓர் ஊரில் சென்று பொதுவான ஓர் இடத்தில் சிலரைக் கூட்டி சுயராஜ்யம் வேண்டிய அவசியத்தைப் பற்றி அழகாக உபந்நியாசம் புரிந்து வந்து விடுவானாகில் அவன் தன் கடமையைச் செய்தவனாகக் கருதப்படமாட்டான். இங்ஙனம் உபந்நியாசம் செய்து திரும்பி விட்டானேயாகில் அதனால் அவ்வூரில் உண்மையான உணர்ச்சி ஏற்படாது. அக்கூட்டத்திற்கு எத்தனைபேர் வந்திருப்பர்? அக்கூட்டம் நடைபெற்றதே பலருக்குத் தெரியாமலிருக்கலாம். அல்லது அக்கூட்டத்திற்கு வந்திருந்தோரில் பலருக்குப் பலவிதமான சந்தேகங்கள் தோன்றி அவைகளைத் தீர்த்துக் கொள்ள வழியறியாது இடர்ப்படலாம். அல்லது சுயராஜ்யக் கட்சிக்கு மாறுபட்டோர், உபந்நியாசம் செய்தவரோடு நியாயவாதம் புரிந்து பல உண்மைகளைத் தெரிந்துகொள்ள விரும்பலாம். இத்தகையோருடைய ஆவல்களை உபந்நியாசம் ஒன்றினால் மட்டும் தீர்த்து வைக்க முடியுமோ?

ஆதலின் சுயராஜ்யப் பிரசாரகர் ஒவ்வொருவரும் தாம் செல்லும் ஊர்களில் முதலில் ஓர் உபந்நியாசம்,

செய்துவிட்டு, பிறகு, அவ்வூரிலிருக்கும் செல்வாக்குள்ள சிலரைக் கண்டு பேசவேண்டும். அவ்வூராருக்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை விசாரித்துத் தம்மால் கூடுமான குறைகளைத் தீர்த்து வைக்க முயற்சி செய்ய வேண்டும். நாட்டில் தற்போது எத்தகைய அரசாங்கம் நடைபெறுகிற தென்பதையும், இவ் வாட்சி முறையில் ஜனங்களுக்கு உண்டாகும் நன்மைகளையும் தீமைகளையும், சுயராஜ்யம் வந்தால் இந்தியர்கள் எந்நிலையில் இருக்கலாம் என்பதையும் ஒவ்வொருவருக்கும் தம் சக்திக் கியன்றவாறு விளங்கக் கூற வேண்டும். தேசிய மகாசபையார் எத்தகைய வழிகளில் பிரசாரம் செய்ய வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கின்றனரோ அதன் படியே நடக்க வேண்டும். பொதுவாக இவ்வளவே கூற முடியும். ஏனெனின், சுயராஜ்ய பிரசாரம் செய்வோர் அனைவருக்கும் பொதுவாக இருக்கும் படியே இவ்வியாசம் எழுதப்பட்டதாதலின், இன்ன பிரசாரகர் இன்ன மாதிரி நடந்துகொள்ள வேண்டுமென்று ஈண்டுக்குறிப்பிடுதல் அசாத்தியமாகும்.

* * *

பிரசாரம் செய்வோர் தாங்கள் கூறுகிற வண்ணமே அநுஷ்டித்துக் காட்ட வேண்டும். அஃதன்றி அந்நிய ஆடைகளைப் பகிஷ்கரிக்கவேண்டுமென்று பிரசாரம் செய்வோன் ஒருவன், அந்நிய ஆடைகளை உடுத்திக் கொண்டிருப்பானாகில், அவன் பிரசாரத்தினால் என்ன நன்மைகள் விளையும்? அவனுடைய வார்த்தைகளுக்கு ஜனங்கள் என்ன மரியாதை கொடுப்பார்கள்? காந்தியடிகளுக்கு இப்பொழுதுள்ள பெருமை எங்ஙனம் ஏற்பட்டதென்பதை ஒவ்வொருவரும் இவ்விஷயத்தில் ஆராய்தல் அவசியம். கற்றபடி நிற்றலே அறிஞர்க்கு அழகு. பிறருக்கு வழிகாட்ட விரும்புவோன் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஜனங்களின் மனதை நல்ல நிலையில் நிறுத்துவதோ தீய வழியில் செலுத்துவதோ பிரசாரகருடைய வசத்தில் இருக்கின்றதால் அவர் தம்முடைய கருமத்தில் கண்ணுங் கருத்துமாயிருக்க வேண்டும்.

* * *

பிரசாரம் செய்வோர் சுயநலப் போர்வையைக்கழற்றி எறிந்து வெளிவருதல் வேண்டும். ஊர்வலங்களுக்கும் பூமாலைகளுக்கும் கை கொட்டுதலுக்கும் அவர் ஆசைப்படக்கூடாது. உபந்நியாசம் செய்வதிலேயே தேச சேவை அடங்கி யிருக்கிறதென்று பிரசாரகர் எண்ணுவாரானால் அது பேதமையே யாகும். தேசசேவை செய்வோர் எவ்வளவுக் கெவ்வளவு குறைவாகப் பேசுகின்றனரோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது என்று அறிஞர் அபிப்பிராயப்படுகின்றனர். பிரசாரகர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல் கூடாது. அக வாழ்க்கையிலும் புற வாழ்க்கையிலும் அவர் தூயராக இருத்தல் வேண்டும். பிரசங்கங்கள் செய்யும் போதும் பிரசாரம் செய்யச் செல்லும் போதும் பரிசுத்தர் போல் பாசாங்கு செய்து மிகக் கம்பீரமாக நடந்து கொள்வது போல் காட்டிக் கொள்ளுதலும் பிறகு இழிதுறையில் இறங்கி நடமாடுதலும் பொருந்தாவாம். எப்பொழுதும் ஒரே படித்தாய் இருத்தல் வேண்டும்.

* * *

பிரசாரகர், அனைவரிடத்திலும் சம உணர்ச்சி பாராட்ட வேண்டும்: இன்

ஞர் உயர்ந்தவர், இன்ஞர் தாழ்ந்தவர் என்ற வேற்றுமை எண்ணம் தேச ஊழியம் புரிவோரிடத்தில் இருக்கு மாயின் அவர் தேசத்திற்குத் தீங்கு செய்தவ ராகவே கருதப்படுவார். ஆண்டவன் படைப்பில் இன்ன மனிதர் உயர்ந்தவர், இன்ன மனிதர் தாழ்ந்தவர் என்ற வேற்றுமை கிடையாது. ஆதலின், பிரசாரம் செய்வோர், நற்குலை முள்ளோர்—அவர் பஞ்சமராயினும் அந்தணராயினும் வேறு எவராயினும்—அனைவரிடத்திலும் சமமாகப் பழகி அவர்களுடைய குறைகளை விசாரித்தறிய வேண்டும். தன்ஞலியன்ற நன்மதியை அவர்களுக்குப் புகட்ட வேண்டும். எவரையும் குளிர்ந்த பார்வையுடன் நோக்க வேண்டும். இன்ப வசனங்களால் பேச வேண்டும். தனக்கே தேசாபிமானம் இருக்கிறதென்று எந்தப் பிரசாரகனும் இறுமாப்படையாம லிருக்கக் கடவன். எப்பொழுதும் எவரிடத்திலும் தாய் மொழியையே பேச வேண்டுமென்ற விதியை ஒவ்வொரு பிரசாரகனும் கட்டாயமாய் அநுசரிக்க வேண்டும். பாஷாபிமானம் இல்லாதான் தேசாபிமானி யென்று வெளி வருதல் போலியே யாகும். பிரசாரம் செய்யச் செல்வோர் எல்லா விதத்திலும் சாதாரண மனிதர் போலவே நடந்து கொள்ளவேண்டும். உண்பதிலாவது, உடுப்பதிலாவது, ஊர்தியின் மேலேறிச் செல்வதிலாவது வேறெதிலாவது எவ்வித பெருமிதத்தையும் காட்டிக்கொள்ளக் கூடாது.

* * *

பிரசாரம் செய்யச் செல்வோர் ஏறக்குறைய எல்லா விஷயங்களையும் தெரிந்துகொண்டிருப்பவராய் இருக்க வேண்டும். இரண்டொரு நூல்களை மேற்போக்காகப் பார்த்து விட்டு எல்லாவற்றையும் அறிந்த மாதிரி பேசும் வழக்கம் இக்காலத்தில்—முக்கியமாகத் தமிழ் நாட்டில்—மிகுந்து கிடக்கின்றது. தினசரிப் பத்திரிகைகளைப் படித்து விடுவதனுல் ஒருவனுக்கு எல்லாவித ஞானமும் கைகிட்டி விடாது. அத்தகையோர் பிரசாரம் செய்ய அருகர் அல்லர். குறித்த ஒரு விஷயத்தைப் பற்றி நன்கு ஆராய்ச்சி செய்து பிறகு அதனைப்பற்றிப் பேசுதலே அழகுடைத்தாம். அஃதன்றி 'எனக்குப் பேசத்தெரியாத விஷயமும் உண்டோ' என்று சொல்லி, புல்லறிவுடையோர் கைகொட்டி நகைக்கும் வண்ணம் கண்டபடி உளறிப் பொது ஜனங்களின் உள்ளத்தை ஆபாசப் படுத்துதல் அழகன்று. தான் எடுத்துக்கொண்ட முயற்சியின் அளவுக்காவது விஷயங்களை அறிந்துகொள்ள ஒவ்வொரு பிரசாரகனும் கடமைப்பட்டிருக்கிருன்.

* * *

தேச சேவை செய்வோர் உபந்நியாசங்களிலாவது சம்பாஷணைகளிலாவது வேறெக் காலத்திலாவது எவரையும் தூஷித்தல் கூடாது; கடுமையான பதங்களை உபயோகித்தல் கூடாது. பிரசாரம் செய்வோருடைய நோக்கத்துக்கு மாறுபட்டவருடைய அபிப்பிராயங்களைத் தருக்க முறை வழுவாமல் கண்டிக்க வேண்டுமேயன்றி எவ்விதத்திலும் அவர்களைத் திட்டக் கூடாது. ஆள் மீது பாய்வது எக்காலத்திலும் கீழான செயலாகும். இந்தக் கொடுமை தமிழ்நாட்டுப் பிரசாரகர்களிடத்தில் அதிகமாக இருந்து வருகிறதென்றகுறை எங்கணும் இருக்கிறது. அஃது ஒழிய

மனிதனது சிறுமையும் பெருமையும்

—ச. மு.

வரம்பற்ற வழக்கமே நமக்குப் பெரிய சத்துரு. பழகப் பழகப் பாலும் புளிக்கு மென்பது பொய்யல்ல. உலகத்தில் ஆச்சரியப்படத் தக்க விஷயங்கள் அநேக மிருந்தும் அவற்றைத் தினந்தோறும் பார்த்துக் கொண்டிருப்பதினாலேயே நாம் அவைகளைப்பற்றிச் சிறிதும் ஆச்சரியப்படாம லிருக்கின்றோம். அவைகள் என்ன, எப்படிப்பட்டவையென்று கவனித்துப் பார்ப்பது கூட இல்லை. குழந்தைகளும், யாராவது வீட்டுக்குப் புதிதாய் வந்தால் அவர்கள் முகத்தை உற்றுப் பார்க்கின்றனவே யன்றி எப்போதும் பழகுகிற தாயின் முகத்தைப் பார்க்கிறதில்லை. பிரமதேவனே இரண்டு வேளைக்கு மேல் நம் வீட்டுக்குவந்தால் கவனிக்க மாட்டோம் போலிருக்கிறது. உதாரணமாக, ஆகாயத்தை நாம் எப்பொழுதாவது ஆச்சரியத்துடன் பார்க்கிறோமா? அதைக் கண்ணெடுத்துப் பார்ப்பதே அரிதாயிருக்கின்றது. யாராவது ஆகாயத்தையே சற்று நேரம் உற்றுப்பார்த்தால், அவனைப் பித்தம் பிடித்தவன் என்கிறோம். இப்பொழுது நான் திடீரென்று என் கையை நீட்டி சூரியனைப்பிடித்தேனேயானால் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். என் கையை நீட்டி துடைப்பத்தை எடுத்தால் அதுமட்டும் அதிசயமில்லையாம்! என் கையில் ஒரு பொருளை எடுக்கிற சக்தி எனக்கிருப்பதே ஆச்சரியமல்லவா? நாலடி தூரத்திலிருக்கிற பொருளை எடுத்தாலென்ன? நூறடியிலிருக்கிற பொருளை எடுத்தாலென்ன? இரண்டும் ஒன்றேதான். அதே மாதிரியாக ஆகாயத்தில் இது வரையில் சூரிய சந்திர நட்சத்திரங்களே இல்லாதிருந்து, நாளைக் காலையில் திடீரென்று உதயமானால் அந்த ஆச்சரியத்தைச் சொல்ல வார்த்தை அகப்படாமல் திணறித் தத்தளித்துப் போவோம். நம்முடைய மந்த புத்தியைப் பாருங்கள்! நிமிஷத்துக்கு நிமிஷம், ஆகாயத்தின் தோற்றம் மாறிக்கொண்டேயிருக்கிறது. மேகங்கள் ராஜ வைபவமாயிருக்கின்றன. சந்திரனோ அள்ளிக்

வேண்டும். அப்பொழுதே பிரசாரகருடைய பெருமையும் உண்மையான நோக்கமும் நன்கு புலப்படும்.

சுயராஜ்யப் பிரசாரகர் அனுஷ்டிக்க வேண்டியவை அனைத்தும் மேலே கூறப்பட்டன வற்றுள் அடங்கி விட்டன என்று எவரும் எண்ணக் கூடாது. அவரவர் மனச் சாட்சிக்கு மாறுபடாதபடி கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று அஞ்சி நடக்க வேண்டும். இடம் பொருள் ஏவல் என்ற மூன்றனையும் முன்னிட்டு அவரவர் சௌகரியப்படி நடந்து கொள்வதை எவரும் ஆட்சேபிக்க மாட்டார். மேற் கூறப்பட்ட சில முறைகளின்படி தேசபக்தர்கள் பிரசாரம் செய்து வருவார்களானால், நாம் எதிர்பார்ப்பதைவிட விரைவாகச் சுயஆட்சி பெறலாம் என்பதற்கு என்ன தடை?

கொண்டு போகிற அழகுடன் அடக்கமும், நாணமும், சாந்தமும் பொருந்திய யுவதியைப்போல் பார்ப்பவர் மனதைக் கவர்கின்றான். இவைகளைப் பற்றி நமக்கு ஒன்றுந் தெரியாவிட்டாலும், இவைகளுக்கு முன்னோரிட்ட பெயரை நாமும் காதினால் கேட்டு வாயில் சொல்லி விட்டதனாலேயே எல்லாம் தெரிந்து விட்டதாகப் பாவித்து, எருமையின்மேல் மழை பெய்வது போலும், சங்கீதக் கச்சேரியில் செவிடனை உட்கார வைத்தது போலும், சித்திரசாலையில் குருடனை நிறுத்தியதுபோலும் உணர்ச்சியற்றவர்களாய் இருக்கின்றோம்.

ஆனால் இப்பொழுது பேச வந்தது ஆகாயத்தைப் பற்றியல்ல. பயிர்களுக்குவேண்டிய மழைமட்டும் பெய்து விட்டால், அதற்குப் பிறகு நாம், அதைக் கவனிக்க வேண்டியதில்லை. மனிதனையே எடுத்துக் கொள்வோம். ஒருவனைப்பற்றித்தான் நமக்கு எவ்வளவு கேட்டாலும், சலிப்புண்டாகிறதில்லை; நாமும் ஒரு மனிதனா யிருக்கிறபடியினால், மனித ஜாதியைப் பற்றித்தான் நமக்கென்ன தெரிந்து விட்டது? எங்கிருந்தோ வருகிறான், எங்கேயோ போகிறான். ஒருவன் பிறக்கும்பொழுது சங்கீத ஞானத்துடன் பிறக்கிறான்; இன்னொருவன் வரகவியாகப் பிறக்கிறான்; ஏனென்று தெரியவில்லை. மூச்சிருந்தால், உயிர் இருக்கிறது என்கிறோம். உயிர் என்றால் என்ன? சாவென்றால் என்ன? உயிருடனிருந்தது யார்? செத்த பிறகு இருப்பது என்ன? நாம் ஏன் வந்தோம்? நாம் எங்கே போகிறோம்? சாவோடு முடிந்ததா? அப்புறம் ஏதாவதுண்டா? நாம் கட்டையா, முட்டையா, மண்ணாங் கட்டியா, ஆத்மாவா, ஐம்புலனா, மனதா, புத்தியா, எல்லாமா, ஒன்றுமில்லையா என்று கேட்டால் யாரால் சொல்ல முடியும்! பெரிய வேதாந்த சாஸ்திரிகளெல்லாம் விழிக்கிறார்கள். கண்ணைக் கட்டிக் காட்டில் விடப்பட்டவர்கள் போல் கையால் தடவிப்பார்த்துக் கொண்டு நாம் இவ்வாழ்வில் ஊர்ந்து கொண்டு போகின்றோம். நாம் எவ்வளவுக் கெவ்வளவு உண்மையை யறியப் பிரயத்தனப் படுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு வானமும், பூமியும் சேருமிடத்தைப்போல் உண்மை ஒதுங்கிப் போகிறது. 'மனிதன் ஒரு பூச்சி! உலகத்தைப்பற்றி அவனுக் கதிகமாகத் தெரியாது; தன்னைப் பற்றி ஒன்றுமே தெரியாது' என்றொரு கவி சொல்லி யிருக்கிறார். இவ்வளவு தூரம் சிருஷ்டியின் அதிசயத்தையும், அதை நமது அற்ப அறிவால், அளவிடக்கூடாதபடி மறைந்து நிற்கும் இருளையும் கண்டு ஒப்புக்கொள்வதே ஒருவன் ஞானி என்பதற்கு முதலடையாளமாக விருக்கிறது. இவ்வளவு தூரம் ஆராய்ந்தறிந்ததே நூற்றி லொருவர்தான். ஜனங்களோ, சமுத்திரத்தில் மீன் பிடிக்கும் செம்படவனுக்கு அலைகளின் கம்பீரமான அழகைக் கண்டு அதிசயிக்க நேரமில்லாதது போல், வயிற்றுப் பிழைப்பின் சந்தடியில், இந்தத் தத்துவ விசாரத்துக்குச் சாவகாசப்படாமல் நிமிஷத்துக்கு நிமிஷம் புதிது புதிதாய் ஒன்றுக்குமே லொன்றாய்க் கிளம்பி வரும் சம்சாரக் கவலைகளில் மூழ்கித் தத்தளிக்கிறார்கள். ஆனால் எக்காலத்திலும் எத்தேசத்திலும் சில துணிந்த கட்டைகள் மட்டும் இவ்வுலகில் பழத்தைத்தின்று கொட்டையைப் போட்டு விடுகிறார்கள். அப்படிப் பட்டவர்களிலொருவராகிய

ஸ்ரீ கிருஷ்ண பகவான், அர்ஜுனனுக்குச் செய்த உபதேசத்தைப்பற்றிக் கொண்டு ஊசியின் வழிசெல்லும் நூல் போல் நாமும் எட்டின மட்டும் போய்ப்பார்ப்போம். உடலுக்கு மேற்பட்டது மனம்; மனதிற்கு மேல் புத்தி அல்லது பகுத்தறிவு; அதற்கப்பாலிருப்பது ஆன்மா.

•

மனிதனே சிருஷ்டியில் உத்தம சிருஷ்டி யென்று சாஸ்திர ஆராய்ச்சியுள்ளவர்கள் சொல்லுகிறார்கள். அவனுடைய சரீரத்தை மட்டும் கவனித்தால், அவனை அவ்வளவு உயர்த்திச் சொல்ல இடமில்லை அமைப்பிலும், உருவத்திலும், மனித சரீரம் தீர்ந்த வேலைப் பாடுடையதா யிருந்தாலும், அதைக் காட்டிலும் உறுதியாயும், அழகாயும், கம்பீரமாயும் அமையப் பெற்ற உடலோடு கூடிய பிராணிகள் எத்தனையோ இருக்கின்றன. எல்லா விதத்திலும் குதிரையின் உடலைப் போல் அவ்வளவு தேகக்கட்டு வேறு பிராணிக்குக் கிடையா தென்று ஒரு சரீர சாஸ்திர பண்டிதர் சொல்லுகிறார். நீண்ட கொம்புகளுடன் ஒரே நிதானமாய் நடந்து வரும் ஆண் யானையின் அழகு பெரிய பயில்வான்களுக்குக் கூட வாராது. ஒரு சிங்கத்தின் முகத்திலிருக்கும் பெருந்தன்மை ராஜ குமாரர்கள் முகத்திலில்லை. ஒரு கோவிற் காளையின் கொண்டை யழகுக்குத் தினந்தோறும், கஸரத் செய்து பலமேறப் பெற்றவனுடைய புஜம் ஈடாகாது. மயிலின் தோகை யழகுக்கு எந்த ஸ்திரீயின் கூந்தல் இணையாகும்? அல்லது எந்த ராஜ குமாரத்தியின் கை கிளிப்பிள்ளையின் சிறகைப்போல் அவ்வளவு மிருதுவா யிருக்கிறது! ஆகாயத்தில் சிறகசையாமல் மிதந்து கொண்டிருக்கும் கருடனுடைய ஆநந்தம் பூமியில் உழன்று கொண்டிருக்கும் மனிதனுக் கில்லை. பார்க்கப் போனால், மனித தேகத்தைப் போல் அவ்வளவு சீக்கிரம் அழுக்குப் பிடித்து ஆபாசமாய்ப் போகிற வஸ்து கிடையாது. தெருவில் போகும் முகங்களை எல்லாம் உற்றுப் பார்த்தால் பத்து முகத்துக்கு ஒரு முகம் பாதக மில்லை என்று சொல்லக் கூடிய அழகாயிருக்கிறது. அதற்கு மேற்பட்ட அழகு வேண்டு மானால், ஒரு ஜில்லாவில் இரண்டு பேரைப் பொறுக்கி எடுக்கலாம். ஆதலால் மனிதனுடைய பெருமை தேகத்திலில்லை. 'இந்த உடலோடு கூடியிருக்க வெட்கமாயிருக்கிறது' என்று பட்டினத்தார் சொல்லி யிருக்கிறார். சிலருக்குச் சிற்சில சமயம் ஏதாவது ஒரு உதட்டிலோ, புருவத்திலோ மட்டும் தோன்றுகிற 'ஜீவகளை' என்னும் வசீகர சக்தி யானது, அந்த ஆத்மா ஞானத்தி லடைந்திருக்கும் சொற்ப பக்குவத்தினாலேயே யன்றி அவ்வவயவங்களின் அமைப்பிலில்லை. கடவுள் ஒவ்வொரு முகத்திலும் ஒருவித அழகு வைத்தேதான் சிருஷ்டித்திருக்கிறார். அதை நூற்றிலொரு முகத்தில் தவிர மற்றவர்களிடத்தில் வெளிப்படாமல் தடுப்பது அவர்களுடைய தீச் செயல்களே. தேகத்தை விட்டு ஐம்புலன்களுக்குப் போனாலோ அங்கேயும் மனிதனுக்கு அதிக யோக்கியதை யில்லை. கருடனுடைய தீட்சண்ய பார்வை நமக் கெட்டாது. மோப்பத்தில், பகுத்தறியும் நாய்க்குள்ள சக்தி நமக்கில்லை. சங்கீதத்திலும், வாசனைகளிலும் சர்ப்பங்களுக்குள்ள நுண்ணறிவு ஆயுள் முழுதும் சுகஜீவியா யிருப்பவர்களுக்குக்கூட வராது. ராகத் துவேஷங்களி

லும், காமக் குரோதங்களிலும் மனிதன் சில சமயங்களில், மிருகங்களை நல்லவனாக்கி விடுகிறான். மிருகங்கள் தங்கள் குட்டிகளைக் கொல்லாது. சில மனிதர்கள் குழந்தைகளையும், வேறு சிலர் தங்கள் பெற்றோரையும் சில சமயங்களில் கொன்று விடுவார்கள். புலி, நரியைக் கொல்லுகிறதில்லை. சிங்கம், பூனையைக் கொல்லுகிறதில்லை. மனிதனோ தன் பசிக்கு இன்ன ஜந்துவைத்தான் கொல்லுகிறதென்று விவஸ்தையில்லை. ஆடோ, மாடோ, கோழியோ, மானோ, குயிலோ, நண்டோ, மீனோ, எலியோ, அணிப் பிள்ளையோ எல்லாவற்றையும் விழுங்கி விடுகிறான். மனிதனை மனிதனே அடித்துச் சாப்பிடுகிற ஜாதியுமிருக்கிறார்கள். அவர்களைப் பார்க்க வேண்டுமானால், காட்டுக்குப் போக வேண்டுமென்று நினைக்க வேண்டாம். தாயாதி என்கிற வார்த்தைக்கு ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவன் என்கிற அருத்தம் வந்து விட்டது. எறும்புகளுக்கும் தேனீக்களுக்கு மிருக்கிற ஒற்றுமை சகோதரர்களுக்குள் இல்லை. மிருகங்கள் பகுத்தறிவு சுய புத்தியில்லாமலும், கேவலம் பசியினால் மட்டும் தூண்டப்பட்டுச் செய்யும் காரியங்களைத் தாமறிந்து செய்கிற காரியங்களாகச் சொல்லக் கூடாது. தன்னறிவு என்கிற சுயபுத்தியுள்ள மனிதர்கள் செய்யுங் காரியங்களைப் பார்த்தால், அவர்களை மிருகங்களுக்குச் சமானமாகச் சொல்லுகிறோமென்று தெரிந்தால், மிருகங்கள் சண்டைக்கு வந்தாலும் வரலாம். இதையெல்லாம் பார்த்து விட்டுச் சகிக்காமல் சில பேர்கள் தற்கொலை செய்து கொள்வது அதிசயமா? 'தன் வாழ்நாளில் ஒரு முறையாவது நிஜமாய்த் தற்கொலை செய்து கொள்வோமா வென்று யோசிக்காதவன் மனிதனல்ல' என்று ஒரு வித்வான் சொல்லியிருக்கிறார். இன்னொரு ஞானி 'மனிதன் மட்டும் சற்று அவசரப்படாமல், இரைச்சல் போடாமல் நிதானிப்பானானால், உலகத்திலுள்ள கஷ்டங்களில் பாதிக்கு மேல் தானே நீங்கிவிடும். ஆனால், அது எங்கே இருக்கிறது. அது அவனால் முடியாத காரியம்' என்கிறார். ஆகலால், கெட ஆரம்பித்தால் மனிதனைப் போல கெட்டுப் போகக் கூடிய ஜந்து வேறில்லை. உலகத்திலுள்ள கெட்ட ஜந்துக்களின் கெட்ட குணங்களையெல்லாம் ஒரு மடங்கு அதிகமாகவே மனிதனொருவனிடத்தில் காணலாம்.

காபி உற்பத்தியை, ஒரு விவசாயத் தொழிலாக முதன் முதல் கையாண்டவர் மிஸ்டர் கான்னன் என்ற ஓர் ஐரோப்பியர். இவர் 1830ம் வருஷம் மைசூர் சமஸ்தானத்திலுள்ள சிக் மக்களூருக்கு அருகாமையில் சில ஏக்கராக்களை வாங்கி காபியைப் பயிரிட ஆரம்பித்தார். 1862ம் வருஷத்தில், தென்னிந்தியாவில் காப்பி உற்பத்தித் தொழில் மிக்க உயர் ஸ்திதியிலிருந்தது.

காந்தி-போஸ் நிருபங்கள்

1939ம் வருஷம் மார்ச் மாதம் இரண்டாவது வாரத்தில் திரிபுரியில் காங்கிரஸ் நடைபெறுவதற்கு முன்னரும் பின்னரும் இந்திய தேசிய வாழ்க்கையில் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கொந்தளிப்பின் மூல காரணங்களையும் இதன் பரிணாமங்களையும் ஒருவாறு தெரிந்து கொள்வதற்கு காந்தி-போஸ் நிருபங்கள் பெரிதும் துணை செய்கின்றன, மற்றும், காங்கிரஸ் இதிகாசத்தில் இந்த நிருபங்கள் ஒரு மைல்கல் போன்றவை. எனவே, இவற்றின் முழு விவரங்களையும் இங்குத் தருகிறோம்.

1

சுபாஷ் தந்தி

ஜீல்கோரா
24-3-39

மகாத்மா காந்தி,
பிர்லா மாளிகை,
புது டெல்லி.

காங்கிரஸ் வேலை சம்பந்தமாக சரத் சந்திர போஸினிடத்தில் தாங்கள் சொன்ன யோசனையைப்பற்றிக் கலந்து ஆலோசிக்க என்னால் தங்களை நேரில் கண்டு பேச முடியவில்லை. ஆகையால் தங்களோடு கடிதப் போக்குவரத்து ஆரம்பிக்க விரும்புகிறேன். விரிவான கடிதம் எழுதுகிறேன்.

சுபாஷ்.

2

காந்தி தந்தி

புது டெல்லி
25-3-39

ராஷ்டிரபதி போஸ்,
ஜீல்கோரா.

தங்கள் தந்தி கிடைத்தது. மௌலானா (அஸாத்) என்னைக் கண்டுபேச வேண்டுமென்ற ஆவலுடையவராயிருந்ததினால் நேற்று அலகாபாத்திலிருந்தேன். ரெயிலிலிருந்து தங்களுக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறேன். உங்கள் கடிதத்தை எதிர்பார்க்கிறேன். தாங்கள் சௌக்கியமாகிக் கொண்டு வருகிறீர்கள் என்று நம்புகிறேன். அன்பு.

பாபு.

3

சுபாஷ் தந்தி

ஜீல்கோரா
25-3-39

மகாத்மா காந்தி,
பிர்லா மாளிகை,
புது டெல்லி.

தங்களுடைய இன்றைய தந்தி கிடைத்தது. தங்கள் கடிதம் கிடைக்

கிற வரையில் என் கடிதத்தைத் தபாலில் சேர்ப்பிக்காமல் வைத்திருக்கிறேன்.

சுபாஷ்.

4

சுபாஷ் தந்தி

ஜீல்கோரா
26-3-39.

மகாத்மா காந்தி,
பிர்லா மாளிகை,
புதுடேல்லி.

தங்கள் கடிதம் கிடைக்கவில்லை. ஆகையால் என்கடிதத்தைத் தபாலில் சேர்ப்பித்திருக்கிறேன்.

சுபாஷ்.

5

சுபாஷ் கடிதம்

ஜீல்கோரா
25–3–39

என் அன்புள்ள மகாத்மாஜீ,

காங்கிரஸ் விஷயங்களில் ஒரு நெருக்கடி ஏற்படுவதற்கு நான் காரணமாக இருந்ததாக என் மீது குற்றம் சாட்டப்படுகிறது. அதற்குப் பதிலாக நான் இன்று (25–3–39) விடுத்த அறிக்கையைத் தாங்கள் பார்த்திருப்பீர்களென்று நம்புகிறேன். நம் முன்னே நிற்கும் தற்பொழுதைய அவசரமான பிரச்னை, புதிய காரியக் கமிட்டியின் அமைப்பைப் பற்றியதேயாகும். இந்தப் பிரச்னையை நாம் சமரஸமாகத் தீர்ப்பதற்கு முன்னர் விரிந்த போக்குடைய இன்னும் சில பிரச்னைகளையும் நாம் கவனிக்க வேண்டியதிருக்கிறது. ஆயினும் முதல் பிரச்னையையே நான் இங்கு எடுத்துக் கொள்ளுகிறேன்.

கீழ்க்கண்ட விஷயங்களைப் பற்றித் தங்களுடைய அபிப்பிராயத்தை தெரிவித்தால் மிகவும் நன்றியுள்ளவனாயிருப்பேன்:—

1. காரியக் கமிட்டி அமைப்பைப் பற்றித் தங்கள் நோக்கம் என்ன? ஒரேமாதிரியான கொள்கையுடையவர்களைக் கொண்ட கமிட்டியாக இருக்க வேண்டுமா? அல்லது காங்கிரசின் பொது அபிப்பிராயத்தைக் கூடியவரையில் பிரதிபலிக்கக் கூடிய மாதிரி காங்கிரசிற்குள்ளேயே தோன்றி இருக்கும் கட்சிகளிலிருந்தோ அல்லது கூட்டங் களிலிருந்தோ தெரிந்தெடுக்கப் பட்ட பல கொள்கையினரையுடைய கமிட்டியாக இருக்க வேண்டுமா?

2. ஒரே கொள்கையினரடங்கிய கமிட்டியே இருக்க வேண்டுமென்று இன்னும் நீங்கள் அபிப்பிராயங் கொண்டிருப்பீர்களானல் என்போன்றூர் ஒரு பக்கமாகவும், சர்தார் பட்டேல் முதலியவர்கள் வேறொரு பக்கமாகவும் ஒரேகமிட்டியில் இருக்க முடியாதென்பது வெளிப்படை. (காரியக் கமிட்டியில் ஒரு கொள்கையினரே இருக்கவேண்டும் என்ற அபிப்பிராயத்தை நான் எப்பொழுதுமே மறுத்து வந்திருக்கிறேனென்பதை இங்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.)

3. காரியக்கமிட்டி பல கட்சியினரும் அடங்கியதாக இருக்கலாம் என்பதை நீங்கள் அங்கீகரித்தால் அவர்களுடைய பிரதி நிதித்துவம் எவ்வாறு இருக்க வேண்டும்?

காங்கிரசில் இரண்டு முக்கிய கட்சிகள் இருக்கின்றன என்று,

நான் கருதுகிறேன். இரண்டு கட்சிகளுடைய வலுவும் சமமாகவே இருக்கிறது. தலைவர் தேர்தலில் எங்களுக்கு மெஜாரிட்டி கிடைத்தது. திரி புரியிலோ அது மாறிவிட்டது. இதற்குக் காரணம் காங்கிரஸ் அபேதவாதக் கட்சியினர் நடு நிலைமை வகித்ததுதான். அவர்கள் நடு நிலைமை வகிக்காமலிருந்தால் இன்னும் பல இடைஞ்சல்களுக் கிடையிலும் (அந்த இடைஞ்சல்கள் என்ன என்பதை மறு கடிதத்திலோ அல்லது நேரில் நான் சந்திக்கிற போதோ கூறுகிறேன்) எங்களுக்கு காங்கிரஸ் பகிரங்கக் கூட்டத்தில் மெஜாரிட்டி கிடைத்திருக்கும்.

4. காரியக் கமிட்டியில் நான் கூறும் ஏழு பெயர்களையும் சர்தார் பட்டேல் கூறும் ஏழு பெயர்களையும் அங்கீகரித்து நியமிக்கப் படுமானால் அது சரியான ஏற்பாடாக இருக்கு மென்று எனக்குத் தோன்றுகிறது.

5. நான் தலைவனாக இருந்து ஒழுங்காக என் கடமைகளைச் செய்ய வேண்டுமானால் என் விருப்பத்திற் கிணங்கின பொதுக் காரியதரிசி இருக்க வேண்டுவது அவசியமாகும்.

பொக்கிஷதாருடைய பெயரை சர்தார் பட்டேல் சிபார்சு செய்யலாம்.

பண்டித கோவிந்த வல்லபபந்தின் தீர்மானத்தில் அடங்கியுள்ள இரண்டொரு விஷயங்களைப்பற்றி இங்குச் சொல்ல விரும்புகிறேன். (இதைப் பற்றி விரிவாக வேறொரு கடிதத்தில் எழுதுகிறேன்.) முதலாவதாக அது, என் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று நீங்கள் கருதுகிறீர்களா? அது காரணமாக நான் ராஜீநாமா செய்துவிட வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா? இந்தத் தீர்மானத்தை ஆதரித்தவர்கள் உள்பட பலரும் பலவிதமாக இதைப்பற்றி வியாக்கியானம் செய்வதாலேயே தங்களை நான் இந்தக் கேள்வி கேட்கிறேன்.

இரண்டாவது, பண்டித பந்த் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு பிரசிடெண்டினுடைய நிலைமையென்ன? காங்கிரஸ் சட்டத்தின் 15-வது விதியானது, காரியக் கமிட்டி அமைப்பு சம்பந்தமாக பிரசிடெண்டுக்குச் சில அதிகாரங்களை அளித்திருக்கிறது. அந்த விதி இதுவரையில் மாற்றப்படாமல் காங்கிரஸ் சட்டப் புத்தகத்தில் இருக்கிறது. ஆனால் தங்களுடைய விருப்பப்படி நான் காரியக் கமிட்டியை அமைக்க வேண்டுமென்று பண்டித பந்தின் தீர்மானம் கூறுகிறது. இதன் விளைவு என்ன? எனது நிலைமை என்ன? தங்கள் இஷ்டப்படியும் அபிப்பிராயப்படியும் காரியக் கமிட்டி அங்கத்தினர்களின் ஜாபிதாவை நீங்கள் தயாரிப்பதும், அந்த முடிவை நான் வெளியிடுவதுமா? 15-வது விதியை மாற்றாமலே அந்த விதியைப் புறக்கணிப்பதாயிருக்கிறது பண்டித பந்தின் தீர்மானம்.

பண்டித பந்த் தீர்மானத்தின் இந்த பாகம் சட்ட விரோதமான தென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். உண்மையில் பண்டித பந்த் தீர்மானம். காலம் கடந்து வந்ததால் அஃது ஒழுங்கு மீறியதாகும். காங்கிரஸ் பகிரங்கக் கூட்டத்தில் கொண்டுவரப்

பட்ட தேசியக் கோரிக்கைத் தீர்மானத்திற்கு ஸ்ரீ சரத் சந்திர போஸ் கொண்டுவந்த திருத்தப் பிரேரணை ஒழுங்கு மீறியதென்று கூறி மௌலானா அஸாத்‡ நிராகரித்து விட்டது எப்படி சரியானதோ அப்படியே நானும் பண்டித பந்த் தீர்மானம் ஒழுங்கு மீறியதென்று நிராகரித்திருந்தால் அதுவும் சரியாகவே இருக்கும். அப்படி நிராகரிக்க எனக்கு உரிமையும் இருந்தது. காரியக் கமிட்டி அமைப்பைப் பற்றி பண்டித பந்த் தீர்மானத்தில் கூறப்பட்டிருந்த பாகத்தையாவது நான் நிராகரித்திருக்க வேண்டும். ஏனென்றால் அது 15-வது விதியை மீறியது. ஆனால், ஜனநாயக மனப்பான்மையோடிருப்பதே எனது சுபாவம். எப்பொழுதுமே இந்தமாதிரியான சட்ட நுட்பங்களுக்கெல்லாம் நான் முக்கியத்துவம் கொடுப்பவனல்ல. தவிர எனக்கு விரோதமாகவே மெஜாரிட்டியிருக்கும் என்று நான் உணர்ந்த பிறகு சட்டத்தின் கீழ் பதுங்கிக் கொள்வது மனிதத்தன்மை ஆகாது என்றும் நான் கருதினேன்.

இந்தக் கடிதத்தை முடிப்பதற்கு முன்னர் வேறொரு விஷயத்தையும் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். இடையூறுகள், சங்கடங்கள், கஷ்டங்கள் இவைகளையெல்லாம் மீறி நான் பிரஸிடெண்டாக இருந்து வர வேண்டுமானால், நான் எப்படி வேலை செய்ய வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? நான் ஒரு பொம்மை பிரஸிடெண்டாக இருக்கக்கூடாதென்றும், நான் என் உரிமைகளை வலியுறுத்த வேண்டும் என்றும் சென்ற பன்னிரண்டு மாத காலமாகத் தாங்கள் அடிக்கடி கூறி வந்திருக்கிறீர்கள். பிப்ரவரி மாதம் 15-ந் தேதி வார்தாவில் நாம் சந்தித்துப் பேசியபோது என் வேலைத்திட்டத்தை நீங்கள் அங்கீகரிக்க வில்லை யல்லவா? ஒன்று, எனது தனித்துவத்தை நான் விட்டுக் கொடுத்துவிட வேண்டும்; அல்லது, என் அபிப்பிராயப்படி நான் நடக்க வேண்டும் என்று அப்பொழுது கூறினேன். அதற்கு நீங்கள் பதில் கூறிய போது, தங்களுடைய கொள்கைகளை நான் அப்படியே சுயேச்சையாக அங்கீகரியாமல், மரியாதைக் குட்பட்டுத் தங்கடைய அபிப்பிராயங்களைஏற்றுக்கொள்வது தனித்துவத்தை அழித்து விடுவதாகுமென்றும், அதனைத் தாங்கள் விரும்ப வில்லை யென்றும் கூறினீர்கள் என்பது எனது ஞாபகம். நான் பிரஸிடெண்ட் பதவியைத் தொடர்ந்து வகித்துவர வேண்டுமானால், பொம்மை பிரஸிடெண்டாக இருக்க வேண்டாமென்றே ஆலோசனை கூறுவீர்களா?

பிரஸிடெண்ட் தேர்தலுக்குப் பிறகு நடந்த சம்பவங்களையும் சிறப்பாக திரிபுரியில் நடைபெற்றவற்றையும் புறக்கணித்து விட்டு காங்கிரஸிலுள்ள எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து வேலை செய்ய முடியுமென்று கருதியே மேலே கூறிய கருத்துக்களை நான் தெரிவித்திருக்கிறேன்.

அடுத்த கடிதத்தில் சில பொதுவான பிரச்னைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். அவைகளில் சில வற்றைப்

‡ காங்கிரஸ் பகிரங்கக் கூட்டத்தின் போது ஸ்ரீ போஸ் நோய் காரணமாக தலைமை வகிக்க இயலாதிருந்தது. அப்பொழுது அப்துல் கலாம் ஆஸாத் தலைமை வகித்தார்.

—ஆசிரியர்.

பற்றி இன்றைய எனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேன்.

நான் நிதானமாகவே தேக சௌக்கியம் அடைந்து வருகிறேன். விரைவில் குணமடையாததற்குப் போதிய தூக்கமின்மையே காரணம் என்று கருதுகிறேன்.

பல ஜோலிகளுக்கிடையிலும் நீங்கள் குணமடைந்து வருகிறீர்கள் என்று நம்புகிறேன்.

நமஸ்காரம்
அன்புள்ள
சுபாஷ்.

6

காந்தி கடிதம்

ரெயில் பிரயாணத்தின் போது
பிர்லா மாளிகை விலாசம்
புது டெல்லி
24-3-39

என் அன்புள்ள சுபாஷ்,

தாங்கள் பூரண சௌக்கியம் அடைந்து கொண்டு வருகிறீர்களென்று நம்புகிறேன்.

ஸ்ரீ சரத் சந்திர போஸ் எனக்கு எழுதிய கடிதத்தின் பதிலின் நகலும் அதற்குநான் எழுதிய பதிலின் நகலும் இதனுடன் அனுப்பியிருக்கிறேன். ஸ்ரீ சரத் சந்திரருடைய கடிதத்தில் காணப்பெறுகிற அபிப்பிராயங்கள், தங்கள் அபிப்பிராயங்களாயிருந்தால்தான், என் கடிதத்தில் கூறப்பெற்ற அம்சங்கள் பொருந்தும். எப்படியோ மத்திய ஸ்தலத்திலுள்ள குழப்பம் ஒழிய வேண்டும். தற்போதைய நெருக்கடியைப் பற்றி அபிப்பிராயங் கூறுமாறு, பல முகங்களிலிருந்தும் நான் நெருக்கப்பட்டாலும், தாங்கள் கேட்டுக் கொண்டபடி மௌனமாகவே இருந்து வருகிறேன்.

பண்டித பந்த் தீர்மானத்தை நான் முதன் முதலில் அலஹாபாத்தில் பார்த்தேன். அது மிகத் தெளிவாயிருக்கிறதென்பதே என் அபிப்பிராயம். நீங்கள் தான் முதலில் காரியத்தைத் தொடங்க வேண்டும். தேசிய வேலையைக் கவனிக்க நீங்கள் எவ்வளவு தூரம் தகுதியுடையவர் என்பது எனக்குத் தெரியாது. அப்படித் தகுதியுடையவர்களில்லையானால், சட்டரீதியாக நீங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடந்து கொள்வதுதான் சரி.

இன்னுஞ் சில நாட்கள் நான் டெல்லியில் இருக்க வேண்டியிருக்கும். அன்பு.

பாபு.

7

போஸ் தந்தி

புது டெல்லி
27-3-39

ராஷ்டிரபதி போஸ்,
ஜீல்கோரா.

தங்கள் கடிதத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் உங்கள் அறிக்கையில் கூறுகிறபடி நாமிருவரும் சந்தித்துப் பேசுவது நல்லது. ராஜ கோட்டை விஷயம் என்னை டெல்லியில் கட்டிப் போட்டு வைத்திருக்கிறது. இல்லாவிட்டால், என்னுடைய பலஹீனத்தையும் பொருட்படுத்தாமல் தங்களிடம் ஓடிவந்திருப்பேன். நீங்கள் இங்கே வந்து என்னுடன் தங்கியிருப்பது நல்லது. உங்களைப் போஷித்து சௌக்கிய மடையச்

செய்யும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். அதேசமயத்தில் நாம் மெதுவாகப் பேசிக் கொண்டிருக்கலாம். அன்பு.

பாபு

8

சுனீல்போஸ் தந்தி

ஜீல்கோரா

29-3-39

மகாத்மா காந்தி,

புது டேல்லி

சுபாஷ் விஷயத்தில் தாங்கள் செலுத்திவரும் அக்கரைக்கு நன்றி செலுத்துகிறோம். நாடித் துடிப்பு 96 ஆகவும் மூச்சு 24 ஆகவும் இருப்பது, மல ஜலம் கழிக்கச் செல்கிற போது 114 ஆகவும், 32 ஆகவும் ஏறுகிறது. சுவாசப் பைகள் இன்னும் சுத்தப்பட வில்லை. ஆயினும் திரிபுரிக்குப் பிறகு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதென்றே சொல்ல வேண்டும். திரிபுரியிலிருந்து வந்த பிறகு பக்கத்திலுள்ள ஸ்நான அறைக்குக் கூட செல்லாமல் இருந்த இடத்திலேயே இருக்கவேண்டி இருக்கிறது. சென்ற ஐந்துவார அநுபவத்தைக் கொண்டு பார்த்தோமானால், நீண்ட தூரப் பிரயாணத்தினால் கொஞ்சம் அபி விருத்தி யடைந்து கொண்டு வருவதுகூட தடை பட்டு விடுமோ வென்று நாங்கள் அஞ்சுகிறோம். இப்பொழுது மாதிரி அவருக்கு ஓய்வும் சிகிச்சையும் கொடுத்தால், மூன்று வார காலத்தில் அவர் குணமடைந்து விடலாம். பொது நலத்தை முன்னிட்டுத் தாங்கள் இருவரும் முக்கியமான பிரச்னைகளைப் பற்றி கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொள்ளுதல் நல்லதென்று கருதுகிறேன்.

சுனீல்.

9

காந்தி தந்தி

புது டேல்லி

30-3-39

டாக்டர் சுனீல்போஸ்,

ஜீல்கோரா.

தந்தி கிடைத்தது. சுபாஷ் இங்கு வந்து இருக்கலாமென்று நான் கூறிய யோசனையை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். குணமடைவதை நான் எந்த விதத்திலும் தடுக்க மாட்டேன். தங்களுடைய யோசனைப்படி சுபாஷின் கடிதத்தில் கண்ட விஷயங்களைப் பற்றிக் கடிதப் போக்கு வரத்துச் செய்வேன். இதை என் அன்புடன் சுபாஷுக்குத் தெரிவிக்கவும்.

பாபு.

10

சுபாஷ் கடிதம்

ஜீல்கோரா

29-3-39

என் அன்புள்ள மஹாத்மாஜி,

இன்னும் ஓரிரண்டு நாட்களில் தங்களுக்கு எழுதுகிறேன். ஆனால் அதற்குள் அவசரமான விஷயம் ஒன்று முளைத்திருக்கிறது. அ. இ. கா. கமிட்டியின் ஆக்டிங் பொதுக் காரியதரிசியான ஸ்ரீ நரசிங்கர் அ. இ. கா. க. கூட்டத்திற்கு இருபது நாள் நோட்டீஸ் தேவை யென்று சொல்கிறார். விதிகளின்படி அ. இ. கா. க. அங்கத்தினர்களுக்கு 15 நாள் நோட்டீஸ் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் தேசத்

தின் பல பாகங்களிலுமுள்ள அங்கத்தினர்களுக்கு அறிக்கைகள் போய்ச் சேர வேண்டுமாதலால் கூட ஒரு நாலைந்து நாட்கள் இருக்க வேண்டுமென்று அவர் கூறுகிறார். எனவே, மொத்தம் 20 நாள் நோட்டீஸாவது வேண்டும்.

நீங்கள் அங்கீகரிக்கும் பட்சத்தில் ஏப்ரல் மாதம் 20ந் தேதி வாக்கில் கூட்டத்தைக் கூட்டினால் சௌகரியமாயிருக்குமென்று கருதுகிறேன். ஆனால் இதில் ஒருகஷ்டம் இருக்கிறது. காந்தி சேவா சங்க மகாநாடு பீஹாரில் ஏப்ரல் மாதம் 20ந் தேதி வாக்கில் கூடுமென்று சொல்லப்படுகிறது. எனவே, ஒரே சமயத்தில் இரண்டு கூட்டங்களும் கூடுவதா யிருக்கும். அ. இ. கா. கமிட்டி கூட்டமும் காரியக் கமிட்டி கூட்டமும் கல்கத்தாவில் கூடும். நீங்கள் அப்பொழுது விஜயஞ் செய்வது அவசியமானது. காந்தி சேவா சங்க மகாநாட்டுக்கு முன்னரோ பின்னரோ அ. இ. கா. கமிட்டி கூட்டத்தை நடத்தலாம் என்று நான் யோசனை கூறலாமா? முன்னதாகக் கூட்டுவதா யிருந்தால், முதலில் நீங்கள் கல்கத்தாவிற்கு வந்து பிறகு பீஹாருக்குப் போகலாம். பின்னதாகக்கூட்டுவதா யிருந்தால் முதலில் நீங்கள் பீஹாருக்குப் போய், பிறகு கல்கத்தாவுக்குச் செல்லலாம். முதலாவது முறையை அநுஷ்டிப்பதா யிருந்தால், காந்தி சேவா சங்க மகாநாட்டை ஒரு வாரம் வரை தள்ளி வைக்க வேண்டும். பின் யோசனையை அங்கீகரிப்பதா யிருந்தால், அ.இ.கா. கமிட்டி கூட்டத்தை, ஏப்ரல் மாதம் கடைசியில் தான் கூட்டவேண்டும்.

இதைப்பற்றித் தாங்கள் ஆலோசித்து, அ. இ. கா. கமிட்டி கூட்டத்தைக் கூட்டலாமென்பதைப் பற்றித் தங்களுடைய உபதேசத்தைத் தெரிவிக்கவேண்டுகிறேன். எப்படியும், அ. இ. கா. க. கூட்டத்திற்குத் தாங்கள் அவசியம் இருக்க வேண்டும்.

நான் குணமடைந்து வருகிறேன். தங்களுக்கு ரத்தக் கொதிப்பு ஏறியிருக்கிறதென்று கேள்வியுற்று கவலைப்படுகிறேன். நீங்கள் அதிகமாக வேலை செய்து வருகிறீர்கள் என்று நான் அஞ்சுகிறேன். நமஸ்காரம்.

தங்கள் அன்புள்ள
சுபாஷ்.

11

சுபாஷ் கடிதம்

29-3-39
ஜீல்கோரா

மகாத்மா காந்தி,
பிர்லாமாளிகை,
புது டேல்லி.

என் அன்புள்ள மஹாத்மாஜி,

ரெயில் பிரயாணத்தின் போது தாங்கள் எழுதிய 24உ கடிதமும் அதன் அடக்கங்களும் வந்து சேர்ந்தன.

முதலாவது, எனது சகோதரர் ஸ்ரீ சரத் சந்திரர், தமது சொந்த ஹோதாவிலேயே தங்களுக்குக் கடிதம் எழுதினார். அவர் இங்கிருந்து கல்கத்தா போன பிறகுதான், தங்களுடைய தந்தி அவருக்குக் கிடைத்தது. அதன் மீதுதான் அவர்களுக்கு கடிதம் எழுதினார் என்பது, அவருடைய கடிதத்திலிருந்து தெரியவரும். தங்கள் தந்தி கிடைக்காவிட்டால் அவர் கடிதம் எழுதி யிருப்பாரா என்பது சந்தேகம்.

அவருடைய கடிதத்தில் சில அபி சங்கள், என் அபிப்பிராயங்களுக்கு எதிரொலி கொடுப்பதுபோல் இருக் கின்றன. ஆனால் அது வேறுவிஷயம். இப்பொழுதைய முக்கிய பிரச்னை யென்ன வென்றால், இரண்டு கட்சி யினரும் பழைய விஷயங்களை மறந்து ஒற்றுமையாக வேலை செய்ய முடியுமா வென்பதேயாகும். அது தங்களைப் பொறுத்தே இருக்கிறது. தாங்கள் எந்தக் கட்சியையும் சேரா மல் இரண்டு கட்சியினருடைய நம் பிக்கையையும் பெறக் கூடுமானால் தாங்கள் காங்கிரஸைக் காப்பாற்றி தேசத்தில் ஒற்றுமையை உண்டாக் கினவர்களாவீர்கள்.

பழி வாங்குகிற சுபாவம் எனக்குக் கிடையாது. குறைகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கப் பட்ட வனுமல்ல நான். குத்துச் சண்டை போடுகிறவனுடைய மனப்பான்மை தான் எனக்கு உண்டு. குத்துச் சண்டை முடிந்தவுடன் இருவரும் கை குலுக்கிக் கொள்ள வேண்டும். சண்டையின் முடிவுகளைச் சந்தோஷ மாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது, எனக்குப் பல வித மான கடிதங்கள் வந்த போதிலும் பண்டித பந்தின் தீர்மானம் எப்படி நிறைவேற்றப்பட்டதோ அப்படியே அதனை நான் ஏற்றுக் கொள்ளுகி றேன். அதனை நாம் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். மேற்படி தீர்மானத்தில் சட்ட விரோதமான பகுதி யிருந்த போதிலும் அதை வாதத்திற்கு அநுமதித்தேன். அதை இப்பொழுது நான் எப்படி மீறிச் செல்வது!

மூன்றாவது, நீங்கள் செய்யக்கூடிய காரியங்கள் இரண்டு உண்டு. ஒன்று, காரியக் கமிட்டி அமைப்பு விஷயத் தில் எங்களுடைய அபிப்பிராயத் திற்கு இடங்கொடுப்பது; அல்லது உங்களுடைய அபிப்பிராயத்தை அப் படியே வற்புறுத்துவது. இரண்டா வது வழி யானால், நாம் வெவ்வேறு கட்சியினராகப் பிரிந்து நோக்கும் நிலைக்கு வந்துவிட்டோம் என்பதைத் தெரிந்து கொண்டு விடலாம்.

நான்காவது, புதிய காரியக் கமிட்டி அமைக்கும் விஷயத்திலும் அ. இ. கா. கமிட்டியைக் கூட்டும் விஷயத்திலும் மனிதப் பிரயத்தனம் என்னென்ன உண்டோ அவை யெல் லாவற்றையும் நான்செய்வேன். ஆனால் இப்பொழுது நான் டெல்லிக்கு வர முடியாதவனா யிருக்கிறேன். (இது சம்பந்தமாக இன்று காலை டாக்டர் சுனீல் தங்களுக்கு ஒரு தந்தி கொடுத் திருக்கிறார். நேற்றே தங்களுடைய தந்தி கிடைத்தது.)

ஐந்தாவது, அ. இ. கா. காரியா லயம், தங்களுக்கு பண்டித பந்த் தீர்மானத்தின் நகலை அனுப்பவில்லை யென்பதைக் கேட்டு ஆச்சரியப்படுகி றேன். அலகாபாத்துக்கு நீங்கள் வரு கிற வரையில், இந்தத் தீர்மானம் உங் களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை யென்பதைக் கேட்டு இன்னும் அதிக ஆச்சரியப் படுகிறேன். இந்தத் தீர்மானம் உங் களுடைய பூரண ஆதரவைப் பெற் றிருக்கிறதென்ற வதந்தி திரிபுரியில் பலமாக உலவியது. இந்த மாதிரி ஓர் அறிக்கை கூட தினசரிப் பத்திரி கைகளில் வெளியாயிற்று.

ஆறாவது, பதவியை விடாப்பிடி யாகப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டுமென்ற ஆசை எனக்குக்

கிடையாது. ஆனால் என் நோய் காரணமாக நான் ராஜீநாமா செய்ய வேண்டிய அவசியமும் எனக்குப் புலனாகவில்லை. சிறையிலிருந்த எந்த காங்கிரஸ் பிரசிடெண்டும் ராஜீநாமா செய்யவில்லை. இதை நான் ஏன் சொல்கிறேனென்றால், நான் ராஜீநாமா செய்துவிட வேண்டுமென்று பல இடங்களிலிருந்தும் என்னை நெருக்குகிறார்கள். ஆயினும் இதற்கு நான் இசையவில்லை. ஏனெனில், நான் ராஜீநாமா செய்வதால், காங்கிரஸ் அரசியலிலேயே ஒரு புதிய தோற்றம் உண்டாகலாம். கடைசி வரையில் இதனைத் தடுக்க வேண்டுமென்பதே என் நோக்கம்.

சென்ற சில நாட்களாக நான் அ. இ. கா. கமிட்டியின் அவசர வேலைகளைக் கவனித்துக் கொண்டு வருகிறேன்.

நாளையாவது, நாளை மறுதினமாவது தங்களுக்கு மீண்டும் எழுதுகிறேன்.

நான் குணமடைந்து வருகிறேன். தங்களுடைய ரத்தக்கொதிப்பு, விரைவில் இறங்கிவிடுமென்று நம்புகிறேன். நமஸ்காரம்.

அன்புள்ள

சுபாஷ்.

12

காந்தி கடிதம்

புது டெல்லி.

30-3-39

என் அன்புள்ள சுபாஷ்,

என்னுடைய தந்திக்குத் தங்களுடைய பதிலை எதிர் பார்த்துத்தான், தங்களுடைய 26ந் தேதி கடிதத்திற்குப் பதில் எழுதாமல் தாமதித்து வைத்தேன். சுனீல் போசின் தந்தி நேற்று இரவு எனக்குக் கிடைத்தது. காலைப் பிரார்த்தனைக்கு முன்னர் எழுந்து இந்தப்பதிலை எழுதுகிறேன்.

பண்டித பந்த் தீர்மானம் ஒழுங்கு மீறியதென்றும், காரியக் கமிட்டி அமைப்பைப் பற்றி அதில் காணப்பெறும் பிரிவு சட்ட விரோதமானதென்றும் தாங்கள் எழுதுவதால், நீங்கள் அனுசரிக்க வேண்டிய வழி தெளிவாகவே இருக்கிறது. காரியக் கமிட்டி நியமன விஷயத்தில் உங்களுடைய நியமனத்திக்கு எவ்வித பந்தமும் இருக்கக்கூடாது. ஆகையால் இது சம்பந்தமாகத் தாங்கள் கேட்ட கேள்விக்கு எவ்வித விடையும் தேவையில்லை.

சென்ற பிப்ரவரி மாதம் நாம் சந்தித்தபோது, நமக்குள்ளே அடிப்படையான கொள்கைகளில் வேற்றுமை இருக்கிறதென்பதை அங்கீகரித்துக் கொண்டோம். அப்படிப்பட்ட அபிப்பிராய வேற்றுமை இருக்கும் போது பல கொள்கையினரும் அடங்கிய கமிட்டி யமைப்பது தீங்கையே உண்டுபண்ணும் என்ற என்னுடைய எண்ணம், அது முதற்கொண்டு வலுத்து வருகிறது. உங்களுடைய கொள்கைக்கு அ. இ. கா. கமிட்டியில் மெஜாரிட்டி இருக்கிறதென்று வைத்துக் கொண்டால் உங்கள் கொள்கையில் நம்பிக்கை யுடையவர்களைக் கொண்ட ஒரு காரியக் கமிட்டியை நீங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும்.

நீங்களாக, ஒரு கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் பிறருடைய வற்புறுத்தலுக்காக ஓர் அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்ளக்

செய்ய வேண்டிய அவசியமில்லை. எனது நேற்றைய கடிதத்தில் குறிப்பிட்டவாறு, எனக்குத் தெரிந்த வரையில் எந்த காங்கிரஸ் பிரசிடெண்டும், நீண்ட காலம் சிறையிலிருந்தபோதும் கூட, ராஜீநாமா செய்யவில்லை. எப்படியும் ஒரு காலத்தில் நான் ராஜீநாமா செய்ய வேண்டி யிருக்கலாம். அப்படி ராஜீநாமா செய்வதா யிருந்தால், அது வேறு காரணங்களுக்காகவே இருக்கும்.

நான் ராஜீநாமா செய்ய வேண்டுமென்று பலரும் என்னை நெருக்குவதாகவும், ஆயினும் அதை எதிர்த்துக் கொண்டிருக்கிறேன் என்றும் இரண்டாவது கடிதத்தில் குறிப்பிட்டேன். இப்பொழுது நான் ராஜீநாமா செய்வது, காங்கிரஸ் அரசியலிலேயே ஒரு புதிய தோற்றத்தை உண்டு பண்ணுவதாகுமென்றும், இது நேரிடாமல் கடைசி வரையில் பார்க்க வேண்டுமென்றும் நான் கருதுகிறேன். நாம் இப்பொழுது இரண்டு கட்சிகளாகப்பிரிந்து சென்றோமானால் உட் குழப்பம் கடுமையாக ஆரம்பிக்கும். அதன் விளைவு என்னவாயிருந்தாலும், காங்கிரஸானது சில காலம் வரையில் பலஹீனப்பட்டு விடும். பிரிட்டிஷ் அரசாங்கம், இதன் நன்மையை நன்றாக அநுபவித்துக் கொள்ளும். இந்த ஆபத்தினின்று காங்கிரஸையும் தேசத்தையும் காப்பாற்றுவது உங்கள் கையிலே இருக்கிறது. சர்தார் படேலையும் அவர் குழுவினரையும், பல காரணங்களுக்காகக் கடுமையாக எதிர்க்கிறவர்கள் கூட, உங்களிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்; நீங்கள் நடு நிலைமையான அபிப்பிராயத்தைக் கொள்ளக் கூடுமென்று கருதுகிறார்கள். கட்சிகளுக்கும் கூட்டங்களுக்கும் மேற்பட்டவராய், தேசியச் சின்னமாய் அவர்கள் தங்களைக் கருதுகிறார்கள். ஆகையால் நீங்கள்தான் சமரஸம் ஏற்படுத்தி வைத்து ஒற்றுமையை உண்டாக்க முடியும்.

எந்தக் காரணத்தை முன்னிட்டேனும் அந்த நம்பிக்கை தளர்ந்து விட்டதேயானால்—கடவுள் அதைத் தடுப்பாராக—நீங்கள் ஒரு கட்சியைச் சேர்ந்தவர் என்று கருதப்பட்டு விட்டால், கடவுள் எங்களுக்கும் காங்கிரஸுக்கும் துணை செய்வாராக.

காங்கிரஸுக்குள்ளே யிருக்கும் இரண்டு கட்சிகளுக்கு இடையில் அகன்ற பரப்பு ஏற்பட்டிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதனை ஒன்று சேர்த்து விடலாம். அது தங்களால்தான் முடியும். எங்களுடைய அரசியல் எதிரிகளின் மனப்பான்மையைப் பற்றி நான் ஒன்றுஞ் சொல்வதற்கில்லை. அவர்களிடத்தில் எங்களுக்கு ஏற்பட்ட அநுபவம் மிகக் கெடுதலானது என்று திரிபுரி எங்களுக்குத் தெரிவித்து விட்டது. ஆனால் எங்கள் கட்சிக்காக நான் பேச முடியும். நாங்கள் பழி வாங்கும் சுபாவமுடையவர்களல்ல. குறைகளை வைத்துக் கொண்டு முணகிக் கொண்டிருக்க மாட்டோம். அவர்கள் கூறுகிற மாதிரி, சென்றதை மறந்துவிட நாங்கள் சித்தமாயிருக்கிறோம். இந்தியாவின் அரசியல், பொருளாதார விடுதலைக்காக அவர்களுடன் கை கோத்துக் கொண்டு வேலை செய்ய நாங்கள் தயாராயிருக்கிறோம். எங்களுடைய கட்சி என்று சொல்கிற போது, 'காங்கிரஸ் அபேதவாதக் கட்சி'யை நான் சேர்க்கவில்லை. இந்தக் கட்சிக்கு எவ்வளவு குறைந்த பின் பலம் இருக்கிற

தென்பதை, திரிபுரியில்தான் நாங்கள் முதன் முதலாகக் கண்டோம். இவர்களுடைய வழ வழ கொள்கை காரணமாக, இந்தக் கட்சிக்குள்ளேயே பிளவுகள் ஏற்பட்டிருக்கின்றன. காங்கிரஸ் அபேதவாதக் கட்சியினரில் பெரும்பாலோர், அந்தக் கட்சியின் தலைவர்கள் எப்படி நடந்து கொண்டபோதிலும், எதிர் காலத்தில் எங்களுடனேயே வருவார்கள். இதைப்பற்றித் தங்களுக்கு ஏதேனும் சந்தேகமிருந்தால் பொறுத்துப் பார்த்தால் தெரியும்.

எனது சகோதரர் சரத் சந்திரர், தங்களுக்கு எழுதியுள்ள கடிதத்தைப் பார்த்தால், அவர் மிக மனத்தாங்கலோடு இருக்கிறார் என்று தெரிகிறது. இதற்குக் காரணம், திரிபுரியில் அவர் பெற்ற அநுபவங்களே யாகும். அவர் கல்கத்தாவை விட்டுப் புறப்படுகிறபோது இந்த மாதிரியான எண்ணம் அவருக்கு இல்லை. என்னைவிட, அவருக்கு திரிபுரியில் நடந்த சம்பவங்களைப் பற்றி நன்றாகத் தெரியும். ஏனென்றால் எல்லாருடனும் கலந்து பழக அவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது: நான் படுக்கையிலேயே இருந்த போதிலுங்கூட அரசியல் விஷயத்தில் எங்களை எதிர்த்து நிற்கிற பொறுப்பு வாய்ந்த தலைவர்களின் மனப் போக்கைப் பற்றி, எந்த கட்சிலும் சேராத வரிடமிருந்து அநேக தகவல்கள் கிடைத்தன. எனக்குப் பெரிய மனக் கசப்பு ஏற்பட்டது என்றுகூடச் சொல்லலாம். நான் திரிபுரியை விட்டுப் புறப்படுகிறபோது காங்கிரஸ் அரசியலில் எனக்கு ஒருவித வெறுப்பு ஏற்பட்டு விட்டது. எனது சென்ற பத்தொன்பது வருஷகால அரசியல் வாழ்க்கையில் எனக்கு இந்தமாதிரியான வெறுப்பு ஏற்பட்டதில்லை. நல்லவேளையாக இப்பொழுது இந்த வெறுப்புணர்ச்சி எனக்கு இல்லாமலிருக்கிறது. பழைய மனப்பான்மையை யடைந்து விட்டேன்.

அ. இ. கா. கமிட்டி காரியாலயம் என்னுடைய தலைமையின் கீழ் சீரழிந்து போயிருப்பதாக பண்டித ஜவஹர் தமது அறிக்கைகளொன்றில் குறிப்படுகிறார். இந்தமாதிரி கூறுவது அநியாயமானது; கண்ணியமற்றது. என்னைக் கேவலப் படுத்த வேண்டுமென்று அவர் முயற்சித்து காரிய தரிசியான ஸ்ரீ கிருபாளினியையும், மற்றச் சிப்பந்திகளையும் கேவலப் படுத்தி யிருக்கிறார் என்பதை அவர் மறந்து விட்டார் போலும். அ. இ. கா. கமிட்டியின் காரியாலயம் காரியதரிசியின் நிருவாகத்தில் இருக்கிறது. அந்தக்காரியாலயத்தின் நிருவாகம் ஒழுங்குபட இல்லையானால், அதற்கு அவர்கள்தான் பொறுப்பு. இது விஷயத்தைப் பற்றி ஜவஹருக்கு நான் எழுதியிருக்கிறேன். சரத் போஸுக்கு நீங்கள் எழுதியுள்ள கடிதத்தில் இடைக்கால நிருவாகத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்திருப்பதால், இது குறித்துத் தங்களுக்கு நான் எழுத வேண்டியிருக்கிறது. காரியாலயம் ஒழுங்காக நடைபெறுவதற்கு நாம் துணை செய்வதானால் ஒரே ஒரு வழி தான் இருக்கிறது. அதாவது உடனே ஒரு நிரந்தரக் காரியதரிசியை நியமித்துவிட வேண்டும். காரியக் கமிட்டியின் மற்ற அங்கத்தினர்களை நியமனம் செய்வது சிறிது தாமதமானாலும் பாதகமில்லை. ஆனால் காரியக் கமிட்டி விரைவிலே நியமிக்கப்படப் போவதானால், காரியதரிசியை உடனே நியமிக்க வேண்டிய அவசியமில்லை.

பண்டிதபந்த் தீர்மானத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் மிக நன்றியுள்ளவனு யிருப்பேன். நீங்கள் ஒரு சாதகமான நிலையில் இருக்கிறீர்கள். திரிபுரியில் நடைபெற்ற எல்லாச் சம்பவங்களும் உங்களுக்குத் தெரிந்திருக்கும் பட்சத்தில், நீங்கள் விருப்பு வெறுப்பின்றி விஷயங்களைக் கவனிக்கக்கூடும். பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளைப் பார்த்தால் இது வரை உங்களை வந்து பார்த்திருக்கிற வர்களெல்லாரும், பண்டித பந்த் தீர்மானத்தை ஆதரித்தவர்களாகவே இருக்கிறுர்கள் என்று தெரிகிறது. ஆயினும் அதைப் பற்றி பரவாயில்லை. யார் வந்து உங்களைப் பார்த்த போதிலும், விஷயங்களை அதனதன் மதிப்புக் குரியவாறு காண்பீர்கள்.

பண்டித பந்த் தீர்மானத்தைப் பற்றி என்னுடைய அபிப்பிராயம் என்னவென்பதை நான் ஊகித்திருக்கக்கூடும். ஆனல் என் சொந்த அபிப்பிராயங்கள் முக்கியமல்ல. பொது நன்மையை முன்னிட்டு, நமது சொந்த அபிப்பிராயங்களை மறைத்துக் கொள்ள வேண்டுவதுதான். நான் எனது முந்திய கடிதத்தில் கூறியபடி, பண்டித பந்த் தீர்மானத்தைப்பற்றிச் சட்ட முறையாக ஒருவன் என்ன அபிப்பிராயங் கொண்ட போதிலும், அது காங்கிரஸில் நிறைவேற்றப்பட்டு விட்டபடியால், அதற்கு நான் கட்டுப் பட்டவனுகவே ஆகிறேன். அந்தத் தீர்மானம், என் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று நீங்கள் கருதுகிறீர்களா? அதன் பயனுக நான் ராஜீநாமா செய்துவிட வேண்டுமென்று கருதுகிறீர்களா? நான் உறுதியான ஓர் அபிப்பிராயங் கொள்ள, தங்களுடைய அபிப்பிராயம் தேவையாயிருக்கிறது.

திரிபுரியில் பண்டித பந்த் தீர்மானத்திற்கு ஓட்டு சேகரித்தவர்கள், ராஜகோட்டையி லிருந்த தங்களுக்கும் திரிபுரிக்கும் டெலிபோன் மூலம் சம்பாஷணை நடைபெற்ற தென்றும் மேற்படி தீர்மானம் தங்களுடைய பூரண ஆதரவைப் பெற்ற தென்றும் கூறி வந்தார்கள். தினப்பத்திரிகைகளில் இந்த மாதிரி செய்திகள் வெளிவந்தன. தவிர இந்தத் தீர்மானத்தை அப்படியே நிறைவேற்றினல் தான், தங்களுக்கும் தங்களைப் பின்பற்றுவோருக்கும் திருப்தி உண்டாகுமென்று சொல்லப்பட்டது. என்னைப் பொறுத்த மட்டில், இந்த மாதிரியான வதந்திகளை நான் நம்பவில்லை. ஆனல், ஓட்டு சேகரிப்பதற்கு இந்த வதந்தி பெரிதும் துணை செய்தது. பண்டித பந்த் தீர்மானத்தின் வாசகத்தை, முதன் முதலாக, சர்தார் பட்டேல் எனக்குக் காண்பித்தார். (அப்பொழுது ராஜேந்திர பாபுவும், மௌலானு அஸாத்தும் கூட இருந்தார்கள்.) அப்பொழுது நான் மேற்படி தீர்மானத்தின் வாசகத்தில் சில திருத்தங்கள் செய்தால், தீர்மானத்தைக் காங்கிரஸில் ஏக மனதாக நிறைவேற்றிவிடலாம் என்று சொன்னேன். திருத்தப்பட்ட தீர்மானத்தின் வாசகம் சர்தார் பட்டேலுக்கு அனுப்பப் பட்டது. ஆனல் அவரிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்க வில்லை. தங்களுடைய அசல் தீர்மானத்தில் ஒரு வார்த்தையையோ கா ற் பு ள் ளி யையோகூட மாற்றக் கூடாதென்கிற மாதிரி அவர்களுடைய நோக்கம் இருந்தது. திருத்தப்பட்ட தீர்மானத்

தின் வாசகத்தை, ராஜகுமாரி அமிருத கௌர்; தங்களுக்குக் காட்டியிருப்பார் என்று நினைக்கிறேன். தங்களுடைய கொள்கைகளிலும், தலைமையிலும் நம்பிக்கையிருப்பதாக வற்புறுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் பண்டித பந்த் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்குமானால், அந்த நோக்கம் திருத்தப்பட்ட தீர்மானத்தில் நிறைவேறி விடுகிறது. ஆனால், பிரசிடெண்டு தேர்தலின் முடிவுக்குப் பழி தீர்த்துக் கொள்ள வேண்டுமானால், திருத்தப்பட்ட தீர்மானம் போதாதென்பது உண்மையே. பண்டித பந்த் தீர்மானத்தின் பயனாக, தங்களுடைய செல்வாக்கோ, அந்தஸ்தோ, மற்றெதுவோ எவ்வளவு தூரம் உயர்ந்திருக்கிறதென்பது எனக்குத் தெரியவில்லை. விஷயாலோசனைக் கமிட்டியில், தங்களுக்கு விரோதமாக 135 ஓட்டுகள் அளிக்கப்பட்டன. பகிரங்க காங்கிரஸில் காங்கிரஸ் அபேதவாதக் கட்சியினர், நடுநிலைமை வகித்துக் கூட, மொத்தம் 2200 ஓட்டுகளில், தங்களுக்கு விரோதமாக 800 ஓட்டுகள் கொடுக்கப்பட்டன. காங்கிரஸ் அபேதவாதக் கட்சியினர் விஷயாலோசனைக் கமிட்டியில் நடந்து கொண்டது போல், பகிரங்க காங்கிரஸிலும் நடந்து கொண்டிருப்பார்களானால், பண்டித பந்த் தீர்மானம் தோல்வியே யடைந்திருக்கும். எப்படியோ, தீர்மானத்தின் முடிவு சந்தேகமாகவே இருக்கும். தீர்மானத்தில் சிறிது மாற்றஞ் செய்யப்பட்டிருந்தால், அதற்கு விரோதமாக ஓர் ஓட்டுகூட விழுந்திராது. தங்களுடைய தலைமையையும், காங்கிரஸ் ஏகமனதாக அங்கீகாரம் செய்திருக்கும். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முன்னிலையிலும் தங்களுடைய கௌரவம் மிகவும் உயர்ந்திருக்கும். ஆனால், அதற்கு மாறாக எங்கள் மீது பழி தீர்க்க வேண்டுமென்று உறுதி கொண்டவர்கள், தங்களுடைய பெயரையும், தங்களுடைய செல்வாக்கையும் உபயோகித்துக்கொண்டு விட்டார்கள். இதன் விளைவாக, தங்களுடைய அந்தஸ்தையும், செல்வாக்கையும் அதிகப்படுத்துவதற்கு பதிலாக, அவைகளை, கற்பனை செய்ய முடியாத ஆழத்தில் கொண்டு போய் இறக்கி விட்டார்கள். ஏனென்றால் நீங்களோ, உங்கள் சிஷ்ய வர்க்கத்தினரோ, திரிபுரியில் மெஜாரிட்டி ஓட்டுகளைச் சம்பாதித்துக்கொண்டு விட்ட போதிலும், உங்களுக்கு விரோதமான ஒரு கட்சி இருக்கிறதென்பது உலகத்திற்குத் தெரிந்து விட்டது. இப்படியே நாம் விஷயங்களை விட்டுக் கொண்டு போவோமானால், இந்த எதிர்ப்பானது இன்னும் வலுத்துக் கொண்டு போகும். தீவிரமும், இளமையும், முன்னேற்றக் கொள்கைகளும் இல்லாத ஒரு கட்சியின் எதிர் காலம் என்னவாகும்? பிரிட்டனிலுள்ள லிபரல் கட்சியின் நிலைமை என்னவோ அதுதான் ஆகும்.

இன்னொரு விஷயத்தைப் பற்றியும் இந்தக் கடிதத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அதுதான் நமது வேலைத் திட்டம். என்னுடைய அபிப்பிராயங்களை, வார்தாவில் 15-2-39ல் நாம் சந்தித்த போது தெளிவாகக் கூறியிருக்கிறேன். அதற்குப் பிறகு நடைபெற்ற சமபங்களைப் பார்க்கிறபோது நான் கூறியதெல்லாம் நிறைவேறிக் கொண்டு வருவதாகவே நினைக்கிறேன். சமீபத்தில் ஐரோப்பாவில் நெருக்கடி ஏற்படுமென்றும், அடுத்த கோடை காலம்

வரையில் அது நீடித்திருக்குமென்றும் நான் என் நண்பர்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். சர்வ தேச நிலைமையையும் இந்தியாவின் உள்நாட்டு நிலைமையையும் நோக்குகிற போது, எட்டு மாதங்களுக்கு முன்னரேயே நாம் பூர்ண சுய ராஜ்யப் பிரச்னையை முன்னிலைப் படுத்த வேண்டிய காலம் வந்து விட்டதென்று நான் தீர்மானித்தேன். எங்களுடைய துரதிருஷ்ட வசமாகவும், தேசத்தின் துரதிருஷ்ட வசமாவும் எங்களுக்கிருக்கிற நம்பிக்கை தங்களுக்கு இல்லை. காங்கிரஸில் ஊழல்கள் இருக்கின்றன வென்ற எண்ணம் உங்களுக்கு வலுப்பட்டிருக்கிறது. தவிர தேசத்தில் பலாத்காரம் நிரம்பியிருப்பதாக நீங்கள் பயப்படுகிறீர்கள். காங்கிரஸுக்குள்ளிருக்கிற ஊழலைக் களைய வேண்டுமென்பதில் உங்களுடன் நான் ஒன்று பட்டவனாயிருக்கிறேன். ஆனால் இந்தியாவை மொத்தமாக எடுத்துக் கொண்டு பார்த்தோமானால், முன்னிருந்ததை விட அதிகமான ஊழல் இப்பொழுதில்லையென்று நான் அபிப்பிராயப் படுகிறேன். பலாத்காரமும் முன்னைவிட இபபொழுது குறைந்திருக்கிறதென்று நான் நம்புகிறேன். முன்னர் வங்காளம், பஞ்சாப், ஐக்கிய மாகாணம் முதலிய இடங்கள் பலாத்காரப் புரட்சிக்கு இருப்பிடங்களாயிருந்தன. இப்பொழுது இந்த இடங்களில் அஹிம்சா தர்ம உணர்ச்சி பரவியிருக்கிறது. வங்காளத்தைப் பொறுத்த மட்டில் நான் முழு ஆதாரத்துடன் கூற முடியும். இப்பொழுது அந்த மாகாணத்தில் பரவியுள்ள அஹிம்சா தர்ம உணர்ச்சி சென்ற முப்பது வருஷங்களாக இல்லையென்றுதான் நிச்சயமாகக் கூறுவேன். இதுபோன்ற அநேக காரணங்களுக்காக, நமது கோரிக்கையை ஓர் எச்சரிக்கையாக பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முன்னர்க்கிளத்த வேண்டுமென்னும் விஷயத்தில் நாம் காலந்தாழ்த்தக் கூடாதென்று நான் கூறுகிறேன். இங்ஙனம் எச்சரிக்கை கொடுப்பது, தங்களுக்கோ, பண்டித ஜவஹர்லால் நேருவுக்கோ பிடிக்கவில்லையென்பதை நான் அறிவேன். ஆனால் உங்கள் பொது வாழ்வை நோக்குகிறபோது, அதிகாரிகளுக்குப் பல தடவை எச்சரிக்கைகள் அளித்து, அதன் பயனாக அநேக பொதுநலக் காரியங்களைச் சாதித்திருக்கிறீர்கள். அன்று ராஜகோட்டையில் அப்படித்தான் செய்தீர்கள். அப்படியிருக்கிறபோது, நமது தேசியக் கோரிக்கையை ஓர் எச்சரிக்கையாகக் கிளத்தத் தங்களுக்கு என்ன ஆட்சேபணை? நீங்கள் அந்த மாதிரி செய்து, கூடவே தேசத்தையும் வருங்காலப் போராட்டத்திற்குத் தயார்ப் படுத்துவீர்களானால், நாம் கூடியவிரைவில் பூர்ண சுயராஜ்யத்தை அடைந்து விடுவோம் என்று உறுதியாக நம்புகிறேன். ஒருவித போராட்டமும் இல்லாமல் பிரிட்டிஷ் அரசாங்கம் நமது கோரிக்கைகளுக்கு இணங்கவாவது செய்யும்; அல்லது போராட்டம் நிகழுமேயானால், தற்போதைய நிலைமையில் அது, நீடித்து நடவாது. இதுவிஷயத்தில் நான் பூரண நம்பிக்கையுடையவனாயிருக்கிறேன். நாம் தைரியமாக முன்னேறிச் செல்வோமானால், அதிகபட்சம் இன்னும் 18 மாதங்களுக்குள் நாம் சுயராஜ்யம் பெறுவோம்.

இதுவிஷயமாக நான் எந்தவிதமான தியாகத்தையும் செய்யச் சித்த

மாயிருக்கிறேன். நீங்கள் போராட்டத்தை நடத்தத் தொடங்குவீர்களானால், என் சக்திக்கியன்ற வளவு நான் உதவி செய்யச்சித்தமா யிருக்கிறேன். வேறொரு தலைவரின் கீழ் காங்கிரஸானது இந்தப் போராட்டத்தை எடுத்துக் கொண்டு இன்னும் திறமையாக நடத்த முடியும் என்று நீங்கள் கருதுவீர்களானால், நான் விலகிக் கொள்ளுகிறேன். உங்கள் விருப்பப்படி காரியக் கமிட்டியை நியமித்து, அதன் துணையைக் கொண்டு, காங்கிரஸானது இந்தப் போராட்டத்தைத் திறம்பட நடத்தும் என்று நீங்கள் கருதுவீர்களானால், நான் தங்கள் விருப்பத்திற்குச் சந்தோஷமாக இணங்குகிறேன். நான் கோருவதெல்லாம் நெருக்கடியான இந்தச் சந்தர்ப்பத்தில் தாங்களும், காங்கிரஸும் எழுந்து நின்று சுயராஜ்யப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென்பதுதான். என்னை நான் இல்லாமற் செய்து கொள்வது தேசீய அபிவிருத்திக்குத் துணையாயிருக்குமென்று நீங்கள் கருதுவீர்களானால் நான் அதற்கும் சித்தமாயிருக்கிறேன். இதை நான் செய்யக்கூடிய அளவு என் தேசத்தை நான் நேசிக்கிறேன்.

சமீப காலந்தொட்டு தாங்கள் சுதேச சமஸ்தானப் பிரஜைகளின் போராட்டத்தை நடத்தி வருவதை நான் அங்கீகரிக்க முடியவில்லையென்று சொல்வதற்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். தங்களுடைய விலை மதிப்பற்ற உயிரை, ராஜகோட்டைக்காக ஆபத்துக்குள்ளாக்கிக் கொள்ளப் பார்த்தீர்கள். ராஜகோட்டை பிரஜைகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கும்போது, மற்ற சமஸ்தானங்களில் சத்தியாக்கிரகத்தைத் தள்ளி வைத்தீர்கள். நீங்கள் ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? இந்தியாவில் மொத்தம் சுமார் 600 சமஸ்தானங்கள் இருக்கின்றன. அவற்றுள் மிகச்சிறிய ஒன்று ராஜகோட்டை. ராஜகோட்டை போராட்டம் ஒரு கொசுக்கடிமாதிரி என்று சொன்னால் அது மிகையாகாது. நாடு முழுவதையும் சேர்த்து நாம் ஏன் ஒரு போராட்டத்தை நடத்தக்கூடாது? இதற்காக ஏன் விசாலமானதொரு திட்டத்தைப் போட்டுக் கொள்ளக்கூடாது? லட்சக்கணக்கான ஜனங்கள் இந்த மாதிரி தான் அபிப்பிராயப் படுகிறார்கள். உங்கள் மீது கொண்ட மரியாதைக்காக வேண்டுமானால் அவர்கள் வாய் விட்டுச் சொல்லாமலிருக்கலாம்.

என்னைப் போன்றவர்கள், ராஜகோட்டை சமரஸ நிபந்தனைகள் சம்பந்தமாக அதிக உற்சாகங் கொள்வதற்கில்லை. நாமும் தேசீயப் பத்திரிகைகளும் இதைப் பெரிய வெற்றியென்று கொண்டாடுகிறோம். ஆனால், நாமடைந்த லாபமென்ன? ஸர் மாரிஸ் க்வையர்* நம்முடைய மனிதருமல்ல; சுயேச்சையான ஏஜெண்டுமல்ல. அவர் அரசாங்கத் தரப்பைச் சேர்ந்தவர், அவரை மத்தியஸ்தமாகப் போடுவதில் என்ன அர்த்தமிருக்கிறது? நமக்குச் சாதகமாக அவருடைய தீர்ப்பு இருக்கும் என்று நாம் நம்பிக்கொண்டிருக்கிறோம். நமக்கு விரோதமாக அந்தத் தீர்ப்பு இருக்குமானால், அப்பொழுது நமது நிலைமை என்ன? மற்றும் நாம் எந்த சமஷ்டி திட்டத்தை எதிர்க்கத் தீர்மானித்திருக்கிறோமோ, அந்தத் திட்டத்தின் ஓர் அங்கமாவார் ஸர்

* சமஷ்டி கோர்ட் பிரதம நீதிபதி.

மாரிஸ் க்வையர். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் நமக்கும் ஏதேனும் தகராறு ஏற்பட்டு நாம் ஒரு கோர்ட் நீதிபதியையோ, ஜில்லா நீதிபதியையோ வைப்போமானால், எப்படியும் நாம் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் சமரஸமாகப் போய்விடலாமே. ஆனால் அந்த சமரஸத்தின் பயனாக நமக்கு உண்டாகும் சாதகமென்ன? தவிர ராஜப் பிரதிநிதியுடன் உங்களுடைய சம்பாஷணை முடிந்த பிறகு நீங்கள் ஏன் டெல்லியில் காத்துக் கொண்டிருக்க வேண்டுமென்ற காரணம் பலருக்குத் தெரியவில்லை. ஒருகால், வேறொரு இடத்திற்கு நீண்ட தூரம் பிரயாணம் செய்யு முன்னர் சிறிது ஓய்வு தேவையாயிருந்தது போலும். ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும், அதனை ஆதரிப்பவர்களுக்கும் நீங்கள் டெல்லியில் தங்கியிருந்ததானது, சமஷ்டி நீதிபதிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவருடைய பெருமையை அதிகப் படுத்துவதாகவே தோன்றும்.

என்னுடைய கடிதம் நீண்டு விட்டது. ஆகையால், நான் நிறுத்திக் கொள்ள வேண்டும். நான் சொல்லியதில் தவறு இருந்தால் மன்னிக்கவும். மனந்திறந்து பேசுவோரை நீங்கள் எப்பொழுதும் விரும்புகிறீர்களென்பது எனக்குத் தெரியும். அதனால்தான் இந்த நீண்ட கடிதத்தை எழுதும் துணிச்சலை எனக்குக் கொடுத்தது.

நான் மெது மெதுவாகக் குணமடைந்து வருகிறேன். நீங்கள் சௌகர்யமடைந்து வருகிறீர்கள் என்றும் உங்களுடைய ரத்தக் கொதிப்பு இறங்கியிருக்கிறதென்றும் நம்புகிறேன்.

நமஸ்காரம்.

தங்கள் அன்புள்ள

சுபாஷ்.

17

சுபாஷ் தந்தி

ஜீல்கோரா,

1-4-39

மகாத்மா காந்தி,

புது டெல்லி.

காரியக்கமிட்டி 28-ந் தேதி கூடுகிறதென்றும் 30ந் தேதி அ. இ. கா. கமிட்டி கூடுகிறதென்றும் அறிவிக்கட்டுமா? ஏற்கனவே அறிவிக்கப்பட்டு காந்தி சேவா சங்கத்தின் தேதிகளுடன் முரண் ஏற்படாமலிருப்பதற்கே இந்த யோசனை.

சுபாஷ்.

18

காந்தி கடிதம்

பிர்லா மாளிகை,

புது டெல்லி

2-4-39

என் அன்புள்ள சுபாஷ்,

தங்களுடைய 31-3-39 கடிதமும் அதற்கு முந்திய கடிதமும் கிடைத்தன. நீங்கள் மனம் விட்டுப் பேசியிருக்கிறீர்கள். தங்கள் அபிப்பிராயங்களைத் தெளிவு படுத்திக் கூறும் உங்கள் கடிதங்கள் எனக்குப் பிடித்திருக்கின்றன.

நீங்கள் கொண்டுள்ள கொள்கைகளும், நானும் மற்றவர்களும்,

கொண்டுள்ள கொள்கைகளும் நேர் விரோதமாயிருக்கின்றன. இவைகளை ஒன்று சேர்க்க முடியும் என்று நான் கருதவில்லை. ஒவ்வொரு கொள்கையினரும், தங்கள் தங்கள் கொள்கைகளை எவ்விதக் கலப்பு மின்றி, தேசத்தின் முன்னர் விளக்க வேண்டு மென்று நான் கருதுகிறேன். இதை நாம் கண்ணியமான முறையில் செய்தால், உள் நாட்டுக் குழப்பத்தை விளைவிக்கக் கூடிய மனக் கசப்பை அஃது ஏன் உண்டு பண்ணும் என்று நான் கேட்கிறேன்.

இப்பொழுதுள்ள தவறு என்னவென்றால், நமக்குள்ளே இருக்கிற அபிப்பிராய பேதங்களல்ல. நமக்குள்ளே பரஸ்பர மரியாதையும் நம்பிக்கையும் இல்லாமைதான். ஆனால் காலம் செல்லச் செல்ல இது குறைந்து போகும். நம்மிடத்தில் உண்மையான அஹிம்சா தர்மம் பரவியிருந்தால், உள் நாட்டுக் குழப்பமோ நமக்குள்ளே மனக்கசப்போ ஏற்படாது.

எல்லாவற்றையும் தொகுத்துப் பார்த்தால், உங்கள் அபிப்பிராயங்களைத் தழுவினவர்களைக் கொண்ட காரியக் கமிட்டியை நீங்கள் உடனே அமைப்பது நல்லதென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். மற்றும் உங்கள் வேலைத் திட்டத்தைத் தயாரித்து அதை அடுத்து வரும் அ. இ. கா. கமிட்டியின் முன்னர் ஆஜர் படுத்த வேண்டும். மேற்படி கமிட்டி, தங்கள் வேலைத் திட்டத்தை அங்கீகரித்து விட்டால், எல்லாம் ஒழுங்காக நடைபெற்று விடும். அப்பொழுது, நீங்கள் மெஜாரிட்டியின் பலவந்தமின்றி, உங்கள் வேலைத் திட்டத்தை நடத்திச் செல்லலாம். இதற்கு மாறாக, உங்கள் வேலைத் திட்டம் அங்கீகரிக்கப்படவில்லையானால் நீங்கள் உடனே ராஜீநாமா செய்துவிட வேண்டும். கமிட்டி, வேறொரு தலைவரைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும். உங்கள் நோக்கத்திற் கிணங்க, நீங்கள் தேசத்தைப் பக்குவப்படுத்தலாம். பண்டித பந்த் தீர்மானத்தைப் பொருட்படுத்தாமலே இந்த யோசனையைக் கூறுகிறேன்.

பண்டித பந்த் தீர்மானம் எனக்குக் காட்டப்பட்ட போது, நான் படுக்கையிலிருந்தேன். அப்பொழுது மதுராதாஸ் ராஜகோட்டையிலிருந்தார். அவர் ஒருநாள் காலை, பழைய நபர்களின் மீது (காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் மீது) நம்பிக்கை இருப்பதாக ஒரு தீர்மானம் கொண்டு வரப்படப் போகிறதென்ற செய்தியைத் தெரிவித்தார். அப்பொழுது தீர்மானத்தின் வாசகம் என்னிடம் இல்லை. ஆனால் தீர்மானம் நிறைவேற்றுவது நல்லதுதான் என்று நான் கூறினேன். உங்களைப் பிரசிடெண்டாகத் தெரிந்தெடுத்தது, உங்கள் மீதுள்ள நம்பிக்கையினாலல்லவென்றும் பழைய நபர்களின் மீது-சிறப்பாக சர்தார் மீது—கொண்ட அதிருப்தியினாலேயே என்றும் சிவகிராமத்தில் எனக்குக் கூறப்பட்டது. இதற்குப் பிறகு, தீர்மானத்தின் வாசகத்தை, அலகாபாத்திற்கு மௌலானா சாஹிப்பைப் பார்க்கச் சென்ற போதுதான் நான் பார்த்தேன்.

என்னுடைய கௌரவம் அவ்வளவு முக்கியமானதல்ல. அதற்கென்று தனியான மதிப்புக் கிடையாது. என்னுடைய நோக்கங்கள் சந்தேகிக்கப்பட்டாலும், என்னுடைய கொள்கையோ, வேலைத் திட்டமோ தேசத்தினரால் நிராகரிக்கப்பட்டாலும்,

என்னுடைய கௌரவமும் போக வேண்டியதுதான். இந்தியாவிலுள்ள கோடிக் கணக்கான மக்களின் வேலைத்திறனைப் பொறுத்திருக்கிறது இந்தியாவின் வாழ்வும் வீழ்வும். தனிப்பட்ட நபர்கள், அவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்களாயிருந்த போதிலும், அவர்கள் ஜனங்களின் பிரதிநிதிகளாயில்லாத வரையில், கணக்கில் சேர்க்கப்படாதவர்கள் தான். ஆகையால் இதைப் பற்றி நாம் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டாம்.

தேசத்தில் இப்பொழுது அஹிம்சா தர்ம உணர்ச்சி பரவி இருக்கிறதென்ற உங்கள் அபிப்பிராயத்தை நான் மறுக்கிறேன். நான் விடுகிற மூச்சிலும் பலாத்காரம் இருப்பதாக நான் உணர்கிறேன். ஆனால் இந்த பலாத்காரம், கண்ணுக்குப் புலனாகாத வடிவத்தைக் கொண்டிருக்கிறது. நமக்குள்ளே யிருக்கும் பரஸ்பர அவநம்பிக்கை ஒருவிதமான ஹிம்ஸைதான். ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே வளர்ந்து கொண்டு வரும் வேற்றுமையானது, இந்த ஹிம்ஸையின் ஒரு கூறுதான். இதே மாதிரி நான் பல உதாரணங்கள் கூறக் கூடும்.

காங்கிரஸில் எவ்வளவு ஊழல் இருக்கிறதென்பதைப் பற்றி நாம் அபிப்பிராய வேற்றுமை கொண்டிருப்பதாக நான் கருதுகிறேன். இந்த ஊழல் வரவர விருத்தியாகிக் கொண்டு வருகிறதென்று நான் கருதுகிறேன். இதைப்பற்றிச் சர்ச்சை செய்ய வேண்டுமென்று, சென்ற சில மாதங்களாகவே நான் கூறிக் கொண்டு வருகிறேன்.

இந்த நிலைமையில், அஹிம்சா தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட பொதுஜன இயக்கத்தை நடத்தக் கூடிய சூழல் ஏற்படவில்லை என்று கருதுகிறேன். நம்மை நாம் தயார்ப் படுத்திக் கொள்ளாமல், எச்சரிக்கை கொடுப்பது பிரயோஜனமற்றதாகும்.

ஆனால் தங்களிடம் நான் கூறிய படி, நான் கிழவனாகிக் கொண்டு வருகிறேன். அதனால் கோழையாகவும் அதிஜாக்கிரதையுள்ளவனாகவுமாகி விட்டேனோ என்னவோ தெரியவில்லை. உங்களுக்கு இளமையும், அதன் பரிணாமமாகிய சர்வாநுகூல நம்பிக்கையும் இருக்கிறது. நீங்கள் சரியாகவும் நான் தவறாகவும் இருக்கலாம். காங்கிரஸ், இப்பொழுதுள்ள நிலைமையில் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் போராட முடியாது என்பது என்னுடைய உறுதியான அபிப்பிராயம். ஆகையால் உங்களுடைய முடிவு சரியாயிருக்கும் பட்சத்தில், நான் ஒரு பழைய பசலிதான்; சத்தியாக்கிரக இயக்கத்தின் தலைமைப் பதவிக்கு லாயக்கில்லை என்பதுதான் அர்த்தம்.

சிறிய ராஜகோட்டையைப் பற்றி நீங்கள் எடுத்துக் காட்டியதற்கு மிகச் சந்தோஷம். நாம் இருவரும், விஷயங்களை மாறுபட்ட கோணங்களிலிருந்து பார்க்கிறோமென்பது இதனினும் நன்கு புலனாகிறது. ராஜகோட்டை சம்பந்தமாக நான் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளுக்கு எவ்விதத்திலும் நான் இரக்கப்பட வேண்டுவதில்லை. அது தேசீய முக்கியத்துவத்தைக் கொண்டது என்று நான் கருதுகிறேன். ராஜகோட்டைக்காக மற்றச் சமஸ்தானங்களில் நான் சட்ட மறுப்பை நிறுத்தவில்லை. ஆனால் ராஜகோட்டை என் கண்களைத்திறந்து. எனக்கு

வழியைக்காட்டியது. என்தேக சுகத்திற்காக நான் டெல்லியில் இல்லை. சமஷ்டி கோர்ட் பிரதம நீதி பதியின் தீர்ப்பை எதிர்பார்த்துத்தான், நான் டெல்லியில் இருக்கிறேன். ராஜப்பிரதிநிதி, எனக்குக் கடைசியாகக் கொடுத்த தந்திப்படி, காரியங்கள் நடைபெறுகின்றனவா என்று பார்ப்பது என்கடமை யாகும். இதற்காக நான் டெல்லியில் இருப்பதனுல் எவ்வித ஆபத்தும் இல்லை. அரசாங்கமானது அதன் கடமையைச் செய்ய வேண்டுமென்று நான் அழைத்தேனேயாகில், அந்தக்கடமையை அது செய்கிறதா வென்று பார்ப்பது என்கடமையாகும். ராஜகோட்டை தஸ்தாவேஜை சமஷ்டி கோர்ட் பிரதம நீதிபதி பரிசீலனை செய்வதில் எவ்வித தவறுமில்லை யென்று கருதுகிறேன். தவிர, ஸர் மாரிஸ் க்வையர், பிரதம நீதிபதி என்றமுறையில் இந்த தஸ்தாவேஜை பரிசீலனை செய்ய வில்லை. ராஜப் பிரதி நிதியின் நம்பிக்கையைப் பெற்ற ஒரு பிரபல நியாயவாதி என்ற முறையிலேயே இந்த தஸ்தாவேஜைப் பரிசீலனை செய்கிருர். ராஜப்பிரதி நிதியால் தெரிந்தெடுக்கப்பட்டவரை நான் நீதிபதியாக ஏற்றுக்கொண்டதன் மூலம் நான் கௌரவமாகவும் புத்திசாலித்தனமாகவும் நடந்துகொண்டதாகவே கருதுகிறேன். மற்றும், ராஜப் பிரதிநிதியின் பொறுப்பையும் அதிகப்படுத்தி விட்டேன்.

நமக்குள்ள அபிப்பிராய வேற்றுமைகளைப் பற்றி நாம் சர்ச்சை செய்து வந்தபோதிலும், நமது சொந்த நட்பு எவ்விதத்திலும் பாதிக்படா தென்றே கருதுகிறேன். அந்த நட்பு மனப்பூர்வமாக இருக்கும் பட்சத்தில்—அந்த மாதிரியே இருக்கிற தென்று நான் நம்புகிறேன்—இந்த அபிப்பிராய வேற்றுமைகளையெல்லாம் அது சகித்துக் கொள்ளும். அன்பு.

பாபு

—oo⁂oo—

19

காங்கி தந்தி

புதுடெல்லி

2–4–39

8–40 மணி

ராஷ்டிரபதி
சுபாஷ் சந்திர போஸ்,
ஜீல்கோரா.

உங்கள் கடிதங்களுக்கு விவரமாகப் பதில் எழுதி யிருக்கிறேன். அதில் நான் கூறி யிருக்கப்பட்ட யோசனை என்னவென்றுல், பண்டித பந்த் தீர்மானத்தைப் பொருட்படுத்தாமலும் இரண்டு கட்சிகளுக்கும் அபிப்பிராய வேற்றுமைகள் இருக்கிறபடியாலும் உங்கள் கொள்கையைத் தழுவினவர்களைக் கொண்ட காரியக் கமிட்டியை உடனே அமைக்க வேண்டுமென்பதுதான். உங்கள் கொள்கையையும், வேலைத் திட்டத்தையும் தயாரித்து வெளியிட்டு, அதை அ. இ. கா. கமிட்டியின் முன்னர் கொளத்த வேண்டும். உங்களுக்கு மெஜாரிட்டி கிடைத்ததே யானுல் உங்களுடைய வேலைத் திட்டத்தை எவ்விதத்தடையுமின்றி நடத்திச் செல்லலாம். அப்படி உங்களுக்கு மெஜாரிட்டி கிடைக்கா விட்டால், நீங்கள் ராஜீநாமா செய்து, வேருரு தலைவரைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுமாறு அ. இ. கா. கமிட்டிக்குச் சொல்ல வேண்டும். கண்ணியமாக

வும் நம்பிக்கையுடனும் நடந்து கொண்டால், உள் நாட்டுக் குழப்பம் வருமென்று நான் கருதவில்லை. அன்பு.

பாபு.

20

சுபாஷ் தந்தி

ஜீல்கோரா
3-4-39

மகாத்மா காந்தி,
புதுடெல்லி.

என் கடிதத்திற்குப் பதிலாக உங்கள் கடிதமும் தந்தியும் கிடைத்தன. அவைகளைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் பண்டித பந்த் தீர்மான சம்பந்தமாக என்னுடைய நிலைமையைப்பற்றித் தாங்களும் பொது ஜனங்களில் ஒரு சாராரும் தவறாக நினைத்துக் கொண்டிருப்பதாகக் கருதுகிறேன். மேற்படி தீர்மானத்தின் கடைசி பாகம் சட்ட விரோதமானதா யிருந்த போதிலும் இந்த அபிப்பிராயம் இருக்கிறது. அந்தத் தீர்மானத்தை நான் ஓட்டுக்கு விட்டபடியால் அதற்கு நான் கட்டுப் பட்டவனாகவே ஆகிறேன். இந்த நிலைமையை விளக்கிப் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை விடுதல் நல்லதென்று கருதுகிறேன். இதற்கு ஏதேனும் ஆட்சேப முண்டா என்பதைத் தந்தி மூலம் தெரிவிக்கவும். நமஸ்காரம்.

சுபாஷ்.

21

காந்தி தந்தி

புதுடெல்லி
4-4-39.

ராஷ்டிரபதி சுபாஷ் போஸ்,
ஜீல்கோரா.

நமது கடிதப் போக்குவரத்துகளைப்பற்றிப் பத்திரிகை நிருபர்கள் பலவிதமான கேள்விகளைக் கேட்கிறார்கள். உங்களைக் கேட்கும்படி சொல்லி யிருக்கிறேன். கூடவிருக்கும் சகபாடிகளுக்குத் தவிர வேறு யாருக்கும் ஒன்றையும் சொல்லவில்லை. அன்பு.

பாபு.

22

சுபாஷ் தந்தி

ஜீல்கோரா
5-4-39

மகாத்மா காந்தி,
புது டெல்லி.

'யுனைடெட் பிரஸ்' தந்தி ஸ்தாபனமானது பல சூசகங்களை வெளியிடுகிற தென்றும், ஆதலின் தனக்கு ஆதார பூர்வகமான தகவல்களைத்தெரிவிக்க வேண்டுமென்றும் 'அசோசியேடெட் பிரஸ்' ஸ்தாபனம் கேட்டது. இப்பொழுது ஒன்றும் சொல்ல முடியாதென்று சொல்லிவிட்டேன். நமது கடிதங்களை இதுவரையில் ஒரு நண்பருக்குத்தான் காண்பித்திருக்கிறேன். இந்த வாரத்தில் மூன்று நண்பர்களுக்குக் காண்பிப்பேன். நாம் பரஸ்பரம் ஒரு சமரஸ முடிவுக்கு வந்த பிறகு, கடைசியில் வெளிப்படுத்தலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். அ. இ. கா. கமிட்டி கூட்டம் 28ந் தேதி கூடுமென்று டெல்லியி லிருந்து வந்த ஒரு செய்தி பத்திரிகைகளில் வெளியிடப்

பட்டிருக்கின்றன. ஆனால் தங்களிட மிருந்து ஒரு பதிலும் வரவில்லை.

சுபாஷ்.

23

காந்தி தந்தி

புதுடெல்லி,
5-4-39

ராஷ்டிரபதி சுபாஷ் போஸ்,
ஜீல்கோரா.

தங்கள் தந்தி கிடைத்தது. அ. இ. கா. கமிட்டி கூடும் தேதியைப்பற்றி இங்கு யாரும் சொல்லவில்லை. உங்கள் தந்தியை ஊர்ஜிதப்படுத்த மறந்து விட்டேன். மன்னிக்க. பிளேக் காரணமாக காந்தி சேவா சங்கத்தின் கூட்டம் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதென்று இன்று அறிகிறேன். உங்களுக்குச் சௌகரியமான தேதியை அ. இ. கா. கமிட்டி கூட்டத்திற்குக் குறிப்பிடுங்கள். கடிதப் போக்குவரத்துகளை வெளியிடுவதைப் பற்றி உங்கள் பிரியத்திற்கு விட்டுவிடுகிறேன்.

பாபு.

24

சுபாஷ் தந்தி

ஜில்கோரா
5-4-39

மகாத்மா காந்தி,
புதுடெல்லி.

இன்றைய 'அமிருத பஜார் பத்திரிகை' தனது டெல்லி நிருபரிடமிருந்து நமது கடிதப் போக்குவரத்துக்களை வெளியிட்டிருக்கிறது. அது சரியாக இல்லையாயினும், அங்கிருந்து தான் செய்திகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று தெரிகிறது.

சுபாஷ்.

25

சுபாஷ் தந்தி

ஜீல்கோரா,
5-4-39

மகாத்மா காந்தி,
புது டெல்லி

முந்திய தந்தியைத் தங்களுக்குக் கொடுத்த பிறகு, அலகாபாத்தில் வெளியாகும் 'லீடர்' முதலிய பத்திரிகைகளைப் பார்த்தேன். நமது கடிதப் போக்குவரத்துச் சம்பந்தமான செய்திகள் டெல்லியிலிருந்து தான் வெளியாகின்றன என்பது ஊர்ஜிதமாகிறது. தருந்ததைச் செய்ய வேண்டுகிறேன்.

சுபாஷ்.

26

காந்தி தந்தி

புதுடெல்லி,
5-4-39.

ராஷ்டிரபதி சுபாஷ் போஸ்,
ஜீல்கோரா.

உண்மையை மறைக்கக் கூடிய திறமை பத்திரிகைகளுக்கு இருக்கிறது. அவை, ஊர் பெயர்களைச் சிருஷ்டித்து அநேக விஷயங்களைக் கற்பனை செய்து விடுகின்றன. 'அமிருத பஜார் பத்திரிகா' லயத்தில் என்ன நடைபெற்றதென்பது எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்த வரையில், இங்கிருந்து ஒரு வரும்

செய்தியை வெளியிடவில்லை யென்று உறுதி கூறுகிறேன். நான் என்ன செய்ய வேண்டுமோ அதைச்சொல்லுங்கள். அன்பு.

பாபு.

27

சுபாஷ் கடிதம்

ஜீல்கோரா

6-4-39

என் அன்புள்ள மஹாத்மாஜி,

என் சகோதரர் சரத் சந்திரபோஸுக்கு நீங்கள் எழுதிய ஒரு கடிதத்தில் எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டு வேலை செய்வதற் கநுகூலமாக இரு கட்சியின் தலைவர்களும் சந்தித்து மனம் விட்டுப் பேசினுல் நல்லதென்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இது மிக நல்லயோசனை. இது சம்பந்தமாக என்னுலானது என்ன செய்ய வேண்டுமோ அதை நான் நிறைவேற்றச் சித்தமாயிருக்கிறேன். சென்றதை யெல்லாம் நான் பொருட் படுத்த மாட்டேன். இது விஷயத்தில் நான் ஏதேனும் செய்ய வேண்டுமானுல் அதைச் சொல்லுங்கள். ஒற்றுமையை உண்டு பண்ணும் இந்த முயற்சியில் தங்களுடைய செல்வாக்கும் பெருமையும் மிக உதவியாயிருக்கும் என்று நம்புகிறேன். ஒற்றுமை உண்டாகுமென்ற நம்பிக்கையை நாம் கை விடுவதற்கு முன்னர் தாங்கள் கடைசி முறையாக ஒரு பெரு முயற்சி எடுத்துக் கொள்ளக்கூடாதா? தேச மானது எந்தப் பார்வையோடு உங்களைப் பார்க்கிறது என்பதைத் தாங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன். நீங்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவருமில்லை. சண்டை போட்டுக்கொண்டிருக்கும் எல்லாக் கட்சியினரையும் நீங்கள்தான் ஒன்று சேர்ப்பிக்க முடியுமென்று ஜனங்கள் எதிர்பார்க்கிருர்கள்.

காரியக் கமிட்டி அமைப்பைப்பற்றி நீங்கள் சொன்ன யோசனையை சிந்தனை செய்து கொண்டிருக்கிறேன். உங்களுடைய யோசனை ஏக்கத்தை உண்டாக்குகிறது. ஒற்றுமை உண்டாகும் என்ற நம்பிக்கையை அது சிதற அடிக்கிறது. அந்த யோசனை, காங்கிரஸை பிளவு பட்டுப் போவதினின்று தடுக்காது. அதற்கு மாருக அந்தப் பிளவை அதிகரிக்கும். தற்போதைய நிலைமையில், ஒரு கொள்கையினரைக் கொண்ட காரியக் கமிட்டியை அமைக்க வேண்டுமென்பது கட்சிகள் பிரிந்து போகட்டும் என்று ஆலோசனை சொல்வது போலில்லையா? அஃது ஒரு பெரிய பொறுப்பல்லவா? பல கட்சியினரும் ஒன்று பட்டு வேலை செய்ய முடியாதென்று நீங்கள் கருதுகிறீர்களா? எங்களைப் பொறுத்த மட்டில் நாங்கள் அப்படி நினைக்கவில்லை. நாங்கள் சென்றதை மறந்து விட்டு, பொது லட்சியத்திற்காகக் கை கோத்துக் கொண்டு வேலை செய்யச் சித்தமாயிருக்கிறோம். நீங்கள்தான் அந்த ஒற்றுமையை உண்டு பண்ணுவீர்களென்று எதிர்பார்க்கிறோம். காங்கிரஸின் தற்போதைய அமைப்பில் பல கட்சியினரையுங் கொண்ட காரியக் கமிட்டியை அமைப்பதே நல்லதென்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட கமிட்டியில் எல்லாக் கட்சியினருக்கும் பிரதிநிதித்துவம் இருக்கும்.

இந்தப் பல கொள்கையினரின் காரியக் கமிட்டியை அமைக்கும் யோசனை உங்களுக்குப் பிடித்தமில்லை யென்று அறிகிறேன். ஒன்று சேர்ந்து வேலை செய்ய முடியாது என்பதற்காக இந்த யோசனையை நீங்கள் எதிர்க்கிறீர்களா? அல்லது காரியக்கமிட்டியில் காந்தீயர்களுக்கு (இதைத் தவிர வேறு பிரயோகம் அகப்படாமையினால் இதை உபயோகிக்கிறேன். அதற்காக மன்னிக்கவும்.) அதிகமான பிரதிநிதித்துவம் வேண்டுமென்பதற்காக எதிர்க்கிறீர்களா? பிற்கூறிய ஆட்சேபமே காரணமானால், தயை செய்து தெரிவியுங்கள். நான் புனராலோசனை செய்கிறேன். முற்கூறிய ஆட்சேபமே காரணமானால், நான் இந்தக் கடிதத்தில் கூறுகிற யோசனைகளை வைத்துக்கொண்டு, தாங்கள் ஏற்கனவே எனக்குத் தெரிவித்ததை புனராலோசனை செய்ய வேண்டுகிறேன். காரியக் கமிட்டியில் அபேதவாதிகளையும் அங்கத்தினராக இருக்கச் செய்யலாமென்று நான் ஹரிபுராவில் கூறியபோது, தாங்கள் அதற்கு ஆட்சேபனையில்லை யென்று சொன்னீர்கள். அதற்குப் பிறகு, ஒரே கொள்கையினருடைய காரியக் கமிட்டியே இருக்க வேண்டுமென்று வற்புறுத்தக்கூடிய மாதிரி, தேசத்தின் நிலைமை மாறிவிட்டதா?

நீங்கள், உங்கள் கடிதத்தில், இரண்டு கட்சிகளும் நேருக்கு நேராக எதிர்ப்பட்டு நிற்கின்றன வென்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் இதை விஸ்தரித்துச் சொல்லவில்லை. நீங்கள் கூறுகிற எதிர்ப்பானது, வேலைத் திட்டம் காரணமாக எழுந்ததா, தனிப்பட்ட நபர்களிடையே தோன்றும் மனமாற்றங் காரணமாக எழுந்ததா வென்பது தெரியவில்லை. என் அபிப்பிராயத்தில், தனிப்பட்ட நபர்களுக்கிடையே ஏற்படுகிற மன மாற்றங்கள் விரைவில் மறையக்கூடியவை. நாம் சச்சரவிட்டுக் கொள்ளலாம்; சண்டை போடலாம். ஆனால் கைகுலுக்கி விட்டு, நமது வேற்றுமைகளை மறந்து விடலாம். உதாரணமாக, சுயராஜ்யக் கட்சி சம்பவத்தை எடுத்துக் கொள்ளுங்கள். கொஞ்சகால எதிர்ப்புக்குப் பிறகு, தேசபந்து, பண்டித மோதிலால் ஆகிய இருவருக்கும் தங்களுக்கும் இடையில் மிக இனிமையான தொடர்பு ஏற்பட்டு விட்டதல்லவா? கிரேட் பிரிட்டனிலுள்ள மூன்று பெரிய அரசியல் கட்சிகளும், அவசரமும் அவசியமும் நேர்ந்த போழ்து, ஒன்று சேர்ந்து வேலை செய்யும். பிரான்ஸ் முதலிய நாடுகளில், எந்த மந்திரிச் சபையும் பல கொள்கையினரைக் கொண்ட மந்திரிச் சபையாகவே அமைகிறது. பிரிட்டிஷாரையும் பிரெஞ்சுக்காரரையும்விட நாம் தேசாபிமானத்தில் குறைந்தவர்களா? இல்லையானால், பல கொள்கையினரடங்கிய காரியக் கமிட்டியை அமைத்துக் கொண்டு, பயன்படத்தக்க விதமாக வேலை செய்ய முடியாதுதான்.

வேலைத் திட்டத்தின் காரணமாக, பல கொள்கையினரைக் கொண்ட காரியக் கமிட்டி அமைப்பை நீங்கள் எதிர்க்கிறீர்களானால், அதைப் பற்றியும் உங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன். எந்தெந்த அமிசங்களில் நமது வேலைத் திட்டங்கள் மாறுபடுகின்றன? ஒற்றுமைப் பட்டு வேலை செய்யக் கூடாதபடி அவ்வளவு அடிப்படையான வேற்றுமைகள் என்னென்ன?

நமக்குள்ளே சிலவேற்றுமைகள் இருக்கின்றன வென்பது உண்மை தான். ஆனால் பழையகாரியக் கமிட்டி அங்கத்தினர்களின் ராஜீநாமா கடிதத்திற்கு நான் பதில் எழுதிய போது குறிப்பிட்டதுபோல், நமது வேற்றுமையான அபிப்பிராயங்களை விட ஒற்றுமையான அபிப்பிராயங் கள்தான் அதிகமாயிருக்கின்றன. திரிபுரியில் நடைபெற்ற சம்பவங் களுக்குப் பிறகுகூட, இந்த அபிப் பிராயத்தைத்தான் நான் இன்னும் கொண்டிருக்கிறேன்.

சுயராஜ்யப் பிரச்னையை முன் னிட்டு நாம் பிரிட்டிஷ் அரசாங்கத் திற்கு எச்சரிக்கை கொடுக்க வேண்டு மென்று சொன்ன போது, பொது ஜன இயக்கத்தை நடத்தக் கூடிய அளவு அஹிம்சா தர்ம உணர்ச்சி தேசத்தில் பரவ வில்லை யென்று நீங்கள் உங்களுடைய ஒரு கடிதத்தில் கூறுகிறீர்கள். ஆனால் ராஜ கோட்டை யில் அஹிம்சா தர்ம பொதுஜன இயக்கத்தை நீங்கள் நடத்த வில்லையா? இதேமாதிரி இன்னும் சில சமஸ்தானங்களிலும் நடைபெற வில்லையா? சத்தியாக்கிரக அனுஷ் டானத்தில் சமஸ்தானப் பிரஜை கள் அனுபவ மில்லாதவர் கள் என்று சொல்ல வேண்டும். அவர்களைவிட, பிரிட்டிஷ் இந்தியா விலுள்ள நமக்குச் சத்தியாக் கிரகத்தில் அதிக அநுபவமும் பயிற் யும் இருக்கிறதென்று கூறலாம். தங் களுக்குப் பிரஜா உரிமையும், பொறுப் பாட்சியும் வேண்டு மென்று சமஸ் தானப் பிரஜைகள் சத்தியாக்கிர கத்தை நடத்துகிற போது, பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள நாம் ஏன் நடத்தக் கூடாது?

காந்தீயர்களுடைய ஆதரவின் பேரில், திரிபுரி காங்கிரஸில் நிறை வேற்றப் பட்ட தேசீய கோரிக்கை தீர்மானத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இதில் அழகிய சொற்றொடர்களும் சில உபசார வாச கங்களும் இருந்த போதிலும், அதில், தாக்கீது கொடுக்க வேண்டுமென்ற என் அபிப்பிராயமும், வரும் காலப் போராட்டத்திற்குத் தயார்ப் படுத்திக் கொள்ள வேண்டு மென்ற கருத்தும் அடங்கி இல்லையா? இந்தத் தீர்மானத்தை நீங்கள் அங்கீகரிக்கிறீர் களா? அப்படி அங்கீகரிப்பீர்களா யின் ஏன் இன்னும் ஓர் அடி முன் சென்று என் ஏற்பாட்டை ஏற்றுக் கொள்ளக்கூடாது?

பண்டித பந்த் தீர்மானத்திற்கு இப்பொழுது வருகிறேன். தீர்மானத் தின் கடைசி பாகத்தில் இரண்டு விஷ யங்கள் அடங்கி யிருக்கின்றன. முத லாவது, காரியக் கமிட்டி உங்களு டைய பூரண நம்பிக்கையைப் பெற்றி ருக்க வேண்டுமென்பது. இரண்டா வது, உங்களுடைய விருப்பப் படியே காரியக் கமிட்டி அமைக்கப்பட வேண்டுமென்பது. ஒரு கொள்கை யினரையுடைய காரியக் கமிட்டியே அமைக்கப்பட வேண்டுமென்று நீங் கள் யோசனைக் கூறி, அதன்படி காரி யக் கமிட்டி அமைக்கப் பட்டால் உங்களுடைய விருப்பப்படி அந்தக் காரியக் கமிட்டி அமைக்கப் பட்ட தாகச் சொல்லப்படும். அப்படியா னால் அஃது உங்களுடைய நம்பிக் கையைப் பெற்றதாக இருக்குமா? அப்பொழுது அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்தில் நான் எழுந்திருந்து, ஒரு கொள்கையினரைக் கொண்ட காரியக் கமிட்டியை, தாங்கள் அமைக்கச்

சொன்னதாகவும், அது தங்களுடைய நம்பிக்கையைப் பெற்றிருக்கிறதென்றும் சொல்லலாமா? அதற்கு மாருக, உங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாகாத காரியக்கமிட்டி அமைக்கப் படுமானல், அப்பொழுது பண்டித பந்த் தீர்மானத்தை நீங்கள் அமுலுக்குக் கொண்டு வந்தவர்களாவீர்களா? உங்களுடைய கருத்துப்படியே நீங்கள் சரியான காரியத்தைச் செய்தவர்களாவீர்களா? இதைப்பற்றித் தாங்கள் பரிசிலனை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பண்டித பந்த் தீர்மானத்தை நீங்கள் அப்படியே ஏற்றுக் கொள்வதாயிருந்தால் புதிய காரியக் கமிட்டியைப்பற்றி உங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டுவதோடல்லாது தங்களுடைய நம்பிக்கைக்குப்பாத்திரமாகும் வண்ணம் அந்தக் கமிட்டியை அமைக்க வேண்டுமென்றும் கூறக் கடமைப் பட்டிருக்கிறீர்கள்.

பண்டித பந்த் தீர்மானத்தைப் பற்றி நீங்கள் ஒன்றுமே கூறவில்லை. அதை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா? அல்லது நாங்கள் கொண்டுவந்த திருத்தத்துடன் அதை ஏகமனதாக நிறைவேற்றியிருந்தால் நன்ருயிருக்குமென்று கருதுகிறீர்களா? தவிர, இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்ட பிறகு, காரியக் கமிட்டி நியமன சம்பந்தமாக பிரசிடெண்டினுடைய நிலைமை என்ன? இந்தக் கேள்வியை மீண்டும் நான் கேட்பது எதற்காக வென்ருல், தற்போதைய காங்கிரஸ் விதிகள், தங்களுடைய கை வேலையேயாகும். ஆகையால் இது விஷயத்தில் தங்களுடைய அபிப்பிராயம் எனக்குப் பெரிய உதவியாயிருக்கும். தவிர, இந்தத் தீர்மானத்தை, என் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமாக நீங்கள் கருதுகிறீர்களா? அப்படியானல், எவ்வித நிபந்தனையுமின்றி நான் ராஜீநாமா செய்து விடுகிறேன். தீர்மானத்தின் கருத்து என்ன வென்பதை நானே நிச்சயித்துக் கொள்ள வேண்டு மென்றும் இந்தக் கேள்வியையே எழுப்பக்கூடாதென்றும் சில பத்திரிகைகள் குறை கூறுகின்றன. தீர்மானத்திற்கு வியாக்கியானஞ் செய்து கொள்ளக் கூடிய ஞானம் எனக்கு இருக்கிறது. ஆனல், சில சந்தர்ப்பங்களில் ஒருவன், தன் சொந்த அபிப்பிராயங்களை வழி காட்டியாகக் கொள்ளக்கூடாது. மனம் விட்டுப் பேச வேண்டுமானல், நான் கொண்ட அபிப்பிராயந்தான் சரியென்று, பிரசிடெண்ட் தேர்தலிலிருந்து தெரிகிறது. நான் கருதுகிற வண்ணம் பொது நலத்திற்கு ஒரு நாள்கூடத் தொண்டு செய்ய முடியாதென்று தெரிந்தால் ஒரு நாள் அதிகமாகக்கூட பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டு மென்ற ஆசை எனக்கில்லை. நான் நிர்ணயமான ஒரு காரியத்தைச் செய்வதற்குத் தாமதம் ஏற்பட்டதன் காரணம், இதைப் பற்றி முடிவு கட்டுவது அவ்வளவு சுலபமல்ல வென்பதுதான். என் கட்சியிலேயே, இரண்டுவித கொள்கையுடையவர் இருக்கின்றனர். ஒரு கொள்கையினர், கடைசி வரை ஒற்றுமைக்காக நான் பாடுபட வேண்டுமென்று கருதுகின்றனர். மற்ருெரு கட்சியினர், சமரஸப் பேச்சினல் பயனில்லை யென்றும், உடனே நான் ராஜீநாமா செய்துவிடவேண்டு மென்றும் கருதுகின்றனர். இரண்டாவது கூறிய இந்தக் கட்சியினர் நான் உடனே ராஜீநாமா செய்துவிட வேண்டு

மென்று வற்புறுத்துகின்றனர். ஆனால் நான் அதற்கு இணங்காமலிருக்கிறேன். நமது கட்சிக்குள்ளே (காங்கிரஸுக்குள்ளே) ஒற்றுமையை உண்டு பண்ணக் கடைசி வரை முயற்சி செய்தேன் என்று என் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நான் முயற்சி செய்து பார்த்துவிட வேண்டும். மற்றும் தற்போழ்தைய நிலைமையில் ராஜீநாமா செய்வதனால் உண்டாகும் விளைவுகள் என்னவென்பதை நான் அறிவேன். நான் ஒற்றுமைக்காகக் கடைசி வரை முயல வேண்டுமென்று என் கட்சியில் அபிப்பிராயங் கொண்டுள்ளவர்கள், தாங்கள் எந்தக் கட்சியிலும் சேராதவராய் இருந்து, எல்லாக் கட்சியினரையும் ஒற்றுமைப் படுத்துவீர்கள் என்ற நம்பிக்கை யுடையவராயிருக்கின்றனர்.

பண்டித பந்த் தீர்மானம் என் மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் என்று நீங்கள் கருதுவீர்களானால் நான் ஏன் ராஜீநாமா செய்ய வேண்டுமென்பதை இன்னும் விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். தாங்கள் சொல்வதையும் நம்புவதையும் அப்படியே பின்பற்றுகிறவர்களில் நான் ஒருவன் அல்லன் என்பது உங்களுக்குத் தெரியும். அப்படி யிருக்கிற போது, மேற்படி பந்த் தீர்மானம் என் மீது கொண்டு வரப் பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று நீங்கள் கருதுவீர்களானால் அதற்காக நான் ஏன் ராஜீநாமா செய்ய வேண்டு மென்று நீங்கள் கேட்கலாம். இதற்குக் காரணம் மிகச் சாதாரணமானது தான். மேற்படி தீர்மானம் நிறைவேறியவுடன் நான் ராஜீநாமா செய்திருக்கவேண்டு மென்று, இந்தியாவின் மிகப் பெரிய தலைவரான தாங்கள் அபிப்பிராயப் பட்டு விட்டால்—அதை நீங்கள் பகிரங்கமாகச் சொல்லாமலிருக்கலாம்—அதற்குப் பிறகும் பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பது என் மனச்சாட்சிக்கு விரோதமானது. தங்களிடத்திலும், இது சம்பந்தமாகத் தாங்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்திலும் நான் கொண்டுள்ள பக்தியே நான் இந்த மாதிரி கருதுவதற்குக் காரணம்.

சில பத்திரிகைகள் கூறுகிற மாதிரி காரியக் கமிட்டியின் பழைய அங்கத்தினர்களையே மீண்டும் பதவியிலிருத்த வேண்டுமென்ற அபிப்பிராயம் உங்களுக்கிருக்கிறாற் போலிருக்கிறது. அப்படியானால் தாங்கள் உடனே அரசியலில் மீண்டும் பிரவேசித்து நாலணா செலுத்தும் காங்கிரஸ் அங்கத்தினராகி காங்கிரஸ் காரியக் கமிட்டியின் நேரான நிருவாகத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கும் உங்கள் சிஷ்ய கோஷ்டியினருக்கும் ஏராளமான வித்தியாசங்கள் இருக்கின்றன. இப்படிச் சொல்வதற்காக என்னை மன்னிக்க வேண்டும். நான் யாரையும் குறைவாகச் சொல்லவில்லை. உங்களுக்காக எதையும் செய்யச் சித்தமா யிருக்கின்றனர் ஒரு சிலர். ஆனால் உங்கள் கோஷ்டி யாருக்குக்காக அல்ல. பிரசிடென்ட் தேர்தலில் காரியக் கமிட்டி அங்கத்தினர்களின் உத்திரவை மீறி காந்தீயர் களிற் பலர் எனக்குச் சாதகமாக ஓட்டுப் போட்டார்கள் என்று சொன்னால் நீங்கள் அதை நம்பு வீர்களா? உங்களுடைய பெயரை இந்தச்சச்சரவிலே இழுத்து விடாமலிருந்தால் மேற்படி காந்தீயர்களுடைய ஆதரவை நான்

பெற்றிருப்பேன். திரிபுரி காங்கிரஸில் பழையகாரியக் கமிட்டி அங்கத்தினர்கள் மிகச் சாமர்த்தியத்துடன் நேர்முக மாகச் சச்சரவில் ஈடுபடாமல் என்னையும் தங்களையும் நேர்முகமாகப் பொருத்தி வைத்து விட்டார்கள். (ஆனால் தங்களுக்கும் எனக்கும் எவ்விதமான சச்சரவு மில்லை) பின்னர் திரிபுரியில் தங்களுக்குப் பெரிய வெற்றி கிடைத்து விட்டதாகவும் எனக்குத் தோல்வி யேற்பட்டு விட்டதாகவும் கூறிக் கொண்டார்கள். உண்மையில் அவர்களுக்கு வெற்றியு மில்லை; தோல்வியு மில்லை. உங்களுக்குத்தான் வெற்றி. (காரணமே யில்லாத போராட்டத்தின் வெற்றி.) ஆனால் இந்த வெற்றியானது தங்களுடைய கௌரவத்தில் ஒரு சிறுதளவைக் குறைத்து விட்டது.

நான் எங்கேயோ சென்று கொண்டிருக்கிறேன். தாங்கள் பகிரங்கமாக வெளி வந்து காங்கிரஸ் அரசியலை நடத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதனால் அநேக சிக்கல்கள் தீர்ந்துபோகும். பழைய காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் மீதுள்ள எதிர்ப்பும்—எதிர்ப்பிருப்பதென்னவோ நிச்சயம்—தானகவே மறைந்துவிடும்.

இதை உங்களால் செய்ய முடியாவிட்டால் வேறு ஒரு யோசனையையும் தங்களுக்குச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். சுதந்திரத்திற்காக தேசியப் போராட்டத்தை மீண்டும் தொடங்கி பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு நாக்கீது கொடுத்து காரியங்களைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி செய்வீர்களானால் நீங்கள் விரும்பும் பட்சத்தில் எங்களுடைய உத்தியோக பதவிகளிலிருந்து நாங்கள் சந்தோஷமாக விலகிக் கொள்ளுகிறோம். நீங்கள் யாரிடத்திலே நம்பிக்கை வைத்து ஒப்படைக்கச் சொல்கிறீர்களோ அவர்களிடத்தில் ஒப்படைக்கிறோம். ஆனால், ஒரே ஒரு நிபந்தனை மட்டும் தேவை. அதாவது, சுதந்திரப் போராட்டத்தை மீண்டும் தொடர்ந்து நடத்த வேண்டு மென்பதுதான். ஒரு தேசத்தின் வாழ்க்கையிலே மிக அரிதாகக்கிடைக்கிற சந்தர்ப்பம் இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கிறதென்று என்னைப் போன்றவர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். ஆகையால் சுதந்திரப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தும் பொருட்டு நாங்கள் எந்த விதமான தியாகத்தையும் செய்யச் சித்தமா யிருக்கிறோம்.

ஒரே கொள்கையினரைக் கொண்ட அங்கத்தினர்களையே காரியக் கமிட்டியில் நியமிக்க வேண்டுமென்றும், பல கொள்கையினரைக் கொண்ட காரியக் கமிட்டியினால் வேலை செய்ய முடியாதென்றும், நீங்கள் கடைசிவரை அபிப்பிராயப் படுவீர்களானால், அது காரணமாக ஒரு கொள்கையினரையே கொண்ட காரியக் கமிட்டியை நான் அமைப்பதற்கு நீங்கள் விரும்புவீர்களானால், அடுத்த காங்கிரஸ் வரையில் என் மீது உங்களுக்கு நம்பிக்கை யிருப்பதாகத் தெரிவிக்க வேண்டும். அதற்கிடையில் எங்களுடைய சேவையினாலும், தியாகத்தினாலும் எங்களுடைய பதவிகளை காப்பாற்றிக் கொள்ளாமற் போனால் காங்கிரஸ் எங்களைக் கண்டித்து எங்கள் பதவிகளிலிருந்து எங்களைத் துரத்திவிடலாம். தற்போதைய நிலைமையில் உங்களுடைய நம்பிக்கையைப் பெறுவது அ. இ. கா. கமிட்டி

யின் நம்பிக்கையைப் பெறுவதாகும். உங்களுடைய நம்பிக்கையைக் கொடாமல், ஒரு கொள்கையினரையே கொண்ட காரியக் கமிட்டியை அமைக்குமாறு நீங்கள் கூறுவீர்களானால், பண்டித பந்த் தீர்மானத்தை நிறைவேற்றி வைத்தவர்களாக மாட்டீர்கள்.

பல கொள்கையினரைக் கொண்ட காரியக்கமிட்டியை அமைப்பதற்கு நீங்கள் விரோதமா யிருப்பதின் காரணம் கொள்கை வேற்றுமையினலா? அல்லது பழைய அங்கத்தினர்களுக்கு என்னுடைய 2-3-39 கடிதத்தில் கூறியதை விட அதிகமான பிரதிநிதித்துவம் வேண்டுமென்பதற்காகவா? இதைப்பற்றித் தெளிவாகத் தெரிவிக்குமாறு மீண்டும் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

இந்தக் கடிதத்தை முடிக்கு முன்னா் ஓரிரண்டு சொந்த விஷயங்களைப் பற்றிச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'என்ன நடைபெற்றாலும் நம்முடைய சொந்த நட்பு முறையானது எவ்விதத்திலும் பாதிக்கப் படாது என்று நம்புகிறேன்' என உங்கள் கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நானும் மனப் பூர்வமாக இந்த நம்பிக்கை யுடையவனாய் இருக்கிறேன். எனது வாழ்க்கையில் நான் பெருமை யடையக்கூடியது ஏதேனும் ஒன்று இருக்குமானல் அது நான் ஒரு பெரிய மனிதனுடைய பிள்ளையென்பதுதான். ஆகையால், நானும் ஒரு பெரிய மனிதனே. 'அரசியலைவிட வாழ்க்கை விரிந்தது' என்று தேச பந்து தாஸர் அடிக்கடி சொல்வார். அந்தப் பாடத்தை அவரிடமிருந்து கற்றுக்கொண்டிருக்கிறேன். குழந்தைப் பருவமுதல் என் உள்ளத்தில் மனிதத்தன்மை குடிகொண்டிருக்கிறது. அது என் ரத்தத்திலேயே ஊறிப்போயிருப்பதாய் நான் உணர்கிறேன். இந்த மனிதத் தன்மையிலிருந்து ஒரு சிறிது வழுவிவிடுவேனானல்கூட அரசியல் களத்தில் ஒரு கணமும் இருக்க மாட்டேன். மனிதன் என்ற முறையில் என்னை எவ்வாறு மதிப்பிட்டிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. உண்மையில் என்னைச் சிறிதளவே நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். என்னுடைய அரசியல் விரோதிகள் என்னைப்பற்றித் தங்களிடம் என்னென்னவோ கோள்கள் சொல்லியிருக்கிறார்கள். சென்ற சில மாதங்களில் எனக்கு விரோதமாக ஒரு ரகசியப் பிரசாரம் நடைபெற்று வருகிறது. இதை ஏற்கனவே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பேன். ஆனல் யார் எதைச் சொன்னார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. பின்னர் விசாரித்ததில் என்ன சொன்னார்கள் என்பது தெரியவில்லை.

கடவுளின் ஆணைப்படியே நான் எல்லாக் காரியங்களையும் செய்வேன் என்று தாங்கள் நம்புவதாக ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். எனது தாய் நாட்டிற்கும், என் தாய் நாட்டின் சுதந்திரத்திற்கும் எது சிறந்ததோ அந்தச் சிறந்த வழியை எனக்குக் காண்பிக்க வேண்டுமென்றே நான் கடவுளைச் சதா பிரார்த்திக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னால், மஹாத்மாஜி, அதை நம்புங்கள். அவசியமானல், என்னை நான் இல்லாதபடி செய்து கொள்ளக்கூடிய ஒரு தைரியத்தையும் எனக்கு அளிக்க வேண்டுமென்றே நான் பிரார்த்தனை செய்து கொண்டி

ருக்கிறேன். ஒரு தேசத்தின் தனிப்பட்ட நபர்கள், அந்தத் தேசத்தின் பொருட்டு அவசியமானால் எல்லாவித தியாகங்களையும் செய்யச் சித்தமாயிருக்கிற வரையில்தான் அந்தத் தேசம் வாழும் என்பது என் உறுதியான நம்பிக்கை. இந்த ஆத்ம தற்கொலை எளிதான காரியமன்று. ஆனால் அந்தத் தற்கொலைக்கு அவசியம் ஏற்படுமானால் அதற்குத் தேவையான பலத்தையும் உறுதியையும் எனக்கு அளிக்க வேண்டுமென்று கடவுளை நான் பிரார்த்திக்கிறேன்.

நீங்கள் குணமடைந்து வருகிறீர்களென்றே நம்புகிறேன். நானும் மெதுவாகக் குணமடைந்து வருகிறேன்.

நமஸ்காரம்

தங்கள் அன்புள்ள

சுபாஷ்.

28

சுபாஷ் தந்தி

ஜீல்கோரா
7-4-39

மகாத்மா காந்தி,

பிர்லா மாளிகை,

புது டேல்லி,

இன்று ராஜேந்திர பாபு, தங்களுடன் டெலிபோன் மூலம் பேசியதின் சம்பந்தமாக, டெல்லியினின்று ராஜகோட்டைக்குத் தாங்கள் புறப்படுவதற்கு முன்னர், நாம் இருவரும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யவும். அதிகமாக ஆனால் இதன் காரணமாக மூன்று நாள் தாமதம் உங்களுக்கு ஏற்படும். நாம் கடிதப் போக்குவரத்துச் செய்து கொள்வதனால் எவ்வித முடிவுக்கும் வரமுடியவில்லை. நேருக்கு நேர் சந்தித்துப் பேசினால் விஷயங்கள் சுலபமாக முடியும். தாங்கள் இந்த இடத்திற்கு வர முடியவில்லையானால், நான் டாக்டர்கள் உத்திரவை மீறி டெல்லிக்குவரச் சித்தமாயிருக்கிறேன். காரியக்கமிட்டி பிரச்னையைத் தீர்த்து காங்கிரஸில் ஒற்றுமையை உண்டாக்கி என்னாலானதைச் செய்ய வேண்டுமென்று நான் உணர்கிறேன். என்னுடைய தேகாரோக்கியம் முக்கியமல்ல. அடுத்த அ. இ. கா. கமிட்டி கூட்டத்திற்குள் விஷயம் முடியாவிட்டால் நிலைமை மிகக் கேவலமாகிவிடும். இன்னும் விஷயத்தைத் தாமதித்துக் கொண்டு போவது பொது ஜனங்களின் மனத்தில் குழப்பத்தை உண்டு பண்ணும்.

சுபாஷ்.

29

காந்தி தந்தி

புது டெல்லி
7-4-39

ராஷ்டிரபதி சுபாஷ்

சந்திர போஸ்,

ஜீல்கோரா.

தங்கள் டெலிபோன் செய்தி கிடைத்தது. ராஜகோட்டையில் வேலை அதிகமாயிருப்பதால் இன்று ராஜகோட்டைக்குப் போகிறேன். கடமையைத் தவிர்க்காமல், என் பிரயாணத்தை ரத்து செய்ய முடியாது. ஆனால் ராஜகோட்டை வேலையினின்று நான் விடுவித்துக் கொண்டதும், உங்கள் விருப்பப்படி நடக்கிறேன். அதற்குள், உங்கள் விருப்பப்படி,

காரியக் கமிட்டியை அமைக்குமாறு நான் கூறிய யோசனையை ஏற்றுக் கொள்ளுங்கள். ஞாயிற்றுக்கிழமை காலை ராஜகோட்டைக்குப் போய்ச் சேருகிறேன். அன்பு.

பாபு

30

காந்தி தந்தி

புது டெல்லி

7-4-39

ராஷ்டிரபதி சுபாஷ்
சந்திர போஸ்,
ஜீல்கோரா.

தங்களுடைய தந்தி கிடைத்தது. எனக்கு வேறு வழியில்லை. ராஜகோட்டைக்கு அவசியம் போக வேண்டும். உங்கள் பிரதிநிதியாக சரத் சந்திரரையோ, வேறு யாரையாவதோ ராஜகோட்டைக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன். அவர் ஆகாய விமானத்தில் புறப்பட்டு வரலாம். இன்னும் பத்து நாட்கள் வரை ராஜகோட்டையிலிருந்து வர முடியாதென்று எதிர் பார்க்கிறேன். அன்பு.

பாபு.

31

சுபாஷ் கடிதம்

ஜீல்கோரா

10-4-39

என் அன்புள்ள மஹாத்மாஜி,

இது வரை தங்களுக்குத் தந்திகளும் சிறு கடிதங்களும் அனுப்பியிருக்கிறேன். அது தவிர, மார்ச் மாதம் 25, 29, 31ந் தேதிகளைக் கொண்ட மூன்று கடிதங்களும் ஏப்ரல் மாதம் 6ந்தேதியுடைய வேறொரு கடிதமும் ஆகமொத்தம் நான்கு பெரிய கடிதங்களும் அனுப்பியிருக்கிறேன். இந்தக் கடிதங்களில் காங்கிரஸ் விஷயங்களைப் பற்றியும், காரியக் கமிட்டியின் அமைப்பைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். நம்முடைய கடிதப் போக்கு வரத்தில் இதுதான் கடைசி கடிதமாயிருக்குமென்று நம்புகிறேன். இந்தக் கடிதத்தில், ஏற்கனவே சொன்ன சில விஷயங்களை விளக்கியும், சில தப்பபிப்பிராயங்களை நீக்கியும், கடைசியாக உங்களுக்கு விண்ணப்பித்தும் சில விஷயங்களைக்கூற விரும்புகிறேன்.

1. ஊழலும் பலாத்காரமும் : பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத் தாக்கீது கொடுத்து, விரைவில் தேசியப் போராட்டத்தைத் தொடங்கும் விஷயத்தில் நீங்கள் சம்மதப்படவில்லையென்று தெரிகிறது. இதற்குக் காரணம், காங்கிரஸில் ஊழலும் பலாத்கார உணர்ச்சியும் பரவியிருப்பதாக நீங்கள் கருதுகிறீர்கள். ஊழல் விஷயமாகச் சென்ற சில மாதங்களாகவே, காரியக் கமிட்டி கூட்டத்தில் சர்ச்சை செய்து கொண்டு வந்திருக்கிறோம். இதை நீக்க வேண்டுமென்ற விஷயத்தில் நாம் ஒன்றுபட்ட அபிப்பிராயமுடையவர்களாகவே இருக்கிறோம். ஆனால் சுயராஜ்யப் போராட்டத்தை நடத்தத் தகுதியில்லாத அளவு ஊழல் பரவியிருக்கிறதென்று நான் கருதவில்லை. நாம் இன்னும் சட்ட ரீதியான அரசியல் பாதையில் போய்க் கொண்டிருக்க இருக்க, உத்தியோகங்கள் மீதும் பதவிகள் மீதும் நமது ஜனங்களுக்கு அதிகமான ருசி உண்டாக, உண்டாக இந்த ஊழல் விருத்தியாகிக்

கொண்டு வரும். மற்றும், ஐரோப்பாவிலுள்ள அரசியல் கட்சிகளைப் பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியும். அந்தக் கட்சிகளைவிட, நமது காங்கிரஸ் கட்சி பலவிதங்களிலும் உயர்வாயிருக்கிறது என்று நான் மிகவும் தைரியமாகக் கூறுவேன். ஆகையால் இந்த ஊழல் பிரச்னை, என்னை அவ்வளவு பாதிக்கவில்லை. தவிர, தேசத்தின் பொருட்டு இன்னும் அதிகமான தியாகங்களைச் செய்ய வேண்டுமென்றும், அதிகமான கஷ்டங்களை அநுபவிக்க வேண்டுமென்றும் நாம் விண்ணப்பித்துக் கொண்டால், இந்த ஊழலுக்கு அதுவே தகுந்த மருந்தாகும். இதனால், நம்மிடையே வஞ்சகர்கள் யாரார் இருக்கிறார்கள் என்பதும் வெளியாகி விடும். உள் சத்துருக்களினின்றும் தம்மைத் தடுத்துக் கொள்ள, வெளிச் சத்துருக்களோடு போராடிய ராஜதந்திரிகளின் வரலாற்றை நாம் சரித்திர வாயிலாகக் கேட்டிருக்கிறோம்.

பலாத்கார உணர்ச்சி பரவியிருப்பதைப் பற்றி ஏற்கனவே நான் கூறியதையே வற்புறுத்த விரும்புகிறேன். காங்கிரஸுக்குள்ளும், காங்கிரஸை ஆதரிக்கிறவர்களிடையிலும் முன்னைவிட பலாத்கார உணர்ச்சி குறைந்திருக்கிறது. எப்படியிருந்த போதிலும், முன்னைவிட இப்பொழுது அதிகமாயில்லை. இது விஷயத்தில் தங்களுடன் நான் மாறுபடுவதற்கு ஏற்கனவே காரணங்கள் கூறியிருக்கிறேன். காங்கிரஸ் விரோதிகளிடத்தில் பலாத்கார உணர்ச்சி பரவியிருக்கலாம். அவைகளை காங்கிரஸ் அரசாங்கங்களும் பலாத்காரமாக அடக்கிப் போடலாம். ஆனால் அது வேறு விஷயம். அதனால் காங்கிரஸ்காரர்கள் மத்தியிலும் அவர்களை ஆதரிப்போரிடையிலும் பலாத்கார உணர்ச்சி பரவியிருக்கிறதென்று நாம் அபிப்பிராயப் பட்டுவிடக் கூடாது. நம்முடன் எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத மற்ற ஸ்தாபனங்கள் —உதாரணமாக முஸ்லீம் லீக் முதலியன—எண்ணத்திலும் செயலிலும் அஹிம்சா தர்மத்தை ஏற்றுக்கொள்கிற வரையில், நாம் சுதந்திரப் போராட்டத்தைத் தள்ளிவைப்பதா?

2. பண்டித பந்த் தீர்மானம் : காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட பண்டித பந்த் தீர்மானத்தை நீங்கள் அப்படியே அங்கீகரிக்கிறீர்களா, அல்லது நாங்கள் கொண்டு வந்த திருத்தத்துடன் ஏகமனதாக நிறைவேறியிருந்தால் அதை நீங்கள் விரும்புவீர்களா? தவிர, அந்தத் தீர்மானம், என் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று நீங்கள் கருதுகிறீர்களா? தங்களுடைய உபயோகத்திற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகலையும், திருத்தப்பட்ட வாசகத்துடன் கூடிய தீர்மான நகலையும் இதனுடன் இணைத்திருக்கிறேன்.

திரிபுரியில் நிறைவேறிய தீர்மானம்:

மஹாத்மா காந்தியின் தலைமையில் காங்கிரஸ் அநுஷ்டித்து வந்த அடிப்படையான கொள்கைகளை உறுதியாகப் பின் பற்றுவதாக இந்தக் காங்கிரஸ் வலியுறுத்துகிறது. இந்தக் கொள்கையில் எவ்வித மாற்றமும் இருக்கக்கூடாதென்றும், வருங் காலத்துக் காங்கிரஸ் வேலைத் திட்டம் இந்தக் கொள்கைகளை அனுசரித்ததாக இருக்க வேண்டுமென்றும் இந்தக் காங்கிரஸ் அபிப்பிராயப் படுகிறது.

சென்ற வருஷம் வேலை செய்து கொண்டிருந்த காங்கிரஸ் காரியக் கமிட்டியினிடத்தில் இந்தக் காங்கிரஸுக்கு பூரண நம்பிக்கையிருக்கிறதென்பதை வலியுறுத்திக் கூறுகிறது. சென்ற வருஷக் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் மீது துரபிப்பிராயங்கள் ஏற்படுமாறு பேசப் பெற்றவைகளைக் குறித்து இந்தக் காங்கிரஸ் பெரிதும் வருந்துகிறது.

அடுத்த வருஷம் ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்படுமென்று காங்கிரஸ் கருதுவதால், இந்த மாதிரியான நெருக்கடிகளில் மஹாத்மா காந்தி ஒருவர்தான் காங்கிரஸையும், தேசத்தையும் வெற்றிகரமாக நடத்திச் செல்லக் கூடும். ஆகலால் காங்கிரஸின் நிர்வாக ஸ்தாபனமானது அவருடைய நம்பிக்கையைப் பெற்றிருக்க வேண்டும், எனவே காங்கிரஸ் தலைவர் காந்தியடிகளுடைய விருப்பத்திற்கு இணங்க காரியக் கமிட்டியை அமைக்க வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் தீர்மானிக்கிறது.

திருத்தப்பட்ட வாசகம்: மஹாத்மா காந்தியின் தலைமையில் காங்கிரஸ் அநுஷ்டித்து வந்த அடிப்படையான கொள்கைகளை உறுதியாகப் பின் பற்றுவதாக இந்தக் காங்கிரஸ் வலியுறுத்துகிறது. இந்தக் கொள்கையில் எவ்வித மாற்றமும் இருக்கக்கூடாதென்றும், வரும் காலத்துக் காங்கிரஸ் வேலைத் திட்டம் இந்தக் கொள்கைகளை அனுசரித்ததாக இருக்க வேண்டுமென்றும் இந்தக் காங்கிரஸ் அபிப்பிராயப் படுகிறது.

சென்ற வருஷம் வேலை செய்து கொண்டிருந்த காங்கிரஸ் காரியக் கமிட்டியினிடத்தில் இந்தக் காங்கிரஸுக்குப் பூரண நம்பிக்கையிருக்கிறதென்பதை வலியுறுத்திக் கூறுகிறது.

சென்ற வருஷம் வேலை செய்து வந்த காரியக் கமிட்டியினிடத்தில் இந்தக் காங்கிரஸுக்கு நம்பிக்கை இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறது.

அடுத்த வருஷம் நெருக்கடியான நிலைமை ஏற்படுமென்று தெரிவதால், முன் போல் இனியும் மஹாத்மா காந்தியின் தலைமையும் ஒத்துழைப்பும் தேவை என்று இந்தக் காங்கிரஸ் அபிப்பிராயப் படுகிறது.

3. காங்கிரஸ் அபேதவாதக் கட்சி: காங்கிரஸ் அபேதவாதக் கட்சியைப்பற்றி என்னுடைய 31-3-39 கடிதத்தில் குறிப்பிட்ட அபிப்பிராயங்கள், அப்பொழுது எனக்குக்கிடைத்த செய்திகளைக் கொண்டும், பத்திரிகைகளில் வெளியாகும் ஹேஷ்யங்களைக் கொண்டும் தெரிவிக்கப் பட்டதாகும். மேற்படி கட்சியின் உத்தியோகஸ்தர்கள், பழைய காரியக் கமிட்டி அங்கத்தினர்களை ஆதரிப்பதாகவே இருக்கிறது என்ற எண்ணமே எனக்கு ஏற்பட்டது. அபேதவாதக் கட்சி முழுவதுமே, பழைய காரியக்கமிட்டி அங்கத்தினர்களைப் பின்பற்றுமென்று நீங்கள் கருதுவீர்கள் என்று நான் நினைத்தேன். இதனாலேயே, தலைவர்கள் எந்த மாதிரியாக நடந்து கொண்டாலும் அபேதவாதக் கட்சியின் பெரும்பாலோர், எங்கள் பக்கமே சேருவர் என்று உங்களுக்குத்

தெரிவிக்க வேண்டுமென்று விரும்பினேன். திரிபுரியில், மேற்படி கட்சித் தலைவர்கள், பண்டித பந்த் தீர்மானத்தில் நடுநிலைமை வகித்த காரணத்தினால் இப்படி நான் சொல்லக்கூடும். சில மாகாணங்களில் அபேதவாதக் கட்சிக்குள்ளேயே பிளவுகள் ஏற்பட்டுவிட்டன. பின்னர் எனக்குக் கிடைத்த தகவல்களைக் கொண்டு பார்த்தால், அபேதவாதக் கட்சித் தலைவர்களின் எதிர்காலக் கொள்கையைப்பற்றி நான் கொண்டிருந்த அபிப்பிராயம் வேறுவிதமானது என்று தெரிந்தது.

4. ஒரு கோள்கையினரைக் கோண்ட கமிட்டியா? பல கோள்கையினரைக் கோண்ட கமிட்டியா? இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொண்டேன். ஆயினும் நான் இதுவரையில் திருப்தி கொள்ளவில்லை. என் அபிப்பிராயத்தை மாற்ற இன்னுஞ் சில வாதங்களும் உங்களிடம் இருக்கக் கூடும். நாம் ஒன்றுபட்டு வேலை செய்ய முடியாத அவ்வளவு அடிப்படையான வேற்றுமைகள் நம்மிடையே இருக்கின்றன வென்பதுதான் உங்களுடைய முக்கிய வாதம். ஹரிபுரா காங்கிரஸினும், திரிபுரி காங்கிரஸ் பிரசிடெண்ட் தேர்தல் வரையிலும், நாம் ஒற்றுமைப்பட்டே வேலை செய்ய முடியும் என்ற அபிப்பிராயமே உங்களுக்கு இருந்தது. இப்பொழுது அது முடியாமற்போனதற்கு என்ன காரணம்? நமக்குள் எந்தெந்தவிதமான அடிப்படை வேற்றுமைகள் இருக்கின்றன வென்பது தங்கள் அபிப்பிராயம்?

பல கொள்கையினரைக் கொண்ட காரியக்கமிட்டி அமைப்பது சாத்தியப்படாது என்று நீங்கள் கூறும் ஆட்சேபம் எந்தக் காரணத்தினால்? கொள்கை வித்தியாசமா? அல்லது என்னுடைய 25-3-39 கடிதத்தில் குறிப்பிட்டபடி இரண்டு கட்சியினரும் பாதி பாதி அங்கத்தினர்களை நியமிக்கட்டும் என்பதில் அபிப்பிராய பேதமா? அந்தக் கடிதத்தில், நான் ஏழு பேரைக் குறிப்பிடுவதாகவும், சர்தார் பட்டேல் ஏழு பெயரைக் குறிப்பிடட்டும் என்றும் சொல்லியிருந்தேன். இந்தப் பிரதிநிதித்துவ விகிதத்தை நீங்கள் அங்கீகரிப்பதாயிருந்தால், நீங்களே மேற்படி பதினன்கு பெயர்களையும் சிபார்சு செய்யலாமே. இந்தப் பிரதிநிதித்துவ விகிதாசாரம் உங்களுக்குச் சம்மதமில்லையானால், உங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தால், நான் என் அபிப்பிராயத்தைப்பற்றிப் புனராலோசனை செய்வதற்குச் சௌகரியமாயிருக்கும்.

5. ஸ்ரீ சரத் சந்திரபோஸுக்கு யோசனை: 24-3-39ல் என் சகோதரருக்கு நீங்கள் பின் வருமாறு எழுதினீர்கள்:—.................'நீங்கள் அனைவரும் ஒன்றுகூடி அவரவர் மனதிலிருப்பதையெல்லாம் கொட்டி ஒரு முடிவுக்கு வரலாம்; அல்லது அபிப்பிராய வேற்றுமை வேரூன்றிப் போயிருந்தால்' என்றெல்லாம் எழுதினீர்கள். ஆனால், தங்களுடைய பிந்திய கடிதங்களில் இதைப்பற்றிக் குறிப்பிடவேயில்லை. காங்கிரஸுக்குள் ஒற்றுமையை உண்டாக்க எங்களாலான முயற்சியைச் செய்வோம் என்று என் முந்திய கடிதங்களில் பலமுறை சொல்லியிருக்கிறேன். நீங்கள்தான் எல்லாரையும் ஒன்று சேர்ப்பித்து ஒற்றுமையை உண்டு பண்ண முடியுமென்றும், நீங்

கள் ஒருவர்தான் எந்தக் கட்சியிலும் சேராதவர் என்றும் எங்களிலே பலர் கருதுகின்றனர். பழைய காரியக் கமிட்டி அங்கத்தினர்களையும், அவர்களைப் பின் பற்றுவோர்களையும் மட்டுமே காந்தியர்களென்று ஏன் நீங்கள் கருத வேண்டும்? எங்களுடைய எண்ணங்களுக்கும், திட்டங்களுக்கும் நீங்கள் கொஞ்சம் இடங் கொடுத்தீர்களானால், காங்கிரஸ் முழுவதையுமே நீங்கள் காந்தியமாகக் கருதலாம்.

6. என்னுடைய யோசனைகள்:—

(அ) என்னுடைய முதல் யோசனை, சுதந்திரப் போராட்டத்தை உடனே தொடங்க வேண்டுமென்பது. அப்படி நீங்கள் தொடங்கும் பட்சத்தில், உத்தியோக பதவிகளுள்பட எல்லா விதமான தியாகங்களையும் செய்யுமாறு எங்களைக் கேட்க உங்களுக்கு உரிமை உண்டு. போராட்டம் தொடங்குமானால், நாங்கள் எவ்வித நிபந்தனையும் கோராமல் ஒத்துழைக்கச் சித்தமாயிருக்கிறோம்.

(ஆ) போராட்டத்தை இப்பொழுது ஆரம்பிக்க முடியாதென்றும், பழைய அங்கத்தினர்களையே காரியக் கமிட்டியில் நியமனம் செய்ய வேண்டுமென்றும் நீங்கள் அபிப்பிராயப்படுவீர்களானால், உடனே நான்கணா சந்தா செலுத்தி காங்கிரஸ் அங்கத்தினராகி, காரியக் கமிட்டியின் நிருவாகத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் இல்லாமல், பழைய அங்கத்தினர்களையே காரியக் கமிட்டியில் நியமிப்பதனால் ஏற்படக்கூடிய அநேக தொந்திரவுகள் இதனின்றும் நீங்கும்.

(இ) இந்த யோசனையையும் உங்களால் ஏற்றுக் கொள்ள முடியாமற் போய், ஒரு கொள்கையினரைக் கொண்ட காரியக் கமிட்டியையே நியமிக்க வேண்டுமென்று நீங்கள் கருதுவீர்களானால், அடுத்த காங்கிரஸ் வரை என் மீது நம்பிக்கையிருப்பதாகத் தெரிவிக்க வேண்டுகிறேன். நீங்கள் நம்பிக்கை தெரிவித்தால், அ. இ. கா. கமிட்டியிலுள்ள உங்களுடைய 'வைதிக' கோஷ்டியினரின் ஆதரவு எனக்குக் கிடைக்கும். இதனால் பிளவு உண்டாகாமல் தடுக்கப்படும். காரியங்களும் ஒழுங்காக நடைபெறும். பண்டித பந்த் தீர்மானப்படி, காரியக் கமிட்டியானது உங்களுடைய விருப்பப்படியே நியமிக்கப்பட வேண்டுமென்பதையும், அது தங்களுடைய பூரண நம்பிக்கையையும் பெற்றிருக்க வேண்டுமென்பதையும் என்னுடைய 6-4-39 கடிதத்தில் எடுத்துக் காட்டினேன். எனவே இந்தத் தீர்மானப்படி, உங்களுடைய நம்பிக்கையைப் பெறாத காரியக் கமிட்டியை அமைக்குமாறு நீங்கள் யோசனைகூற முடியாது.

6. மேற்படி மூன்று யோசனைகளையும் நீங்கள் நிராகரித்து விட்டீர்களானால், உங்களுக்கு ஏற்பட்டுள்ள வழி ஒன்றே ஒன்றுதான். காரியக் கமிட்டியை அமைக்கும் முழுப் பொறுப்பையும் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த மாதிரி ஏற்றுக் கொள்வதாக நீங்கள் அறிவித்து விட்டால், என் இஷ்டப்படி எதிர்காலத்தில் நடந்து கொள்ள எனக்கு உரிமையுண்டு.

நீங்கள் மௌனமாயிருப்பது : நமது கடிதப் போக்கு வரத்தைப்பற்றி மௌனமா யிருப்பது நல்லதென்று நான் கூறியதற்காக நீங்கள் சும்மா யிருப்பதாக ஒரு கடிதத்தில் குறிப் பிட்டிருக்கிறீர்கள். இதனை விளக்க விரும்புகிறேன். திரிபுரியில் காங் கிரஸ்காரர்களுக்குள் அதிகமான பிள வுகள் காணப்பட்டன. நீங்கள் ஒரு வர்தான் ஒற்றுமையை உண்டாக்க முடியுமென்று நான் உணர்ந்தேன். நிலைமையைப் பற்றி நிஷ்பட்சபாத மான ஓர் அபிப்பிராயத்தை நீங்கள் கொள்ள வேண்டுமென்று நான் கருதி னேன். பண்டித பந்த் தீர்மா னத்தை ஆதரித்தவர்கள், புதிய டெல் லிக்கு உங்களிடம் ஓடி வந்தார்கள். திரிபுரி சம்பவங்களைப்பற்றி அவர்கள் ஒரு தலைச் சார்பான செய்தியையே தெரிவித்திருப்பார்கள் என்று நான் கருதி, இருதரப்பு கட்சிகளையும் நீங் கள் தெரிந்து கொள்ளும் வரையில் சும்மா யிருப்பது நல்லதென்று தங்க ளுக்குத் தெரிவித்தேன். என் வேண்டுகோளுக்கு இசைந்ததற்குப் பெரிதும் நன்றி பாராட்டுகிறேன். இதன் பலன் என்னவென்றால், காங் கிரஸுக்குள் பிளவு ஏற்படாதபடி ஒற்றுமையை உண்டாக்குவது உங்க ளால்தான் முடியுமென்று தேசம் முழுவதும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. துரதிருஷ்டவச மாக, ஒரு தலைப்பட்சமான அபிப் பிராயத்தை நீங்கள் கொண்டு விட்டீர் களானால்—அதை ஆண்டவன் தடுக் கட்டும்—ஒற்றுமை உண்டாக்கும் என்ற நம்பிக்கை யெல்லாம் சிதறிப் போய்விடும்; உள் குழப்பம் ஏற் படும்.

இனியும் நீங்கள் மௌனமாயிருக் கக் கூடாதென்று நான் இப்பொழுது அபிப்பிராயப்படுகிறேன். திரிபுரி சம் பவங்களைப்பற்றி எல்லாக் கட்சியின ருடைய அபிப்பிராயங்களையும் நீங் கள் கேட்டு விட்டிருந்து, இனியும் யும் மௌனமயிருக்கக் கூடாதென்று நீங்கள் அபிப்பிராயப்படுவீர்களானால், எந்தவிதமான அறிக்கையையும் நீங் கள் வெளியிடலாம். பழைய காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் மட்டுமல்லா மல், எல்லாக் காங்கிரஸ்காரர்களும் என்ன அபிப்பிராயம் கொள்கிறார்கள் என்பதை மட்டும் நீங்கள் ஞாபகம் வைத்துக் கொண்டால் போது மானது.

7ந் தேதியன்று தாங்கள் திடீ ரென்று ராஜகோட்டைக்குப் புறப் படுவதற்கு முன்னர் உங்களிடமிருந்து கிடைத்த தந்தி, எனக்குப் பெரிய ஆசாபங்கத்தை உண்டாக்கி விட்டது. நமது கடிதப் போக்கு வரத்தினால் எவ்வித முடிவும் ஏற்படவில்லை யென் றும், நாம் நேரில் சந்தித்துப் பேசு வதே நல்ல தென்றும் நான் அபிப் பிராயப்பட்டு, தங்களைச் சந்திக்க நான் எவ்வளவு ஆவலுள்ளவனயிருக் கிறேன் என்பதை 7ந் தேதியன்று காலை டாக்டர் ராஜேந்திர பிரசாத் பிர்லா மாளிகைக்கு டெலிபோனில் தெரிவித்தார். பின்னர், அன்றைய தினமே, என்னுடைய டாக்டரும் பிர்லா மாளிகைக்கு டெலிபோன் செய்தார். அங்கிருந்து பேசிய ஸ்ரீ மகாதேவ தேசாய், இங்கு (ஜீல்கோ ராவுக்கு) வரத் தாங்கள் பெரு முயற்சி செய்வீர்களென்றும், எப்ப டியும் 8ந் தேதி வரை டெல்லியை விட்டுப்புறப்பட மாட்டீர்களென்றும் தெரிவித்தார். ராஜகோட்டை, உங் களை அழைத்துக் கொண்டதைக் குறித்து வருந்துகிறேன். ராஜ்

கோட்டைக்கு ஏற்படுகிற நன்மை யானது, காங்கிரஸுக்குத் தீமையாக முடியக்கூடா தென்பது என்னுடைய பிரார்த்தனை. சென்ற பிப்ரவரி மாதம் திடீரென்று நீங்கள் ராஜகோட்டைக்குச் சென்றிராவிட்டால், திரிபுரி காங்கிரஸ் சரித்திரம் வேறுவிதமாக எழுதப்பட்டிருக்கும். பிளவு உண்டாகாதபடி காப்பாற்றக் கூடிய சக்தி உங்களிட மிருந்தது. ஆனால் நீங்கள் இல்லை. உபசரணைக் கூட்டத்தாரும், நானும் உங்களைக் கட்டாயம் வருமாறு மன்றாடிக் கேட்டுக் கொண்டோம். ராஜகோட்டை தாகூர் சாஹிப்புக்கு நீங்கள் தாக்கீது விடுத்த போது தேசம் முழுவதும் மிகவும் உற்சாகத்துடன் உங்களை ஆதரித்தது. ஆனால், அங்கு நீங்கள் உடனே சென்றதை, சிறிது தள்ளிப் போட்டிருக்கலாம் என்று பலரும் நினைக்கின்றனர்.

ஸர் மாரிஸ் க்வையரின் தீர்ப்பைப் பற்றி ஒரு வார்த்தை. அவர், சொந்த ஹோதாவில் கையெழுத்துப் போடவில்லை. இந்தியாவின் பிரதம நீதிபதி என்ற ஹோதாவில்தான் கையெழுத்துப் போட்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய கடிதம் நீண்டு விட்டது. ஆகையால் இதனுடன் நிறுத்திக் கொள்ளுகிறேன். உங்களுடைய ராஜகோட்டை பிரயாணம், உங்களுக்கு அதிகமான தொந்திரவைக் கொடுக்க வில்லையென்று நம்புகிறேன். நானும் குணமடைந்து வருகிறேன்.

நமஸ்காரம்,
தங்கள் அன்புள்ள
சுபாஷ்.

32
காந்தி கடிதம்

ராஜகோட்டை
10-4-39

என் அன்புள்ள சுபாஷ்,

தங்களுடைய 6-4-39 கடிதம் இங்குத் திருப்பி அனுப்பப்பட்டுக் கிடைத்தது.

சத்துருக்கள் ஒன்றுகூடி மனதில் ஒன்றும் வைத்துக் கொள்ளாமல் தாராள மாகப் பேசிவிடுவது நல்லதென்று நான் முன்னர் யோசனை கூறினேன். ஆனால் அதற்குப் பிறகு அனேக சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. இனி அத்தகைய கூட்டம் நடை பெறுவதனால் பயன் உண்டாஎன்பது எனக்குச்சந்தேகமா யிருக்கிறது. இதனால் மனக்கசப்புத் தான் அதிகமாகும். வேற்றுமைகளோ விரிந்து விட்டன. சந்தேகங்களோ ஆழமாகப் போய் விட்டன. ஒற்றுமை உண்டாகு மென்று எனக்குத் தெரியவில்லை. ஆக, இப்போது என்னவழி என்றால் அபிப்பிராய வேற்றுமைகள் இருக்கின்றன என்பதை அங்கீகரித்துக் கொண்டு அந்தந்தக் கட்சியினரும், அவரவர் போக்குப்படி வேலை செய்வதுதான். ஒற்றுமையுடன் வேலை செய்வதற்காகப் போரிட்டுக் கொண்டிருக்கும் சக்திகளை யெல்லாம் ஒன்று திரட்டும் ஆற்றல் எனக்கில்லை யென்று நான் உணர்கிறேன். அவரவர்களும் தங்கள் தங்கள் கொள்கைப்படி கண்ணியமாக வேலை செய்வார்கள் என்றுதான் நான் நம்ப முடியும். அப்படிச் செய்வார்களானால் தேசத்திற்கு நல்லது.

பண்டித பந்த் தீர்மானத்தைப் பற்றி நான் வியாக்கியானம் செய்ய முடியாது. அதைப் படிக்கப் படிக்க வெறுப்பே அதிகமாகிறது. தீர்மானத்தைத் தயாரித்தவர்கள் நல்ல நோக்கத்துடனேயே தயாரித்திருக்கிறார்கள். ஆனால் தற்போதைய சங்கடமான நிலைமைக்கு அது பரிகாரம் அளிப்பதாயில்லை. ஆகையால், அதற்கு உங்கள் இஷ்டப்படி வியாக்கியானம் செய்து கொண்டு அதன்படி சிறிது கூடத் தயங்காமல் நடக்க வேண்டியதுதான்.

உங்கள் மீது ஒரு காரியக் கமிட்டியை நான் சுமத்த முடியாது; சுமத்தவும் மாட்டேன். அப்படிச் சுமத்தப்படுவதை நீங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. உங்களுடைய காரியக் கமிட்டி அமைப்பையோ, அதன் கொள்கைகளையோ, அ. இ. கா. கமிட்டி அங்கீகரிக்குமென்று நான் உறுதி கூறமுடியாது. அப்படிச் செய்வது அதன் சுய எண்ணத்தைத் தகைவதாகும். அ. இ. கா. கமிட்டி அங்கத்தினர்கள், அவர்கள் மனப் போக்குப் படி தீர்ப்புக் கூறட்டும். உங்களுக்கு மெஜாரிட்டி கிடைக்காவிட்டால் அந்த மெஜாரிட்டியை உங்கள் பக்கம் திருப்ப எதிர்க்கட்சியிலிருந்து போராடுங்கள்.

எனக்கு எங்கெங்கு செல்வாக்கு உண்டோ அங்கெல்லாம் சட்ட மறுப்பியக்கத்தை நிறுத்தி யிருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியாதா? திருவாங்கூரும், ஜெயப்பூரும் சிறந்த உதாரணங்கள். இங்கு (ராஜகோட்டைக்கு) வருவதற்கு முன்னரேயே சட்டமறுப் பியக்கத்தை நிறுத்தி விட்டேன். பலாத்காரமாகிற காற்றையே நான் சுவாசிப்பதாக உணர்கிறேன். பலாத்காரமற்ற செயலுக்குப் போதிய நிலைமை ஏற்படவில்லையென்று நான் காண்கிறேன். ராமதுர்க் சம்பவம் சிறந்த உதாரணமாகாதா? பலாத்காரத்திற்கு அது பெரிதும் துணை செய்துவிட்டது. அதுயோசித்துச் செய்யப்பட்ட சம்பவமென்றே நான் காண்கிறேன். காங்கிரஸ்காரர்கள்தான் இதற்குப் பொறுப்பாளிகள். நாம் இருவரும் ஒரே விஷயத்தை இரண்டு கோணங்ளிலிருந்து பார்க்கிறோமென்பதையும் ஆனால் இரண்டு விதமான முடிவுகளுக்கே வருகிறோமென்பதையும் நீங்கள் உண்மையில் கவனிக்கவில்லையா? அங்ஙனமிருக்கிற போது அரசியல் மேடையில் நாம் இருவரும் எப்படி ஒன்று சந்திப்பது? நமக்குள் வேற்றுமை உண்டு என்பதை அங்கீகரித்து சமுதாய சீர்திருத்த, நகரசபை சீர் திருத்த மேடைகளில் சந்திப்போம். பொருளாதாரச் சீர் திருத்த மேடையிலும் நாம் இருவரும் ஒன்று சேர முடியாதென்பதை இப்பொழுது உணர்ந்து கொண்டிருக்கிறேன்.

நம் மனதிற்குத் தோன்றினபடி நமது வழியில் நாம் வேலை செய்து கொண்டு போவோமானால் அவரவரும் தாய் நாட்டுக்குத் தொண்டு செய்தவர்களாவோம். ஒன்று சேர முடியாத பல கட்சியினரும் ஒரே வேலைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு நடத்த முடியாத நிலைமையில் வைக்கப் படுவதைவிட இது சிறந்ததல்லவா?

நான், தனபாட்டுக்கு வர முடியாதென்று டெல்லியிலிருந்து உங்களுக்குத் தந்தி கொடுத்தேன். ராஜ

கோட்டையை நான் புறக்கணிக்க முடியாது.

நான் சௌக்கியமாயிருக்கிறேன். கஸ்தூரிபாய் மலேரியாவினால் படுக்கையிலிருக்கிறாள். இன்று ஐந்தாவது நாள். அவளுக்கு ஜுரம் வந்து விட்டபோதே என்னுடன் அழைத்துக் கொண்டு வந்து விட்டேன்.

நிச்சயமான ஒரு முடிவுக்கு வந்து காரியத்தைத் தொடங்குங்கள். அதன் பலனை கடவுளிடம் விட்டு விடுங்கள். இதன் மூலமாக உங்கள் தேக சுகத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். உங்கள் தகப்பனாரைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டிருப்பது உருக்கமாயிருக்கிறது. அவரைச் சந்தித்த பாக்கியம் எனக்கு உண்டு.

ஒரு விஷயத்தை மறந்து விட்டேன். உங்களுக்கு விரோதமாக என்னை ஒருவரும் நிறுத்தி வைக்கவில்லை. சிவ கிராமத்தில் உங்களிடம் நான் கூறியதெல்லாம் என் சொந்த அபிப்பிராயங்களே. பழைய காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் ஒருவர்கூட உங்களுக்குச் சத்துருவல்ல. அப்படி நீங்கள் நினைத்தால் அது தவறு.

அன்பு

பாபு

33

சுபாஷ் கடிதம்

ஜில்கோரா

13–4–39

என் அன்புள்ள மஹாத்மாஜி,

என்னுடைய சென்ற 10–4–39 கடிதந்தான் கடைசி கடிதமாயிருக்குமென்று கருதினேன். ஆனால், அப்படியில்லை. இன்று விடியற்காலையிலே நான் எழுந்து விட்டேன். நித்திரை வரவில்லை. அப்பொழுது நமக்குள்ளிருக்கிற பொதுவான பிரச்னைகளைப் பற்றி அமைதியாக இருந்து சிந்தனைசெய்ய ஆரம்பித்தேன். பின்னர் நம்மிருவருக்கும் நடைபெற்ற கடிதப் போக்கு வரத்துகளைப் புரட்டிப் பார்த்தேன். இன்னும் சில விஷயங்களை விவரப்படுத்திக் கூறுதல் நல்லதென்று கருதினேன். 15-2-39ல் நாம் சிவகிராமத்தில் சந்தித்தபோது, நமக்குள் அடிப்படையான வேற்றுமைகள் இருக்கின்றனவென்பதை அங்கீகரித்துக் கொண்டோம் என்று உங்களுடைய 30–3–39 கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நமக்குள் சில வித்தியாசங்கள் இருக்கின்றனவென்று நமது சம்பாஷணையின் போது தெரிந்து கொண்டோம். ஆனால் அவை அடிப்படையான வேற்றுமைகள் என்று சொல்ல முடியாது. இப்பொழுது உங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா அம்சங்களைப்பற்றியும் அந்தச்சம்பாஷணையின் போது குறிப்பிட்டீர்கள். உதாரணமாக, காங்கிரஸ் ஊழல்களைப் பற்றியும் பலாத்காரத்தைப் பற்றியும் பேசினோம். பலாத்கார மற்ற முறையில் சுயராஜ்யப் போராட்டத்தை நடத்தக்கூடிய நிலைமை தேசத்தில் ஏற்படவில்லை யென்றும் அதனால் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குத் தாக்கீது கொடுக்கக்கூடிய காலம் வரவில்லை யென்றும் நீங்கள் குறிப்பிட்டீர்கள். ஆனால் இவை யெல்லாம் அடிப்படையான வேற்றுமைகளா? இவைகாரணமாக நாம் ஒற்றுமைப்பட்டு வேலை செய்ய முடியாதா? வேலைத்திட்டம் இன்னதென்று நிர்

ணயிப்பது காங்கிரஸின் வேலையாகும். நாம் நமது தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருடைய வேலைத் திட்டத்தையும் ஆஜர் படுத்தலாம். ஆனால் அவற்றை அங்கீகரிப்பதோ, நிராகரிப்பதோ காங்கிரஸ் வேலையாகும். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத் தாக்கீது கொடுத்து சுயராஜ்யப் போராட்டத்தை நடத்த வேண்டுமென்று என் தலைமையுரையில் குறிப்பிட்ட திட்டத்தை திரிபுரி காங்கிரஸ் நிராகரித்து விட்டது. ஆனால் அதற்காக நான் குறைபட்டுக் கொள்ள வில்லை. ஜனநாயக முறையில் இத்தகைய தாமதங்கள் ஏற்படத்தான் செய்யும். இப்பொழுதும், நான் செய்ததுதான் சரியென்று உணர்கிறேன். இதை ஒரு சமயம் காங்கிரஸ் உணரும். ஆனால் நாள் கடந்த பிறகு உணரப் போகிறதே என்பதுதான் என் வருத்தம். மேற் கண்ட அபிப்பிராய வேற்றுமைகளெல்லாம் இருக்கின்றன வென்றே வைத்துக் கொள்வோம். அப்படியிருந்தும், நாம் ஒற்றுமையுடன் இருந்து வேலை செய்ய முடியாதா? இந்த அபிப்பிராய வேற்றுமைகளெல்லாம், திடீரென்று இன்று முளைத்தவையல்ல. இவை சிறிது காலமாகவே இருக்கின்றன. அப்படியிருந்தும் நாம் ஒற்றுமையுடனேயே வேலை செய்து வந்திருக்கிறோம். இந்த வேற்றுமைகள் இனியும் இருக்கச் செய்யும். அப்பொழுதும் நாம் ஒன்று பட்டே வேலைசெய்ய வேண்டியிருக்கும்.

ஒரு கொள்கை யினரை யுடைய காரியக் கமிட்டியை அமைப்பதா பலகொள்கை யினரைக் கொண்ட காரியக் கமிட்டியை நியமிப்பதா என்பதைப் பற்றி நாமிருவரும் சிவ கிராமத்தில் ஒரு மணி நேரம் பேசினோம் என்பது உங்களுக்கு ஞாபக மிருக்கும். ஆனால் நமக்கிடையே அபிப்பிராய வேற்றுமை நிகழ்ந்தது. நமது சம்பாஷணைக்கிடையில், சர்தார் படேல் முதலியவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற என்னாலான முயற்சிகளைச் செய்வதாக நான் கூறினேன். நான் உடல் நோயால் படுத்திராமற் போனாலும் 22-2-39-ல் வார்தாவில் நடைபெற்ற காரியக் கமிட்டி கூட்டத்திற்குப் போயிருந்தாலும் ஒன்று பட்டு வேலை செய்ய முடியும் என்ற முடிவுக்கு நாம் சுலபமாக வந்திருக்க முடியும்.

தங்களுடைய 30-3-39 கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ள மற்றோர் அபிப்பிராயத்தையும் நான் அங்கீகரிக்க முடியவில்லை. என்னுடைய கொள்கைக்கு அ. இ. கா. கமிட்டியில் மெஜாரிட்டி கிடைக்குமானால், நான் அந்தக் கொள்கையைப் பின் பற்றுகிறவர்களைக் கொண்ட காரியக் கமிட்டியையே அமைக்கலாம் என்று கூறியிருக்கிறீர்கள். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், அ. இ கா. கமிட்டியில் எங்களுக்கு மெஜாரிட்டி இருந்தாலும் கூட, காங்கிரஸின் பொதுப்படையான அபிப்பிராயத்தைப் பிரதி பலிக்கக் கூடிய மாதிரியாகப் பல கொள்கை யினரையுங் கொண்ட காரியக் கமிட்டியையே அமைக்க வேண்டுமென்பதுவே தற்போதைய உலகநிலையையும். இந்தியாவின் நிலையையும் நாம் ஆலோசித்துப் பார்க்கையில், ஒரு கொள்கை யினரைக் கொண்ட காரியக் கமிட்டியை அமைத்தல் தவறு என்று

தான் நாங்கள் கருதுகிறோம். நமது தேசியப் போர் முனையை விசாலப் படுத்திக் கொள்வதற்கு இதுதான் தக்க சந்தர்ப்பம் என்று நாங்கள் கருதுகிறோம். 'இச்சமயத்தில் நமது தேசிய நிருவாக ஸ்தாபனத்தை — அதாவது காரியக் கமிட்டியை — குறுகிய முறையில் அமைப்பதா?

காங்கிரஸிலுள்ள ஊழலைப் பற்றி நாம் ஒரேவிதமான அபிப்பிராயமே கொண்டிருக்கிறோம். ஆனால் இதை மிகைப் படுத்தி கூறுகிறீர்களென்பது தான் என் அபிப்பிராயம். இந்தியாவை மொத்தமாக எடுத்துக் கொண்டு பார்த்தால், காங்கிரஸில் அதிகமான ஊழல் இருக்கிறதோ வென்பது எனக்குச் சந்தேகம். அப்படி யிருந்தாலும், அதற்காக சுயராஜ்யப் போராட்டத்தை நடத்த முடியாத தகுதியின்மை அதனால் நமக்கு ஏற்படவில்லை யென்று நான் கருதுகிறேன். ஊழலின் காரணங்களை நாம் ஆராய்ச்சி செய்கிற போது போராட்டத்தை நிறுத்தியதும், உத்தியோக பதவிகளில் நமக்கு ருசி ஏற்பட்டதும், இந்த ஊழல் வளர்வதற்கு துணைக் கருவிகளாக இருந்தன என்ற முடிவுக்குதான் நாம் வர முடியும். ஏற்கனவே நான் கூறியுள்ளபடி இதற்கு மாற்று, 'அதிகமான தியாகங்களைத் தேசத்தின் பொருட்டுச் செய்ய வாருங்கள்' என்று தேசத்தாரை அறைகூவி அழைப்பதுதான்.

ராஜேந்திர பாபு, 6-ந் தேதியன்று என்னை அன்புடன் வந்து பார்த்தார். நாங்கள் இருவரும் தொழிலாளர் பிரச்னைகளைப் பற்றிப் பேசி விட்டுப் பின்னர் காங்கிரஸ் விஷயங்களைப் பற்றிப் பேசினோம். நான் தங்களுடன் கடிதப் போக்கு வரத்து ஆரம்பித்த போது, காரியக்கமிட்டி அமைப்பைப் பற்றி இந்தக் கடிதப் போக்கு வரத்தின் மூலமாகவே ஒருவாறு முடித்துக் கொள்ளலாமென்றும், மற்றப் பிரச்னைகளை நமது மற்றொரு சந்திப்பில் ஒருவாறு பேசி முடித்துக் கொள்ளலாமென்றும் நினைத்தேன். ஆனால் பின்னர், இந்தக் கடிதப் போக்கு வரத்தினால் ஒரு முடிவு ஏற்படாதென்று உணர்ந்தேன். ராஜேந்திர பாபுவை நான் சந்தித்த போது உங்களை எப்படியாவது பார்த்துப் பேசி ஒரு முடிவு காண வேண்டுமென்ற ஆவல் எனக்கு நிறைய இருந்தது. இதனாலேயே, ராஜேந்திர பாபு, என் வேண்டுகோளுக் கிணங்கி பிர்லா மாளிகைக்கு டெலிபோன் செய்தார். அவர் பேசிய போக்கு எனக்கு உற்சாகந் தரக்கூடிய மாதிரியாக இல்லை. ஆகையால் மீண்டும் ஒரு முறை முயற்சி செய்து பார்க்கலாமென்று தீர்மானித்தேன். மீண்டும் என்னுடைய டாக்டர் பிர்லா மளிகைக்கு டெலிபோன் செய்தார். நானும் ஒரு எக்ஸ்பிரஸ் தந்திகொடுத்தேன். ஆனால் நீங்கள் ராஜகோட்டைக்கு உடனே அவசரமாகப் புறப்பட்டுப் போக வேண்டி யிருக்கிறதென்று தெரிவித்து விட்டீர்கள். காங்கிரஸின் துரதிருஷ்ட வசமாக ராஜ கோட்டை விஷயம் உங்கள் கவன மனைத்தையும் இழுத்து விட்டதென்று நான் முன்னரும் உணர்ந்தேன்; இப்பொழுதும் உணர்கிறேன். ஆனால் ராஜ கோட்டை விஷயத்தைவிட காங்கிரஸ் விஷயம் ஆயிரம்மடங்கு முக்கியமானதென்று என் போன்றவர்கள் உணர்கிறார்கள். ஸர் மாரிஸ் க்வையரின் தீர்ப்புக்குப் பிறகு ராஜ கோட்டை நிலைமையை சர்தார் படேல் இருந்து சமாளிக்க முடியுமென்றுதான் யாருமே நினைக்

கக்கூடும். அப்படி இருந்திருக்குமானல் நீங்கள் நேராக அங்கு ஆஜராக இருந்திருக்க வேண்டியதில்லை. ஆனல் இனி அதைப்பற்றிப் பேசிப் பயனில்லை.

உங்களுடைய 7-ந் தேதி தந்தியொன்றில் என் சகோதரர் சரத் சந்திரரோ, அல்லது வேறு பிரதிநிதி ஒருவரோ ராஜ கோட்டைக்கு வந்து உங்களைச் சந்திப்பது நல்லதென்று கூறி யிருந்தீர்கள். இது நடவாத காரியம் என்று நான் அஞ்சுகிறேன். சிக்கலான பிரச்னைகளைப் பற்றிக் கடிதங்களின் மூலமாகத் தீர்த்துக் கொண்டு ஒரு முடிவுக்கு வர முடியாத போது ஒரு பிரதிநிதியின் மூலமாக என் காரியத்தை எப்படிச்சாதித்துக்கொள்ள முடியும்? ராஜகோட்டைக்கு ஒரு பிரதிநிதியை அனுப்புவதன் மூலம் எவ்வித நன்மையும் உண்டாகாதென்றே நான் அஞ்சுகிறேன். நாமிருவரும் நேரில் சந்தித்துப் பேசினல்தான் ஒரு முடிவு ஏற்படக் கூடும்.

தங்களுடைய 10--4--39 கடிதம் இப்பொழுதுதான் கிடைத்தது. அதைப்பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நான் என் கடிதங்களில் எழுப்பிய பல பிரச்னைகளுக்கு நீங்கள் கூறி யிருக்கும் பதில் எனக்கு ஆசாபங்கத்தையே உண்டாக்குகிறது. உங்கள் கடிதத்தில், நிரானுகூல நம்பிக்கையே பிரதிபலிக்கிறது. இதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. தவிர, தனிப்பட்ட நபர்களின் விஷயங்களைப்பற்றி நீங்கள் அதிகமாக வற்புறுத்துகிறீர்கள் என்று நான் அஞ்சுகிறேன். தேசியத் தேவையை முன்னிட்டு, இத்தகைய சொந்த விஷயங்களை மறந்துவிடக் கூடிய தேச பக்தி உணர்ச்சி அனைவருக்கும் இருக்கிற தென்பதில் நீங்கள் அதிக நம்பிக்கை கொள்ள வேண்டும். காங்கிரஸுக்குள்ளேயே நம்மால் ஒற்றுமையை ஏற்படுத்த முடியா விட்டால், தேசத்திற்குள் நாம் எப்படி ஒற்றுமையை ஏற்படுத்தப் போகிறோம்?

பண்டித பந்த் தீர்மானத்தைப் பற்றி நீங்கள் எவ்வித ஆலோசனையையும் எனக்குக் கூறவில்லை.

சமஸ்தானங்களில் கூட, பலாத்கார மற்ற இயக்கத்தை நடத்த முடியாது என்று நீங்கள் உணரும் பட்சத்தில், சமஸ்தானப் பிரஜைகளுக்குப் பிரஜா உரிமையையும் பொறுப்பாட்சியையும் எப்படி வாங்கிக் கொடுக்கப் போகிறீர்கள்? நாம் செய்யக்கூடியதெல்லாம், பலாத்கார மற்ற பொது ஜன இயக்கத்தை நடத்துவதுதான். அதனையும் நாம் கையாளா விட்டால், மிதவாதக்கொள்கையையோ, உங்கள் தன்னலத்தியாகக் கொள்கையையோ அநுசரிக்க வேண்டியதுதான். உங்களுக்கு எங்கெங்கு செல்வாக்கு உண்டோ, அங்கெல்லாம் சட்ட மறுப்பியக்கத்தை நிறுத்தி யிருப்பதாகக் கூறுகிறீர்கள். அப்படியே ராஜகோட்டையில் நிறுத்தி விட்டீர்கள். பிறகு எல்லாப் பொறுப்பையும் நீங்களே ஏற்றுக் கொண்டு உங்கள் உயிரையும் தியாகம் செய்யத் துணிந்தீர்கள். அப்படி நீங்கள் செய்தது—அதாவது உங்கள் உயிரைத் தியாகம் செய்யத் துணிந்தது—உங்கள் தேசத்தாருக்கும், ராஜ கோட்டை சமஸ்தானப் பிரஜைகளுக்கும் நியாயமாகுமா? உங்கள் உயிர் உங்களுக்குச் சொந்தமானதல்ல. உங்களிஷ்டப்படி அதனை நீங்கள் ஆபத்

திற்குட்படுத்திக் கொள்ள முடியாது. ராஜகோட்டை போராட்டத்தைவிட இன்னும் பெரியதொரு போராட்டத்திலே நீங்கள் தலைமை வகித்து நடத்த வேண்டுமென்று உங்களைக் கேட்க உங்கள் நாட்டாருக்கு உரிமையுண்டு. ராஜகோட்டை பிரஜைகளைப் பொறுத்த மட்டில், அவர்கள் தங்களுடைய சுய முயற்சியும் தியாகமும் இல்லாமல், உங்களுடைய தியாகத்தின் பயனாக சுயராஜ்யம் பெறுவார்களானால், அரசியல் வளர்ச்சி பெறாமல், உங்களால் அவர்களுக்காகப் பெற்றுக் கொடுக்கப்பட்ட சுயராஜ்யத்தைக்காப்பாற்றி வைத்துக்கொண்டிருக்க மாட்டார்கள். தவிர, பல போர் முகங்களிலும் பலவிதமான போராட்டங்களை நடத்த வேண்டியிருக்க, உங்களுடைய் மதிப்பற்ற உயிரை எவ்வாறு நீங்கள் திரணமாக மதிக்க முடியும்?

அரசியல் மேடையிலும் பொருளாதார மேடையிலும் நாம் சந்திக்க முடியாதென்று நீங்கள் கூறுகிறீர்கள். இந்தியா முழுவதற்கும் ஒரு கைத்தொழில் திட்டத்தை நாங்கள் தயாரிப்பதை நீங்கள் விரும்பவில்லையாதலால், பொருளாதார மேடையில் நாம் சந்திக்க முடியாதென்று நீங்கள் கருதுகிறீர்கள் போலும். மேற்படி திட்டத்தில், குடிசைத் தொழில்களை ஆதரிக்க வேண்டு மென்பதை வற்புறுத்தி யிருக்கிறோம். அரசியல் விஷயங்களில் நாம் ஒற்றுமையுடன் வேலை செய்ய முடியாதபடி, அவ்வளவு பெரிய தடைகள் என்ன நம்மிருவருக்குமிடையே இருக்கின்றனவென்பது எனக்குத் தெரியவில்லை. அப்படி எல்லாக் கட்சியாரும் ஒன்று பட்டு வேலை செய்ய முடியாதென்று நீங்கள் இன்னமும் கருதுவீர்களானால், காங்கிரஸின் எதிர்காலம் மிகவும் இருளடைந்ததாயிருக்குமென்றே நான் அஞ்சுகிறேன். உங்களால்தான் பிளவுகளை ஒன்றுபடுத்த முடியுமென்றும், இதன் மூலமாக தேசிய ஆபத்தொன்றைத் தவிர்த்தவர்களாவீர்களென்றும் நான் இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிறேன்.

பிணக்குக்குட்பட்டசக்திகள் என்று எதை நீங்கள் குறிப்பிடுகிறீர்களோ, அவை எப்படியும் நிலை பெற்றுவிட்டன. எனவே, இப்பொழுது நாம் ஒன்றுபட்டு வேலை செய்ய முடியாதென்றால், இனி எப்பொழுதுமே முடியாதுதான். அப்படியானால் எதிர்காலம் மிகவும் பயங்கரமாகவே இருக்குமென்று நான் அஞ்சுகிறேன். எங்கள் இளமையும், அதன் பரிணாமமாகிய சர்வானுகூல நம்பிக்கையும், இந்தியாவின் எதிர் காலத்தின் மீதுள்ள தளராத நம்பிக்கையும் எங்கள் முன்னிலையில் இருக்கிறபோது, மேற்படி நிலைமை ஏற்படுவதை நாங்கள் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

நான் என் கொள்கையையும் வேலைத் திட்டத்தையும் தயாரித்து, அதை உடனே அ. இ. கா. கமிட்டி முன்னர்க் கிளத்த வேண்டு மென்று உங்களுடைய பல கடிதங்களில் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால், குறிப்பிட்ட ஒரு வழியில் நான் காரியக்கமிட்டியை அமைக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்டளை யிட்டிருக்கிறது. அதுதான் என்னுடைய முக்கிய கடமை. திரிபுரி காங்கிரஸில், எனது தலைமையுரையில் என் வேலைத்திட்டத்தை ஆஜர்படுத்தினேன். ஆனால் அஃது அங்கீகரிக்கப்படவில்லை. தற்போதைய நிலைமை

யில், அதாவது காரியக் கமிட்டி இன்னும் அமைக்கப்படாமலிருக்கிற போழ்து, அ. இ. கா. கமிட்டி முன்னர், என்னுடைய வேலைத் திட்டத்தை ஆஜர்படுத்தத் தேவையில்லையென்று நான் கருதுகிறேன்.

நான்தான் முதலில் காரியத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று உங்கள் முதல் கடிதத்தில் கூறியிருக்கிறீர்கள். அதனுலேயே என்னுடைய எண்ணங்களையும், இப்பொழுது நமது முன்னிலையில் நிற்கும் பிரச்னைகளுக்குரிய பரிகாரங்களையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொண்டு வருகிறேன். ஆனுல் என்னுடைய யோசனைகள் யாவும், அல்லது பெரும்பாலனவும் தங்களுடைய அங்கீகாரத்தைப் பெறவில்லை. ஆகையினுல் நீங்கள் தான் இப்பொழுது காரியக் கமிட்டியின் அமைப்பைப் பற்றித் தெரிவிக்க வேண்டும். காரியக் கமிட்டி உங்களுடைய விருப்பப்படி அமைக்கப்படவேண்டுமென்பதோடல்லாமல், அது உங்களுடைய பூரண நம்பிக்கையையும் பெற்றிருக்க வேண்டுமென்று பண்டித பந்த் தீர்மானம் கூறுகிறது.

நான் வேறு சில யோசனைகளையும் உங்கள் முன்னிலையில் கிளத்தினேன். உடனே, தேசியப் போராட்டத்தைத் தொடங்க வேண்டுமென்றும், அதனுல் நமது தற்போதைய அநேக சிக்கல்கள் நீங்கிவிடுமென்றும் நான் கூறினேன். இதனை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இரண்டாவது, ஒரு கொள்கையினரைக் கொண்ட காரியக்கமிட்டியை நான் அமைப்பதாயிருந்தால், அதன் மீது உங்களுக்கு நம்பிக்கையிருப்பதாகத் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னேன். இதுவும் முடியாதென்று நீங்கள் சொல்லி விட்டீர்கள். மூன்ருவதாக, நீங்கள் முன்வந்து, காரியக் கமிட்டியின் நிருவாகத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அப்படிச் செய்தால் அநேக தொல்லைகள் நீங்கி விடும். இந்த யோசனைக்கு நீங்கள் பதிலே அளிக்கவில்லை. இதனையும் நீங்கள் புறக்கணித்து விடுவீர்களாயின், இனிச் செய்ய வேண்டிய காரியம், என்னுடைய பொறுப்பினின்று நீங்கி, உங்கள் பொறுப்புக்கு வந்து சேரும். நீங்கள்தான் காரியக் கமிட்டி அமைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

ஒரு விஷயம் மட்டும் நிச்சயம். என் கட்சி அங்கத்தினர்களை மட்டும் கொண்ட ஒரு கொள்கையினரடங்கிய காரியக் கமிட்டியை நான் அமைக்க வேண்டுமென்று நீங்கள் கூறும் யோசனையை மட்டும் நான் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த யோசனையானது, காங்கிரஸ் தீர்மானத்திற்கு விரோதமாயிருக்கிறது. தவிர, தேசத்தின் தற்பொழுதைய நிலையில், ஒரு கொள்கையினரைக் கொண்ட காரியக் கமிட்டியை அமைப்பது அவ்வளவு நல்லதல்லவென்று நான் கருதுகிறேன். அது காங்கிரஸின் பிரதிநிதித்துவக் கமிட்டியாக இராது. தவிர, இதனுல் அநாவசியமான உட்பிணக்குகள் நிறைய ஏற்படும்.

திரிபுரி காங்கிரஸ் தீர்மானப்படி, உங்கள் மீது விதிக்கப்பட்ட பொறுப்பை நீங்கள் நிறைவேற்றி வைப்பீர்களென்று கருதுகிறேன். அப்படி நீங்கள் செய்ய மறுப்பீர்களாயின், நான் என்ன செய்யட்டும்? அ. இ. கா. கமிட்டிக்கு இதைத் தெரி

வித்து, அதனையே, காரியக் கமிட்டியை நியமிக்குமாறு கூறட்டுமா? அல்லது வேறு யோசனை ஏதேனும் கூறுகிறீர்களா?

கஸ்தூரிபாய் இப்பொழுது குணமடைந்து வருகிறார் என்றே கருதுகிறேன். உங்கள் சௌக்கியம் எப்படி? முக்கியமாக ரத்தக் கொதிப்பு எவ்வாறு இருக்கிறது? நான் தினே தினே குணமடைந்து வருகிறேன்.

நமஸ்காரம்

தங்கள் அன்புள்ள

சுபாஷ்.

குறிப்பு: நான் காரியக் கமிட்டியை நியமிப்பதாயிருந்தால், அதற்கு உங்களுடைய நம்பிக்கை தேவையென்று நான் கூறிய போது, அ. இ. கா கமிட்டி அங்கத்தினர்கள் தங்கள் மனச் சாட்சிப்படியே புதிய கமிட்டியைப்பற்றி ஓட்டு கொடுக்க வேண்டுமென்றும்; நான் தங்களுடைய அபிப்பிராயத்தைக் கவனியாமலே, காரியக் கமிட்டியை அமைக்கலாமென்றும் உங்களுடைய 10-4-39 கடிதத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள். அப்படியானால் காரியக் கமிட்டி அமைக்கும் பொறுப்பையே அ. இ. கா. கமிட்டியிடம் விட்டு விடலாமே.

34
சுபாஷ் தந்தி

ஜீல்கோரா
14-4-39

மகாத்மா காந்தி,
ராஜகோட்டை.

கல்கத்தாவில் கூடும் அ. இ. கா. கமிட்டி கூட்டத்திற்குத் தாங்கள் வரப்போகிறவதில்லையென்றும், காந்தி சேவா சங்க மகாநாடு மே மாதம் இரண்டாவது வாரத்திற்குத் தள்ளிப் போட்டிருக்கிற தென்றும் பத்திரிகைகளில் ' செய்திகள் வருவதைக் கண்டு நான் சஞ்சலப்படுகிறேன. அ. இ. கா. கமிட்டி கூட்டத்திற்கு நீங்கள் ஆஜராயிருக்க வேண்டியது அவசியம். மே மாதம் முதல் வாரத்தில் அ. இ. கா. கமிட்டி கூட்டத்தை வைத்துக் கொள்வது உங்களுக்குச் சௌகரியமாயிருக்குமா? பதில் தந்தி சொல்லவும்.

சுபாஷ்.

35
காந்தியின் தந்தி

ராஜகோட்டை,
14-4-39

ராஷ்டிரபதி சுபாஷ் போஸ்,
ஜீல்கோரா.

உங்கள் கடிதமும் என் கடிதமும் இடையில் சந்தித்திருக்கும். வேறு உபயோகரமாக நான் ஒன்றும் சொல்ல முடியாது. தேசிய நன்மையை முன்னிட்டு, உங்களிஷ்டப்படி காரியக் கமிட்டியை அமைத்து திட்டத்தை வெளிப்படுத்துவதுதான் நல்லதென்று நான் உறுதியாக நம்புகிறேன். அன்பு.

பாபு.

36
காந்தி தந்தி

ராஜகோட்டை,
14-4-39

ராஷ்டிரபதி சுபாஷ் போஸ்,
ஜாரியா.

உங்கள் தந்திகள் கிடைத்தன. காந்தி சேவா சங்க மகாநாடு மே

மாதம் 3ந் தேதியிலிருந்து பத்தாந் தேதி வரை கூடும். காரியக் கமிட்டியை 28ந் தேதியன்றும், அ. இ. கா. கமிட்டி கூட்டத்தை 29ந் தேதியன்றும் கூட்டினால் நல்லது. நான் வருவதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்கிறேன். கஸ்தூரி பாயின் ஜுரம் குறைந்திருக்கிறது. இனி பயமில்லை. அன்பு.

பாபு.

37

சுபாஷ் தந்தி

ஜீல்கோரா,

15–4–39

தங்களின் நேற்றைய இரண்டு தந்திகளும் கிடைத்தன. நீங்கள் கல்கத்தாவிற்கு வருவீர்களா வென்ற சந்தேகம் இன்னும் இருக்கிறது. அ. இ. கா. கூட்டத்திற்கு நீங்கள் பிரசன்னமாயிருக்க வேண்டுவது மிகவும் அவசியமாகும். ஒரு கொள்கையினரடங்கிய காரியக் கமிட்டியை நான் நியமிக்க முடியாததைக் குறித்து வருந்துகிறேன். எனவே, நீங்கள்தான் காரியக் கமிட்டியை நியமிக்க வேண்டும். இதைப்பற்றி 13ந் தேதியன்று எழுதியிருக்கிறேன். இன்று மறுபடியும் எழுதுகிறேன். எந்தக் காரணத்தை முன்னிட்டேனும் காரியக் கமிட்டியை நீங்கள் நியமிக்க முடியா விட்டால், இந்தப் பிரச்னையை அ. இ. கா. கூட்டத்தின் முன்னர் ஆஜர்படுத்துகிறேன். அதற்கு முன்னர், நாமிருவரும் நேரில் சந்தித்துப் பேசி ஒரு முடிவுக்கு வருதல் நல்லது. இது காரணமாகவும், உங்கள் சௌகரியத்தை முன்னிட்டும், அ. இ. கா. கூட்டத்தைத் தள்ளிப் போட வேண்டியிருக்கும். எனது, 13, 15ந் தேதி கடிதங்களைப் பார்த்துவிட்டுப் பதில் தந்தி சொல்லுங்கள். நமஸ்காரம்.

சுபாஷ்.

38

சுபாஷ் கடிதம்

ஜீல்கோரா,

15–4–39

என் அன்புள்ள மஹாத்மாஜி,

அ. இ. கா. கூட்டத்தின் போது நீங்கள் கல்கத்தாவில் இருக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி இன்று உங்களுக்குத் தந்தி சொல்லியிருக்கிறேன். உங்கள் சௌகரியத்திற்காக அ. இ. கா. கூட்டத்தைத் தள்ளி வைப்பதும் அவசியமென்று நான் கருதுகிறேன்.

எந்தத் தேதியில் நீங்கள் கல்கத்தாவுக்கு வருவீர்கள் என்பதைத் தெரிவிக்கவும். அ. இ. கா. கூட்டம் கூடுவதற்கு முன்னர், காரியக் கமிட்டி கூடுவது நல்லதென்று, இங்குப் பல நண்பர்கள் கூறுகிறார்கள். காரியக் கமிட்டியை அமைக்காமலிருப்பதற்கு முந்தியே அ. இ. கா. கூட்டத்தைக் கூட்டுவதில் பயனில்லையென்று அவர்கள் கூறுகிறார்கள். இந்தப் பிரச்னையை நாமிருவரும் கடிதப் போக்கு வரத்தின் மூலமாகத் தீர்த்துக் கொள்ள முடியாவிட்டால், இருவரும் நேருக்கு நேர் சந்தித்து ஒரு முடிவுக்கு வருதல் நல்லதென்று அவர்கள் எண்ணுகிறார்கள். நாமிருவரும் சந்தித்து ஒரு முடிவுக்கு வருவதற்கநுகூலமாக அ. இ. கா. கூட்டத்தைத் தள்ளி வைத்தலும் நல்லதே.

என்னைப் பொறுத்தமட்டில், கூட்டத்தைத் தள்ளிப் போடுவதில் எனக்கு இஷ்டமில்லை. (ஏனென்றால் இன்னும் நான் தாமதித்துக்கொண்டு போவதாக என் மீது பழி சுமத்தப் படும்.) ஆனால் நீங்கள் அங்கீகரித்தால் தள்ளிப் போடலாம். நமது கடிதப் போக்கு வரத்தின் விளைவாக எவ்வித முடிவையும் நாம் காண முடியாதபோது, அடுத்த அ. இ. கா. கூட்டத்திற்குள்ளாவது நாமிருவரும் சந்தித்தேயாக வேண்டும். அப்படி நாம் சந்தித்தும் பயனில்லையானால், கடைசி வரை பிரயத்தனப் பட்டுப் பார்த்தோம் என்ற திருப்தியாவது இருக்கும்.

தற்போதைய நிலைமையைச் சுருக்கமாகக் கூறுகிறேன். ஒரு கொள்கையினரைக் கொண்ட காரியக் கமிட்டியை அமைக்கலாமென்ற தங்களுடைய யோசனையை நான் ஏற்றுக் கொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன். இதைப் பற்றி எனது முந்திய கடிதங்களில் தெளிவுபடுத்தியிருக்கிறேன். ஆகையால் பண்டித பந்த் தீர்மானப்படி உங்கள் மீது ஏற்பட்ட பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதாவது காரியக் கமிட்டி அமைக்கும் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதை நீங்கள் செய்வீர்களானால் இப்பொழுதுள்ள சங்கடமான நிலைமை ஒழியும். காரியக் கமிட்டியும் கூடும். அதன் பிறகு அ. இ. கா. கமிட்டி கூட்டமும் கூடும். பிறகு எல்லாம் ஒழுங்காகவே முடிந்து விடும்.

எந்தக் காரணத்தை முன்னிட்டேனும் நீங்கள் காரியக் கமிட்டியை அமைக்க மறுத்து விட்டால், என்ன செய்வதென்று தெரியாத ஒரு திகைப்பு நிலையே ஏற்படும். எவ்வித முடிவுக்கும் வராத நிலையில், இந்த விஷயமானது அ. இ. கா. கூட்டத்தின் முன்னர் ஆஜர்படுத்தப் படும். அ. இ. கா. கூட்டத்திற்கு முன்னரே, காரியக் கமிட்டி அமைப்புப் பிரச்னை தீர்ந்து விட்டால் நல்லது என்பதே பொதுஜன அபிப்ராயம். ஏனென்றால் அப்பொழுது தான், அ. இ. கா. கூட்டம், திரிபுரியைப் போல் யுத்தகளமாக இல்லாமல் இருக்கும்.

இப்பொழுது உங்களுடைய மனோநிலைமை என்ன வென்பது எனக்குத் தெரியாது. ஆனால் உடனே காரியக் கமிட்டியின் அமைப்பைப் பற்றி உங்கள் முடிவை வெளியிடுவீர்கள் என்று நம்புகிறேன். இதற்கு மாறாக நீங்கள் அபிப்பிராயங் கொள்வீர்களானால், இதன் பின் விளைவுகளைப்பற்றி நீங்கள் அறியாமலிருக்க முடியாது. அந்த நிலைமை ஏற்படுமானால், அதற்கு முன்னரே நாமிருவரும் சந்தித்துப் பேசி ஒரு முடிவுக்கு வருதல் நல்லது. அவசியமானால் அ. இ. கா. கூட்டத்தையும் தள்ளி வைக்கலாம்.

ஒரு விஷயம் மட்டும் எனக்குப் பட்டிருக்கிறது. ஒரு கொள்கையினரைக் கொண்ட காரியக் கமிட்டியை நியமிக்க வேண்டுமென்று பல படப் பேசப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட காரியக் கமிட்டி என்றால் என்ன வென்பதை நாம் நிச்சயமாகத் தெரிந்து கொண்டிருக்கிறோமா? உதாரணமாக லட்சுமணபுரி, பெய்ஸ்பூர், ஹரிபுரா முதலிய காங்கிரஸ்களுக்குப் பிறகு நியமனம் செய்யப் பெற்ற காரியக் கமிட்டிகள், ஒரு கொள்கையினரடங்கிய காரியக்

கமிட்டிகள் என்று நீங்கள் கூறுவீர்களா? அவை ஒரு கொள்கையினரடங்கிய காரியக்கமிட்டி என்று நீங்கள் கூறுவீர்களானால் நாம் இந்தப் பிரச்னையைப் பற்றியே போராட வேண்டுவதில்லை. அல்லது பல கொள்கையினரையும் கொண்ட காரியக்கமிட்டிகள் என்றுநீங்கள்கூறுவீர்களானால் அதேமாதிரியான ஒரு காரியக்கமிட்டி இந்த வருடம் ஏன் வேலை செய்யக்கூடாது? நாம் இந்த வாதத்தையே கிளப்பாமலிருந்தோமானால், யாரார் அங்கத்தினர்களாயிருப்பது என்ற விஷயத்தில் ஒரு முடிவுக்கு வந்து விடுவோம். அது அ. இ. கா. கூட்டத்தினராலும் அங்கீகரிக்கப்பட்டு விடும். இதைப் பற்றித் தயை செய்து யோசிக்கவும்.

ஊழல், பலாத்காரம் முதலிய பிரச்னைகளைப்பற்றி நீங்கள் அதிகமான மனவேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறீர்கள். இவையெல்லாம் மிக முக்கியமானவையென்று கருதுகிறீர்கள் போலும். ஊழல் எவ்வளவு தூரம் இருக்கிறது, பலாத்காரம் எவ்வளவு அளவுக்குப் பரவியிருக்கிறது என்பதைப் பற்றி நமக்குள் அபிப்பிராய வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால் ஊழலும் பலாத்காரமும் உடனே ஒழிக்கப்பட வேண்டுமென்கிற விஷயத்தில் நாமனைவரும் ஒற்றுமையான அபிப்பிராயத்தைக் கொண்டவர்களாயில்லையா? இதற்காக வேண்டிய பரிகாரங்களைத் தேட வேண்டுமென்கிற விஷயத்திலும் நாம் ஒரே மாதிரியான அபிப்பிராயத்தைத் தானே கொண்டிருக்கிறோம். அப்படியிருக்க, இவைகளைச் செயல்முறையில் கொணர்கிறபோது, நாம் ஏன் ஒன்றுபட்டு வேலை செய்ய முடியாது? முக்கியமான பிரச்னைகளில் நாம் ஏன் ஒன்றுபட்டுப் போக முடியாது?

இந்தக் கடிதத்தை இன்னும் நான் நீட்டிக் கொண்டு போக விரும்பவில்லை. என் மனதிலுள்ளதை நான் முன்னரே சொல்லிவிட்டேன். நாம் நேரில் சந்தித்துப் பேசினோமானால், காரியக் கமிட்டியில் யாரார் இருப்பது என்பதில் ஒரு முடிவுக்கு வருவோம்; அதே மாதிரி என்னென்ன காரியங்களைச் செய்யலாம் என்பதிலும் ஒரே மாதிரியான அபிப்பிராயமே கொண்டவர்களாயிருப்போம்.

கஸ்தூரிபாய் விரைவில் குணமடைந்து வருகிறார் என்று நம்புகிறேன். உங்களுடைய தேக நிலையும் சௌகரியமாயிருக்கிறதென்று கருதுகிறேன். நான் குணமடைந்து வருகிறேன். நமஸ்காரம்.

தங்கள் அன்புள்ள
சுபாஷ்.

38

காந்தி தந்தி

ராஜகோட்டை,
17-4-39

ராஷ்டிரபதி சுபாஷ் போஸ்,
ஜீல்கோரா.

உங்களுடைய கடிதமும் தந்தியும் கிடைத்தன. அ.இ.கா. கூட்டத்தை 29ந் தேதி கூட்டுவது நல்லது. நான் வருகிறேன். நான் ஒரு கமிட்டியை நியமித்து அதனை உங்கள் மீது சுமத்த மாட்டேன். நீங்கள் ஒரு கமிட்டியை நியமிக்காவிட்டால், அ.இ.கா. கமிட்டி ஒன்றை நியமிக்கட்டும். பல கொள்கையினரைக் கொண்ட ஒரு காரியக் கமிட்டியை நியமிப்பது முடியாத காரியம் என்று நான் கருதுகிறேன். இனி நான் மௌனமாயிருக்க வேண்டாமென்று நீங்கள்

கூறி விட்டபடியால் அவகாசப்படுகிற போது, நான் ஓர் அறிக்கை வெளி யிடுகிறேன். அன்பு.

பாபு.

39

சுபாஷ் தந்தி

ஜீல்கோரா,
17–4–39

மகாத்மா காந்தி,
ராஜகோட்டை.

நீங்கள் அறிக்கை வெளியிடுவதா யிருந்தால், தயை செய்து நமக் குள்ளே நடைபெற்ற கடிதப்போக்கு வரத்தை வெளியிட அனுமதி கொடுக் கவும். 15-4-39ல் தங்களுக்குக் கடி தம் எழுதியிருக்கிறேன்.

சுபாஷ்.

40

காந்தி தந்தி

ராஜகோட்டை,
18–4–39.

ராஷ்டிரபதி சுபாஷ் போஸ்,
ஜீல்கோரா.

நமது கடிதப் போக்குவரத்துகளை அவசியம் வெளியிடவும். இதனால் நான் அறிக்கை வெளியிடுவது அநா வசியமாகப் போய்விடும். அன்பு.

பாபு.

41

காந்தி தந்தி

ராஜகோட்டை,
19-4-39

ராஷ்டிரபதி
சுபாஷ் சந்திர போஸ்,
ஜீல்கோரா.

24ம் தேதி யன்று இங்கிருந்து புறப்பட்டு 27ம் தேதி கல்கத்தாவுக்கு வந்து சேருகிறேன். சோட்பூரில் தங்கக்கூடும். ஹேம பிரபா தேவி, நான் அங்குத் தங்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார். டாக்டர் ராயும், அங்குத் தங்குவது நல்லதென்று அபிப்பிராயப்படுகிறார். நேற்று முதல் எனக்கு ஜுரம். வர வர அதிகமாகிக் கொண்டிருக்கிறது. புறப்படுவதற்கு முன்னர், சரியாகப்போய்விடுமென்று நம்புகிறேன். உங்கள் கடிதத்தில் பல யோசனைகள் இருந்தும், தற்போ தைய பரஸ்பர அவ நம்பிக்கையான நிலைமையிலே, பண்டித பந்த் தீர் மானப்படி நடக்க முடியாதவனா யிருக்கிறேன். நீங்களே காரியக் கமிட்டியை தைரியமாக அமைக்க வேண்டுமென்று நான் இன்னும் அபிப்பிராயப்படுகிறேன். அன்பு.

பாபு

42

காந்தி கடிதம்

ஜீல்கோரா,
20-4-39

மகாத்மா காந்தி,
ராஜகோட்டை.

27ம் தேதி கல்கத்தாவுக்கு வந்து சேருகிறீர்கள் என்பதைக் கேட்டு நான் சந்தோஷப்படுகிறேன். உங்க ளிஷ்டப்பட்ட இடத்தில் தங்குவதில் எனக்கு ஆட்சேபமில்லை. ஆனால் உங்களுடைய தேக சௌகரியத்தை முன்னிட்டு, நகருக்கு வெளிப்புறத் தில், ஆற்றோரத்தில் ஏதேனும் ஒரு பங்களாவில் தங்குவது நல்லதென்று கருதுகிறேன். எப்படியும் சதீஷ் பாபுவைக் கலந்து கொண்டு கல்கத்தா விலிருந்து மறுபடியும் தந்தி சொல் கிறேன். நேற்று ஜவஹர்லால் இங்கு வந்திருந்தார். கல்கத்தாவுக்குச் சமீ

பத்தில் எங்காவது ஓரிடத்தில் ஒரு நாள் தாங்கள் தங்கினுல், நாங்கள் இருவரும் தங்களைத் தனியாகக் கலந்து பேசலாம். இந்த யோசனையை நீங்கள் அங்கீகரித்து எந்தவழியாக வருகிறீர்களென்பதை எனக்குத் தந்தி சொன்னுல், இடையில் தங்கள் சௌரியமாகத் தங்குவதற்கு ஏற்பாடு செய்கிறேன். கல்கத்தாவுக்கு 21ந் தேதி செல்கிறேன். சுபாஷ்.

43

சுபாஷ் தந்தி

ஜீல்கோரா, 20-4-39.

மகாத்மா காந்தி,

ராஜகோட்டை.

உங்களுக்கு ஜுரம் என்பதறிந்து வருந்துகிறேன். விரைவில் குணமடைய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். நானும் ஜவஹர்லாலும் தங்களைச் சந்தித்துப் பேசுவதன் பயனுக எல்லாக் காங்கிரஸ்காரர்களும் ஒற்றுமைப்பட்டு வேலை செய்யக் கூடிய நிலைமை ஏற்படும் என்று நம்புகிறேன். நாம் இருவரும் சமீபத்தில் கல்கத்தாவில் சந்திக்கப் போவதால், அதற்கு முன்னர் கடிதப் போக்குவரத்தை வெளியிட வேண்டாமென்று கருதுகிறேன். நமஸ்காரம். சுபாஷ்.

44

சுபாஷ் கடிதம்

ஜீல்கோரா, 20-4-39

என் அன்புள்ள மஹாத்மாஜி,

இன்று தங்களுடைய ராஜகோட்டை விலாசத்திற்கு ஒரு தந்தி கொடுத்திருக்கிறேன். சென்ற மூன்று வார காலமாக நமக்குள்ளே அதிகமான கடிதப் போக்கு வரத்து நடந்திருக்கிறது. காரியக் கமிட்டியைப் பொறுத்தவரையில் இந்தக் கடிதப் போக்கு வரத்தினுல் இது வரையில் ஒரு பயனும் உண்டாகவில்லை. ஆனுல் நமது எண்ணங்களை ஒருவர்க்கொருவர் நன்கு தெரிந்து கொண்டோம். ஆனுல் காரியக் கமிட்டி பிரச்னையை உடனே தீர்த்துக் கொள்ள வேண்டும். இதனை இனியும் தள்ளிவைக்க முடியாது. சர்வ தேச நிலைமையையும் உள்நாட்டுநிலைமையையும் நாம் பார்த்தால் காங்கிரஸ் காரர்கள் மிகவும் ஒற்றுமையுடனிருந்து வேலை செய்ய வேண்டியது அவசியமாகிறது. சர்வ தேச நிலைமை வரவர மோசமாகிக் கொண்டு வருகிறது. பிரிட்டிஷ் பார்லிமெண்ட் முன்னர் இப்பொழுது ஆஜர் படுத்தப்பட்டிருக்கும் மசோதாவைப் பார்த்தால், மாகாண அரசாங்கங்களுக்கு இருக்கும் சொற்ப அதிகாரத்தையும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பிடுங்கிவிடப்பார்க்கின்றனர் என்பது தெரிய வரும். நாம் ஒரு பெரிய நெருக்கடியை எதிரிட்டுக் கொண்டிருக்கிறேம் என்பதில் சந்தேகமேயில்லை. நாம் ஒன்றுபட்டிருந்தோமானுல்தான் இதனைச் சமாளிக்க முடியும். இது நீங்கள் தலைமை வகித்துக் காரியங்களை நடத்தினுல்தான் முடியும். அப்படிச் செய்வீர்களாயின் நாங்கள் அனைவரும் ஒன்றுயிருந்து உங்களைப் பின் பற்றுவோம். ஊழலைப் போக்கும் விஷயத்திலும் பலாத்காரத்தைக் களையும் விஷயத்திலும் நாம் ஒற்மைப்பட்ட அபிப்பிராயமே கொண்டிருக்கிறேம். இந்த ஊழலோ பலாத்காரமோ எந்த அளவுக்கு இருக்கிறதென்பதில் நாம் அபிப்பிராய வேற்றுமை கொள்ளலாம். வேலைத் திட்டத்தைப் பொறுத்த வரையில்

அ. இ. கா. கமிட்டியே இதனை நிர்ணயிக்க வேண்டும். ஆனால் எந்த தனி நபருக்கும் அவருடைய வேலைத் திட்டத்தை ஆஜர் படுத்த உரிமை யுண்டு. நம்மை எதிர் நோக்கிக் கொண் டிருக்கும் நெருக்கடியைப் பொறுத்தே நமது வேலை திட்டம் இருக்கிறதென்று நான் உணர்கி றேன். அப்படியானால் நமக்குள் எவ் வித விபரீதமான அபிப் பிராய பேதங்களும் இருக்க நியாயமில்லை.

அ. இ. கா. கூட்டம் கூடுவதற்குள் நாம் சந்திக்க வேண்டுமென்பதில் நான் அதிக ஆவலுடையவனா யிருக் கிறேன். பழைய 'சச்சரவுகளை மறந்து, காரியக் கமிட்டியை அமைக் கவேண்டுமென்ற விஷயத்தில் வங் காளத்திலும் மற்ற மாகாணங்களி லும்அபிப்பிராயம் வலுத்துவருகிறது. பண்டித பந்த் தீர்மானப்படி காரியக் கமிட்டி அமைக்கும் பொறுப்பு உங் களுடையதே. அந்தப் பொறுப்பை ஏற்று நடத்துவீர்களானால், நாங்கள் உங்களுடன் பூரணமாக ஒத்துழைக் கிறோம்.

ஜவஹர் நேற்று இங்கு வந்திருந் தார். தற்போதைய நிலைமையைப் பற்றி நீண்ட நேரம் பேசிக் கொண்டி ருந்தோம். எங்களுடைய அபிப்பிரா யங்கள் ஒன்று பட்டனவா யிருக்கின் றன என்பதைக் குறித்துச் சந்தோ ஷப் படுகிறேன்.

நீங்கள் கல்கத்தாவுக்கு வரும் வழி யில் மத்தியில் ஒரு நாள் தங்கினால், நாம் அமைதியாக இருந்து பேசுவ தற்குச் சௌகரியமாயிருக்கும். நீங் கள் நாகபுரி வழியாக வந்தால் மிதுனபுரியில் தங்கலாம். சியோகி வழியாக வந்தால் பரத்வானில் தங் கலாம். இதுசம்பந்தமாக ஒரு தந்தி கொடுத்திருக்கி றேன். உங்கள் பதிலை எதிர் பார்க்கிறேன். இடையில் தங்க முடி யாமற் போனால் கல்கத்தாவில் சந்திப் போம். நாம் சம்பாஷிக்கிற போது ஜவஹரையும் இருக்கச் சொல்லி யிருக்கிறேன். அதற்கு அவரும் இசைந்திருக்கிறார்.

உங்கள் ஜுரத்தைப்பற்றிக் கவலை யாயிருக்கிறது. விரைவில் அது இறங்கி விடுமென்று நம்புகிறேன். நமஸ்காரம். தங்கள் அன்புள்ள

சுபாஷ்.

45

சுபாஷ் தந்தி

கல்கத்தா 22–4–39

மகாத்மா காந்தி,

ராஜகோட்டை.

சதீஷ் பாபுவைக் கலந்து ஆலோசித் தேன். சோட்பூரில் தங்குவது நல் லதென்றே கருதுகிறேன். இடை வழியில் எங்கும் தங்க வேண்டுவது அவசியமில்லை. டெல்லி வழியாக வருவதாகப் பத்திரிகைகள் கூறு கின்றன. ஆனால் உங்கள் தந்தி நாக புரி வழியாக வருவதாகக் கூறுகிறது. எந்த வழியாக வருகிறீர்கள் என்ப தற்குத் தந்தி சொல்லவும். சுபாஷ்.

46

சுபாஷ் தந்தி

கல்கத்தா. 5–5–39

மகாத்மா காந்தி,

பிருந்தாவனம்.

நமது கடிதப் போக்கு வரத்தை வெளியிட விரும்பு கிறேன். உங்கள் அபிப்பிராயத்திற்குப் பதில் சொல்லவும். சுபாஷ்.

47

காந்தி தந்தி

பிருந்தாவனம், 6–5–39.

சுபாஷ் போஸ்,

கல்கத்தா,

கடிதப் போக்கு வரத்துக்களை வெளியிடலாம். அன்பு. பாபு.



பெல்போன் கிராமபோன்கள்
பெல்டோன் ஹார்மோனியங்களை
வேண்டுமென்று கேளுங்கள்.



பெல்போன் கிராமபோன்களில், டோன் சேம்பர், சவுண்ட் பாக்ஸ் முதலியவை, தாமே இயங்கும்படியாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

எங்களிடம் எல்லாப் பாஷைகளிலும் கிராமபோன் ரிக்கார்டுகள் இருக்கின்றன. பிலிம், செட் பிளேட்டுகளும் கல்கத்தா விலையில் கிடைக்கும்.

எல்லாச் சங்கீதக்கருவிகளையும் நாங்கள் நேரே வரவழைக்கிறோம்.

உயர்ந்த ரக பிடில்கள் எங்களிடம் இருக்கின்றன. பிடிலே சங்கீத அரசன்.

SEN BROTHERS & Co.

சென் பிரதர்ஸ், அண்ட் கோ, **338**, டல்ஹவுஸி தெரு, இரங்கூன்.

ஜுபிட்டர்

ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: பம்பாய்

சொத்தின் மொத்த மதிப்பு ரூபாய் **65,00,000**

தொழில்கள்;—

உயிர், நெருப்பு, கப்பல், மோட்டார் வண்டிகளும் இதர விதமான விபத்துக்களைப்பற்றிய தொழில் களும் செய்யப் படுகின்றன.

கிளை ஆபீஸ்:—

644, மெர்ச்சென்ட் வீதி,

ரங்கூன்.

ஜில்லாக்கள் தோறும் செல்வாக்குள்ள
செட்டியார் ஏஜண்டுகள் தேவை

ஜோதி ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா.

எழுதிய புதிய நூல்:

பிரபஞ்ச ஜோதி பிரசுரம்—6,

கமால் அத்தா தூர்க்.

விலை ரூபா 1-8

பிரபஞ்ச ஜோதி பிரசுரம்—7.

பாலஸ்தீனம்.

விலை 8 அணா

பிரபஞ்ச ஜோதி வரிசையில்.

சுடர்		ரூ. அ. ப.
1—	முஸோலினி	1—4—0
2—	அபிசீனிய சக்ரவர்த்தி	0—8—0
3—	ஹிட்லர்	2—4—0
4—	ஸ்பெயின் குழப்பம்	0—10—0
5—	ஜெக்கோ ஸ்லோவேகியா	1—0—0

கிடைக்கும் இடங்கள் :—

1. சென்னை ஹிக்கின் பாதம் ரெயில்வே புக்ஸ்டால்கள்
2. பாரதி பிக்சர் பாலேஸ், காரைக்குடி.
3. சுதேசி நிலையம். 38, மார்க்கெட் ஸ்ட்ரீட் சிங்கப்பூர்.
4. P. சிவகுரு பிரதர்ஸ், தபால் பெட்டி 225, கோலாலம்பூர்.
5. வேதம் கம்பெனி, மோகல் தெருவு, இரங்கூன்.
6. சென்னை 'சண்டே டைம்ஸ்' புக்ஸ்டால்கள்

பாரத பந்தர், புத்தக வியாபாரிகள்,

47, 31வது வீதி. இரங்கூன்.

அழகிய கம்ஸ் பித்தான்கள்.

எங்கிரேவிங் நிக்கல் எனமலில் தேசியக்கொடி, மகாத்மா போட்டோ, ராட்டினம், வந்தேமாதரம், போட்டும் தமிழ் இங்கிலீஷில் பெயர்போட்டும் அன்பர்கள் விருப்பத்தின்படி பலகலரில் செய்து கொடுக்கப்பெறும்.

அதேமாதிரியில் இங்கிலீஷ் எழுத்துப் பித்தான்களும், தலைவர்கள் பாட்ஜு (மெடல்) களும், காங்கிரஸ் கொடி பாட்ஜும், ரெடிமேடாக கிடைக்கும்.

பொது ஸ்தாபனங்களுக்கு நூற்றுக்கணக்கில் சகாயமான விலை.

எங்களிடம் தேசிய நூல்கள் பலவும் கிடைக்கும்.

ராம. வீரப்பன்,

சுதேசி நிலையம்,

38, மார்க்கட் ஸ்திரீட், சிங்கப்பூர்.

கருத்து நிரம்பிய—ருசிகரமான கதைகள் நிறைந்தது

பல பாஷைகளிலும் உள்ள சிறந்த கதைகளைத் தமிழில் திரட்டித் தருவது

கதை படிப்பது வீண் பொழுது போக்கு என்று கருதும் அறிஞர்களும் விரும்பிப்படிக்கும் கதை நிறைந்திருப்பது

எது?

அதுதான்

'மணிக் கொடி'

மாதம் இருமுறை (இங்கிலீஷ் மாதம், 1, 15தேதிகளில்) வெளிவருவது

			வருஷச் சந்தா	தனிப்பிரதி
உள்நாடு	....	....	3—0—0	0—2—0
வெளிநாடு	....	....	4—8—0	0—4—0

மானேஜர்:— **'மணிக் கொடி' ஆபீஸ்,**

55, அரமனைக்காரத் தெரு, ஜி. டி. மதராஸ்.

கலைமகள்

ஓர் உயர்ந்த மாதப் பத்திரிகை

(1932-ம் ஞு ஆரம்பிக்கப்பட்டது)

தமிழ் நாட்டிலுள்ள சிறந்த அறிவாளிகளுடைய கட்டுரைகளோடு வெளி வருவது. அழகிய சித்திரங்கள், இனிய கட்டுரைகள், சுவையுள்ள கதைகள், சிறந்த தொடர் கதை, விஞ்ஞான சரித்திரம் சம்பந்தமான விஷயங்கள் முதலிய பல அருமையான பகுதிகளோடு உயர்ந்த முறையில் அச்சிடப்பெற்று மாதந்தோறும் தவறாமல் மலர்வது.

வருஷ சந்தா :

உள் நாடு : ரூ. 4-0-0
பர்மா : ரூ. 4-8-0
வெளி நாடு : ரூ. 6-0-0

தனிப் பிரதி அணா ஆறு.

கிடைக்கும் விலாசம் :—

மானேஜர், கலைமகள் காரியாலயம்,

மயிலாப்பூர் : : : : மதராஸ்.

சுத்தமானது!

கலப்பில்லாதது!

போஜனத்தை சுவைக்கக்கூடியது
பசுவும், கன்றும் மார்க்குள்ள

“ அசல் போஜன நேசன் ”

ஷை நெய்யானது கோயமுத்தூரில் புதிய வெண்ணையைக்கொண்டு நீடித்த அனுபோகஸ்தர்களால் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு வாரமும் ஏராளமாக தருவித்து விற்று வருகிறோம்.

அனேக பெரிய கல்யாணங்களுக்கும், டின்னர்களுக்கும், சப்ளை செய்து கியாதிபெற்றிருக்கிறோம். எல்லா விடங்களிலும் கிடைக்கும்.

ஜில்லாக்களில் விற்பனைக்கு ஏஜண்டுகள் தேவை.

மற்ற விவரங்களுக்கு :— **ராஜா ஸ்டோர்ஸ்,**

நெ. **125-51**வது தெரு, கிழக்கு ரங்கூன்.

உங்கள் அதிருஷ்டம்

காந்தி ஜோசியரால்
விவரிக்கப்படுகிறது.

எல்லாம் தலைவிதி என்று ஏமாற வேண்டாம். உங்களது எதிர் கால பலனை அறிந்து அதின்படி நடப்பதால் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய முடியும். மானிட வாழ்க்கைக்கு சோதிடம் இன்றியமையாததாகும். நம்மால் எழுதப்படும் இப்பலன்கள் வாழ்க்கைக்கு வழி காட்டியாக இருக்கும். ஆரோக்கியம், குடும்பம், வருமானம் அல்லது நஷ்டம், தொழில் வழி, பிரயாணம், பந்து, மித்திரர், விரோதி, வேஷக்காரர், அதிகாரி இவர்களினால் ஏற்படும் சம்பவங்கள், காதல் லாடிரீ ரேஸ் எதிர் பாராத லாபம் அதிருஷ்ட துரதிருஷ்ட நாட்கள் மற்றும் பல முக்கிய விஷயங்களையும் மாதவாரி எழுதி அனுப்புகிறோம். சிரம பலன் ஏதாவது ஏற்படுமானால் அதற்கான படி பரிகாரமும் இதில் எழுதப்படும்.

சார்ஜ் விவரம்:—

ஒரு வருஷப் பலன் மாதவாரி எழுத	ரூ	3-0-0
ஒரு வருஷப் பலன் வாராந்திரமாக	ரூ	10-0-0
ஆரூடம் 5 கேள்விகளுக்குபதில்	ரூ	1-0-0
வி. பி. தபால் சிலவு	ரூ	0-6-0

குறிப்பு:—ஜாதக நகல் அல்லது ஜனன கால விவரம் இது தெரியாதவர்கள், முழுப் பெயர், கடிதம் எழுதும் போதுள்ள நேரம், சுமார் வயது தொழில் இவைகளை தெரிவிக்க வேண்டும்.

சென்னை பிரபல தேசிய தமிழ் தினசரி. சுதேசமித்திரன் 30–1–37ல் எழுதுவதாவது:—

"காந்தி ஜோஸ்யர் என அழைக்கப்பட்டுவரும் திருத்தணிகை ஹநுமத் உபாசி ஸ்ரீமான் வி. கே. சடகோபாச்சாரியாரை, மித்திரன் நேயர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. சென்ற 15 வருஷங்களாக அவரது ஜோதிஷப் புலமைப்பற்றி அவர்கள் அறிந்திருக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன்பு மகாத்மா காந்தியின் விடுதலை தினத்தைப்பற்றிச் சரியாக ஜோஸ்யம் கூறியதிலிருந்து மேற்படியாரின் புகழ் எங்கும் பரவ வாரம்பித்தது. இப்பொழுது மேற்படி புகழ் உலகெங்கும் வியாபிக்கக்கூடிய நிகழ்ச்சி நேரிட்டுள்ளது. சமீபத்தில் அமெரிக்காவில் பிரஸிடெண்ட் தேர்தல் நடந்ததல்லவா? அதில் ரூஸ்வெல்ட் ஜெயமடைவார் என்று ஸ்ரீமான் ஆச்சாரியார் ஜோஸ்யம் கூறியது பலித்து விட்டது. இந்த நிகழ்ச்சி ஸ்ரீமான் சடகோபாச்சாரியாரின் அபார ஜோதிஷத் திறமையை நன்கு நிதர்சனமாக்குகிறது. தனி நபர்களுக்கு பலன்கள் கூறுவதில் ஏற்கனவே புகழுடன் விளங்கும் ஸ்ரீமான் ஆச்சாரியார் இப்போது உலகப் பிரச்னைகளிலும் தமது ஜோதிஷ ஞானத்தை ஈடுபடுத்தி வெற்றியைக் கண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஹநுமத் உபாஸி, வி. கே. சடகோபாச்சாரியார்,

ஹநுமான் ஜோதிஷ ஆச்ரமம்,

திருத்தணி. S. இந்தியா.

கலப்பற்றது

அறுசுவை உண்டிக்கு அவசியமானது



ரோஜா மார்க்கு

அசல் அன்ன சுத்தி

புத்தம் புதிய வெண்ணெயில் உத்திர வாதத்துடன் கைபடாமல் தயாரிக்கப்பட்டது.

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் உண்மை விளங்கும்.

நிகரற்றது

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

பர்மா சோல் ஏஜெண்டுகள் :—

வேதம் அண் கோ.,

89, முகல் வீதி, ரங்கூன்.

விலையோ சரசம்!
வாடையோ அதி உன்னதம்!!
பெயர் பெற்றதோ அதிகம்!!! } **அது யாது?**



மேல் நாட்டு பிரன்ச் சென்டுகளில், வாடையிலும், பெயராலும், விலையிலும், சிறு பிள்ளைகள் முதல் வயோதிகர் வரை நன்குணர்ந்த செட்டியார் மயில் மார்க்கு சென்டுகளை உபயோகித்து ஆனந்தமடையுங்கள்.

ஒரு முறை பரீக்ஷியுங்கள்.

குறிப்பு:—மயில் மார்க்கும் செட்டியார் என்ற பெயரையும் கவனித்து வாங்கக் கேட்டுக் கொள்கிறோம்.

சிங்கப்பூர், பினங், முதலிய மலாய் பிரதேசங்களுக்கும் பர்மாவைச் சேர்ந்த ஜில்லாக்களிலும் தக்க திறமையுள்ள ஏஜண்டுகள் தேவை தக்க கமிஷன் கொடுக்கப்படும். விபரத்துக்கு எழுதவும்-

பர்மா சோல் ஏஜண்டு:—

பெங்களூர் அகர்பத்தி வாசனை சாலை,

119 மொகல் வீதி, இரங்கூன்.